# மெல்லிய பூங்காற்றே



## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : மெல்லிய பூங்காற்றே |
| ஆசிரியர் | : ஜெய்சக்தி |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| முதல் பதிப்பு | : ஜூன், 2006 |
| மொழி | : தமிழ் |
| நூலின் தன்மை | : 11.6 Kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 10 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 288 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை-14. |

**விலை: ரூ.80.00**

| | |
|---|---|
| ...அச்சு | : [illegible]<br>சென்னை-18. ☎ 94441-01753 |
| ...ட்டை | : ஸ்ரீ எம்.கிராபிக்ஸ்<br>சென்னை-14. |




# மெல்லிய பூங்காற்றே

# மெல்லிய பூங்காற்றே



1

'நான் நல்லதுக்குத்தான் சொன்னேன்' என்ற டாக்டர். குமாரின் வார்த்தைகளே வாணியின் காதுகளில் எதிரொலித்துக் கொண்டிருந்தன.

நல்லதுக்குச் சொல்கிற விஷயமா இது? எப்படி அவரால் இப்படிக் கேட்க முடிந்தது. வேதனை அவளை அரித்துத் தின்றது.

அப்பா, அம்மாவின் ஞாபகம் வந்து விட்டது. இன்றைக்கு நடந்த நிகழ்ச்சி வேறு நினைவு வந்து விட்டது. கண்களில் கண்ணீர் மளமளவென்று வழிந்தோடியது.

திருச்சியின் மிகப் பெரிய ஆஸ்பத்திரி அது. டாக்டர். விஸ்வநாதன் என்றால் தெரியாதவர்களே இருக்க மாட்டார்கள்.

திருச்சியென்றாலும் திருச்சிக்குள்ளேயே இல்லாம ஸ்ரீரங்கம் போகிற வழியில் அந்த ஆஸ்பத்திரி இருந்தது.

டாக்டர். வில்வநாதனும் அவளுடைய அப்பா ராகவனும் நெருங்கிய நண்பர்கள்.

ராகவன் 'வாணி டிரான்ஸ்போர்ட்' என்ற பெயரில் பெரிய பஸ் கம்பெனி வைத்து நடத்தி வந்தார். ஆனால் எல்லாரையும் நம்பி விடுகிற குணம்.

வியாபாரம். தொழில் என்று வரும்போது இருக்க வேண்டிய நிர்த்தாட்சண்யம் அவரிடம் இருக்கவில்லை. பத்துப் பதினைந்து பஸ்களுக்குமேல் ஓடிய நிலைமை படிப்படியாகக் குறைந்து வெறும் ஒரே பஸ் என்ற நிலைமையில் இருந்தது.

போட்டியாகத் தொழிலில் இறங்கியவர்கள் அரசியல் பலம் வைத்துக் கொண்டிருந்தார்கள். போன தலைமுறை மனிதர் என்பதனாலோ என்னவோ புரட்டும், புனை சுருட்டும் தெரிந்திருக்கவில்லை.

நேரடியான அணுகுமுறையில் நிறைய எதிர்ப்புகளை சம்பாதித்துக் கொண்டார். அதனால் தொழிலில் நீடிக்க முடியவில்லை.

வாணி அவருக்கும் அவர் மனைவி நீலாயதாட்சிக்கும் மிக லேட்டாகப் பிறந்த குழந்தை. அவள் பதினெட்டு வயதில் இருந்தாள். அந்த நேரம் அவள் தாயார் உடல் நிலை சீர்கெட்டது.

வைத்தியம் பார்ப்பதற்கே நிறைய செலவாகியது. கிட்னி ஃபெய்லியர். கடைசி நேரத்தில் வருகிறீர்கள். என்றார்கள். ஆனாலும் காப்பாற்ற கடுமையாக முயற்சித்தார். முடியவில்லை. பதினெட்டு வயதில் தாயை இழந்து நிற்கிற மகளை வைத்துக் கொண்டு இருந்த ஒரே பஸ்ஸையும் விற்று வெறும் வீடு ஒன்றுடன் மட்டும் நின்றார்.

அந்த வீட்டைப் பிரித்து வாடகைக்கு விட்டார். ஒரு மூவாயிரம் ரூபாய் வாடகை வந்தது. ராகவனை



வில்வநாதன் தன்னுடைய ஆஸ்பத்திரிக்கு அட்மினிஸ்ட்ரேடிவ் ஆபீசராக இருக்க அழைத்தார். நல்ல சம்பளமாக கொடுத்தார்.

வாணி அம்மாவுக்கு உடம்பு சரியில்லாமல் போனதில் இருந்தே வீட்டைக் கவனித்துக் கொள்ள ஆரம்பித்திருந்தாள். அதனால் பொருட்களின் விலை, பணத்தின் மதிப்பு எல்லாம் புரிந்து சிக்கனமாக இருந்தாள்.

அப்படி ஒரு இரண்டு வருடம் ஓடியது. வாணி பிளஸ் டு படிப்பை முடித்து விட்டு பயோ கெமிஸ்ட்ரி படிக்கிறேன் என்று படிக்கப் போனாள்.

இருபத்தோரு வயதில் அவள் படிப்பை முடிக்கிற நேரம். மறுபடியும் ராகவனின் மனத்தில் கவலை மண்டியது.

எப்படியாவது மகளுக்குத் திருமணம் செய்யலாம் என்று முயற்சித்த போது பெண் கேட்டு வந்தவர்களைப் பார்த்துத் திகைத்துப் போனார்.

மகளை செல்வச் செழிப்பில் வளர்த்தார். செல்லமாக வளர்த்தார். ஆனால், இன்றைக்கோ மிகச் சாதாரண உத்தியோகத்தில் இருக்கிற கிளார்க்கும், டிரைவரும், மெக்கானிக்கும் பெண் கேட்டு வந்தார்கள், என்றவுடனே அதிர்ச்சியாகிவிட்டது.

அப்போது வாணி சொன்னாள்.

'அப்பா... எதுக்கு அவசரப் படறீங்க! நான் டிகி முடிச்சுட்டு டி.என்.பி.எஸ்.சி எல்லாம் எழுதறேன். சர்வி கமிஷன் எழுதறேன். நல்ல வேலை கிடைச்சதுக்கப்பு கல்யாணம் பண்ணிக்கறேன்' என்றாள்.

'இல்லம்மா... நீ எப்படிம்மா.. சாதாரண சம்பளக்கா கிட்டே யெல்லாம் வாழ்க்கை நடத்துவே..?' என் புலம்பினார்.

'அது சரி! அதுக்காக நம்ம பழைய நிலைமையை நினைச்சுகிட்டு எந்த ராஜகுமாரன் வந்து என்னைக் கொத்திட்டுப் போவான்னு நினைக்கறீங்க?' என்று ஆறுதல் சொல்வாள்.

சில நேரம் சிரிப்பாள்.

'எதுக்குப்பா... கல்யாணம்? நாம ரெண்டு பேரும் நிம்மதியா இப்படியே இருந்தா்லாமே?' என்பாள்.

அப்படி அவருடைய ஆறுதலுக்காக அவள் சொல்லும் போதெல்லாம் அவருக்குள் குத்திட்டி குத்தினாற் போல் வலிக்கும். உடனே வெளியே கிளம்பி விடுகிறேன் என்பார்.

மனதுக்குள்ளே கவலை அரித்துக் கொண்டே இருந்தது போலும். அவளது இருபத்திரண்டாம் வயதில் ஒரு நாள் 'நெஞ்சு வலிக்கிறதே' என்று மார்பைப் பிடித்தார்.

விஸ்வநாதனின் ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சைப் பிரிவில் நன்றாகத்தான் பார்த்தார்கள். ஒன்றும் நடக்கவில்லை.

அந்த சமயத்தில் டாக்டர். விஸ்வநாதன்தான் அவளுக்குப் பெரிதும் ஆறுதலாக இருந்தார்.

'இந்த வீட்டில் நீ தனியா இருக்க வேண்டாம்மா... நம்ம ...ஸ்பிட்டல்ல நர்ஸுங்க சில பேருக்கு ரூம்ஸ் மாதிரிக் ...வார்ட்டர்ஸ் கட்டிக் குடுத்துருக்கேன். அதுல ஒண்ணுல ...ருந்துக்கோ... அப்படியே நர்ஸ் மாதிரி எதாவது வேலை ...த்துக்கோ. ஒரு மூவாயிரம் சம்பளம் தரேன்' என்றார்.

அவளுக்கு வேறு வழியிருக்கவில்லை. போய்த் தங்கிக் ...கொண்டாள்.

அந்த ஆஸ்பத்திரியில் சீனியர் நர்ஸ்கள் அவளைத் ...களுடைய பெண்ணைப் போல் பார்த்துக் கொண் ...ார்கள். அவளும் அவர்களிடம் பாசத்துடன் நடந்து ...ள்வாள்.



'வீட்டு வாடகை அவளுடைய போர்ஷனுக்கும் சேர்த்து நாலாயிரத்தைந்நூறு ரூபாய் வந்து கொண்டிருந்தது. அதற்கும் வந்தது வேட்டு.

திடீரென்று தன்னிடத்தில் இரண்டு லட்ச ரூபாய் பணம் வாங்கியிருந்தார் ராகவன் வட்டி குட்டி போட்டு விட்டது என்று வீட்டைத் தனக்கே கொடுக்க வேண்டுமென்று ஒருவர் வழக்கு போட்டார். அப்போதும் விஸ்வநாதன்தான் உதவிக்கு வந்தார்.

அவர்களது வீட்டின் இரண்டு போர்ஷன்களிலும் போக்கியத்துக்கு ஆட்களை வைத்து அந்தப் பணத்தை வாங்கி இரண்டு லட்ச ரூபாய்க் கடனைக் கட்டி அந்த ஆளை விலக்கிவிட்டார்.

எப்போது வேண்டுமானாலும் அவள் தங்கிக் கொள்கிற மாதிரி அவளுக்கு அங்கே இரண்டு அறைகள் இருந்தன. இருந்தாலும் வயதுப் பெண் தனியாக இருக்க வேண்டாம் என்றுதான் பாதுகாப்பிற்காக விஸ்வநாதன் தன்னுடைய ஆஸ்பத்திரியில் கொண்டு வந்து வைத்துக் கொண்டார்.

கிட்டத்தட்ட அவருடைய வளர்ப்பு மகள் என்பதால் எல்லாரும் அவளை மரியாதையாகவும் நடத்தினார்கள். மத்திய அரசின் சார்பாக நடைபெறுகிற 'ஜுன்சிக்ஸ்தான்' என்ற கல்லூரி அமைப்பில் குறுகிய காலப் பயிற்சி நர்சிங்கில் எடுத்துக் கொண்டாள். பயோ கெமிஸ்ட்ரி படிப்பு என்பதால் ஆஸ்பத்திரியில் டாக்டர் விஸ்வநாதனின் லாபிலும் பயிற்சி பெற்றாள். ஆனால் என்ன? வாடகை வருவது நின்றிருந்தது.

விஸ்வநாதன் அவள் நிலைமை அறிந்து மூவாயிரம் சம்பளத்தை நாலாயிரமாகக் கூட்டியிருந்தார். அதோடு அவளுக்குத் தெரியாமல் அவளுக்காக ஒரு ஏலச் சீட்டு சேர்த்திருந்தார். அதில் சீட்டு விழுந்தால் எடுத்து ஒரு

வீட்டைக் காலி செய்து விடலாம் என்று தன் செலவிலேயே அவளுக்கு ஒரு நல்ல வரன் பார்த்துக் கல்யாணம் செய்து வைத்து விடலாம் என்றும் எண்ணிக் கொண்டிருந்தார்.

அவருக்கு நேரம் கிடைக்கும் போது தன் வீட்டுக்கு அழைத்துச் செல்வார். அவருடைய மனைவியும் அவளிடம் மிகவும் பிரியமாகப் பழகுவார். விசாலாட்சி என்ற பெயர். ஏதாவது நல்ல உணவாகச் செய்திருந்தால் ஆஸ்பத்திரிக்கே போன் செய்வார்.

'ஏண்டி... வாணிப் பொண்ணே.. இன்னைக்கு ஆத்துக்கு வந்துட்டுப் போயேண்டி' என்று அழைப்பார். அதே போல் அவருக்கு உடல் நிலை சரியில்லையென்றால் அவள் மருத்துவ மனையில் லீவு சொல்லிவிட்டுப் போய் உடனிருந்து கவனித்துக் கொள்வாள்.

எல்லாம் நன்றாகப் போய்க் கொண்டிருந்தது. ஃபாரினில் எம்.எஸ் படிக்கப் போகிறேன் என்று போயிருந்த விஸ்வநாதனின் மகன் குமார் வெளிநாட்டிலிருந்து திரும்பும் வரை.

குமாருக்கு முப்பத்தாறு வயசு. அவளுக்கு இருபத்து மூணு வயசு என்பதையெல்லாம் அவன் எண்ணிப் பார்க்கவில்லை. வந்ததிலிருந்தே அவளிடம் ஃப்ரீயாய் சிரித்துப் பேசுவான். அவளும் முதலில் அதை யதார்த்தமாக எடுத்துக் கொண்டாள்.

விஸ்வநாதன் தன் மகனுக்குப் பெரிய மிராசுதார் குடும்பத்தில் இருந்து பெண் எடுத்திருந்தார். நல்ல அழகு. வசதி. அப்படிப்பட்ட பெண்ணை வீட்டில் வைத்துக் கொண்டு அவன் மற்ற பெண்களிடம் வழிவதைப் பார்த்த விஸ்வநாதன் பெரும்பாலும் இளம்பெண்கள் வேலை செய்கிற நேரங்களில் அவன் வேலை பார்க்காத மாதிரிப் பார்த்துக் கொண்டார். ஆனால் வாணியிடம் மட்டும்



அவன் அப்படிப்பட்ட எண்ணமெல்லாம் வைத்துக் கொள்ள மாட்டான் என்று திடமாக நம்பினார். ஏனென்றால் அடிக்கடி 'வாணி நம்மாத்துப் பொண்ணுப்பா!' என்பான். அதனால் அவளும் யதார்த்தமாகவே இருந்தாள்.

போன வாரத்தில் ஒருநாள் யதார்த்தம் போல்..

'வாணி! கல்யாணம் பண்ணலேங்கறயாமே.. ஏன் அப்படி?' என்றான்.

அவளும் யதார்த்தமாக, 'ஆமா, கல்யாணம் பண்ணின வங்கள்ளாம் என்னத்தைப் பெரிசாக் கண்டாங்க...' என்றாள்.

'அப்படிப் போடு! அதுவும் சரிதான் கல்யாணம் பண்ணிக் கண்டு பிடிக்கிற விஷயங்களையெல்லாம்.. ஃபாரின்ல கல்யாணம் பண்ணாமயே கண்டு பிடிக்கறாங்க... தெரியுமோ?' என்றான் சிரித்தபடி.

'அவங்க கல்ச்சர் வேற. நம்ம கல்ச்சர் வேற. நம்ம ஊர்ல கல்யாணம் ஆகலேன்னாலும் சரி, ஆனாலும் சரி ஒழுக்கமா இருக்காங்க. அங்க அப்படி இல்லே!' என்றாள் வாணி.

'அதெல்லாம் சும்மா! அவாளோட அப்ரோச்தான் சரி. அங்கே ஃபிஸிகல் அட்ராக்ஷனையும், கமிட்மெண்ட்டையும் போட்டுக் குழப்பிக்கறதில்லே!' என்றான்.

வாணி என்ன பேச்சு இப்படிப் போகிறதே என்ற திடுக்கிட்டவள் பேசாமல் மௌனம் காத்தாள். அவன் தொடர்ந்தான்.

'இப்பப் பாரேன்! எங்காத்து மகாலட்சுமி அதான் நம்ம ஆத்துக்காரி இருக்காளேன்னா, பரப்பிரும்மம். நன்னா சோறாக்கிப் போடுவா. நானும் மூச்சு முட்டத் தின்னுண்டு திரிய வேண்டியதுதான்.'

'ஏன்... அவங்க படிச்சவங்கதானே?'

'ஆமா.. படிச்ச என்னத்தைக் கண்டா?'

'ஏதோ சுமாரா இங்கிலீஷ் பேசுவா! அவ்வளவுதான். அகலக் கரை பட்டுப்புடவை, ஜுவல்ஸ் இதைத் தாண்ட நினைக்கிறதில்லே... இதை வச்சுண்டு என்ன பண்றது?' என்றான்.

அவளும் மௌனமாக இருந்தாள்.

'டைவர்ஸ் பண்ண முடியுமோ? முடியாது. இதுவே ஃபாரினாயிருந்து விட்டுத் தூக்கிக் கடாசிட்டு வேற பாத்துண்டிருக்கலாம்' என்றான்.

வாணிக்கு மனசு லேசாக வலிக்கிற மாதிரி இருந்தது. அவளுக்கு மகாலட்சுமியைத் தெரியும். கணவன் மேல் உயிரையே வைத்திருந்தார். ஆனால் நாகரீகம் என்ற பெயரில் குமார் இப்படி பேசுகிறாரே என்று எண்ணிக் கொண்டாள். இது அவர்கள் குடும்ப விவகாரம். இதற்கு மேல் அதில் ஏன் தலையிட வேண்டும் என்று.

'சார்! அந்த ஏழாம் நம்பர் ரூம் பேஷண்டுக்கு இன்ஜக்ஷன் போடணும்' என்று நகர்ந்தாள்.

ஏழாம் அறையில் இருந்த பாட்டியின் அருகில் நின்றிருந்த நர்ஸ் ரீனா.

'வாங்க வாணி தேவியாரே! நீங்க போட்டாத்தான் இந்தப் பாட்டிக்கு வலிக்கறதில்லையாம்' என்று சிரித்தாள்.

அன்றைக்கு அப்படித் தப்பித்துக் கொண்டாள். ஆனால், தொடர்ந்து ஆண், பெண் உறவு, மனைவி சரியில்லை ன்கிற பாணியிலேயே குமார் பேசப்பேச அவளுக்குள் ச்சரிக்கை மணியடித்தது.

எங்கேயோ படித்திருந்தாள். திருமணமான பலவீன னம் கொண்ட ஆண்கள் முதலில் தங்கள் மனைவியரைப் ற்றிக் குறை சொல்லித்தான் தங்கள் கவர்ச்சி வலையை



வீசுவார்கள் என்று. 'ஐயோ! பாவம்!' என்று கேட்க ஆரம்பித்தால் ஆபத்து என்று புரிந்தது. ஆனாலும் இன்னொரு மனது 'சே! உனக்குத்தான் வக்கிர புத்தி! அவரோட வயசு என்ன? உன்னோட வயது என்ன? ஒரு சகோதரியைப் போல தன்னோட கஷ்டங்களை உன் கிட்டே சொல்றார்! என்று வாதாடியது. ஆனாலும், அவன் அப்படிப் பேசும்போது மட்டும் படாமல் ரெண்டு வார்த்தை பதில் சொல்லிவிட்டு நகர்ந்து விடுவாள்.

இன்றைக்கும் அப்படித்தான். அதிலும் இன்று ஞாயிற்றுக் கிழமை. குறைவான ஆட்கள்தான் இருப்பார்கள்.

பெரும்பாலும் அவளுக்கு விடுமுறை கொடுத்து விடுவார் விஸ்வநாதன். ஆனால் இன்றைக்கு நிறைய பேர் லீவு என்பதால்,

'கொஞ்சம் ஒத்தாசையா இரேண்டி... பொண்ணே!' என்று சீனியர் நர்ஸ் எஸ்தர் அவளை அழைத்ததால் வந்தாள்.

அநேகமாக எல்லாரும் லஞ்சுக்குப் போயிருந்த சமயத்தில் யாருமில்லையென்ற துணிவில் தன் மனத்திலிருப்பதை பட்டென்று போட்டுடைத்தான் குமார்.

அவள் வேதனையுடன் அவனைப் பார்த்தாள்.

'என்னைப் பாத்து இப்படிச் சொல்லிட்டீங்களே... சார்!' என்று தழுதழுக்க மட்டுந்தான் அவளால் முடிந்தது.

கண்களில் நீர் கசிய வெளியே வந்தாள். எதிரே யார் மீதோ மோதிக் கொள்கிறோம் என்பது கூட அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை. அந்த ஆஸ்பத்திரியின் வராண்டாவில் வேகமாக ஓடினாள்.

* * *

எப்படிப்பட்ட வார்த்தைகளை திராவகம் போல் முகத்தில் வீசி எறிந்து விட்டு நான் நல்லதுக்குத்தானே சொன்னேன் என்று வேறு சொல்கிறான்.

அவள் அப்போதும் கோபத்தை அடக்கிக் கொண்டு கேட்டாள்.

'யாரோட நல்லதுக்கு?' என்று.

'ஏன்! என்னோட, உன்னோட எல்லாரோட நல்லதுக்குத் தான்...' என்றான். கொஞ்சம் கூட கூச்சமில்லாமல் கேட்டான்.

அவள் கண் கலங்குவதைப் பார்த்துவிட்டு.

'நீ இவ்வளவு ஃபீல் பண்றதுக்கு இதுல எதுவுமே இல்லே!' என்று வேறு சொன்னான்.

அப்போதுதான் அப்படிச் சொல்லிவிட்டு வெளியே வந்தாள்.

இந்த ஊரில் தனியாய் நடமாடுகிற ஒரு இளம் பெண் என்றால், அவளுக்குப் பெற்றவர்கள் இல்லையென்றால் இப்படித்தான் இலவசப் பொருளாக நினைப்பார்களா? பிரச்சினை என்னவென்றால் இதை டாக்டர். விஸ்வ நாதனிடம் வேறு சொல்ல முடியாது.

ஏதோ இதுவரை அவருடைய பொறுப்பில் நிம்மதியாக இருந்தோம். இனி அதுவும் நடக்காதா? அப்பா நீங்களாவது கொஞ்ச நாள் என்னோட இருந்திருக்கக் கூடாதா? என்று வெடித்து அழுதாள்.

தனது படுக்கையறை வாசலில் நிழலாடக் கண்டு திடுக் ட்டு எழுந்தாள். இங்கேயும் வந்து விட்டானோ என்று ச்சம் கவிய வெளியே வந்து எட்டிப் பார்த்தாள்.

திகைத்து நின்றாள்.





2

தனது மடியில் முகம் புதைத்துக் கொண்டு விக்கி விக்கியழுகிற அந்த சின்னப் பெண்ணை மிகுந்த கழி விரக்கத்துடன் பார்த்தார் விசாலாட்சி.

அன்புடன் தலையை தன் வலக்கையால் தடவிக் கொடுத்தார்.

'அழாதேடி.. பொண்ணே! நாங்கள்ளாம் இருக்கோமே.. உன்னை அப்படியெல்லாம்.. விட்டுர மாட்டோம்டி.. கவலைப்படாம இரு!' என்றார் விசாலாட்சி. ஆனால், அருகில் இருக்கிற சேரில் அமர்ந்திருந்த விஸ்வநாதன் கைகளை இறுகக் கட்டிக் கொண்டு வாயையும் இறுக மூடிக் கொண்டு அமர்ந்திருந்தார்.

விஸ்வநாதன் தன் மகன் இந்த சின்னப் பெண்ணிடம் பேசிய அத்தனையையும் கேட்டிருந்தார்.

அவர் உள்ளே நுழைகிற போது மகன் சொல்லிக் கொண்டிருந்தான்.

'இத பாரு வாணி! நோக்குக் கல்யாணம் பண்ணிக்கற திலே நாட்டமில்லேங்கறே! ஆனா, யூத் போனா வராது தெரியுமோ? வாழ்க்கைல எல்லா விஷயத்தையும் அநுப விச்சுடணும். தெரிஞ்சுக்கத்தான் வேணும்' என்றான்.

அவன் எங்கே வருகிறான் என்பது புரியாமல் அவள் பார்த்தாள்.

'நோக்கு சவியா ஒரு வழி சொல்லித்தரேன். நேக்கு உன் மேல ஒரு இன்ட்ரஸ்ட் இருக்கு. நீயும் எங்காத்துக்

அடிக்கடி வந்து போயிண்டிருக்கே. எங்காத்து மனுஷாளும் உன்னை அடிக்கடி வந்து பாக்கறவாதான். அதனால நம்ம போக்கு வரத்துனால யாருக்கும் சந்தேகம் எழப் போறதில்லே. அதனாலே, எப்பப்ப முடியறதோ... அதுக்குத் தகுந்த மாதிரி நான் அரேன்ஜ் பண்ணிடறேன்..' என்றான்.

அவள் வெறித்துப் பார்த்தாள்.

'நீ அப்படியெல்லாம் பாக்கத் தேவையில்லே. நோ கமிட்மென்ட்ஸ். நோக்கு வீடு, பாங்க் பாலன்ஸ் எல்லாம் நான் பாத்துக்கறேன். மே..பி... ஒரு ரெண்டு வருஷம்... அப்புறம்.. நீ லைக் பண்ணினா மேரேஜ் பண்ணிக்கலாம். நானே நல்ல மாப்பிள்ளையாப் பாத்து...' என்பதற்குள்தான் அவள் வெடித்தது.

'என்னைப் பாத்து இப்படிக் கேட்டுட்டீங்களே. சார்!' என்று வேதனையுடன் சொல்லிவிட்டு அவள் வெளியே ஓடிய அதே நேரம் விஸ்வநாதன் அங்கே நின்று கொண்டிருந்தார்.

இத்தனைக்கும் குமார் உள்ளே நுழையும்போது அக்கம் பக்கத்தில் யாருமில்லையென்று தெரிந்து கொண்டுதான் அவளிடம் பேசப் போனான். அப்பா எங்கே இங்கே வந்தார்?

விஸ்வநாதன் மிகுந்த வருத்தத்துடன் மகனைப் பார்த்தார்.

'குமார் இன்னைக்கு நீ எவ்வளவு பெரிய தப்பு செஞ்சிருக்கேன்னு தெரியுமா? உன்னை விட பதிமூணு வயசு சின்னவா.. உலகம் தெரியாத பொண்ணு. அவ கிட்டே... போய் சே... ஐ ம் வெரி மச் அஷேம்ட் ஆஃப் யூ' என்றார்.

அவன் அலட்டிக் கொள்ளவேயில்லை.

'அப்பா... ஃபாரின்ல இதெல்லாம் சகஜம். இன்டியாவில தான் இப்படி சீப்பா இருக்கேள்? வாட்ஸ் தேர் இன் வாட்



ஐ ஆஸ்க்ட்! கேட்டேன்... பிடிச்சிருந்தா.. ஓகே... சும்மா சீன் கிரியேட் செய்யாதேள்!' என்றான்.

அவருக்கு மூக்கு நுனி சிவந்தது.

'ஸ்டாப் திஸ் நான்சென்ஸ். உன்னோட இந்த குரங்குப் புத்தியை எங்கயோ காட்டு. நம்மாத்துப் பொண்ணுகிட்டே இல்லே. அவ எனக்கு டாட்டர் மாதிரி' என்றார்.

'ஓஹ்! அனதர் பிளண்டர் ஆ... ஊன்னா அண்ணன் தங்கச்சிம்பேளே!' என்றான். மறுபடியும் நகர்ந்தார்.

'மறுபடியும் சொல்றேன். கிப் அவே ஃபிரம் ஹர். இல்லே. கொலையே பண்ணிடுவேன்' என்றார் அப்பா.

'ஓ.கே! ஓ.கே! கூல் டவுன்.. இவ இல்லேன்னா இன்னொருத்தி..!' என்று அவருக்கு முதுகைக் காட்டியபடி சொன்னவன் அறைக்கதவு வரை போய்,

'அப்பா! ரொம்ப அலட்டிக்காதேள்! அப்புறம்.. பி.பி ஏறிடும்' என்று வேறு சொல்லிவிட்டுப் போனான்.

அதை மீண்டும் நினைத்தவர் 'அம்மா... வாணி அவன் எம்.எஸ் படிச்சிட்டு வரப்போறான்னு நினைச்சேன். ஆனா அவன் எதையெதையோ கத்துட்டு வந்திருக்கான்!' என்றார்.

'சரி இனிமே உன்னிடம் வரமாட்டான்! பயப்படாம இரு!' என்று ஆறுதல் சொன்னார்கள்.

புறப்பட்டுப் போனார்கள். ஆனாலும், பிரச்சினை ஆறவில்லை. அவளிடம் நேரடியாக அவன் பேசவில்லையென்றாலும் அவன் பார்வை அவளைத் தொடர்ந்து கொண்டேதான் இருந்தது.

எப்போதும் நெருப்பின் மேல் இருப்பது போல் நடமாடிக் கொண்டிருந்தாள். அதை அவன் ரசிக்கிறாற் போல் தெரிந்தது.

இந்த நரக வேதனையை இன்னும் எத்தனை நாளைக்கு அனுபவிப்பது என்று தவித்துப் போனாள்.

அவள் தவிப்பை உணர்ந்தாற்போல் ஒரு வெள்ளிக் கிழமை மாலை விஸ்வநாதன் அவள் குவார்ட்டர்ஸுக்கு வந்தார்.

அவளிடம் பேசினார். ஒரு ஏற்பாடு சொன்னார்.

'என்னம்மா.. நான் சொன்ன ஏற்பாடு பிடிச்சிருக்கா..?' என்றார்.

அவள் வருவித்துக் கொண்ட உற்சாகத்துடன் தலை யாட்டினாள்.

'என்னோட கௌரவத்துக்கு பங்கம் வராம இருந்தால் சரி' என்றார்.

'அதுக்கு நான் பொறுப்பு. ஆனா, வேற விதமான சிக்கல்கள் இருக்கு. உன்னோட லீடே ரொம்ப பிளஸன்ட்டா இருக்கும்னு சொல்ல முடியாது. ஆனா, உனக்கு சாப் பாட்டுக்கோ கௌரவத்துக்கோ எந்தப் பிரச்சினையும் இருக்காது. அது மட்டுமில்ல. அங்க நடக்கற எந்தப் பிரச் சினையிலயும் நீ தலையிடக் கூடாது. வெளியே சொல்லக் கூடாது. கீப் டிஸ்டென்ஸ்.' என்றார்.

'என்ன இருந்தாலும்.. உங்களையெல்லாம்.. விட் டுட்டு..' என்று இழுத்தாள்.

'அம்மா.. எனக்கு மட்டும் உன்னை அனுப்பணும்னு ஆசையா? ராத்திரி படுத்தா தூக்கமே வர மாட்டேங்கறது. இந்தப் பயல்னால நோக்கு எந்த நேரத்துல என்ன தொந்தரவு வருமோன்னு நிச்சயமா.. நீ போற இடத்துல நோக்கு அந்த மாதிரித் தொந்தரவு இருக்காது' என்றார்.

சரியென்றாள்.



மறுநாள் விஸ்வநாதனும் விசாலாட்சியும் தங்கள் காரில் ஒரு பங்களாவுக்கு அழைத்துப் போனார்கள். அங்கே ஒரு கார் காத்துக் கொண்டிருந்தது.

டிரைவர், இவளுக்குத் துணைக்காக ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி.

கார் ஓடத் துவங்கியது.

அவளுக்கு எதிர்காலம் பற்றிய பயமும் உள்ளே ஓடத் தொடங்கியது.

* * *

**கோ**யம்புத்தூர் மாவட்டத்தில் பொள்ளாச்சியிலிருந்து வால்பாறை போகிற வழியில் கார் போய்க் கொண் டிருந்தது.

திருச்சியிலிருந்து கோவை வந்து சேர்வதற்கே பிற்பகல் ஆகி விட்டது. ஒரு ஹோட்டலில் பிற்பகல் உணவு உண் டார்கள்.

'நீங்க.. என்னவா இருக்கீங்க அங்கே?' என்று அந்தப் பெண்மணியிடம் கேட்டாள் வாணி.

'நான் அங்கே சமையல் மேற்பார்வை, ஒரு சூப்பர்வைசர் மாதிரின்னு வச்சுக்கங்களேன்' என்றார் அந்தப் பெண்மணி.

மேல்நாடுகளில் ஹவுஸ்கீப்பர் என்பது போல்... என்று அவளுக்குப் புரிந்தது. ஆனால், அந்தப் பெண்மணிக்கு அதை சொல்லத் தெரியவில்லை. அவரது பெயர் சுந்தரம்மா என்றார்.

சுந்தரம்மா பொதுப் படையான பேச்சுகளுக்கு ஓரளவு விளக்கமாகவே பதில் சொன்னார். ஆனால், தான் போகிற வீட்டைப் பற்றிய மனிதர்களைப் பற்றி சுருக்கமாகவே பதில் சொன்னார்.

'அங்கே யார் யார் இருக்காங்க!' என்றாள்.

'முதலாளி சந்திரமோகன், அவரோட சம்சாரம் கவி தாம்மா, பெரியம்மா சிவகாமி நாச்சி அப்புறம் குழந்தை சோனா' என்றார்.

'கொஞ்சம் அவங்களைப் பத்தி சொல்லுங்களேன்?' என்றாள் கெஞ்சலாக.

அந்தப் பெண் ஒரு நிமிடம் அவளைத் திரும்பிப் பார்த்தார். பிறகு சொன்னார்.

'பெரிய குடும்பம். பணக்காரக் குடும்பம். இந்த ஏரியா வில இருக்கற ஜமீந்தார் குடும்பத்துக்கு அடுத்த படியா மதிக்கப்படற குடும்பம். கவிதாம்மா வெளி நாட்ல படிச் சாங்க... வெளிநாட்டு நாகரீகத்தில் இருப்பாங்க... பெரியம் மாவுக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்லே. படுக்கையில் இருக்காங்க. முதலாளி அய்யா எப்பவும் பிஸி. அதனால தான் குழந்தையைப் பாத்துக்கறதுக்கு...! நீங்க..' என்றார்.

'சோனா.. எப்படி?' என்றாள்.

உடனே சுந்தரம்மாவின் முகத்தில் சிரிப்பு மலர்ந்தது. 'ரொம்பக் குறும்பு துறுதுறுப்பு. ஒருத்தரைப் பிடிக்கற வரைக்கும் பழகாது. ஆனா, பழகினா விடாது' என்றார்.

அவளுக்கு இந்த சினிமாக்களில் பார்க்கிற மாதிரி ரொம்ப 'அரகெண்ட்' டான குழந்தையாக இருக்குமோ என்ற பயம் இருந்தது. குழந்தை எப்படியிருந்தா என்ன? எப்படியாவது அதோட மனசை ஜெயிச்சே ஆகணும். இன்னும் ஒரு ரெண்டு வருஷத்துக்காவது இங்கே தங்கற மாதிரி நிம்மதியான வாழ்க்கை அமையணும் என்று வேண் டாத தெய்வங்களையெல்லாம் வேண்டிக் கொண்டாள்.

உறையூர் வெக்காளியம்மன், திருவானைக்காவல் அகி லாண்டேஸ்வரி, உச்சிப் பிள்ளையார் ஒருவரையும் விட்டு



வைக்கவில்லை. ஆனால், வாழ்க்கை எதையெதையோ வைத்துக் கொண்டு காத்துக் கொண்டிருந்தது அவளுக்கும் புரியவில்லை.

* * *

'இங்க தங்கறதுல உங்களுக்கு ஒன்னும் ஆட்சேபனை இல்லையே?' என்றான் சந்திரமோகன் முதலாளி.

'இல்லைங்க.. சார்!' என்றாள்.

அந்தக் கட்டிடம் பெரிய கட்டிடமாக இருந்தது. மெயின் ரோட்டிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் இருந்தது. பெரிய மாளிகை. போலத் தோற்றம். சற்றே பழைய கால அமைப்பு. ஆனால், உள்ளே நவீனமாக இருந்தது.

இருநூறடி தூரத்தில் இருந்து நடைபாதை போய்க் கொண்டிருந்தது. கட்டிடத்தின் முன்னாலே நிறைய வெற்றிடம்.

உள்ளே நுழைந்ததுமே பெரிய கட்டிடம். சினிமாக்களில் வருகிற மாதிரி உயரமான கூரை. ஆனால் நடுவில் பெரிய படிகள் காணப்படவில்லை. கூடத்தின் இரண்டு புறங் களிலும் தூண்கள். அவைகளுக்குப் பின்னாலே அறைகள்.

ஹாலின் முன் வாயிலுக்கு நேராக அதே அளவில் ஒரு கண்ணாடிக் கதவு. அதன் வழியாக ஒரு நடவை. உள்ளே போனால் இடப்புறத்தில் இருந்தும், வலப்புறத்தில் இருந்தும் சுவரோடு ஒட்டிய மாதிரிப் படிகள் போயின.

இவையல்லாமல் கட்டிடத்துக்கு வெளியே வலது மூலையில் ஒரு பெரிய ஆபீஸ் கட்டிடம் இருந்தது. அதில் வைத்துத்தான் வாணிக்கு இன்டர்வ்யூ நடந்தது. இன்டர்வ்யூ என்றால் சந்திரமோகன் இன்ஃபார்மலாக சற்று நேரம் பேசினான்.

அழைப்பு மணியை அழுத்தினான். சுந்தரம்மாவை அழைத்துக் கொண்டு போகும்படி சொன்னான். அவளை அழைத்துக் கொண்டு போய் அந்தப் பெரிய ஹாலில் வலப்புறத்திலிருந்து உள்ளே அழைத்துச் சென்று ஒரு அறையைக் காட்டினார். இரண்டு அறைகள் அடுத்தடுத்திருந்த ஒரு பகுதியாக அது இருந்தது.

அவளது உடைமைகளை வைத்த வேலையாள் 'அம்மா உடனே ஹாலுக்கு வரச் சொன்னாங்க' என்றாள்.

அவளும் முகம் திருத்திக் கொண்டு வந்தாள். ஹாலின் ஒரு புறமாக சந்திரமோகன் நின்று கொண்டிருந்தான். இரண்டரை அல்லது மூன்று வயது இருக்கும் குழந்தையொன்று அவனது கால்களைக் கட்டிக் கொண்டு அவள் முகம் பார்த்து நிமிர்ந்து நின்றிருந்தது.

குழந்தை மிக அழகாக இருந்தாள். 'சோனா பாரும்மா.. இவங்கதான் உனக்கு கேர் - டேக்கர். இனிமே உன்கூடவே இருப்பாங்க' என்றான் சந்திரமோகன் மென்மையாக முன்னாலே தள்ளி விட்டான்.

வெட்கத்துடன் குழந்தை அவளைப் பார்த்து சிரித்தது. இரண்டு கைகளையும் நீட்டினாள் வாணி.

'இங்க வர்றியா?' என்றாள்.

தயங்கித் தயங்கி வந்தது. குழந்தை அவளை நோக்கிப் போவதைப் பார்த்தபடி சந்திரமோகன் சட்டென்று சோபாவில் அமர்ந்தான்.

அவள் குழந்தையைத் தூக்கிக் கொள்ளவில்லை. மாறாக மெல்ல அந்தப்புறம் அழைத்துச் சென்றபடி பேசினாள்.

'...ம் வாணி? நீ சோனாவா?' என்றாள்.

'ஆமா.. கேர் - டேக்கர்ன்னா என்ன?' என்றது குழந்தை.



'கேர் - டேக்கர்ன்னா பாடம் சொல்லிக் குடுப்பேன். உன் கூடவே இருப்பேன்.. உனக்கு எல்லா ஹெல்ப்பும் செய்வேன். உன்னைப் பாத்துக்குவேன்' என்றாள் மெல்ல.

'பின்னே, மம்மி ஏன் 'கேர் - டேக்கர்ன்னா' ஆயான்னு சொன்னாங்க?'

அவளுக்கு சட்டென்று மனம் வாடியது. ஆனால் தேற்றிக் கொண்டாள்.

'பரவாயில்லே... அப்படியும் சொல்லலாம்' என்றாள். மெல்லத் தூக்கிக் கொண்டாள். பிறகு சந்திரமோகனிடம் திரும்பி,

'சார்.. இப்ப இருந்தே குழந்தையின் பொறுப்பை எடுத்துக் கொள்ளலாமா?' என்றாள்.

'ஓ! ஷ்யூர்! என்றான். பின்னும் ஏதோ சொல்ல வந்தவன் நிறுத்திக் கொண்டான்.

'சோனா! உன்னோட ரூம் காட்டறயா? ஸ்டடி ரூம்.. எல்லாத்தையும் காட்டிடும்மா?' என்றான்.

மூன்று வயதுக் குழந்தைக்குத் தனி ரூமா? அவளுக்கு வியப்பு.

குழந்தை அவளை ஆர்வமாகத் தன்னுடைய அறைக்கு அழைத்துச் சென்றது. அந்த அறை கண்ணாடிக் கதவைத் தாண்டி மாடியில் இருந்தது. அவள் தயங்கினாள்.

'வாங்க... அதான் அப்பாவே சொல்லிட்டாங்களே!' என்றது குழந்தை.

அவர்கள் இருவரும் மாடியில் பேசிக்கொண்டிருக்கையில் திடீரென அந்த உருவம் வந்தது. இளம் பெண் அப்படியே சோனாவின் சாயல். இல்லையில்லை சோனா அப்படியே அம்மாவின் சாயல்.

'யாரது?' என்றாள் கடுமையாக.

'மம்மி! இவங்கதான்.. புதுசா வந்திருக்கிற கேர் டேக்கர். வாணி ஆன்ட்டி' என்றது குழந்தை.

'ஓ! ஆயாவா?' என்றாள் கவிதா எகத்தாளமான ஒரு தொனியில்.

வாணி எதையும் காட்டிக்கொள்ளாமல் அமைதியாக நின்றாள்.

'பர்மிஷன் இல்லாமல் பிரைவேட் ஏரியாவுக்குள்ள வரக்கூடாதுன்னு உனக்குத் தெரியாதா?' என்றாள்.

அதற்குள் சோனா இடைமறித்து 'மம்மி.. அப்பாதான் கூட்டிட்டுப் போய்க் காட்டச் சொன்னாங்க!' என்றது.

'உங்கப்பா.. இன்னொரு..' என்று ஏதோ சொல்ல வந்தவள் சட்டென்று நிறுத்திக் கொண்டாள். தோளை மேலை நாட்டு பாணியில் ஒரு குலுக்கு குலுக்கி விட்டு நகர்ந்தாள்.

நடையில் லேசான தள்ளாட்டம் தெரிந்தது. வாணி அந்தப் பெண்ணின் முதுகை வெறித்துப் பார்த்தாள்.

முதன் முதலாக அவளுக்குள் எழுந்த கேள்வி 'அறிவின் தீட்சண்யம் மிகும் கண்களும், அளவான பேச்சும் அழுத்தமான குரலும், கம்பீரமான நடையும் உள்ள ஒரு இளைஞருக்கு இப்படி ஒரு மனைவியா?' என்று. உடனே அதைப் பற்றி நமக்கென்ன என்று எண்ணிக் கொண்டாள்.

குழந்தையைப் பற்றி மேலும் அறிந்து கொள்ள முற்பட்டாள்.

பெரிய மாளிகையின் எந்தப் பக்கமும் கண்ணைச் செலுத்தாமல் அந்த வேலையை மட்டுமே பார்த்து விட்டு குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகளையாவது ஓட்டிவிட வேண்டும் என்று மீண்டும் சங்கல்பம் செய்து கொண்டாள்.





3

**கா**லை ஐந்து மணிக்கு எழுந்து குளித்துவிட்டு யோகாவை முடித்து விட்டு இப்போதைக்குப் பெட்டிக்குள் வைத்திருந்த இரண்டு, மூன்று சாமி படங்களை வெளியே வைத்துக் கொண்டு சாமி கும்பிட்டு விட்டு ஆறரை மணிக்கெல்லாம் வெளியே வந்தாள்.

மாளிகையே நிசப்தமாக இருந்தது. சமையலறை இடப் புறம் பிரிவில் உள்ளடங்கி இருந்தது. அங்கே மட்டும் நடமாட்டம் தெரிந்தது. மெல்லப் போய் எட்டிப் பார்த்தாள்.

சுந்தரம்மா அவளைப் பார்த்துப் புன்னகைத்தபடி வந்தார்.

'என்னம்மா, எழுந்தாச்சா! குளிச்சு முடிச்சாச்சு போல் இருக்கே?' என்றார்.

'ஆமாங்க ஆன்ட்டி!' என்று புன்னகைத்தாள்.

'காபி சாப்பிடறியாம்மா?' என்று அன்புடன் கேட்டபடி சூடாக காபி போட்டுக் கொடுத்தார்.

குடித்தாள்.

மேற்கொண்டு என்ன செய்வதென்று தெரியவில்லை. மெதுவாக சுந்தரம்மாவிடம் கேட்டாள்.

'சோனா.. ரூமுக்குப் போய்க் குழந்தையை எடுத்துட்டு வரலாமா? நான் அங்கே போறதை மேடம் லைக் பண்ணலே போல இருக்கு..' என்றாள்.

சுந்தரம்மா அதற்கு பதில் சொல்லவில்லை. மாறாக,

'வெள்ளையாவே குழந்தை முழிச்சா கூப்பிடுவார்' என்றார்.

'அதுக்குள்ள நம்ம தோப்புப் பக்கமெல்லாம் ஒரு நடை சுத்திப் பாத்துட்டு வாயேன்' என்றார்.

'தனியாவா?!' என்று இழுத்தாள்.

'ஒண்ணும் பயமில்லே! எல்லாம் நம்ம ஆட்கள். சுத்திலும் வேலை செஞ்சுகிட்டிருப்பாங்க. நடை பாதையிலயே போகணும். புதருக்குள்ள போக வேண்டாம்' என்று இன்ஸ்ட்ரக்ஷன்கள் கொடுத்து அனுப்பினார்.

அவள் வெளியே இறங்கினாள். அரை மணி நேரத்துக்குள் வந்து விட வேண்டுமென்று முடிவு செய்து கொண்டாள். ஆனால், வெளியே இறங்கியவளுக்கு உள்ளே திரும்ப நுழைய மனமே வரவில்லை.

அதிகாலை நேரத்தின் அமைதி, இளவெயில், தோப்பில் ஆடிக் கொண்டிருந்த தென்னை மரங்கள், கொஞ்ச தூரத்தில் ஒரு கால்வாய் ஓடியது.

சற்றுத் தொலைவு போனால் இடது பக்கம் நெல் வயல்கள். பச்சைப் பசேலென்று தோற்றம். வரப்போரங்களில் விதவிதமான மலர்ச் செடிகள். வெகுவாக ரசித்தாள். பல நாட்களுக்குப் பிறகு அவளுக்குள் மறைந்திருந்த அழகுணர்ச்சி பீறிட்டுக் கொண்டு கிளம்பியது.

ஆழ்ந்த அமைதி மனத்துக்குள் நிலவ கண்கள் மின்ன பின்னல் அசைய காட்டன் புடவையில் இயல்பாக நடந்து வந்தாள்.

நடைபாதையில் இறங்கி வீட்டை நோக்கி நடந்தாள். ஏதோ பாடலை முணுமுணுத்துக் கொண்டு நுழைந்தவள் திடுக்கிட்டு நின்றாள்.

ஹாலின் மையத்தில் சோபாவில் காஷுவலாக என்பார்களே அந்த மாதிரி உடையில் அமர்ந்து கொண்டு ஹிந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்தான் சந்திரபோகன்.



சட்டென்று மீட்டுக் கொண்டாள். சுறுசுறுப்பாக ஒரு குட்மார்னிங் சொன்னாள்.

'குட்மார்னிங்' என்றான் பதிலுக்கு.

'டு யு லைக் த பிளேஸ்?' என்றான்.

'ரொம்ப..! இட் இஸ் எத்திரியல்..' என்றாள்.

அவன் முகம் மலர்ந்தது. புன்னகைத்தான். சமையலறைப் பக்கமிருந்து சோனா ஓடி வந்தாள்.

'ஆன்ட்டி.. எத்திரியல்னா என்ன?' என்றாள்.

'குட்மார்னிங்... தங்கம்ஸ்' என்றாள் வாணி.

'குட்மார்னிங்!' என்ற குழந்தை மறுபடியும் 'எத்திரியல்னா..?' என்றது.

'எத்திரியல்னா... ரொம்ப.. ரொம்ப.. அழகு.. ன்னு அர்த்தம்..' என்றாள். இயற்கையாக அவனிடம் திரும்பி,

'இந்த விளக்கம் பத்தாது இல்லே சார்?!' என்றாள்.

அவன் பளீரென்று சிரித்தான்.

'நீங்களே மேனேஜ் பண்ணுங்க!' என்றான். ஆனால் நகரவில்லை.

'எத்திரியல்னா.. சரி... இப்ப நீ காலைல காபி, பால் எதுவும் சாப்பிடலையா? சாப்பிடு.. அப்புறம் சொல்றேன்?' என்றாள்.

'நான் பால்தான் சாப்பிடுவேன்!' என்றாள் சோனா.

'சரி.. நான் அப்ப வாங்கிட்டு வரட்டுமா?' என்றாள்.

'ம்..!' என்றது குழந்தை. சோபாவில் அமர வைத்தாள். ஆனால் குழந்தை சட்டென்று அவளது மடியில் உட்கார்ந்து கொண்டது.

சுந்தரம்மா சிரித்தார்.

வாணிக்கும் அந்தக் குழந்தையின் ஸ்பரிசம் மிகவும் பிடித்திருந்தது. வெகு நாட்களுக்குப் பிறகு இயற்கையாகத் தன் வாழ்க்கையில் ஒரு விஷயம் நடக்கிற மாதிரித் தோன்றியிருந்தது.

சந்திரமோகன் அங்கே அமர்ந்திருப்பதையும், நியூஸ் பேப்பர் படிப்பதையும் அவள் உணரவே இல்லை.

குழந்தை பாலைக் குடிக்கையில் டம்ளரை அவளும் கையில் பிடித்துக் கொண்டாள். குடித்து முடித்து விட்டு வாயின் மேல்உதட்டிலும் கீழ்உதட்டிலும் பால் நுரைக்க குழந்தை கொள்ளை அழகாகச் சிரிக்க அவள் உலகமே மறந்து போனாள்.

'ஸோ ஸ்வீட்!' என்று டவலால் மறுபடியும் துடைத்தாள். லேசாக முத்தமிட்டாள்.

'ஐயோ.. நான் குளிக்கலே!' என்றாள் சோனா.

'சரி.. குளிக்க வைக்கட்டுமா?'

செய்தித் தாளில் பார்வையை ஓட்டிக் கொண்டே சந்திரமோகன் சொன்னான்.

'மிஸ். வாணி, நீங்க அதையெல்லாம் செய்யத் தேவையில்லே. ஆட்கள் இருக்காங்க... என்றான்.

'ஓ! நோ.. ஐ வுட் லைக் டு டூ இட்' என்றாள்.

'ஹைய்! நீங்களேவா குளிக்க வக்கறீங்க!' என்றது குழந்தை ஆசையாக.

சுந்தரம்மா பக்கத்தில் நிற்க பாத் டப்பில் குழந்தை ம்மாளம் போட பக்கத்தில் இருந்து குளிக்கச் செய்தாள்.

சோனா குமிழ் குமிழாகச் சிரிப்பைக் குடுக் குடுக்கென்று ளியிட வேலையாட்களெல்லாம் ஜாடை மாடையாக டிக்கை பார்த்தார்கள்.



சுந்தரம்மாவுக்கும் ஒரே சிரிப்பு.

எப்படி நேரம் ஓடியது என்பதே தெரியவில்லை. ஒன்பது மணிவாக்கில் மறுபடியும் அழைப்பு. குழந்தையை சுந்தரம்மாள் அழைத்துக் கொண்டு போய்விட்டார். கொஞ்ச நேரம் அவளுக்குத் தனிமை கிடைத்தது.

சாப்பிட வர வேண்டுமாம்... டைனிங் டேபிளில் சந்திரமோகன் அமர்ந்திருந்தான். சோனா எதிரில் அமர்ந்திருந்தாள்.

'நீங்களும் உட்காருங்க... வாணி!' என்றான் சந்திரமோகன்.

அவள் தயங்கினாள்.

அவன் பொறுமையின்றி வாட்சைப் பார்த்தான். 'ப்ளீஸ்! எனக்கு நேரமாச்சு!' என்றான்.

அவள் டக்கென்று உட்கார்ந்தாள்.

பின்கட்டிலிருந்து கவிதா வந்தாள். 'குட் மார்னிங்..!' என்றாள்.

அவனும் மறுமொழியாக 'குட்மார்னிங்!' என்றான்.

வாணியும் மரியாதை கலந்த குரலில் 'குட்மார்னிங்.. மேடம்!' என்றாள். லேசாக ஒரு தலையசைப்பு. பின்னர் ரொம்பவும் அக்கறையாகக் கணவனிடம் திரும்பினாள்.

'என்னங்க! இன்னைக்கும் பிஸியா? போகணுமா!' என்றாள் கொஞ்சலாக.

அவன் லேசாக அவளைத் திரும்பிப் பார்த்தான். பின் கண்களில் எந்த உணர்வையும் காட்டாமல்.

'ஆமாம்மா! போகணும். நிறைய வேலையிருக்கு..!'

'வேலை! வேலை! யாருக்காக இப்படி சம்பாதிக்கணும்!' என்றாள்.

'இருக்கறதைக் காப்பாத்தணும்.. இல்லே!' என்றான். பேச்சில்தான் அந்நியோன்யம் தெரிந்ததே தவிர கண்ணிலோ, முகபாவத்திலோ இரண்டு பேரிடமும் எந்த உணர்ச்சியையும் காணவில்லை.

ஒருவேளை வேலைக்காரர்கள் முன்னிலையில் அப்படி நடந்து கொள்கிறார்கள் போலும் என்று எண்ணிக் கொண்டாள் வாணி.

சோனாவுக்கு ஊட்ட வேண்டிய டிபனை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தார் சுந்தரம்மா. வாணி குழந்தைக்கு ஸ்பூனால் எடுத்து ஊட்டினாள்.

சோனாவும்,வாணியும் தங்களுக்குள் ஏதோ சிரியஸாகப் பேசிக் கொள்ள சோனா சாப்பிட்டது. அதைப் பார்த்த சந்திரமோகன் கண்களில் ஒரு சிரிப்புத் தோன்றியது.

அந்த நேரம் கவிதா இறுக்கமான குரலில் சொன்னாள்.

'என்ன மிஸ். வாணி! ஒரே சிரிப்புச் சத்தமாக இருந்தது. டு மச் ஃப்ரீடம் வில் ஸ்பாயில் தி சைல்ட்' என்றாள்.

வாணி திடுக்கிட்டுப் போனாள். சந்திரமோகன் கேள்விக் குறியாய்ப் பார்த்தான்.

'ஆமா.. கவிதா சொன்னாக் கரெக்டாத்தான் இருக்கும்.' என்றான் சந்திரமோகன். அதில் தொனித்த கிண்டல் வாணியை ஆச்சரியப் படுத்தியது என்றால் ஏதோ கண்ணுக்குத் தெரியாத சாட்டையை எடுத்துக் கொண்டு அவன் தன் மனைவியின் மேல் வீசினாற் போல் அவளுக்குப் பட்டது.

கவிதாவின் முகம் சுருங்கியது.

சூழ்நிலையின் அபத்தத்தை மாற்றுவதற்காக வாணி குழந்தையிடம்,



'சோனா! நீ நல்ல பொண்ணுதானே! விளையாடறப்ப விளையாடிட்டு படிக்கறப்ப படிப்பேதானே?' என்றான்.

'ஆமா.. நான் ரொம்ப நல்ல பொண்ணு. வாணி ஆன்ட்டி எனக்கு நிறைய கதை, ரைம்ஸ் எல்லாம் சொல்றேன்னு சொல்லியிருக்காங்க; நான் அவங்க சொன்னபடி கேக்கறேன்' என்றது.

சந்திரமோகனின் முகம் மலர்ந்தது.

'தட்ஸ் ரியலி குட்.. டார்லிங்!' என்றான்.

தனது எல்லாக் கேள்விகளுக்கும் மறைமுகமாகப் பதில்கள் அளிக்கப்பட்டுவிட்டது போல் உணர்ந்த கவிதா அதற்குப் பிறகு வாயை மூடிக் கொண்டாள்.

அத்தனை கோபமும் வாணியின் மேல் திரும்பியது. ஆனால், அப்படி வெளிப்படையாகக் காட்டுபவள் அல்ல கவிதா. உள்ளே கனன்று கொண்டிருந்த கோபம் விரைவில் வெடித்ததைக் கண்ட வாணி வாடிப் போனாள்.

* * *

இரண்டு நாட்கள் போயிருக்கும்!

சுந்தரம்மா வந்து லேசான கவலையான முகத்துடன்,

'வாணிம்மா.. சின்னம்மா கூப்பிடறாங்க..' என்றார்.

அப்போது சோனா உறங்கிக் கொண்டிருந்தாள்.

வாணி ஏதோ புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள். வாணி உடனே புத்தகத்தை மூடி வைத்து விட்டு எழுந்தாள். அப்போது சுந்தரம்மா மெல்லிய குரலில்,

'அம்மா! சின்னம்மா ஒரு மாதிரி. எது சொன்னாலும் சரின்னு சொல்லிட்டு வந்திருங்க..' என்றார்.

வாணி சுந்தரம்மாவை ஒருமுறை ஆழமாகப் பார்த்து விட்டுப் புன்னகைத்தாள். அவர் தன் மீது காட்டுகிற அக்கறை புரிந்தது.

பெரிய வீட்டின் பின்கட்டுப் பகுதியில மாடியில் சந்திர மோகனும், கவிதாவும் தங்கியிருக்க அந்த விங்குக்குப் போனாள்.

'வணக்கம்... மேடம்!' என்றாள்.

'வணக்கம் என்ன படிச்சிருக்கே?'

'பி.எஸ்.சி. பயோ கெமிஸ்ட்ரி' என்றாள்.

'அப்புறம்.. ஏன் ஆயா வேலைக்கு வந்திருக்கே?' என்றாள்.

வாணி மௌனமாக நின்றாள்.

'இங்கிதம்.. ன்னா என்னன்னு தெரியுமா!' என்றாள் கவிதா.

வாணி திடுக்கிட்டவளாகக் கேள்விக் குறியாய்ப் பார்த்தாள்.

'இல்லே! என் ஹஸ்பெண்ட் ஒரு மரியாதைக்காக டைனிங் டேபிளுக்குக் கூப்பிட்டா.. வந்து உட்கார்ந்துடறதா? பரவால்லை சார்.. தேங்க்ஸ்ன்னு ஒதுங்கிக்க வேண்டாமா?' என்றாள்.

வாணிக்கு சாட்டையடி பட்டாற் போல் இருந்தது. ஆனாலும் விழுங்கிக் கொண்டு பொறுமையாகச் சொன்னாள்.

'மேடம்! ஃபர்ஸ்ட் டே.. நான் ரொம்ப ஹெஸிடேட் பண்ணினேன். சார் ரொம்பக் கோபமாயிட்டாங்க' என்றாள்.

அவள் உச்சுக் கொட்டினாள்.

'ஆமா.. உங்க சாருக்கு யாரை எங்கே வைக்கணும்னு தெரியாது!' என்றாள்.



வாணி மௌனமாக நின்றாள். ஆனால், உள்ளே அழுகை பொத்துக் கொண்டு வந்தது. அடக்கிக் கொண்டு சொன்னாள்.

'சாரி.. மேடம்! உங்களுக்கு அதிலே அப்ஜக்ஷன் இருக்குன்னு எனக்குத் தெரியலே! இனிமே கரெக்ட் பண்ணிக்கறேன்' என்றாள்.

'ம்....!' என்றாள் கவிதா உறுமலாக.

'தேங்க்யூ... மேடம்!' என்று திரும்பினாள் வாணி. இரண்டு எட்டு நடந்திருப்பாள். மீண்டும் அழைத்தாள்.

'இதைப் போய் எல்லாத்துகிட்டயும் சொல்லிகிட்டிருக்க வேண்டியதில்லே.. பு.. கெட்... மீ!' என்றாள் கவிதா.

'சரிங்க மேடம்!' என்று திரும்பியவள் கண்ணில் அவள் கோப்பையில் ஏதோ திரவத்தை ஊற்றுவதைப் பார்க்க முடிந்தது.

திடுக்கிட்டுப் போனவளாக நகர்ந்தாள்.

தனக்கென்று ஒதுக்கப்பட்ட அறையில் போய் சின்னதாகத் தான் உருவாக்கியிருந்த அந்த பூஜை அறையின் முன்பு நின்று மௌனமாகக் கண்ணீர் பெருக்கினாள்.

'இறைவா! இன்னும் எத்தனை நாளைக்கு என்னை இப்படி சோதிக்கப் போகிறாய்' என்று உள்ளுக்குள் கலங்கினாள். அறைக்குள்ளேயே முடங்கிக் கொண்டாள். அன்று மாலை டாக்டர் போனில் அழைத்தார்.

'அம்மா! எப்படியிருக்கே?' என்றார்.

'அங்கிள்! இங்கே சௌகரியமா எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு... வசதிகளுக்கும் குறைவில்லே!' என்று நிறுத்தினாள்.

அப்போதுதான் டாக்டர் சொன்னார். 'அம்மா! நீ அங்கே போனதுக்கப்புறம் சொல்லலாம்னுதான் நீ புறப்படறதுக்கு

முன்னாடி எதுவும் சொல்லலே.' அங்கே மிஸஸ். சந்திரமோகன் ஒரு மாதிரிம்மா. ரொம்ப கூடெய்லா சொல்றதுக்கு எனக்கு அனுமதியில்லே. ஆனா சந்திர மோகன் கவிதாவுடைய தொந்தரவுகளையும் மீறி சோனாவைப் பாத்துக்கறதுக்குப் பொறுமையான ஒரு பொண்ணு வேணும்னு என்கிட்டே கேட்டுக்கிட்டே யிருந்தாரும்மா. அதனாலதாம்மா.. உன்னை அனுப்பி னேன். சந்திரமோகன் வீட்ல இருக்கற மாதிரிப் பாதுகாப்பு உனக்கு எங்கயும் கிடைக்காதும்மா.. இப்போதைக்கு அதுதானே முக்கியம். அதனால அந்தம்மாவினால எதுவும் பிரச்சினைன்னாலும் பொறுத்துப் போம்மா.. அது மட்டுமில்லம்மா.. நல்ல சேலரி. குடுப்பாரு.. இன்னொரு விஷயமும் இருக்கு... ஆனா, அது நல்ல விஷயம்மா.. நான் நேர்ல சொல்றேன்' என்றார். மேலும் சற்று நேரம் பேசிவிட்டு வைத்தார்.

காலையில் தான் கடவுளிடம் கேட்ட கேள்விகளுக்கு இப்போது பதில் கிடைத்த மாதிரி உணர்ந்தாள்.

'உண்மைதான்.. தன் வயதும், அழகுமே தனக்கு இப்போது எதிரிகள் எல்லாவற்றைக் காட்டிலும் தனக்கு இப்போது பாதுகாப்புதான் முக்கியம் அது கிடைக்கிறதே!' என்று எண்ணிக் கொண்டாள்.

மீண்டும் மனசு லேசாகி விட்டது. சுந்தரம்மா வந்து வாணிம்மா! சோனா முழிச்சிடுச்சு.. நீங்க வேணுங்குது. பார்த்தீங்களா?' என்றார்.

உடனே முகந்திருத்திக் கொண்டு போனாள். குழந் தைக்கு முதன் முதலாக எழுத்துக்களை சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தாள்.





# 4

இரவெல்லாம் அவளுக்குக் கவலை பிடித்துக் கொண்டது. மறுநாள் காலை எப்படி சமாளிப்பது? சந்திரமோகன் சார், சாப்பிட உட்காரும்பாரு. இந்த அம்மா முறைக்கும். சோனாவுக்கும் சாப்பிட ஊட்டி விடணும்! எப்படி சமாளிக்கிறது?' என்ற கவலையே அவளை அரித்தது.

இரவு உணவு அவரவர் சௌகரியம் போல் சாப்பிடு வார்கள் என்பதால் பிரச்சினை இருக்கவில்லை. முகம் வாடிப் போய் ஒதுங்கி ஒதுங்கி அமர்ந்து கொண்டிருந்த வாணியை தொடர்ந்து கவனித்த சுந்தரம்மாள் மெதுவாக அறைக்குள் எட்டிப் பார்த்தார்.

சோனாவை அமர வைத்து அருகில் அமர்ந்தபடி பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

'அ.. ஆ..!' என்று ராகம் போட்டுவிட்டுக் கிளுகிளு வென்று சிரித்தது குழந்தை.

வாணியும் சிரித்தாள். 'அம்மா.. இங்கே வா வா.. ஆசை முத்தம் தா.. தா..' என்று பாட்டாகவும் தொடர்பு படுத்தி. சொல்லிக் கொடுத்தாள். இரண்டு எழுத்துக்களையும் குழந்தை நன்றாக எழுதிப் பழகியவுடனே சரி.. இன்னைக்குப் போதும் என்ன?' என்றாள்.

சுந்தரம்மா தன்னிடம் பேச விழைவதை உணர்ந்த வளாக.

'கொஞ்ச நேரம் நிலா வெளிச்சத்துல.. வெளியே போலாமா?' என்றாள்.

வேலையாட்களிடம் சொல்லி ஒரு சின்ன டேபிளைக் கால்வாய் ஓரமாகப் போடச் சொல்லி அதன் மேல் டிபன் ஐட்டங்களை வைக்கச் சொன்னாள்.

'இன்னைக்கு.. நீயும்.. நானும் இங்கதான் சாப்பிடப் போறோம்!' என்றாள்.

குழந்தைக்கு ஒரே குதூகலம். குழந்தையினுடைய சின்ன சேரைப் போட்டு அதிலே உட்கார வைத்து விட்டு வெஜிடபிள் கிச்சடியைத் தட்டில் போட்டுக் கொடுத்து ஸ்பூனால் எடுத்து சாப்பிடச் செய்தாள்.

கூடவே அவளும் உதவினாள்.

'சுந்தரம்மா..! சோனா.. ரொம்ப ஸ்வீட்.. இல்லே! பாருங்களேன்.. எவ்வளவு அழகா சாப்பிடறா?' என்ற வுடனே சோனாவுக்கு குஷி கிளம்பிவிட்டது.

'நீங்க வேணும்னா பாருங்களேன். ஒரு துளி கூட கீழே சிந்தாம சாப்பிடுவா...' என்றவுடனே குழந்தை அக்கறை யாக ஸ்பூனைத் தூக்கியது. அதற்குள் இன்னொரு வேலை யாள் ஒரு சின்ன டீபாயைக் கொண்டு வந்து போட தட்டை அதன் மேல் வைத்துக் கொடுத்தார்கள்.

'குட்.. இது கூட ரொம்ப நல்ல ஐடியாவா இருக்கே!' என்ற குரல் கேட்டுத் திரும்பினார்கள்.

சந்திரமோகன் நின்று கொண்டிருந்தான்.

'அப்பா...! ஹை.. அப்பா!' என்று குதூகலமான குழந்தை 'அப்பா... பாத்தீங்களா! நானே சாப்பிடறேன்' என்றாள்.

சுந்தரம்மா உடனே 'ஆமாங்கய்யா.. வாணியம்மா சோனா நல்ல பொண்ணுதானே சாப்பிடுவா பாருங்கன்னு சொன்னாங்களோ இல்லையோ ஒழுங்க.. உட்கார்ந்து சாப்பிடறா' என்றாள்.



'குட் வாணி மேடம்! யூ ஹாவ் காட் த நாக்' என்று சிரித்தான்.

அவளும் புன்னகைத்தாள். பிறகு சொன்னாள். 'சார்.. நான் படிச்சிருக்கேன்... குழந்தைகளைக் கையாள்றதுக்கு ரொம்ப உத்தமமான விஷயம் என்னன்னா.. அவங்களைப் புகழணும். அப்ரிஷியேட் பண்ணணும். ஆஃப்டர் ஆல்... மனுஷங்க எல்லாரும் பாராட்டுக்குத்தானே ஏங்கறோம்!' என்றாள்.

'தட்ஸ் ரைட்!' என்றான். சுற்று முற்றும் பார்த்தான். 'ஸ்ப்ளெண்டிட்!' என்றான்.

அவன் பார்வையைப் புரிந்து கொண்டவளாக. 'சார்! சூழ்நிலை பாருங்க.. எவ்வளவு அழகா இருக்கு.. நிலா வெளிச்சம்.. இந்தக் கால்வாய் ஓடறது. இந்த மணற்பாங் கான கரை.. கொஞ்சம் தண்ணி நல்ல மணல் விளையற இந்தப் பூஞ்செடிகள் எல்லாம்.. எவ்வளவு அழகா இருக் கில்லே... இதுக்கு நடுவில் உட்கார்ந்து சாப்பிடறதுக்கு நல்லா.. இருக்கில்லே!'' என்றாள்.

'ஆமா.. ரியலி.. நைஸ்!' என்றான். வேலையாட்களை அழைத்து ஏதோ சொன்னான். கொஞ்ச நேரத்துக்குள்ளாக இரண்டு மூன்று டேபிள்களைக் கொண்டு வந்து அங்கே போட்டு. சுற்றிலும் சேர்களைப் போட்டு அங்கேயே சாப் பிடுவதற்குத் தயாரானார்கள்.

விஷயங்கள் தன் கண் முன்னாலேயே மாறிக் கொண் டிருப்பதை வாணி ஒரு வித வியப்புடன் பார்த்தாள். சூடான பதார்த்தங்கள் ஒரு மேஜையில் அடுக்கினார்கள்.

'இப்ப.. வந்தர்றேன்..' என்று தான் உள்ளே போய் வரும்போது மனைவியையும் அழைத்து வந்தான்.

'மீட் மை வைஃப்.. இட்ஸ் கவிதா..' என்றான்.

'ஹோ! மூன் லைட் பார்ட்டி!' என்றாள் கவிதா. முகத்தில் வழக்கமாகப் படியும் கடுமை மறைந்திருந்தது. ஆனால், முழுமையாகக் கணவன் கவனம் தன்னிடமிருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தவள் போல் அவன் அருகில் நெருங்கி அமர்ந்து கொண்டாள். அவனும் தடுக்கவில்லை. இந்த முறை கவனமாக வாணி தள்ளி நின்று கொண்டாள்.

சந்திரமோகன் அவளை அழைப்பதற்காகத் திரும்பும் போதெல்லாம் குழந்தையின் மீது கவனம் செலுத்துபவள் போல் நடித்தாள். லேசாகக் கண்கள் சுருங்கப் பார்த்தவன் பிறகு விட்டு விட்டான். ஆனால் சற்று நேரம் கழித்து.

'வாணி! வாங்க.. நீங்களும் உட்காருங்க!' என்றான்.

அவள் தயக்கத்துடன் கவிதாவைப் பார்க்க... 'உட்கார்ந்து தொலை!' என்பது போல் தலையசைக்க வேறு வழியின்றி அமர்ந்தாள்.

'கவி! வாணியோட அப்பா.. பெரிய பஸ் கம்பெனி வச்சு நடத்தினவங்க.. சூழ்நிலை சரியில்லாம வித்தவங்க.'

'ஓ!' என்றாள் கவிதா.

'இப்பவும் வாணிக்கு அம்மா, அப்பா இல்லேன்னா... கூட டாக்டர் விஸ்வநாதனோட வளர்ப்பு மகள். நான் ரொம்ப ரிக்வெஸ்ட் பண்ணிகிட்டதாலே அனுப்பி வச்சிருக்காங்க...' என்றான்.

வாணி அமைதியாக சாப்பிட்டாள்.

'திருச்சியில ஒரு பெரிய பங்களா இருக்கு. வாடகை.. வருது. கோல்ட் எ நைஸ் லேடி.. நம்ம சோனாவைப் பாத்துக்கறதுக்காக அவங்க இங்கே வந்ததுக்கு நாம ரொம்பத் தாங்க் பண்ணனும்' என்றான்.

'நீ நினைக்கறது போல வாணி ஒண்ணும் சாப்பாட்டுக்கு இல்லாம இங்கே வேலைக்கு என்று வந்திருக்கிற மாதிரி



நிலைமை இல்லே' என்று அவன் சொல்லாமல் சொல்வது போல் இருந்தது.

வாணி திடுக்கிட்டுப் போனாள். 'இதோடா.. வம்பாய்ப் போச்சு... நான் அவனிடம் போய் சொன்ன மாதிரி கவிதா நினைச்சுகிட்டா என்ன செய்யறது?' என்று அவள் கவலைப்படும்போதே சந்திரமோகன் சொன்னான்.

'அதென்ன, வாணி மேடம்! உங்க ஜாப்ல ரொம்ப மூழ்கிப் போயிட்டீங்க போலே. ஒரு நிமிஷமாவது வந்து ஏதாவது சொல்லுவீங்கன்னு பார்த்தேன்' என்றான்.

மறுபடியும் வாணிக்கு ஆச்சரியமாய்ப் போனது. தான் கேட்க விரும்புகிற கேள்விகளுக்கெல்லாம் அவன் முதலிலேயே எப்படி பதில் சொல்கிறான் என்று. இத்தனைக்கும் அவன் முகத்தில் எந்த விதமான உணர்வுகளும் இல்லை.

கவிதாவும் அவனுடைய பாணியிலேயே விளையாட்டை நடத்த விரும்பியவள் போல் வாணியிடம் இயல்பாகப் பேசினாள்.

வாணியும் அதே பாணியில் தொடர்ந்தாள்.

இடையிலே ஓடி வந்து மடியிலே அமர்ந்து கொண்ட குழந்தையிடமும் இயல்பாகப் பேசினான் சந்திரமோகன்.

'இன்னைக்கு ஆபீஸ்ல என்ன நடந்துச்சு தெரியுமா?' என்று அன்றைய நிகழ்வுகளையெல்லாம் கூடப் பகிர்ந்து கொண்டான்.

சற்று நேரம் கலகலப்புக்குப் பின் கவிதா திடீரென்று எழுந்து.

'ஐ ம் டயர்ட்.. நான் தூங்கப் போறேன். குட் நைட்' என்று கிளம்பினாள்.

சந்திரமோகனும் அவளைப் பார்த்துப் புன்னகைத்தான். 'ஓ.கே.. டியர்!' என்றான். ஆனால் பின் தொடர முயற்சிக்கவில்லை.

குழந்தையை மடியில் அமர்த்திக் கொண்டபடியே சற்று நேரம் சுந்தரம்மாவிடமும், வேலையாட்களிடமும் பேசினான். பிறகு,

குழந்தை மடியிலேயே உறங்கிவிட்டாள். தலையைக் கோதிக் கொடுத்துக் கொண்டே எழுந்து தோளில் போட்டுக் கொண்டான். பிறகு வாணியிடம் திரும்பி 'மிஸ். வாணி, உங்ககிட்டே பேசணும்' என்றான்.

குறிப்பறிந்து சுந்தரம்மாவும் வேலையாட்களும் சற்றுத் தொலைவில் நின்று கொண்டார்கள்.

'சார்!' என்றாள்.

'என் மிஸஸ் ஏதாவது உங்ககிட்டே ஹார்ஷா பேசினாங்களா?' என்றான். அவளுக்குத் தர்ம சங்கடமாகப் போய் விட்டது.

'ஆமாம்..' என்று சொன்னால் அவர்களுக்குள் பிரச்சனை வரும். உண்மையைச் சொல்லாவிட்டால் இவனுக்குக் கோபம் வரும். தயக்கத்துடன் சொன்னாள்.

'தப்பா.. எதுவும் சொல்லலே சார்!' என்றாள்.

'என்னத்தை அப்படி கரெக்டாச் சொன்னாங்க?'

'என்னதான் முதலாளிகள் இடம் குடுத்தாலும் தொழிலாளிகள் கரெக்டான இடம் பார்த்து இருந்துக்கணுமில்லே.. அதைத்தான் சொன்னாங்க' என்றாள்.

அவன் முகம் இறுகியது.

'நீங்க என்ன சொன்னீங்க?'

'நான்.. இனிமே கேர்ஃபுல்லா இருந்துக்கறேன்னு சொன்னேன்.'

'குட்.. இனிமே கேர்ஃபுல்லா இருங்க. ஆனா அவங்க என்ன மாதிரியில்லே... முதலாளி, தொழிலாளிங்கற



பேதமெல்லாம் வச்சுக்கத் தேவையில்லேங்கறதுல கேர்ஃபுல்லா இருங்க..' என்றான்.

அவள் மறுபடியும் திகைத்தாள்.

'மேடம்! சோனாவுக்கு இப்படி அக்கறையும் அன்புமா ஒருத்தர் கிடைச்சிருக்கீங்க.. ப்ளீஸ்.. இந்த நல்ல அட்மாஸ்ஃபியரை எதுக்காகவும் மாத்திடாதீங்க..' என்றான்.

அவள் சற்று நேரம் அமைதியாக இருந்தாள். பிறகு,

'சார்! நீங்க நினைக்கறது நல்ல படியா நடக்கணும்னா.. நான் அவங்களையும் ஆன்டகனைஸ் பண்ணாம இருக்கணும் அப்பதான் நடக்கும்' என்றாள்.

அவன் சிந்தனையிலாழ்ந்தான்.

'சார்! அவங்க வீட்டு எஜமானி. நான் வந்து போற ஒரு பணியாள். அவங்க சொன்னதுல எனக்கொண்ணும் வருத்தமில்லே. நீங்க இந்த விஷயத்தைப் பெரிசு பண்ணினா, அதனால பகைதான் வளரும் பரவாயில்லை.. சார் அவங்க சொல்ற மாதிரி நான் பின்னணியிலேயே இருந்துக்கறேன்.'

அவன் பெருமூச்சுவிட்டான்.

'ஓ.கே...! உங்க இஷ்டம். இனிமே அவங்க உங்களை இன்சல்ட் பண்ணாத அளவுக்கு நான் பாத்துக்கறேன்' என்றான்.

'தாங்க்ஸ்' என்றாள். ஆனால் அதற்குப் பிறகு இவருக்கு எப்படி தங்கள் உரையாடல் தெரிந்தது என்று யோசித்தாள். பிறகு புரிந்தது 'சுந்தரம்மா தன்னை அழைக்க வரும்போதே வாடிய முகத்துடன் வந்தார் என்பது. அவரிடமும் கவிதாம்மா ஏதோ பேசியிருப்பாங்க போல இருக்கு' என்று எண்ணிக் கொண்டாள். ஆனாலும் சந்திரமோகனின் ஆதரவு அவளுக்கு ஆறுதலாக இருந்தது. அதே சமயம் இந்த

ஆதரவு காரணமாகவே கவிதாவுக்குக் கோபம் அதிகமாகி விடக் கூடாதே என்று அச்சமும் இருந்தது.

அவளுடைய அறையிலிருந்தபடி யோசித்துக் கொண்டிருந்த வாணிக்கு ஹாலில் ஏதோ சலசலப்பு சத்தம் கேட்டது. எழுந்து வந்தாள்.

ஹாலில் நின்றபடி சோனா சிணுங்கிக் கொண்டிருந்தாள். பின்னால் சந்திரமோகன் விழித்துக்கொண்டு நின்றிருந்தான்.

சுந்தரம்மாவும் நின்றிருந்தார்.

'என்னடா.. சோனா!' என்றாள் வாணி.

'நான்.. நான்... உங்ககிட்டேதான் படுத்துக்குவேன்..' என்றது குழந்தை.

அவள் சந்திரமோகனைப் பார்த்தாள். பிறகு, 'எனக் கொன்னும் பிராப்ளமில்லே!' என்றாள்.

அவன் முகத்தில் விடுபட்ட உணர்வு தெரிந்தது.

'ஓ.கே... ஓ.கே! அப்ப இன்னைக்கு மட்டும் கெஸ்ட் ரூம்ல படுத்துக்குங்க. நாளைக்கு உங்க ரூம்லயே இவளுக்கும் ஒரு கட்டில், மெத்தை போடச் சொல்றேன்' என்றான்.

'ஆன்ட்டி.. நீங்க அந்தக் கதையை பாதி சொல்லவே இல்லை' என்று குழந்தை புகார் சொல்வதையும் 'இப்ப சொல்றேன்.. வா! என்று அவள் அள்ளிக் கொள்வதையும் பார்த்துக் கொண்டு நின்றான் சந்திரமோகன்.

* * *

தொழில் தொடர்பான ஒரு முக்கியமான ஃபைலைப் படித்து விட்டு நிமிர்ந்தான் அறை வாசலில் நிழலாடியது.

திரும்பிப் பார்த்தான்.

'கவிதா!'



'என்ன விஷயம்?' என்றான்.

அவள் உள்ளே வந்தாள்.

'மிஸ்டர். மோகன்... ரொம்ப நாள் கழிச்சு என்கிட்டே இன்னைக்குக் கலகலப்பாய் பேசினீங்க.. ஒருவேளை எதிரில அழகான ஒரு பொண்ணு இருந்ததாலேயோ' என்றாள்.

'கவிதா! வாணியை நீ எந்த விதத்துலயும் இன்சல்ட் பண்றதை நான் விரும்பலே.. தெரியுதா? யார் செய்த புண்ணியமோ.. சோனாவுக்கு இப்படி ஒரு கேர் டேக்கர் கிடைச்சிருக்காப்பல. நீதான் குழந்தையை ஒழுங்காக் கவனிக்கறதில்லே. ஒரு நல்ல ஆள் கிடைச்சிருக்கறதையும் கெடுத்துராதே..' என்றான்.

'ஓ.கே! ஓ.கே!' என்றாள் உள்ளே வந்தவள் அவனிடம் நெருங்கி நின்றாள். சந்திரமோகனை விழுங்குவது போல் பார்த்தாள்.

அவன் சட்டென்று முகம் சுளித்தான்.

'ஆரம்பிச்சுட்டியா?' என்றான்.

'கொஞ்சம்... கொஞ்சம்தான்!' என்றாள். மதுவின் மணம் அவனுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது.

'கவிதா! எல்லா விதத்துலயும் உன்னை ஸ்பாயில் பண்ணிக்கறே!' என்றான் கடுமையாக.

'நீங்க.. சரின்னு சொல்லுங்க..! நான் எல்லாத்தையும் விட்டுர்றேன்' என்றாள்.

அவன் அவளை மீண்டும் அதே வெறுமைப் பார்வை பார்த்தான்.

'ஏன்.. என்கிட்டே என்ன இல்லை! அழகில்லையா இளமையில்லையா?'

'ப்ளீஸ்! லெட் அஸ் நாட் டிஸ்கஸ் இஸ்.. உன் ரூமுக்குப் போ..!' என்றான்.

'மோகன்.. யு.. ஆர்.. யங் ஐ.ம் ஆல் ஸோ..' என்றபோதே அவன் கையை உயர்த்தினான்.

'ப்ளீஸ்.. கவிதா... ஐ அம்.. ஃபெட் அப் ஆஃப் இஸ். சலிச்சுப் போச்சு.. என்னைக் கொஞ்சம் தனியா.. விடு..' என்றான்.

சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டான்... அறையை விட்டு வெளியேறினான்.

கவிதா அவன் முதுகைக் குரோதத்துடன் பார்த்துக் கொண்டு நின்றாள்.



## 5

சுந்தரம்மாள் ஏழு மணி வாக்கில் 'உள்ளே வரலாமா?' என்று கேட்டு விட்டு எட்டிப் பார்த்தார்.

'வாங்கம்மா...!' என்று வரவேற்றாள் வாணி.

'அம்மா! அய்யா உங்களைக் காலையில் எட்டு மணிக்கு ரெடியா இருக்கச் சொன்னாரு. பெரியம்மாவுக்கு உங்களை அறிமுகப் படுத்தணுமாம்' என்று அறிவித்து விட்டுப் போனார்.

வாணி இங்கே வந்ததிலிருந்து தனக்கும், குழந்தைக்கு ...க ஒரு தனி உலகத்தைப் படைத்துக் கொண்டாள் ...றுதான் சொல்ல வேண்டும். அதனால்தான் தயாராகும் ...டே குழந்தையையும் தயார் செய்தாள்.



இத்தனை நாட்கள் இங்கே தங்கியிருந்த போது ஒரு விஷயம் அறிந்து கொண்டிருந்தாள். தானும், குழந்தையும் புழங்கிக் கொண்டிருந்த அறைக்கு நேர் மேலாக இருந்த மாடிப் பகுதியில் பெரியம்மா சிவகாமி நாச்சியார் தங்கியிருந்தார் என்பதுதான். அடிக்கடி அவருக்குத் தேவையான உணவு மாடிக்கு எடுத்துச் செல்லப்படும்.

'பெரியம்மா.. பெரியம்மாவுக்கு அது வேணும்.. இது வேணும்' என்று பேச்சுக்கள் அடிப்படும். அவளும் எல்லாவற்றையும் ஒரு பார்வையாளரைப் போல் பார்த்துக் கொள்வாளே தவிர கேள்விகள் எதுவும் கேட்கமாட்டாள். விசாரிக்க மாட்டாள். கவிதாவை நினைத்தாலே எது தப்பாய் போகுமோ... என்ற பயம் ஏற்பட்டிருந்தது. அதனாலேயே பேச்சைக் குறைத்துக் கொண்டாள். அந்த வீட்டில் எல்லாரும் 'வாணி அமைதியான பெண்!' என்று கொண்டாடிக் கொள்ளவே அதுவே அவளுக்கு வசதியாகவும் போனது.

'வணக்கம்.. பாட்டி!' என்று நிறுத்தி நிதானமாகக் குழந்தை வணக்கம் சொன்னதைப் பார்த்தவுடனேயே சிவகாமி நாச்சியாருக்கு மிகவும் மகிழ்ச்சி.

'வணக்கம்டி.. செல்லம்' என்று பதில் சொன்னார்.

'நான் இங்கே பக்கத்துல உட்கார்ந்துக்கலாமா?' என்று அனுமதி வேறு கேட்கவும் இன்னும் மகிழ்ச்சி.

'உட்கார்ந்துக்கலாம்டா.. ராஜா.. ஓடி.. வா!' என்று அருகில் அமர்த்திக் கொண்டார்.

இரத்த அழுத்தம், சர்க்கரை, இதயக் கோளாறு என்று என்னென்னவோ சொன்னார்கள். மொத்தத்தில் பெரும்பாலான நேரங்களில் அவர் படுக்கையில் இருந்தார் என்... புரிந்து கொள்ள முடிந்தது.

குழந்தையும், பாட்டியும் பரஸ்பரம் - பரிமாறிக் கொள்வதை மௌனமாக ஒரு நிமிடம் பார்த்த சந்திரமோகன் திரும்பி வாணியைப் பார்த்து புன்னகையுடன் தலையசைத்தான்.

'அத்தே! இவங்கதான்... சோனாவுக்காக நான் ஏற்பாடு செய்திருக்கிற கேர் டேக்கர்' என்றான்.

'வாம்மா! இப்படி உட்காரு!' என்றார் அருகில் இருந்த சேரைக் காட்டி. பார்த்தாள் அவனும் 'ப்ளீஸ்!' என்று கைகாட்டவும் அமர்ந்து கொண்டாள்.

'டாக்டர். விஸ்வநாதன் உன்னைப் பத்தி எல்லாம் சொன்னாரும்மா.. இங்க எல்லாம் உனக்கு சௌகரியமாயிருக்கா?' என்றார்.

'ரொம்பவே சௌகரியமாயிருக்கும்மா..' என்றாள்.

'குட்..!' என்றார்.

அதே நேரம் சுந்தரம்மா வந்து சந்திரமோகனிடம் ஏதோ முணுமுணுத்தார்.

'எங்கத்தே! என்னைக் கேட்காம நர்ஸுக்கு லீவு குடுத்தீங்க..!' என்றான் மோகன்.

'என்னப்பா... செய்யறது? ஏதோ அவசரம். மத்தியானமே வந்தர்றேன்னாப்பா!' என்றார்.

சர்க்கரைக்காக இப்போது அவருக்கு ஊசி போட வேண்டியிருந்தது. சந்திரமோகன் சுந்தரம்மாவிடம் திரும்பி,

'சரி.. நானே.. போடறேன்!' என்றான்.

சிவகாமி நாச்சியார் முகம் சுளித்தார்.

'ஐயோ! நீயா?! நீ போட்டா வலிக்கும்!' என்றார்.



அதைப் புன்னகையுடன் பார்த்த வாணி 'நான் வேணாப் போடட்டுமா?' என்றாள்.

'ஓ! நீங்க... ஆஸ்பிட்டல்ல வேலை பாத்தவங்கதானே?' என்று சந்திரமோகன் ரிலாக்ஸானான்.

'அம்மா! இந்த சர்க்கரை இருக்கறவங்க கண்டிப்பா.. ஊசியைக் கரெக்டாப் போட்டுக்கணும். ஒரு குறிப்பிட்ட வயசுக்கப்புறம் ருசிக்காக சாப்பிடறதையே விட்டுரணும்..' என்று பேசியபடியே ஊசியைப் போட்டாள்.

எப்போது ஊசியைச் செருகினாள்; எப்போது வெளியே எடுத்தாள் என்பதே தெரியாத மாதிரி ஊசியைப் போட்டு முடித்து விட்டாள். அதை உணராத சிவகாமி நாச்சியார் கையைக் காட்டிக் கொண்டே இருந்தார்.

'போட்டு முடிச்சாச்சும்மா..!' என்று அவள் சிரிக்கவும்.

'நிஜம்மாவா?' என்று ஆச்சரியமானார்.

'அப்பாடா... நல்லா மெதுவா.. ஊசி போடற ஆள் ஒண்ணு நம்ம வீட்டுக்கு வந்திருக்கா..!' என்று மறுபடியும் மகிழ்ந்து கொண்டார்.

சற்றுநேரம் பேசி விட்டு அவள் வெளியே வருகையில் குழந்தையை எடுத்துக் கொண்டு சந்திரமோகனும் இணைந்து கொண்டான்.

'மேடம்! வாழைப்பழத்துல ஊசி ஏத்தற மாதிரிப் போடறீங்களாம்! அத்தையோட கமெண்ட்...'

'சார்! பழம் மாதிரிப் பழுத்த பெரியவங்கதானே.. அவங்களும். ஸோ ஸ்வீட் ஆல்ஸோ' என்றாள் அவளும் சளைக்காமல்.

'இப்படி ஃப்ரீயாக் கூட பேசுவீங்களா?' என்பது போல் அவன் பார்க்க அவள் நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

அவன் சட்டென்று சிரித்து விட்டான்.

அவளும் புன்னகை மலர அவனைப் பார்த்துவிட்டு பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.

அதே சமயம்.. அந்தக் காரிடாரின் பின்பகுதியில் இருந்து வந்து கொண்டிருந்த கவிதா இதைக் குரோதமாகப் பார்த்துக் கொண்டு நின்றிருந்ததை அவள் பார்க்கவில்லை. ஆனால் சந்திரமோகன் பார்த்தான். ஆனாலும் கண்டு கொள்ளவில்லை. அது இன்னும் கவிதாவின் கோபத்தை அதிகமாக்கியது.

ஆனால் வாணிக்கோ.. முந்தைய நாள் இரவு கண்ட காட்சியே மனத்துக்குள் ஓடிக் கொண்டிருந்தது.

அறைக்குள் வந்ததற்குப் பிறகும் கூட அதே யோசனையில் இருந்தாள்.

வழக்கமாக இரவில் ஜக்கில் தண்ணீர் வைத்துக் கொள்வாள். நேற்றிரவு மறந்து விட்டாள்.

சுந்தரம்மாவின் அறையை எட்டிப் பார்த்தாள். சமையலறையைத் தொட்டாற்போல் சுந்தரம்மாவிற்கென்று ஒரு தனியறை இருந்தது. அவருக்கென்று அந்தக் காலத்து மரக்கட்டில் ஒன்றும் கொடுக்கப்பட்டிருந்தது.

தனியாகவும், சுதந்திரமாகவும் இருந்தது. அந்த அறை 'என்னம்மா.. வேணும்!' என்றார் சுந்தரம்மாள்.

'இல்லே! ஜக்கிலே தண்ணி வேணும்' என்றாள்.

'இரும்மா! எடுத்துட்டு வந்து தரேன்!' என்று அவர் பக்கத்து அறைக்குப் போக அந்த நேரத்தில் இலக்கில்லாமல் அவள் ஜன்னல் வழியே வெளியே பார்க்கையில் அந்தக் காட்சியைக் கண்டாள்.

அப்போது மணி பதினொன்றிருக்கும். இலக்கில்லாமல் ஜன்னலில் பார்த்தபோதுதான் அந்தக் காட்சியைக் கண்டாள்.



சந்திரமோகன் ஏதோ ஒரு விதமான டென்ஷனைத் தவிர்ப்பவன் போல் அந்தக் கால்வாய் ஓடும் பகுதியில் கரையில் மேலும் கீழும் நடந்து கொண்டிருந்தான். முகத்தில் ஏனோ சோகம் ததும்பியிருந்த மாதிரி தெரிந்தது.

வாணி திகைத்துப் போய் நின்று விட்டாள். சற்று நேரம் நிதானமாக நடந்து கொண்டிருந்தவன் பிறகு கால்களை நீட்டி இரண்டு கைகளையும் பின்னால் ஊன்றி அமர்ந்தான்.

நிலவொளி அவன் முகத்தில் முற்றிலும் பாய்ந்து அமானுஷ்யமான ஒரு தோற்றத்தைக் கொடுத்தது. உடனே தன்னையே உலுக்கிக் குலுக்கிக் கொண்டாள்.

'சோகமா? சந்திரமோகன் சார் முகத்திலா.. நிறையக் கதை புத்தகங்கள் படித்துப் படித்துத் தனக்கே கற்பனை அதிகமாகி விட்டது' என்று எண்ணிக் கொண்டாள். ஆனால் தன்னறைக்குள் போன பின்பும் அந்தக் காட்சியே அவள் மனதில் ஓடிக் கொண்டிருந்தது. இப்போதும் அதே காட்சி திரும்பத் திரும்ப மனதில் ஓடியது. இன்னொரு மனது சொன்னது.

'வேண்டாம்.. தேவையில்லாத விஷயங்களில் தலையிடாதே. உனக்கே பாதுகாப்பில்லாத நிலைமை. கவிதா மேடம் வேறு எப்போதும் ஒரு கடுப்போடு பார்க்கிற மாதிரியே தோணுது. வந்த வேலையைப் பார்த்துக் கொண்டு கிடைத்திருக்கிற பாதுகாப்பையாவது தக்க வைத்துக் கொள்' என்று.

கண்களையும், மனதையும் இறுக மூடிக் கொண்டு குழந்தையைக் கவனிக்க ஆரம்பித்தாள்.

* * *

முழு நேரமும் குழந்தையோடு செலவழிப்பது என்று சில நேரங்களில் கடினமாகவும் இருந்தது. ஆனால், வேறு

குழந்தைகளும் விளையாடுவதற்குத் துணையாக இல்லாமல் அந்தக் குழந்தை தனிமையில் வாடுமே என்பதற்காகக் குழந்தைக்கு நிறைய நேரமும் கொடுத்தாள்.

இடையிலே எப்போதாவது நேரம் கிடைக்கும்போது சிவகாமி நாச்சியாரைப் போய்ப் பார்த்தாள். அவருக்கும் இவள் மேல் பரிவு ஏற்பட்டது.

அடுத்த வாரம் முழுவதும் சந்திரமோகனைப் பார்க்கவே முடியவில்லை. சந்திரமோகன் இல்லாத போது சுந்தரம்மா கவிதாவுக்குத் தேவையான உணவை அவளுடைய அறையிலேயே கொண்டு போய்க் கொடுத்து பரிமாறியும் விட்டு வந்தார். அதனால் டைனிங் டேபிளுக்குச் செல்கிற பிரச்சினை அதற்கப்புறம் அந்தரத்திலே நின்றது. ஆனால் வேறு ஒரு பிரச்சினை அவள் உள்ளத்தில் ஓடிக் கொண்டேயிருந்தது.

ஒரு வாரத்திற்குப் பிறகும் மும்பையிலிருந்து வந்த சந்திரமோகன் அவர்களது பங்களாவிற்கு சற்றுத் தள்ளியிருந்த அந்த அலுவலகத்திற்குப் போய்விட்டான்.

மேலும் இரண்டு நாட்கள் பொறுத்துப் பார்த்தாள்.

அந்த வெள்ளிக் கிழமை மாலை அவளே அலுவலகம் போனாள். அங்கே அவனுக்குக் கிளார்க்கைப் போல் பணியாற்றிக் கொண்டிருந்த தங்கசாமியிடம்,

'நான் சாரைப் பார்க்க வேண்டும்!' என்றாள். அனுமதி கிடைத்தது.

'வாங்க.. மிஸ்.வாணி!' என்றான் சற்றே ஆச்சரியத்துடன். 'உட்காருங்க!' என்று எதிரே அமர வைத்தான்.

அன்றைக்கு நிலவொளியில் நடந்து கொண்டிருந்த உருவத்துக்கும் இந்த உருவத்துக்கும் சம்பந்தமே இல்லை என்பது போல் கம்பீரமே உருவாக இருந்தான்.



'சார்! நீங்க எப்பவுமே பிஸியாயிருக்கீங்க.. மேடத்துக்கும் ஏதோ வேலை. அதனால சோனா பத்திப் பேசணுங்கறதுக்காக இங்கயே வந்துட்டேன்' என்றாள்.

'நோ பிராப்ளம்' சொல்லுங்க.. இன்ஃபாக்ட் சோனாவை நீங்க ஃபுல் அன்ட் ஃபுல்லாப் பாத்துக்கறதாலே நான் எவ்வளவு நிம்மதியா இருக்கேன்னு உங்களுக்குத் தெரியாது' என்று முகம் மலரப் புன்னகைத்தான்.

'தாங்க்யூ.. சார்!' என்றாள்.

'இப்ப உங்களுக்கு என்ன வசதி வேணுன்னு சொல்லுங்க.. செஞ்சு தரேன்!' என்றான்.

'சார்! இது சம்திங் சைக்கலாஜிகல். என்னன்னா, சோனாவுக்கு சம வயசுக் குழந்தைகளோட தோழமை வேணும் சார். 'பியர் குருப்' ன்னு ஆங்கிலத்துல சொல்வோமில்லே.. அது மாதிரி.. ஷி நீட்ஸ்... கம்பெனி' என்றாள்.

'ஓ!' என்றான் சிந்தனையுடன். பிறகு,

'என்ன செய்யணும் சொல்லுங்க!' என்றான்.

'அதான்.. சார்! இங்க பக்கத்துல எங்கயாவது எல்.கே.ஜி... அல்லது யு.கே.ஜி பள்ளி நடக்கற மாதிரித் தெரிஞ்சா சேத்திரலாம்.. சார்' என்றாள்.

மறுபடியும் ஒரு நிமிடம் யோசனையில் ஆழ்ந்தான்.

'சரி.. ஏற்பாடு செய்துர்லாம்' என்றான். உடனடியாக செயலில் இறங்கினான். பள்ளிக்கு போன் செய்து விசாரிக்கச் சொன்னான். பள்ளி முதல்வரிடம் அவனே பேசினான்.

எல்.கே.ஜிக்கு யு.கே.ஜிக்கு மட்டும் ஹாஃப்.. ஏ டே தான் ஸ்கூலாம்' என்றான் அவளிடம்.

'நோ... பிராப்ளம்.. சார்! அரெஞ்ஜ் பண்ணிக் குடுத்தீங்கன்னா நானே கொண்டு போய் விட்டுட்டுக் கூட்டிட்டு வர்றேன்..' என்றாள்.

'அது ஒன்னும் பிரச்னையேயில்லை' என்றான்.

அவள் தயங்கினாள். 'அந்த ஹாஃப் எ.. டே வேண்ணா நான் இங்க ஆபிஸ்ல ஹெல்ப் பண்றேன்' என்றாள்.

அவன் அவளிடம் புன்னகைத்தான். தேவையிருக்காது. மிஸ்.வாணி நான்தான் உங்களைக் கவனிச்சுகிட்டே யிருக்கேனே. சோனா.. உங்களை ட்வென்ட்டிஃபோர் ஹவர்ஸும் பிடிச்சுக்கறா.. உங்களுக்கும் கொஞ்ச டைம் வேணும் இல்லையா? இந்த ஹாஃப் எ டேவை நீங்க உங்க சொந்த வேலைகளுக்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம்' என்றான்.

'தாங்க்ஸ் சார்!' என்றாள். பிறகு மேலும் 'சார் ஸ்கூல் அட்மிஷன்.. எப்ப?' என்றாள்.

'நாளைக்கு.. நாளைக்கே.. போயிரலாம்' என்றான். சொன்னது போலவே மறுநாள் காலையில் புறப்பட் டார்கள்.

சோனா மிகவும் உற்சாகமாகப் புறப்பட்டாள். காருக் கருகில் தயாராக நிற்கும் போதுதான் கவிதாவும் உடன் வருவது தெரிந்தது.

வேண்டா வெறுப்பாக வந்து முன்சீட்டில் அமர்ந்தாள்.

'வொய் டு யூ.. பாதர்.. மீ... மோகன். நீங்களே போய் அட்மிட் பண்ணிரக்கூடாதா?' என்றாள் கடுப்பாக.

'ஏன்.. உன் டாட்டரை ஸ்கூல்ல கொண்டு போய் சேக்கறதை விட உனக்கு அப்படியென்ன முக்கியமான வேலை?' என்றான் இறுகிய குரலில்.

கவிதா சட்டென்று அமைதியாகி விட்டாள்.

குழந்தையை ஒரு வேண்டாத பொருளாகவே நினைக் கிற இவள் எப்படிப்பட்ட தாய் என்று வாணிக்கே கோபம் வந்தது. அந்த நேரம் சந்திரமோகன் குழந்தையிடம்,



'சோனா ஸ்கூல்ல.. உன் பேரு கேட்டா 'காவ்யா'ன்னு சொல்லணும் என்ன?' என்றான்.

'சரிங்கப்பா..' என்றது குழந்தை உற்சாகமாக.

மறுபடியும் கவிதா முணுமுணுத்தாள்.

'அதென்ன.. பேரு.. காவ்யான்னு... சோனாதான் நல் லாருக்கு..' என்று.

'கவிதா.. இதெல்லாம் ஏற்கனவே முடிவான விஷயம். எதுக்கு ஆர்க்யூ பண்ணிகிட்டே இருக்கே?' என்றான் சந்திரமோகன்.

'ஆமா! என்னைக் கேட்டுட்டு எது முடிவாச்சு.. இங்கே?' என்றாள் கவிதா.

சந்திரமோகன் அவளை வெறித்துப் பார்த்தான். அவளும் திருப்பி அதே போலப் பார்த்தாள்.

இரண்டு வாட்கள் மோதிக்கொண்டாற் போல் அவர்கள் பார்த்துக் கொண்ட பார்வையில் தீப்பொறி பறக்காதது தான் குறையாக இருந்தது.

நல்ல வேளையாக தானே டிரைவிங் செய்து கொண் டிருந்ததால் பார்வையை முன்னோக்கித் திருப்பினான் சந்திரமோகன்.

இடையில் சிக்கிக் கொண்டு வாணி எதுவும் புரியாதவள் போல் வெளியே பார்த்துக் கொண்டு வர ஆரம்பித்தாள்.



## 6

**ச**னிக்கிழமை பிற்பகல்களில், பெரும்பாலும் சந்திர மோகன் வீட்டுக்கு வந்து விடுவான்.

அந்த அரை நாளைக் குழந்தைக்கென்று ஒதுக்கி வைத்திருக்கிறான் என்பது புரிந்தது.

ஹாலில் குழந்தையைத் தோளில் சாய்த்துக் கொண்டு விச்ராந்தியாக அமர்ந்து கொள்வான். சோனா அந்த வாரத்தில் நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் அவனிடத்தில் ஒப்பிப்பாள்.

சுந்தரம்மா, சமையற்காரர் எல்லாரும் சுற்றிலும் நின்று கொண்டு அவனிடம் மகிழ்ச்சியாக உரையாடுவார்கள்.

'ஐயா.. இந்த சோனா இந்த வாரம் பந்து விளையாடுச்சுங்க.. புதுசா ஒரு பாட்டு சொல்லுச்சுங்க' என்று பேசிக் கொண்டு சோனாவைக் குஷிப்படுத்துவார்கள்.

இரண்டரை மணி வாக்கில் கீழே இறங்கினால் மூன்று நான்கு மணி வரை இப்படி செலவழித்து விட்டு நான்கு மணிக்கு விளையாடுவதற்கு கால்வாய் ஓரம் போய் விடுவார்கள்.

சோனாவைக் கால்வாயில் விட்டு புரண்டு விளையாட அனுமதிப்பான். பம்பு செட்டுத் தொட்டியில் நின்று கொண்டு குழந்தை குதி போட அனுமதிப்பான்.

இன்றைக்கென்னவோ அவனும் கால்வாயில் குதித்து நீந்தினான்.

சோனாவுக்கு வாய் கொள்ளாச் சிரிப்பு. வாணி சுந்தரம்மாவுக்கு அருகில் பின்னணியில் உள்ளேயே இருந்து கொண்டாள். ஆனால், குழந்தையும் அவனும் சிரிக்கிற சத்தம் உள்ளே வரை ஹால் வரை கேட்டது.

சந்திரமோகன் அன்றைக்கு மகிழ்ச்சியாகக் காணப்பட்டான். அவன் வந்து கிட்டத்தட்ட ஒரு மாதத்தில் பார்க்காத கிழ்ச்சி.

'பாவம்.. தம்பி! தேவையில்லாம இந்தக் குடும்ப ாரத்தையும் சுமக்குது' என்று முணுமுணுத்தார் சுந்தரம்மா.



'அம்மா... எல்லாரும் அவங்கவங்க குழந்தைகளைப் பாத்துக்கத்தானே வேணும்!' என்றாள் வாணி யதார்த்தமாக.

சுந்தரம்மா மேற்கொண்டு அதைப் பற்றி பேசாமல் பேச்சை மாற்றி விட்டார். மேலே தன்னறையில் நின்று அதைப் பார்த்துக் கொண்டிருந்த கவிதா என்ன நினைத்தாளோ தானும் இறங்கி வந்தாள்.

'ஹாய்! கவி கொஞ்ச நேரம் ஷட்டில் காக் விளையாடலாமா?' என்று சந்திரமோகன் அழைக்கவும் எதிர்பாராதவிதமாக 'வொய் நாட்!' என்றாள்.

உடனடியாகக் கோர்ட் ரெடியானது.

'எஸ்... மிஸ்.வாணி! நீங்க வர்றீங்களா?' என்று கவிதாவே அழைத்தபோது வாணியே ஆச்சரியமானாள். ஆனால், ஆள் தேவை என்பதற்காக அழைக்கிறார்கள் எனத் தெரிந்து அவளும் சேர்ந்து கொண்டாள். சந்திரமோகனுடன் கூட அவர்கள் ஆபீஸ் கிளார்க் ஒரு டீமாகவும், கவிதாவும் வாணியும் ஒரு டீமாகவும் விளையாடினார்கள்.

கவிதா நன்றாகவே விளையாடினாள். 'அத்தான்! அழுகுனி ஆட்டம் ஆடாதீங்க!' என்று கணவனிடம் பொய்ச் சண்டை கூடப் போட்டாள்.

'ஹேய்! கண்டுக்காதே!' என்று அவன் வரிசைப் பற்கள் தெரியச் சிரிக்கையில் கவிதா அவனைக் கண்கொட்டாமல் பார்த்தாள். அதைப் பார்த்த வாணி.

'சார்! மேடமும் நீங்களும் மட்டுமே விளையாடுங்களேன்' என்று ஆலோசனை சொன்னாள்.

'ஹலோ! உங்க மேடம்கிட்டே நான் தனியா மாட்டிக்கறதாயில்லை' என்று மேலும் சிரித்தான்.

ஒரு முறை வேண்டுமென்றே மண்ணில் பொத்தென்று விழுந்தான்.

'ஐயோ! அப்பா விழுந்துட்டாங்க!' என்று சோனா ஒரே ஆர்ப்பாட்டம் செய்தாள்.

இரண்டு மணி நேரத்துக்கு மேல் விளையாடினார்கள்.

சமையற்காரர் சூடாக போண்டா, வடை என்று அங்கேயே கொண்டு வந்து பரிமாற சந்திரமோகனும், கவிதாவும், குழந்தையும் அங்கேயே சேர்களைப் போட்டுக் கொண்டு அமர்ந்து உண்டார்கள். தேநீர் அருந்தினார்கள்.

கவிதா கூட வாணியிடம் சுமுகமாகப் பேச ஆரம்பித் தாள்.

'வாணி! நல்லாத்தான் ஆடறீங்க!' என்றாள்.

'ஐயோ! மேடம்.. நீங்க ரொம்ப நல்லா ஆடறீங்க... சார் போடற கன்னிங் ஷாட்டெல்லாம் நல்லா டாக்கிள் செஞ்சீங்க. சாருக்கு சரியான ஜோடிதான்.. நீங்க..!' என்றாள் வாணி யதார்த்தமாக.

சந்திரமோகனின் முகம் ஒரு கணம் சுருங்கினாற் போல் தோன்றியது. ஆனால் அது ஒரு பிரமையோ என்று நினைக்கிற அளவுக்கு உடனே பாவத்தை மாற்றிக் கொண்டான். கவிதாவும் தன் கணவனைப் பார்த்து.

'இனியென்ன மோகன்! உங்க.. பேவரிட் வாணியே சொல்லிட்டாங்க!' என்று சிரித்தாள்.

அந்த சிரிப்பில் நிறைய பொருள் பொதிந்திருந்த மாதிரித் தோன்றியது வாணிக்கு. ஆறு மணிக்கு மேல் அலுவலகம் போய்விட்டான்.

போவதற்கு முன்பாக சோனாவைத் தூக்கிப் போட்டு விளையாடி சிரிக்கச் செய்து விட்டுப் போனான்.

'பேபி அவர்ஸ் உனக்காகக் குடுத்தாச்சு... இனிக் கொஞ்ச நேரம் ஆபீஸ் வொர்க் பார்ப்போம்!' என்று சொல்லி விட்டுப் போய்விட்டான்.



எட்டு மணி வாக்கில் அதிசயமாக நன்றாக ஃப்ரெஷ்ஷாக உடை உடுத்துக் கொண்டு கீழே டைனிங் ஹாலுக்கு வந்து டிபன் சாப்பிட்டாள் கவிதா.

சுற்று முற்றும் பார்த்தாள். வாணியையும் காணவில்லை. குழந்தையையும் காணவில்லை. சுந்தரம்மாவிடம் கேட்டாள்.

'எங்கே ரெண்டு பேரும்!' என்று.

'அது சனிக்கிழமை வாணி கோயிலுக்கு போவாப்பல, பாப்பாவும் கூட போயிருக்கு..' என்றார்.

வாணியும், சோனாவும் உள்ளே நுழைந்தார்கள். விபூதியும், குங்குமத்தையும் எல்லோருக்கும் கொடுத்தாள்.

கவிதா இரண்டாவது விரலால் லேசாகத் தொட்டுக் கொண்டு நெற்றியில் பட்டும் படாமலும் இட்டுக் கொண் டாள்.

'எனக்கு இதிலெல்லாம் நம்பிக்கை இல்லே' என்றாள் கவிதா.

'இல்லே! விசாலாட்சி ஆன்ட்டி கண்டிப்பா சனிக்கிழமை சாயங்காலங்கள்ளே கோவிலுக்குப் போகணும்னு சொல்லி யனுப்பினாங்க.. அதான்' என்றாள்.

'ஓ! உனக்கு அவங்கதானே கார்டியன்ஸ்!' என்றாள் கவிதா. பிறகு சோனாவைத் தூக்கி மடியிலே அமர்த்திக் கொண்டாள்.

சுந்தரம்மாவுக்கே ஆச்சரியம்!

அதே நேரம் உள்ளே நுழைந்த சந்திரமோகனும் கூட அந்தக் காட்சியைப் பார்த்து மலைத்துத்தான் போனான்.

* * *

அன்றிரவு!

சோனா வாணியின் கழுத்தைக் கட்டிக் கொண்டு கதை பேசிக் கொண்டிருக்க வாணி லயித்துக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

இங்கே வந்ததற்குப் பிறகு அந்தக் குழந்தையின் அருகாமை அவளுடைய பெரியதொரு ஏக்கத்தைத் தீர்த்திருந்தது. அவள் திருச்சியில் இருக்கிற வரை அவளுடைய பாதுகாப்புக்கு ஒரு குறையும் இல்லை என்ற போதும் தனிமை அவளைத் தின்றது.

ஒரு குடும்ப அமைப்பில் இருக்கிற வாய்ப்பே அவளுக்குக் கிடைக்கவில்லை. ஆஸ்பத்திரியிலேயும் ஏதோ ஹாஸ்டலில் இருப்பது போல்தான் இருந்தாள். ஆனால் சோனாவின் அருகாமை ஏதோ அவள் தன்னுடைய குழந்தையே போல் ஒரு உணர்வைத் தந்தது.

பட்டுக் கன்னங்கள். மென்மையான கைகள் அவள் கழுத்தை வளைக்கிற போது அவள் உலகத்தையே மறந்து போனாள். அந்தக் குழந்தைக்குச் சமமாக அவளும் கெக்கெக்கவென்று சிரித்துக் கொண்டு நேரம் செலவழித்தாள். ஆனால் அதே சமயம் பாடம் சொல்லிக் கொடுக்கிற நேரங்களில் ஸ்ட்ரிக்டாக இருப்பாள். குழந்தையும் அதைப் புரிந்து கொண்டாற் போல் நடந்து கொள்ளும்.

'ஆன்ட்டி... பாட்டுப் பாடுங்க.. ஆன்ட்டி!' என்று குழந்தை கெஞ்சவே சன்னக் குரலில் 'ஓடி விளையாடு பாப்பா!' என்று பாரதியின் பாட்டைப் பாடினாள்.

குழந்தை ஆழ்ந்து உறங்கிய பின்பு வாஞ்சையாய் முத்தமிட்டுக் குழந்தையின் தலையைத் தடவிக் கொடுத்துக் கொண்டு படுத்திருக்கையில் அறையின் வாசலில் நிழலாடியது. திடுக்கிட்டு எழுந்தாள்.

சந்திரமோகன் நின்று கொண்டிருந்தான் திகைப்பும், ச்சரியமாய் அவளைப் பார்த்தாள்.

'வாணி மேடம்! குழந்தையை எங்களுக்கும் கொஞ்சம் ட்டுக் கொடுங்க' என்று புன்னகைத்தான்.



'ஐயோ! சார்! என்ன இப்படிச் சொல்லிட்டீங்க. குழந்தையே உங்க சொத்து..!' என்று தடுமாறினாள்.

அவன் திரும்பித் தனக்குப் பின்னால் நிற்கிற சுந்தரம்மாவைப் பார்த்தான். சுந்தரம்மா உள்ளே வந்து குழந்தையை எடுத்து அவன் கையில் கொடுக்க ஆசையாய் முத்தமிட்டான்.

குழந்தை விழித்தாள்.

'டேய்.. இன்னைக்கு அப்பாகிட்டே... படுத்துக்கலாம்!' என்று முனகினான். குழந்தையின் கன்னத்தில் தன் கன்னத்தைத் தேய்த்துக் கொண்டே எடுத்துப் போனான்.

குழந்தையும் இயல்பாக அவன் தோளில் கையைப் போட்டுக் கொண்டது.

பத்துப் பதினொரு நாட்களுக்கு முன் நடந்த நிகழ்வு நினைவுக்கு வந்தது. அந்த இரவு சந்திரமோகன் இருக்கவில்லை.

கவிதா எப்போதும் குழந்தையை மேலை நாட்டு வழக்கப்படி தனியறையில் படுத்துக் கொள்ள வேண்டும் என்பாள்.

சோனாவும், படுத்துக் கொள்கிறேன் என்று படுத்துக் கொள்வாள். ஆனால் சற்று நேரத்திற்குப் பிறகு தந்தையின் அருகில் ஓடி வந்து படுத்துக் கொள்வாள். அல்லது அவன் வந்து எடுத்துக் கொண்டு போய்விடுவான்.

கவிதா எப்போதும் தனது படுக்கையறையில் படுத்துக் கொள்வாள். அன்றைக்கும் சந்திரமோகன் இல்லாத போதும் குழந்தையைத் தனியறையில் படுக்க வைத்து விட்டு கவிதா போய்விட்டாள். ஆனால், நள்ளிரவில் குழந்தை தனது அறையில் இருந்து இறங்கி வாணியிடம் வந்துவிட்டது. அடுத்த நாள் காலை கவிதாவிடம் வாணியே போய்,

'மேடம்! குழந்தை தனியாப் படுக்கப் பயப்படுது.. நான் என்கிட்டயே படுக்கவச்சுக்கறேன்' என்று சொல்லிவிட்டு வந்தாள்.

'உன் இஷ்டம்.' இங்க யாரு நான் சொன்னாக் கேக்கப் போறா!' என்று இயல்பாக பதில் சொன்னாலும் வாணி அதையே சம்மதமாக எடுத்துக் கொண்டாள். இப்போது சார் வந்து இப்படிக் கேட்டாரே என்று அவளுக்கு வருத்தமாகவும் இருந்தது.

தினமும் குழந்தையுடன் பேசிக் கொண்டிருந்ததில் நிறைய விஷயங்கள் வாணிக்குப் புரிந்தன.

'நீங்க அம்மா மாதிரியே... அழகாம்!' என்றாள் சோனா ஒரு நாள்.

'யார் சொன்னாங்க!' என்றாள்.

'எல்லாரும்தான்.. ஆனா, அம்மா கோபமாவே இருப்பாங்க... அப்பா ரூமுக்கே வரமாட்டாங்க... அப்பாவும் அம்மா ரூமுக்கே போகமாட்டாங்க... என்றாள் அவளே.

வாணிக்கு தர்ம சங்கடமாகப் போய்விட்டது. அவர்கள் அந்தரங்கத்தைப் பற்றித் தான் ஏன் தெரிந்து கொள்ள வேண்டும். குழந்தையை எப்படித் தடுப்பது?" என்று அவளுக்குத் தெரியவில்லை. அதனால்,

'கண்ணம்மா, அம்மா அப்பா பேசிக்கறது சண்டை இதையெல்லாம் மத்தவங்களிடம் பேசக் கூடாது' என்று மட்டும் சொன்னாள்.

போன வாரத்தில் ஒருநாள் சோனா கேட்டாள்.

'ஆன்ட்டி.. எங்க ஸ்கூல்ல மாலினி சொல்றா.. அவங்க வீட்ல அம்மா, அப்பா எல்லாரும் ஒரே பெட்லதான் டுப்பாங்களாம். நம்ம வீட்ல ஏன்.. இப்படி?' என்று.



'சோனா தங்கம்.. ஒவ்வொரு வீட்ல ஒவ்வொரு மாதிரிப் பழக்கம் நம்ம வீட்ல இப்படி!' என்றாள்.

'அவங்க வீட்லயெல்லாம் அம்மாவேதான் அவளுக்கு எல்லாம் செஞ்சு விடுவாங்களாம் ஆனா, நம்ம வீட்ல மட்டும் அம்மா ஏன் இப்படி என்னை எடுக்கவே மாட்டேங்கறாங்க!'

'அவங்க வீட்லயெல்லாம் வேலை கம்மி, நம்ம வீட்ல அப்படியில்லையே. அம்மா வெளிநாட்ல படிச்சவங்க.. அதனால அந்தப் பழக்கத்துக்கு இங்க எல்லாம் நடக்குது. நீயும் நாளைக்கு வெளிநாட்டுக்குப் போனேன்னா அங்கயும் இப்படித்தான் இருக்கும்' என்று எதையோ சொல்லிச் சமாளித்தாள்.

அதையெல்லாம் எண்ணிக் கொண்டே வெளியில் வந்து பார்த்தாள். அதற்குள் குழந்தை விழித்துக்கொண்டு,

'வாணி ஆன்ட்டி..!' என்று குரல் கொடுத்து அழவும் அவன் நின்று ஒருவிதமாக ஏக்கத்துடன் அவளைப் பார்த்தான்.

வாணி வாங்கிக் கொண்டாள். 'சார்' நான் கொண்டு வந்து விடறேன்.. என்றாள்.

'சோனா! அப்பா ஒரு வாரமா வெளியூர் போயிட்டாங்க இல்லே! உன்கூட இருக்கணும்னு அவங்களுக்கு ஆசையா இருக்கும் இல்லே! அப்பாவோட போவியாம்; என்ன?" என்று தேற்றிக் கொண்டு போய் அவன் படுக்கையறையில் நுழைத்து படுக்க வைத்துவிட்டு வந்தாள்.

அவன் 'தாங்க்ஸ்.. வாணி மேடம்!' என்றான்.

அவள் நிமிர்ந்தும் பார்க்காமல் 'நோ மென்ஷன் சா

என்று வந்துவிட்டாள்.

வந்து படுக்கையில் விழுந்தால் மறுபடியும் தனி அவளைத் தின்றது.

அங்கே!

கவிதா வேசாகத் தள்ளாடிக் கொண்டு அவளது அறை வாசலில்.

'ஹோ! தப்பிச்சுட்டீங்க!' என்று எகத்தாளமாக சிரித்தாள்.

அவன் மௌனமாக அவளைப் பார்த்தான்.

'ஏன்.. அது ஏன் அப்படி? நான் இந்த ரூமுக்கு வந்தா உங்களுக்குப் பிடிக்கமாட்டேங்குது. இவ வந்தா மட்டும் பிடிக்குது..' என்று குழந்தையைக் காட்டினாள்.

அவன் தலையிலடித்துக் கொள்ளாத குறையாக அவளைப் பார்த்தான்.

'அந்த வாணி பெட்ரூம் வரைக்கும் வந்துட்டுப் போறா!' என்றாள் மறுபடியும்.

ஆழ்ந்து உறங்குகிற குழந்தையை ஒரு பார்வை பார்த்து விட்டு அவன் அடிக்குரலில் சீறினான்.

'ஷட் அப் அண்டு கோ டு யுவர் ரூம்!'

அவள் தோள் குலுங்கச் சிரித்துக் கொண்டு நகர்ந்தாள். ஆனால் அவன் போனதற்குப் பிறகு குழந்தையின் தலையைக் கோதிக்கொண்டே வெகு நேரம் படுத்திருந்தான். அவன் முகத்தில் வேதனை தெரிந்தது.

அதே நேரம்! வாணிக்கும் ஒரு விசித்திரமான எண்ணம் தோன்றியது.

எதிலிருந்தோ தப்பிப்பதற்காகத்தான் தன் முதலாளி குழந்தையை ஒரு பாதுகாப்புக் கவசமாகப் பயன்படுத்துகிறாரோ.. என்று!

'இது என்ன பைத்தியக்காரத் தனம்!' என்று தன்னைத் தானே கடிந்து கொண்டாள். மெல்ல உறங்குவதற்கு முயன்றாள்.





7

மெல்ல சிவகாமி நாச்சியின் அறையில் எட்டிப் பார்த்தாள்.

'என்னம்மா! உள்ளே வா!' என்றார் அவரும் புன்னகையுடன்.

'வணக்கம், பெரியம்மா!' என்றாள்.

'வணக்கம்டா.. ராஜா!' என்றார் சிவகாமிநாச்சி.

'சோனாவை ஸ்கூல்ல விட்டுட்டு வந்துட்டேன். பனிரெண்டரை மணி வரைக்கும் டைம் இருக்கு. உங்களுக்கு வேண்ணா ஏதாவது படிச்சுக் காட்டலாம்னு வந்தேன்' என்றாள்.

'ரொம்ப சந்தோஷம்.. எனக்கும் இப்படி யாராவது கிடைச்சாத் தேவலைன்னு இருந்தது. என்ன படிக்கப் போறே? மகாபாரதம் படிச்சுக் காட்டறியா!' என்றார்.

அவளும் உற்சாகமாகப் படிக்க ஆரம்பித்தாள். இடையிலேயே பாரதியாரை வேறு கோட் செய்தாள்.

பாஞ்சாலியைப் பணயம் வச்சவுடனேயே பீமனுக்கு அப்படி ஒரு கோபம் வருதுங்க பெரியம்மா. 'அண்ணா! எரிதழல் கொண்டு வா! அந்தக் கையையே எரித்து விடலாம்கறான்.

பெரியம்மா சிந்தனையிலாழ்ந்தார். 'ஆமம்மா. தருமன் அப்படியொரு காரியம் செஞ்சதுல பாரதியாருக்கு ரொம்ப கோபம்தான். 'சீசீ.. சிறியர் செய்கை செய்தான் அப்படீன்னு சொல்றாரு' என்றார் பெரியம்மா.

படிப்பும் பேச்சும் சுவாரசியமாக மாறிப் போனது.

இரண்டு மணி நேரம் போனதே தெரியவில்லை. அதே நேரம் சந்திரமோகனிடம் இருந்து போன் வந்தது.

'வாணி! நானே ஸ்கூல்ல சோனாவை பிக் அப் பண்ணிட்டு வரேன்' என்றான்.

'நல்லதாப் போச்சு.. உட்காரு.. இன்னும் கொஞ்சம் பேசலாம்' என்றார் பெரியம்மா.

மேலும் சில பக்கங்கள் படித்தாள். அப்போது அவளே விளக்கமும் சொன்னாள்.

'பெரியம்மா... ஒருத்தர் உபந்யாசத்துல சொன்னாரு. பாண்டவர்கள்ங்கறது அஞ்சு கணவர்கள்ன்னு அர்த்தம் இல்லையாம். நம்மோட அஞ்சு புலன்களாம். அஞ்சு புலன்களோட வழியில போற மனசு கடைசியில சிக்கல்லதான் மாட்டிக்கும். அந்த நேரத்துல ஜீவாத்மாவுக்குப் பரமாத்மா தான் துணை செய்ய முடியும்னு' என்றார்.

அதே சமயம் உள்ளே நுழைந்த சந்திரமோகன் அவள் சுவாரசியமாய் விளக்கம் சொல்வதைக் கேட்டபடி அத்தையை நோக்கி வாயில் விரல் வைத்து சைகை காட்டிவிட்டு ஒரு சேரில் அமர்ந்தான்.

எதிர்பாராத விதமாக கவிதாவும் உள்ளே நுழைந்து அமர்ந்தாள்.

பெரியம்மாவும், வாணியும் அவர்கள் உலகத்தில் இருந்தார்கள்.

'ம்.. இது ரொம்ப நல்ல கருத்தா இருக்கே..' என்றார் பெரியம்மா.

'அது மட்டுமில்லைங்க.. பெரியம்மா... திரௌபதி அந்த நேரத்துல எல்லாருகிட்டயும் உதவி கேட்டா.. ஆனா.. யாரும் உதவிக்கு வரவேயில்லை. கடைசியாத்தான் கிருஷ்ணனை நினைக்கிறா.. ஆனா.. முதல்ல கிருஷ்ணன்



வர்லே. தன்னை மறந்து தன் சூழ்நிலைகளை மறந்து ரெண்டு கையையும் மேலே தூக்கிக் கும்பிட்டதுக்கு அப்புறம்தான் கிருஷ்ணன் வந்தானாம்' என்றாள்.

கவிதா களுக்கென்று சிரித்தாள். 'ஓஹ்! அத்தனை பேருக்கு நடுவிலே ஒருத்தன் துகிலுரிக்கும்போது ரெண்டு கையைத் தூக்கிக் கும்பிட்டாத்தான் உங்க கிருஷ்ணன்.. வருவானாக்கும்?' என்றாள்.

சிவகாமி நாச்சியும் சந்திரமோகனும் ஒருவரை ஒருவர் வேதனையுடன் பார்த்துக் கொண்டார்கள். ஆனால் வாணி அந்தக் கேள்விக்கு மிகவும் சீரியஸாகப் பதில் சொன்னாள்.

'உங்க கேள்வி கரெக்ட்... மேடம்! ஆனா, அதோட அர்த்தம் என்னன்னா, கொஞ்சம் கூட சந்தேகம் இல்லாத நம்பிக்கை இருந்தாத்தான்... அப்படி நடந்துக்க முடியும். அப்படிக் கொஞ்சம் கூட சந்தேகம் இல்லாத நிலைமையிலதான் கடவுள் நமக்குத் துணைக்கு வருவாராம்' என்றாள்.

அவள் சீரியஸாக விளக்கம் சொல்லவும் கவிதா தன் சிரிப்பை நிறுத்தி விட்டாள். ஆனால் கேட்டாள்.

'அது என்ன பாஞ்சாலி தன்னை அடகு வைக்கிறதை ஒத்துக்கறாளா?' என்றாள்.

'ஒத்துக்கலை.. மேடம்! கேள்வி கேக்கறா. தன்னை அழைச்சிட்டுப் போக வந்த ஆளிடத்திலே கேக்கறா. 'தருமர் தன்னை வைத்த பின் என்னை வைத்தாரா அல்லது என்னை வைத்த பின் தன்னை வைத்தாரா? அப்படீன்னு. தன்னை வைத்த பின் என்னை வைக்க முடியாது. ஏன்னா, அவரே அடிமையானதுக்கப்புறம் நான் அவருக்கு சொந்தமில்லையே. என்னை வைத்த பின் தன்னை வைத்தார்ன்னா கணவனா இருக்கறதுக்கே தகுதி இல்லையே'ன்னு கேக்கறா..'

'பரவாயில்லையே!' என்று கிண்டலாகச் சிரித்தபடி எழுந்து போனாள் கவிதா.

சிவகாமியம்மா கவிதாவைக் கண்டு கொள்ளாமல் தொடர்ந்து பேசுவதைக் கண்ட சந்திரமோகன் தனக்குள் சிரித்துக் கொண்டான். அதே நேரம் சோனா ஓடி வந்து அவன் மடியில் அமர்ந்து கொள்ளக் குழந்தையின் தலையைத் தடவிக் கொடுத்தபடியே அவர்கள் வாதப் பிரதிவாதங்களை மௌனமாகக் கவனித்தான்.

'பெரியம்மா! மகாபாரதத்துல ஒவ்வொரு கேரக்டருக்கும் ஒரு தனிக்கதை இருக்கு தெரியுமா? ஒவ்வொருத்தருக்கும் அவரவருக்கான நியாயங்கள் இருக்கும்... இது மாதிரி இலக்கியங்களைப் படிக்கும்போது, ஒவ்வொரு பாத்திரத்தையும் அலசி ஆராயும் போது நம்மைப் பற்றிய சுய அலசல் மனப்பான்மையும் நமக்கு ஏற்படுகிறது. மற்றபடி இந்தக் கதை நடந்துதா இல்லையாங்கறதெல்லாம் இரண்டாம் பட்சம்தான்' என்றாள் வாணி.

சந்திரமோகன் இடையில் புகுந்து 'ஆமா.. காந்திஜி கூட ஒரு தடவை சொல்லியிருக்காரு. ராமன் என்ற ஒரு கடவுள் இருந்தானா... இல்லையா என்பது பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால், ராமன் என்பது என்னைப் பொறுத்த வரை ஒரு நம்பிக்கைன்னு என்றான். மேலும் சற்று நேரம் பேச்சு சுவாரசியமாக நடந்தது.

சந்திரமோகன் கடிகாரத்தைப் பார்த்தான் மணி இரண்டு.

'வாணி, சாப்பிடலாமா? வாங்க..!' என்று சொல்லி விட்டு எழுந்தான்.

'ஆமாப்பா.. நாம அப்புறம் கூடப் பேசலாம்... அதான் இங்கேயே இருக்கப் போறயே!' என்றார் சிவகாமிநாச்சி.



வாணி விடைபெற்றுக் கொண்டு போனதற்குப் பிறகு சந்திரமோகனிடம் பெரியம்மா சொன்னார்.

'ஏம்ப்பா.. கவிதா.. இப்படியிருந்தா எவ்வளவு நல்லா.. இருக்கும்?' என்று ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார்.

'போகாத ஊருக்கு வழி தேடாதீங்க அத்தை' என்று சிரித்தான். 'ஆனா, எது எப்படியோ இவங்க வந்தப்புறம்... சோனாவைப் பத்தின கவலை இல்லை. நிம்மதியா இருக்கேன்.'

சிவகாமி நாச்சி பெருமூச்சு விட்டார். 'அந்த நிம்மதியும் இன்னும் எத்தனை நாளைக்கோ அந்தப் பொண்ணும் கல்யாணம், இல்யாணம் ஆகிப் போக வேண்டிய பொண்ணில்லையா!'

இல்லைங்கத்தை. டாக்டர். விஸ்வநாதன் சொன்னாரு. கல்யாணத்துக்கு இன்னும் இரண்டு வருஷமாவது ஆகணும்னு. அதுவரைக்குமாவது நாம நிம்மதியாயிருக்கலாமில்லே' என்றான்.

'அது அப்படித்தான்' என்றார் சிவகாமிநாச்சி சந்திரமோகன் மகிழ்ச்சியான முகபாவத்துடன் எழுந்தனர்.

'பரவால்லே! வாணி சோனாவுக்கு மட்டும்தான் கேர்டேக்கர்ன்னு நினைச்சேன். உங்களுக்கும் நல்ல கம்பெனி தான் போலருக்கு...' என்று சிரித்தான்.

'தம்பி! பொதுவா குழந்தைங்கிட்டேயும், வயசானவங்கிட்டயும் பிரியமா நடந்துக்கறவங்க அடிப்படையில் நல்லவங்களா இருப்பாங்கன்னு சொல்லுவாங்க..!' என்றார் சிவகாமிநாச்சி.

'அடடடா! போதும்.. ரெண்டு பேரும் மாத்தி மாத்திப் புகழ்ந்து ஒரு வேலைக்காரப் பொண்ணை உயரத்துல தூக்கி வச்சுராதீங்க..!' என்ற கவிதாவின் குரல் கேட்டுத் திரும்பினான் சந்திரமோகன்.

'என்ன.. சாப்பிட வர்றீங்களா? இல்லையா?' என்றாள்.

அவன் மௌனமாக நகர்ந்தான். 'இவளுக்கு பதில் சொல்லத் தேவையில்லை என்பதால் அவன் கையைப் பிடித்துக் கொண்டு சோனாவும் நகர்ந்தாள்.

சிவகாமி நாச்சி மகளை வெறுப்போடு பார்த்தார்.

'ஏன்.. கவிதா.. முன்னூறுமுந்நின்னு கேள்விப் பட்டிருக்கேன். ஆனா, உனக்குத் கடவுள் நாக்குலயே முள்ளு வச்சிருக்கான்... போல..' என்றார் கசப்பான குரலில்.

'அதுசரி.. என் நாக்கில இனிப்பான வார்த்தையாவே வந்தாக் கூட உங்களுக்கு என்னைப் பிடிக்கவா.. போகுது.. உங்க மருமகனைத்தான் பிடிக்கும்..' என்றாள். அறையை விட்டு நகர்ந்துவிட்டாள்.

சிவகாமிநாச்சியார் ஒரு பெருமூச்சு விட்டபடி திரும்பிக் கணவனின் படத்தைப் பார்த்தார். அதில் உள்ளார்ந்த ஒரு வருத்தமும், கோபமும் தெரிந்தது.

* * *

சந்திரமோகன் ஃபைலில் ஆழ்ந்திருந்தான்.

அறைவாசலில் நிழலாடியது கண்டு நிமிர்ந்து பார்த்தான்.

சுந்தராம்மா நின்று கொண்டிருந்தார்.

'என்ன சுந்தராம்மா! வாங்க!' என்றான் சந்திரமோகன்.

'தம்பி! அந்த வாணிப் பொண்ணு நம்ம பாப்பாவைப் பத்தி ரொம்பக் கவலைப்படுது!' என்றார்.

'ஓல்! என்னவாம்!'

'இல்லே! குழந்தை இங்கே தனிமையான சூழ்நிலையிலேயே இருக்கு. உறவுக்காரங்க யாரும் வர்ற போற வழக்கம் இல்லையா? ன்னு கேக்குறாப்லே' என்றார்.



அவன் சேரில் சாய்ந்து அமர்ந்தான்.

'என்ன சுந்தராம்மா.. செய்யலாம்? வர்றவங்கவிட்டே இந்தக் கவிதா... ஒழுங்கா நடந்துக்கறுமே?' என்றான்.

சுந்தராம்மா வாஞ்சையாய் அவனைப் பார்த்தார். பிறகு சொன்னார்.

'அய்யா... ஒருத்தர் எவ்வளவுதான் தாங்கலாம்கறதுக்கும் ஒரு அளவு இருக்கு. நீங்க எப்படியும் நீங்களே மனசுல போட்டு சுமந்துகிட்டு இருக்காதீங்கய்யா. உங்க குடும்பத்துல பேசுங்க..' என்றார்.

அவன் மறுபடியும் பெருமூச்சு விட்டான். 'பேசி.. என்னத்துக்கு ஆகப் போகுது.. சுந்தராம்மா..' என்றான்.

சற்று நேரம் சிந்தனையிலாழ்ந்தான். பிறகு சொன்னான்.

'சரி.. நான் முதல்ல உமாகிட்டே பேசறேன். உமாதான் கொஞ்சம் புரிஞ்சுக்குவா.. அவ வரப்போக இருந்தாக் கூட நல்லாத்தான் இருக்கும்...' என்றான்.

'ஆமா.. உமா.. நல்லாப் புரிஞ்சுக்கும்' என்றார் சுந்தராம்மா.. மறுபடியும் சுந்தராம்மா தயங்கி நின்றார்.

'அப்புறம்..!' என்றார்.

'ம்...!'

'இல்லே! வாணிம்மா வந்து ஒரு மாசம் ஆயிடுச்சு.. சம்பளம்?' என்று இழுத்தார்.

'மை.. காட்! அவங்க வந்து ஒரு மாசம் ஆயிடுச்சா... நான் போனதே தெரியலே! ஓ.கே.. ஓ.கே.. சம்பளம் போட்டுர்றேன்... நீங்க போய் அவங்களை வரச் சொல்லுங்க...!' என்றான்.

வாணி வந்தவுடனே எழுந்து 'வாழ்த்துக்கள்.. மேடம்! நம்ம வீட்டுக்கு வந்ததுக்கான முதல் சம்பளம்' என்று ஒரு கவர் நீட்டினான்.

அவளும் 'தாங்க்ஸ்' என்று வாங்கிக் கொண்டாள்.

தன்னுடைய அறைக்குப் போய் கவரைத் திறந்து பார்த்தாள். கொஞ்சம் திகைத்துப் போனாள்.

'பத்தாயிரம் ரூபாய்' இருந்தது.

சாதாரணமாக ஒரு குழந்தையைப் பார்த்துக் கொள்வதற்கு இவ்வளவு சம்பளமா? அவளுக்கு நெருடலாக இருந்தது.

மீண்டும் திரும்பிப் போனாள்.

'சார்!' என்றாள்.

'வாங்க... வாணி! உங்களுக்கு சம்பளம் திருப்திகரமா இருக்கா?' என்றான்.

அவள் ஒரு நிமிடம் விழித்தாள்.

பிறகு சொன்னாள்.

'அதிர்ச்சிகரமா இருக்கு!'

அவன் சிரித்தான். 'மேடம்!' இது ஏற்கனவே நானும் விஸ்வநாதன் சாரும் பேசி முடிவு செய்ததுதான். நல்ல சம்பளம் குடுக்கறதாயிருந்தா அனுப்பி வைக்கிறேன். அந்தப் பொண்ணு கிட்டத்தட்ட மக மாதிரின்னு கண்டிஷன் போட்டிருக்காரு!' என்றான்.

'ஓ' என்றாள்.

அவனே தொடர்ந்தான் 'மேடம்! நீங்க வந்ததுக்கப்புறம் தான் வீட்டுல ஒரு களையே வந்திருக்கு. சோனா ஹாப்பியா இருக்கா. நானும் திருப்தியா இருக்கேன். அத்தை கூட ரொம்ப சந்தோஷப்படுறாங்க... அதனால.. லைஃப்ல செட்டிலாகலாம்னு நீங்க முடிவெடுக்கறவரைக்கும் நீங்க இங்க தங்கணும்னா. அட்ராக்டிவ் சாலரி குடுத்தாத்தானே இருப்பீங்க?' என்றான் புன்னகைத்தான்.



அவளுக்கு வேறு பேச வழியில்லாமல் போனது. திரும்பி வந்தாள். ஆனால் அன்று மாலை அவர்கள் பகுதியிலேயே பிற்பகுதியில் ஒரு லைப்ரரி வைத்திருந்தான் சந்திரமோகன். அங்கே ஏதோ புத்தகம் இருந்தால் எடுக்கலாம் என்று போன வாணியின் காதுகளில் அந்த உரையாடல் தானாகவே வந்து விழுந்தது.

'ஆஃப்டர் ஆல்.. ஒரு ஆயாவுக்கு இவ்வளவு சம்பளமா?' என்று காட்டமாகக் கேட்டுக் கொண்டு இருந்தாள் கவிதா.

சந்திரமோகன் இறுகிய முகத்துடன் பதில் சொன்னான்.

'கவிதா! உன் குழந்தை வாய் திறந்து பேச ஆரம்பிச்சதுல இருந்து இந்த ஒரு மாசத்துலதான் கலகலன்னு நெறைய சிரிக்க.. நான் பாத்திருக்கிறேன். வீட்ல கூட ஏதோ மனுஷங்க நடமாடுற மாதிரி ஒரு தோற்றம் வந்திருக்கு...'

'ஸோ! அதுக்காக இப்படித் தூக்கிக் குடுக்கறதா?'

'ஃபார் யுவர் இன்பர்மேஷன்.. அந்த சம்பளம் என்னோட சொந்த சொத்து வருவாயில் இருந்துதான் குடுக்கறேன். இந்த வீட்டுச் சொத்து வருமானத்துல இருந்து இல்லே.. யு அண்டர்ஸ்டாண்ட்' என்றான்.

கவிதா வெறித்தாள்.

சந்திரமோகன் இன்னும் அழுத்தமான குரலில் தொடர்ந்தான்.

'பரவாயில்லையே.. பணத்தைப் பத்திக் கூட யோசிக்கறியே. தினமும் நீ அனாவசியமா செய்யறியே செலவு. அதுக்கு எவ்வளவு ஆகுது தெரியுமா? மாசம் பதினைந்தாயிரத்திலிருந்து இருபதாயிரம் வரைக்கும். போன தடவை ஜவுளிக்கடைக்குப் போய் தண்டம் வச்சுட்டு வந்திருக்கியே.. ஐம்பதாயிரம்.. அதைக் காட்டிலும் இது முக்கியமான செலவுன்னு நான் நினைக்கிறேன்.'

கவிதா அவனை உற்றுப் பார்ப்பது எக்குத் தப்பாக பீரோவின் பின்னால் மாட்டிக் கொண்ட வாணிக்கு நன்றாகத் தெரிந்தது.

தன் கையிலிருந்த புத்தகத்தை லேசாக மூடி வைத்து விட்டு நேராகக் கவிதாவை பார்த்த சந்திரமோகன் சொன்னான்.

'கவிதா! சோனாவுடைய வளர்ச்சிக்கு நான் என்ன செய்யறேங்கறது என் பொறுப்பு. நீ அதில் தலையிடாம இருக்கறது நல்லது. உனக்கு என்னுடைய இன்னொரு பக்கத்தைப் பத்தித் தெரியாது..' என்றான்.

கவிதா காலை ஒரு உதறு உதறிவிட்டுப் புறப்பட்டுப் போனாள்.

வாணிக்கு நன்கு புரிந்தது. கவிதா தன்னை எதிரியாக நினைக்கிறாள் என்பது. சொல்லப் போனால் தன்னுடைய குழந்தையை நன்றாகப் பார்த்துக் கொள்வதற்காக அவள் சந்தோஷப்பட வேண்டும். இது என்ன தலைகீழாக இருக்கிறது என்று நினைக்கையிலேயே.

'வாணி போதும் மறைஞ்சு நின்னது.. வெளியே.. வாங்க!' என்றான் சந்திரமோகன்.

வாணி மூர்ச்சையடையாத குறையாக நடுங்கிக் கொண்டே வெளியே வந்தாள்...



8

வீடு அல்லோலகல்லோலப் பட்டது.

கீழ்த்தளத்தில் இரண்டு பெரிய படுக்கையறைகள் தயார் செய்யப்பட்டன. திரைச்சீலைகள் மாற்றினார்கள்.



முதன் முறையாக அந்தப் பெரிய வீட்டின் பின்கட்டுப் பகுதிக்குப் போனாள் வாணி. சந்திரமோகனுடைய நிலத்துக்குப் பின்னே கால்வாய் ஓடியது அவளுக்கு ஏற்கனவே தெரியும். வீட்டிலிருந்து சுமார் ஆறுநூறு அடி. அறுநூறடி தூரத்தில் ஓடுகிற கால்வாயை கட்டிடத்தின் இடது பகுதி ஜன்னல்களிலிருந்துதான் அவள் பார்த்திருக் கிறாள்.

கீழ்த்தளத்தின் வலப்பகுதியின் ஓரத்தில் அவளது அறைகள் இருந்த போதும் குறுக்கே தென்னந்தோப்பு ஒன்று மறைத்ததாலோ என்னவோ அவளுக்குக் கால்வாய் கண்ணிற்படவில்லை போலும் என்று எண்ணிக் கொண் டாள். ஆனால் இப்போதுதான் உண்மை புரிந்தது.

பச்சை நிறப் பெயிண்ட் அடித்த தட்டிகளால் கால்வாய் கண்ணுக்குத் தெரியாத வண்ணம் மறைத்துத் தடுத்திருந் தார்கள். உள்ளே நுழைந்தாலே அங்கே இயற்கையாக ஓடுகிற ஒரு நீச்சல் குளம் போன்ற ஒரு தடுப்பை ஏற்படுத்தி யிருந்தார்கள்.

அந்த அமைப்பு பார்ப்பதற்கு அற்புதமாக இருந்தது. சுந்தரம்மா சொன்னார்.

'கவிதாம்மா... ஃபாரின்ல படிச்சவங்கள்ல... நீச்சல்னா ரொம்ப இஷ்டம் அதுக்காக இந்த ஏற்பாடு.

'ஓ... சார்! நீச்சல் அடிக்க மாட்டாங்களோ?' என்று கேட்டாள்.

சுந்தரம்மா அவள் கேள்வியைக் கேட்டு சிரித்தார்.

'ஆண்களுக்கு மட்டும்னா.. எதுக்கு இந்த மறைப்பெல் லாம்' என்றார்.

'அதுதானே?' என்று வாணியும் சிரித்தாள். ஆவ பொறுக்க முடியாமல் வாணி கேட்டாள்.

'யார் வர்றாங்க சுந்தரம்மா?'

'ஐயாவோட தங்கை உமாவும் அவங்க வீட்டுக்காரரும், குழந்தையும் வர்றாங்க. எனக்குத் தெரிஞ்சு.. முதன் முதலா.. இப்படி நடக்குது. சொந்தக்காரங்களை இந்த வீட்டுக்கு ஐயா கூப்பிடறது இதுதான் முதல் தடவை.'

'ஓ..!' என்றாள் இதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாதவளாக.

சுந்தரம்மாள் வாணியை வாஞ்சையாகப் பார்த்தார்.

'இதுக்கு நீயும் ஒரு காரணம்!' என்றார்.

'நானா?' என்று திகைத்துப் போனாள்.

'ஆமா.. நீ அன்னைக்கு சொன்னியே குழந்தைங்க.. இயற்கையான சூழ்நிலையில வளரணும்னு. உறவு, மனிதர்கள் பழக்கம் இதெல்லாம் இருக்கணும்னு அதையெல்லாம் ஐயாகிட்டே சொன்னேன்.'

'ஐயய்யோ! அதையெல்லாம் எதுக்கு சொன்னீங்க..?'

'நல்ல விஷயம் தானே?' அதுதான் சொன்னேன்.... அதுமட்டுமில்லே.. நீ சொன்ன மாதிரி இந்தக் குழந்தையை சாக்கா வச்சுகிட்டாவது எல்லாரும் ஒண்ணு சேரட்டும்னு நினைச்சேன்' என்றார்.

வாணிக்கு மேலும் தெரிந்து கொள்ள ஆவலாக இருந்தது. ஆனால், துருவிக் கேட்க அச்சமாக இருந்தது.

வந்த ஒரு மாதத்துக்குள் இவ்வளவு தெரிந்து கொள்வதே போதும் என்கிற மாதிரித் தோன்றிவிட்டது.

சுந்தரம்மாவும் அந்தப் பேச்சைத் தொடரவில்லை.

* * *

கார் சர்ரென்று வந்து நின்றது. அதிலிருந்து கலகல லெனச் சிரித்துக் கொண்டே உமா இறங்கினாள்.



பின்னாலேயே அவள் கணவனும், அந்த அழகான குழந்தையும் இறங்கினார்கள்.

சந்திரமோகன், கவிதாவும் முன்னால் நின்று வரவேற்றார்கள். கவிதாவின் வரவேற்பு மனமார்ந்த வரவேற்பாக இல்லையென்பது வாணிக்கே புரிந்தது. உமாவோ அவள் கணவன் சபாபதியோ அதைப் புரிந்து கொண்டார்களோ இல்லையோ காட்டிக் கொள்ளவில்லை.

புதியவர்களின் வருகையைப் பார்த்த உடனே சந்திர மோகனின் கையிலிருந்து இறங்கி வாணியிடம் வந்து ஒட்டிக் கொண்டாள் சோனா.

'டேய்! சோனா! அத்தைடா.. இது மாமா!' என்று சொல்லச் சொல்ல அவள் வாணியின் இடுப்பில் முகம் பதித்துக் கொண்டாள்.

'ஓ.கே... ஓ.கே.. அவளுக்குக் கொஞ்சம் டைம் குடுங்க... அப்புறம் பழகிடுவா..' என்று சிரித்துக் கொண்டே உள்ளே வந்தான் சபாபதி.

அந்தப் பெரிய ஹாலின் மையத்தில் இருந்து வீட்டை ஒரு முறை கண்ணால் பார்த்த சபாபதி.

'யப்பா! வீடா.. இல்லே கல்யாண மண்டபமா?' என்று சிரித்தபடி அமர்ந்தான்.

உமாவும், கவிதாவும் ஒரு புறம் அமர, எதிரே அமர்ந் தார்கள். உமாவின் அருகில் அவர்களது குழந்தை கமலேஷ் அமர்ந்தான்.

வாணியிடம் ஒட்டிக் கொண்டே மெல்ல நடந்து வந்தாள் சோனா.

'அப்பாகிட்டே... போம்மா.. எல்லாரும் வந்திருக்கா கல்ல என்ன நினைப்பாங்க...!' என்று மெல்லக் குனிந் அவளிடம் வாணி சொல்லவும் மெல்லத் தந்தை நோக்கிப் போனாள்.

அங்கே குடும்பத்தவர்கள் எல்லாரும் மகிழ்ச்சியாகப் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்த வாணி மெதுவாகக் கழன்று கொண்டு தன்னறைக்குள் போய்விட்டாள்.

இப்படிக் கலகலவென்று சிரித்துக் கொண்டு பழகுவ தற்குத் தனக்கும் உறவினர்கள் இல்லாமல் போனார்களே என்ற ஏக்கம் அவள் நெஞ்சைப் பிசைந்தது.

உறவினர்கள் இல்லாமல் இல்லை. இருந்தார்கள். அப்பாவும், அம்மாவும் வசதியாக இருந்தபோது வந்து பழகினார்கள். உறவு கொண்டாடியவர்கள் எல்லாம் அப்பாவின் வசதி சற்றே குறைந்து போனதும் ஒதுங்க ஆரம்பித்தார்கள்.

அப்பாவின் மறைவுக்குப் பிறகு வந்தவர்கள் எல்லாரும் அந்த வீட்டைக் கபளீகரம் செய்வதிலேயே இருந்தார்கள் என்பதாலோ என்னவோ டாக்டர். விஸ்வநாதன் அவர்களை யெல்லாம் தூரத்திலே நிற்க வைத்துவிட்டார். அந்த வீட்டின் மேலும் கடன் இருக்கிறதென்பது தெரிந்தவுடனே ந்த சந்தர்ப்பவாத சொந்தங்களும் விலகி விட்டார்கள்.

சந்திரமோகனைப் போல உறவினர் தனக்கும் இருந் ருந்தால் எல்லாவற்றையும் சரிப்படுத்தி இருப்பார்களோ.

அன்றைக்கு நடந்தது நினைவு வந்தது.

'போதும்.. வெளியில வாங்க.. வாணி!' என்றவுடன் ர்விதிர்த்துப் போனாள். வெளியே வந்தாள்.

'சார்.. நான் வேணும்னு... ஒளிஞ்சுக்கலே!' என்று றினாள்.

அவன் புன்னகைத்தான்.

'தெரியும்...!' என்றான்.

அவள் தொடர்ந்து என்ன பேசுவது என்று தெரியாமல் ாள். அவனே பேசினான்.



'வாணி! கவிதா பேசினதைக் கேட்டிருந்தா வருத்தப் படாதீங்க.. அவ ஒரு ஸ்பாயில்ட் சைல்ட். ரொம்ப செல்லம் குடுத்து வளர்த்துட்டாங்க. ஃபாரின்ல படிச்சவ. அதுனால நம்ம கலாச்சாரம் எதுவும் அவளுக்குப் புரியறதில்லே... சுயநலவாதியாவே இருந்து பழகிட்டா... டோன்ட் மிஸ்டேக்.. ஹர்' என்றான்.

'சார்! அவங்க கேட்டது நியாயம்தான்!' என்றாள் வாணி.

அவன் ஒரு பெருமூச்சு விட்டான். பிறகு சொன்னான்.

'வாணி, நியாயங்கள் இடத்தைப் பொறுத்து மாறும்... இன்ஃபாக்ட்... அவளுடைய வேலையை நீங்க செய்யறீங்க.. இந்த ஒரு மாசமா நீங்க வந்ததுக்கப்புறம் நான் குழந்தையைப் பத்தின கவலை இல்லாம நிம்மதியா இருக்கேன். என் பிஸினெஸ்ல நிம்மதியா கான்ஸன்ட்ரேட் பண்றேன். இந்த மாசம் மட்டும் எனக்கு இரண்டு லட்ச ரூபாய் லாபம். அப்படிப் பாத்தா நா உங்களுக்குக் கொடுக்கிற தொகை கம்மிதான்.. யு அண்டர்ஸ்டாண்ட்!' என்றான்.

வாணி சமாதானமானாள்.

'நானும் உங்களுக்குத் தேங்க்ஸ் சொல்லணும்' என்றாள். 'எதுக்காக வாழறோம்னே தெரியாம ஒரு வாழ்க்கை வாழ் றதை விட நாமும் ஒரு இடத்துக்குத் தேவையா இருக் கோம்கறது எவ்வளவு நிம்மதி தரக் கூடிய விஷயம்னு உங்களுக்குப் புரியாது. அது மட்டுமில்ல.. சோனாவோட டைம் ஸ்பெண்ட் பண்றது எனக்கு ரொம்பப் பிடித்தமான விஷயமா இருக்கு...!' என்றாள்.

'குட்... குட்....!' என்று சிரித்தான்.

அவள் மேலும் தொடர்ந்தாள்.

'அதுக்கு ஒரு சம்பளம் வேற குடுக்கறீங்க!' என்றாள்.

அவன் மறுபடியும் சிரித்தான். அவள் மேலும் ஓரி நிமிடங்கள் பொதுப்படையாகப் பேசிவிட்டு.

'தாங்க்ஸ்.. சார்!' என்று வெளியே போனாள்.

அவன் அவள் போவதை ஆழ்ந்து பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

'இந்தப் பெண் தனிமையில் கஷ்டப்பட்டிருக்க வேண்டும்... ஆனாலும், செர்ஃபுல்லாக.. என்பார்களே.. அப்படி இருக்கிறாள்' என்று உள்ளுக்குள் ஒரு வியப்புத் தோன்றியது.

'மிஸ். வாணி!' என்று அழைத்தான். அவள் திரும்பி வந்தாள்.

'வாணி! இனிமே நிம்மதியா இருங்க... உங்க ஃப்யூச்சரைப் பத்திப் பிளான் பண்றதை நானும் டாக்டர். விஸ்வநாதனும் பாத்துக்கறோம். யு ஆர் இன் எ ஸேஃப் ப்ளேஸ்.. சரியா?' என்றான்.

அவள் 'சரிங்க... சார்!' என்று தலையாட்டிவிட்டுக் கிளம்பினாள்.

அவள் உள்ளூர 'டாக்டர். குமாருக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்' என்று நினைத்துக் கொண்டாள்.

அந்த ஆள் மட்டும் தொல்லை பண்ணாம இருந்திருந்தா.. இப்படியொரு இடம் தனக்குக் கிடைத்திருக்குமா? கிடைத்திருக்கிற இடத்தைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்து கொண்டாள்.

பெயருக்கு ஒரு புத்தகத்தைக் கையில் வைத்துக் கொண்டு தன்னுடைய ஒரு அறையில் கூடைச் சேரில் அமர்ந்து கொண்டிருந்த வாணிக்கு அந்த நினைவுகளெல்லாம் வந்து போயின. ஆனால் இப்போது தோன்றியது.

'என்ன இருந்தாலும்.. அவர்கள் குடும்பம் என்று வரும் போது.. அவள் வெளியாள்தானே! வேலைக்கு வந்தவள் தானே! என்று தோன்றியது.



முகம் வாடி அமர்ந்திருந்தாள். அப்போது 'வாணி ஆன்ட்டி..' என்றபடி ஓடி வந்தது சோனா. கூடவே அந்த இன்னொரு குழந்தையும்.

'ஆன்ட்டி.. இது கமலேஷ்! ராஜான்னு கூப்பிடலாம்' என்று பெரிய மனுஷியைப் போல் அறிமுகப்படுத்தினாள்.

வாணி தன் கவலைகளையெல்லாம் மூட்டை கட்டி வைத்து விட்டு சுறுசுறுப்பானாள்.

'ஹலோ!' என்று கை நீட்டினாள்.

'ஏன்.. நீங்க இங்கே உட்காந்துகிட்டுருக்க!' என்றாள் சோனா.

'இல்லே! உறவுக்காரங்க எல்லாம் பேசிகிட்டு இருக்கையிலே..' என்று இழுத்த வாணி பேச்சை மாற்றி.

'அது சரி! ராஜாவுக்கு உன்னோட விளையாட்டு சாமான்களையெல்லாம் காட்டினியா..! கதைப் புத்தகமெல்லாம் காட்டலாமா? வாங்க வாங்க..' என்று அழைத்துப் போனாள்.

தென்னந்தோப்புக்கு சற்று முன்னாலேயிருந்த பெரிய ஆலமரத்துக்குக் கீழே இருந்த திண்ணையின் மேலே அமர்ந்தபடி குழந்தைகள் இருவருக்கும் சிந்துபாத் கதை சொல்லிக் கொண்டிருந்தாள் வாணி.

'ஐயய்யோ! அப்புறம்.. சிந்துபாத் அந்த ஆளைத் தோள்ல தூக்கிட்டே எத்தனை நாளைக்கு அலைவான்.. பாவமில்லே!' என்றான் ராஜா.

'ஆமா.. பாவம்!'என்றாள் வாணி.

குழந்தைகள் இருவரும்... கவலை நிறைந்த முகபாவத்துடன் கதை கேட்பதைப் பார்த்தவுடன் வாணியின் மனத்தில் அன்பு பொங்கியது.

'அதுசரி! அதுக்கு நீங்க எதுக்கு இப்படிக் கவலையாக நீங்க...?!' என்று அள்ளிக் கொண்டாள்.

இரண்டு குழந்தைகளின் கன்னங்களிலும் மாறி மாறி முத்தமிட்டுக் கொண்டாள்.

ராஜா தன்னுடைய கருத்திலேயே குறியாக நின்றான்.

'ஆன்ட்டி... அதிருக்கட்டும்.. சிந்துபாத் தப்பிப்பானா இல்லையா?' என்றான். வாணி கலகலவென சிரித்தாள்.

'ராஜா.. மீதிக்கதை அப்புறம்!' என்றாள்.

'ஐயோ! எனக்குத் தூக்கம் வராதே!' என்றான் சிணுங்கலாக.

'ஒரே ஒரு க்ளூ குடுக்கட்டுமா? சிந்துபாத் எப்பேர்ப்பட்ட கஷ்டத்துல இருந்தும்.. கடைசியில தப்பிச்சுடுவான்.. போதுமா?' என்றாள்.

'அப்ப சரி!' என்று சிரியலாகத் திரும்பி சோனாவிடம் சொன்னான்.

'தப்பிச்சுடுவானாம்... சோனா!' என்று. அதே சமயம் பின்னால் நிழலாடுவது போல் தோன்றவே திரும்பிப் பார்த்தாள்.

உமா, சபாபதி, சந்திரமோகன் மூவரும் புன்னகையுடன் நின்று கொண்டிருந்தார்கள்.

ராஜாவைத் தூக்கிக் கொண்டான் சந்திரமோகன். உமா சோனாவை அள்ளிக் கொண்டாள்.

'சிந்து'பாத்.. கதை... மாமா! த்ரில்லிங்கா இருக்கு..' என்றான்.

'அதுசரி.. சாப்பிட வேண்டாமா! வாணி நீங்களும்.. வாங்க!' என்றான் சந்திரமோகன்.

அவளும் நடந்தாள்.

ஆண்கள் இருவரும் முன்னே போவதைப் பார்த்த வாணிக்கு சந்திரமோகனும் இட்டத்தட்ட ஒரு காட்டு



மனிதனிடம் மாட்டிக் கொண்டு அவனைத் தோளில் அமர்ந்து கொண்டு அலைந்த சிந்துபாத்தைப் போலவே தோற்றமளித்தான். ஆனால் அழகான கதை.

இன்றைக்குக் காலையில் திருத்தமாக உடை உடுத்துக் கொண்டு கவிதா வந்து நின்றபோது அவ்வளவு அழகாக இருந்தது. அந்த அழகில் மனதைப் பறி கொடுத்துத்தான் குணமே இல்லாத போதும் குடும்பம் நடத்துகிறான் போலும் என்று எண்ணிக் கொண்டாள்.

'இது என்ன? எதற்காக இப்படியெல்லாம் அலசிக் கொண்டிருக்கிறோம். வரவர ரொம்ப அடுத்தவங்களைப் பற்றி சிந்திக்க ஆரம்பித்துவிட்டோம்...' என்று எண்ணிய போது முகம் சிவந்து விட்டது.

அதே சமயம் அவளை நோக்கித் திரும்பிய உமா ரசனையுடன் அவளைப் பார்த்தாள்.

'அப்புறம்.. நீங்க.. அந்தக் காலேஜ் ஸ்டுடண்டாமே.. நானும் அந்தக் காலேஜ்தான்' என்று ஆரம்பித்த அந்தக் கணத்திலேயே வாணிக்கு உமாவை மிகவும் பிடித்து விட்டது.

சகோதரனைப் போலவே ஜாடை.. ஆனால் அவனைக் காட்டிலும் சற்று உயரம் குறைவு. எடுப்பான மூக்கு. வெடவெடவென்று ஒல்லியாக இருந்தாள். ஆனாலும் லட்சணம் இயல்பாக இருந்தாள். இந்த மாதிரி ஒரு பெண் தோழியாக இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று தோன்றியது. ஆனால், கூடவே 'இப்போது அவர்கள் எஜமானர்கள், நான் வேலைக்கு வந்தவள்' என்ற எண்ணமும் தோன்றியது.

உமா வாஞ்சையாய்ப் புன்னகைத்தாள்.

'வாணி மேடம்!' அண்ணன் சொன்னதெல்லாம் வச்சுப் பார்க்கும்போது.. நீங்க ஒரு ஸ்வீட் கேர்ள்னு நினைக்

றேன். ஐ திங்க்... வி ஆர் கோயிங் டு பி ஃப்ரெண்ட்ஸ் என்று கையை நீட்டினாள் உமா.

வாணியும் பதிலுக்குக் கையை நீட்டினாள்.

அதே சமயம் ஆண்கள் இருவரும் நின்று வெடிச் சிரிப்புச் சிரித்தார்கள்.

'சபா.... மச்சான்! நீங்க இன்னும் அந்த மாதிரிச் சேட்டை யெல்லாம் விடலையா என்ன?' என்று திரும்பியவன்.

'உமா! எப்படிம்மா.. இந்தாளை சமாளிக்கறே!' என்று மறுபடியும் சிரித்தான்.

'கொஞ்சம்.. கஷ்டம்தான்!' என்று உமா சிரிக்க.

'கதையை மாத்தாதிங்க.. மச்சான்..! உங்க சேட்டை நான் எப்படி சமாளிக்கறேன்னு கேளுங்க..' என்று சிரித் தான் சபாபதி. மெல்லிய குரலில் ஏதோ சொல்ல மறுபடியும் வெடிச் சிரிப்புச் சிரித்தான் சந்திரமோகன்.

இந்த வீட்டுக்கு வந்ததிலிருந்து முதல் முறையாக அவன் அப்படி சிரிப்பதைப் பார்த்த வாணி வியப்பில் ஆழ்ந்து போனாள்.



9

'நானா?!' என்று ஆச்சரியப்பட்டாள் வாணி.

'ஆமா.. நீதான்..!' என்றாள் உமா.

உமாவும், வாணியும் பழகிக் கொண்டதில் நிறைய விஷ யங்களைக் கண்டு பிடித்திருந்தார்கள். அதில் ஒன்று உமா வும், வாணியும் படித்த பள்ளியும் கல்லூரியும் ஒன்றேதான்.



உமா வாணியைக் காட்டிலும் இரண்டு வயது பெரிய வள். இரண்டு பேரும் தங்கள் கல்லூரிப் பேராசிரியர்களைப் பற்றி, பள்ளி ஆசிரியர்களைப் பற்றி நிறைய விஷயங்கள் பகிர்ந்து கொண்டார்கள்.

பேசுவதற்கு நிறைய இருந்தது.

கல்லூரியில் நடித்த நாடகங்கள், செய்த குறும்புகளைப் பேசிப் பேசிச் சிரித்தார்கள்.

மூன்று நாட்கள் போனதே தெரியவில்லை. வாணி ஒதுங்கி அமர்ந்த போதும் அவளை உமாவும், குழந்தைகளும் விடவில்லை.

கவிதாதான் சொல்லப் போனால் விருந்தாளியைப் போல் ஒதுங்கினாற்போல் நடந்து கொண்டாள்.

உமாவும் அவளைத் தங்கள்பால் இழுப்பதற்கு என் னென்னவோ செய்து பார்த்தாள்.

அழகாகவும், ட்ரிம்மாகவும் உடையுடுத்திக் கொண்டு வந்து அவர்களோடு அமர்ந்து கொண்டாள். ஆனால் அள வாகவே பேசினாள். அளவான புன்னகையுடன் அவர் களைப் பார்த்துக் கொண்டிருப்பாள். பிறகு 'எக்ஸ்க்யூஸ்மி!' என்று அறைக்குப் போய் விடுவாள்.

உமா தன் குடும்பத்தாரோடு செலவழித்த நேரம் போக உமாவும், வாணியும் ஒன்றாக குழந்தைகளோடு நேரம் செலவழித்தார்கள்.

சோனாவும், ராஜாவும் ஒட்டிப் பிறந்தவர்களைப் போல நடமாடிக் கொண்டிருந்தது ஆச்சரியமாக இருந்தது. உமா இரவு தங்கும் போது தங்கள் படுக்கையறையிலேயே சோனாவையும் தங்க வைத்துக் கொண்டாள். அதனால் இந்த இரண்டு நாட்களும் இரவு நேரத்தில் கொஞ்சம் புத்தகங்கள் படிப்பதற்கு நேரம் கிடைத்தது வாணிக்கு.

இடப்புறம் ஓடிக் கொண்டிருந்த கால்வாயில் சந்திர மோகனும், சபாபதியும் துளைந்து துளைந்து நீச்சலடித்துக் கொண்டு சிரித்தார்கள்.

சபாபதிக்கு கோயமுத்தூர் ஊத்துக்கடவு பகுதியில் ஒரு பெரிய மருத்துவக் கல்லூரி இருக்கதாம். ஒரு பெரிய கல்லூரியின் நிர்வாகி என்ற பந்தாவே இல்லாமல் குடும்பத்தில் மிக இயல்பாகப் பழகியது ஆச்சரியமாய் இருந்தது.

உமா நிறைய விஷயங்களை வாணியிடம் பகிர்ந்து கொண்டாள்.

'என்னவோ தெரியலை வாணி! அண்ணாவோட நேச்சருக்கும் கவிதாவோட நேச்சருக்கும் அடிப்படையில நிறைய வித்தியாசம் இருக்கு. ஆனா, அண்ணன் கவிதாவை விருப்பப்பட்டுக் கல்யாணம் செஞ்சுகிட்டாங்கறப்ப எனக்கு ஆச்சரியம்தான்' என்றாள்.

அவளுக்குள் அந்தப் பழைய நினைவுகள் ஊற்றுப் போல கிளம்பியதும் போலும். வாணியிடம் பகிர்ந்து கொண்டாள்.

'எங்கப்பான்னா எல்லாருக்கும் பயம்தான். சிங்கம்தான். குமாரசாமி அய்யான்னா எங்க ஊரே நடுங்கும். பெரிய மிராசுதார். தஞ்சாவூர் பக்கம் நிலம். இப்பவும் பொள்ளாச்சிக்கு அந்தப்புறம்... பத்து கிலோ மீட்டர் தொலைவிலே அம்பராம்பாளையங்கற இடத்துக்குப் பக்கத்திலே இருநூறு ஏக்கராவுக்கு மேல இருக்கு. பெரிய ரைஸ் மில் இருக்கு..' என்றாள்.

'ஓ!' என்றாள் வாணி.

'ஆனா, நீயுமாச்சு.. உன் சொத்தும் ஆச்சுன்னு அண்ணன் வெளியே வந்துட்டார். திடீர்னு ஒரு நாள் அண்ணன் வந்து கவிதாவைக் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு சொன்னவுடனே அப்பாவுக்கும், அம்மாவுக்கும் அதிர்ச்சி...'



.........!

'ஏன்னு.. சொன்னாத்தானே உனக்குப் புரியும். சிவகாமி அத்தையோட ஹஸ்பெண்ட், எங்க மாமா ரொம்பப் பிடிவாதம். யாரையும் மதிக்க மாட்டார். நிறைய வேண்டாத பழக்கங்கள். அத்தை ரொம்பக் கஷ்டப்பட்டிருக்காங்க... அந்தக் கோபத்துல ஒரு நாள் அப்பா வந்து நாகப்பன் மாமாவைக் கண்டிச்சாங்க...'

'ஓ!'

'ஆனா.. ஆன்ட்டி க்ளைமாக்ஸ் என்னவாச்சுன்னா அத்தையே அப்பாவைப் பார்த்து இது எங்க குடும்பப் பிரச்சினை. நீங்க தலையிடாதீங்கன்னு சொல்லீட்டாங்க..' என்றாள்.

'ஓ!' சில நேரங்கள்ல நம்ம லேடீஸ் இப்படி பண்ணிடறாங்க... இல்லே!' என்றாள் வாணி.

'ஆமா.. அதுக்கப்புறம் மாமாவுக்குக் குளிர்விட்டுப் போச்சு. ரொம்பவே ஆட்டம் போட்டார். அப்பாவுக்கு ரொம்ப வருத்தம்... மாமா மேலே இல்லே.. அத்தை மேலே.. தன்னோட கன்ட்ரோல்ல விட்டிருந்தா மாமாவைச் சரி பண்ணியிருப்பேன்னு அடிக்கடி சொல்லுவாரு...'

'ஓ!'

'அதோட பிரச்சினை முடிச்சிருந்தா பரவாயில்லை. மாமா கவிதாவுக்கும் ரொம்ப செல்லம் குடுத்தாரு. ஃபாரின் அனுப்பிப் படிக்க வச்சாரு. அவளும் ஆட்டம்தான். என்னவோ தெரியலை.. நாலு வருஷத்துக்கு முன்னால லீவுல வந்தா. அந்த சமயம் பாத்து மாமா இறந்து போனாங்க. வேற வழியில்லாம இழவுக்கு எல்லாரும் வந்துட்டுப் போனோம். மோகன் அண்ணன் மட்டும் வந்துட்டுப் போயிட்டிருந்தாங்க. திடீர்னு ஒரு நாள் வந்து கவிதாவைக் கல்யாணம் பண்ணிக்கறேன்னு நின்னாங்க..'

'.....!'

'அவரோட பிடிவாதம் பாத்த அப்பா, நீ அங்கேயே போயிடுன்னாங்க. காதலுக்குக் கண்ணில்லேம்பாங்க... அறிவும் இல்லேங்கறது அப்பத்தான் எங்களுக்குப் புரிந்தது. கல்யாணத்தை மட்டும் ஊருக்காக நடத்திக் குடுத்து அப்பாவும் அம்மாவும் ஒதுங்கிட்டாங்க. போன வருஷத் தில ஒரு கல்யாணத்தில பார்த்து அம்மா அழுதாங்க.. அதுக்கப்புறம் தான் அண்ணன் மட்டும் வீட்டுக்கு வரப் போக ஆரம்பிச்சாங்க. அப்பாவும் ஆனது ஆயிப்போச்சு.. குழந்தையும் பொறந்தாச்சு... இனி என்ன பண்றதுன்னு கண்டுக்காம விட்டுட்டாங்க...' என்றாள்.

'ஓ.. சாரோட கல்யாணத்துக்கப்புறம் இப்பத்தான் வர்றீங்களா?' என்றாள்.

'ஆமா!' என்றாள் உமா, தொடர்ந்து.

'ஆமா.. எம்மேல ரொம்பப் பிரியம். சுபாவும் அவரும் ரொம்ப ஃப்ரெண்ட்லி. உங்க பிரச்சினை உங்களோட. சந்திரமோகனோட பழகறது என்னோட தனிப்பட்ட விருப்பம்ன்னு கட் அண்ட் ரைட்டாச் சொல்லிட்டாரு. எங்க வீட்டுக்காரரு' என்று கலகலவென்று சிரித்தாள்.

'ஒரு வேளை என்னைப் பார்க்கணும்னு தோணிச்சின்னா... ஹாஸ்பிட்டலுக்கு வருவாரு. நானும் அங்கே போவேன்... பேசிக்குவோம்' என்றாள்.

'ஓ! உங்க ஹஸ்பெண்ட் டாக்டரா?'

'ஆமா.. நெஃப்ராலஜிஸ்ட்... அதாவது கிட்னி சம்பந்தமாக ஸ்பெஷலிஸ்ட்' என்றாள்.

'நீங்க! என்ன படிச்சிருக்கீங்க?'

'நான் எம்.எஸ்.ஸி முடிச்சேன்... செகண்ட் இயர்ல இருந்தப்ப.. ஒரு கல்யாண வீட்ல என்னைப் பார்த்துட்டு



பொண்ணு கேட்டாரு. அப்புறம்... என்ன கல்யாணம் தான்..' என்றாள்.

இருவரும் சிரித்தார்கள்.

'சார் என்ன பிஸினஸ் செய்றாங்க?'

'ஓ! உனக்கு அதைப் பத்தியெல்லாம் ஒண்ணும் தெரியாதா?'

'நான் அவ்வளவு ஃப்ரீயாப் பேசினது இல்லை!' என்றாள்.

'அண்ணன் இங்க அத்தையோட பிராப்பர்ட்டியை நிர்வாகம் பண்றாங்க. அதில்லாம காட்டன் பிஸினஸ்ல ஒரு ஏஜெண்டு மாதிரி கை மாத்தி விடுவார்.'

இந்தியாவில இருக்கிற பெரிய பெரிய மில்லில எல்லாம் அவருக்குத் தொடர்பு இருக்கு.. அது மட்டுமில்லாம ஷேர் டீலிங்ல ரொம்ப கெட்டிக்காரர். நிறைய ஷேர்ஸ் வச்சிருக்கார்' என்றாள்.

'ஓ..!'

உமா குபீரென்று சிரித்தாள். 'வாணி... நல்லா.. ஓ.. போடறே..' என்றாள்.

வாணியும் சிரித்தாள். உமாக்கா... வேறென்னச் செய்யச் சொல்றீங்க.. உங்க குடும்ப விஷயத்தை நீங்க இவ்வளவு தூரம் என்னை நம்பிச் சொல்றதே.. எனக்கு ஆச்சரியமா இருக்கு. நான் எப்படிக் கருத்து சொல்ல முடியும்?' என்றாள்.

உமா ஒரு பெருமூச்சு விட்டாள்.

'அதுவும் சரிதான்... பொதுவா.. பணம் இருந்தா எல்லா சந்தோஷமும் நிலைக்கும்கறாங்க. ஆனா எனக்கென்னவோ அப்படித் தோணல்லே. என் மனசுக்குள்ளே ஆழ இலே அண்ணன் கவிதா கூட அவ்வளவு சந்தோஷமா வாழ்க்கை வாழல்லேன்னுதான் தோணுது' என்றாள்.

'எனக்கும் கூட அப்படித்தான் தோணுது' என்று சொல்ல வாயெடுத்த வாணி வாயை மூடிக் கொண்டாள். சற்று நேரம் அமைதி காத்தாள்.

நல்ல வேளையாக கனத்த மௌனத்தைக் கலைப்பதற்காகவோ என்னவோ குழந்தைகள் இரண்டு பேரும் ஓடி வந்து அவர்கள் மடிமேல் விழுந்தார்கள்.

பின்னாலேயே அவர்களைப் பொய்யாகத் துரத்தியபடி சபாவும், சந்திரமோகனும் ஓடி வந்தார்கள்.

கவனம் மாறியது!

எல்லாக் களேபரமும் முடிந்த பின்னர் தன்னுடைய அறையில் ஓய்வாக அமர்ந்திருந்த போதுதான் உமா வந்து அதைச் சொன்னாள்.

அடுத்த வாரத்தில் ராஜாவுக்குப் பிறந்த நாளாம். அதைக் கொண்டாடும் போது அண்ணனும், அண்ணியும் வரப் போகிறார்களாம். வாணியும் வர வேண்டுமாம்.

அதைக் கேட்டுத்தான் வாணி அப்படித் திகைத்துப் போனாள்.

'என்னத்துக்கு இப்படி முழிக்கறே. ஒழுங்கா வந்து சேரு..' என்று செல்லமாக மிரட்டி விட்டுப் போனாள் உமா.

* * *

'நான் வர மாட்டேன்.. நா இப்படியே சோனா கூட இருக்கேன்' என்று ஹால் தரையில் புரண்டு அழுத ராஜாவைச் சமாதானப் படுத்தினார்கள்.

சோனா வேறு செங்கண்ணும், கருங்கண்ணுமாய் நின்றாள். பிரியா விடை கொடுத்து அனுப்பி விட்டு வீடு ஊருக்கு வந்தது.

ஒரு நிறைவான களைப்புடன் சோபாவில் சாய்ந்து அமர்ந்தாள். சந்திரமோகன் பின்னாலேயே வந்தா



கவிதாவும் அருகில் அமர்வாள் என்று எதிர்பார்த்தான் போலும்.

'வீடே ரெண்டு மூணு நாளா கலகலன்னு இருந்துச்சு.. இல்லே' என்றான் கவிதாவை நோக்கி.

'ஆமா.. ஃபிஷ் மார்க்கெட் மாதிரி இருந்துச்சு...' என்றாள் முணுமுணுப்பாக.

சட்டென்று சுந்தரம்மா நகர்ந்தாள். வாணி கூட சோனாவைக் கவனிப்பவள் போல் சட்டென்று நகர்ந்தாள்.

சந்திரமோகன் முகம் பழையபடி இறுக்கமாக மாறியது.

'உனக்கு ஃபாமிலி செட் அப்.. வால்யூஸ் பத்தியெல்லாம் ஒரு நம்பிக்கை இருந்தாத்தானே..' என்றான் அடிக்குரலில்.

'இல்லதான்.. ஸோ வாட்?' என்று தோளைக் குலுக்கி விட்டுத் தன் அறைக்குப் போனாள்.

தலை வலிக்கிறாற் போல் தலையைப் பிடித்துக் கொண்டு சற்று நேரம் அமர்ந்துவிட்டான். இங்கிதம் அறிந்த சுந்தரம்மா காபி கொண்டு வந்து நீட்ட மறுக்காமல் வாங்கிக் கொண்டான்.

அந்த நேரத்தில் அவனைப் பார்த்தால் பாவமாக இருந்தது வாணிக்கு. தங்களைப் பார்த்தால் அவனுக்கு தர்ம சங்கடமாக இருக்கும் என்றெண்ணியவளாக சோனாவை அழைத்துக் கொண்டு சிவகாமி நாச்சியார் அறைக்குப் போனாள்.

அவரும் கூட மகிழ்ச்சியாகத் தெரிந்தார்.

'உமா... ரொம்ப நல்ல பொண்ணு பரவாயில்லை மாப்பிள்ளையும் நல்ல ஆள்தான்..' என்றார். பிறகு நீண்டதொரு பெருமூச்சு விட்டவராக 'பாவம்... அவளாவது சந்தோஷமா இருக்கட்டும்' என்றார்.

மேலும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தார். திடீரென்று 'வாணி! நான் எந்தெந்தத் தப்புக்காகக் கடவுள் கிட்டே பாவ மன்னிப்புக் கேட்பேன்னு தெரியலை' என்றார்.

வாணி விழித்தாள். அதைப் பார்த்த அவர் சுய நினைவுக்கு வந்தவர் போல் பேச்சை மாற்றி விட்டார். அவளும் மேற்கொண்டு எதுவும் கேட்க வில்லை.

திரும்ப வரும்போது சந்திரமோகன் வாழ்க்கையில் மகிழ்ச்சியாய் இல்லை என்பதை சிவகாமி நாச்சியாரும் உணர்ந்திருக்கிறார் என்பது புரிந்தது. ஆனால், சந்திர மோகன் இந்தத் திருமணத்தினால் மகிழ்ச்சியடையா விட்டாலும் கடமைக்காகவாவது, குழந்தைக்காகவாவது இந்த திருமணத்தில் இருந்து விடுபட மாட்டார் என்று தோன்றியது.

'இப்படியெல்லாம் பிரச்சினைகள் வருமென்றால் இந்தத் திருமணம்னு ஒன்னு எதுக்கு? வேண்டாம்ப்பா... நாம கூட ஃப்ரீயா இருந்தர்லாம்' என்ற எண்ணம் கூட வாணிக்குத் தோன்றியது. தனக்குள் சிரித்துக் கொண்டாள். அத்தை அங்கே மனதுக்குள் அழுது கொண்டிருப்பதை அறியாமல்.

* * *

அன்றிரவு!

சோனா மறுபடியும் வாணியிடம் வந்து ஒட்டிக் கொண்டது.

ராஜா ஏன் போனான்? என்று திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருந்தாள். வாணி உடனே குழந்தையைத் திசை திருப்புவதற்காக.

'கடோத்கஜன் கதை சொல்லட்டுமா?' என்றாள்.



'ம்...!' என்றது சோனா.

சுவாரசியமாகக் கதை கேட்டுக் கொண்டு உறங்கியும் விட்டது.

அறைவாசலில் நிழலாட நிமிர்ந்து பார்த்தாள். சந்திர மோகன் அறை வாசலில் நின்று கொண்டிருந்தான்.

'வாணி! சோனாவை எங்கிட்டே குடுங்க... ஐ நீட் கம்பெனி.. வெரி பேட்லி..' என்றான்.

வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்த வாணி குழந்தையைக் கையில் கொடுத்தாள்.

சந்திரமோகன் குழந்தையைத் தோளில் சாய்த்து கொண் டவன் திரும்பினால் அங்கே கவிதா நின்று கொண்டிருந் தாள்.

மெல்லிய குரலில் அவள் ஏதோ கோபமாகக் கேட்க.

'வில் யூ ப்ளீஸ் ஷட் அப்?' என்று அவளைக் கண்டு கொள்ளாமல் தங்கள் பகுதிக்குப் போனான்.

சற்று நேரத்தில் குழந்தை வீறிட்டு அழுகிற சத்தம் கேட்டு வாணி சற்றும் தயங்காமல் சந்திரமோகனின் அறைக்கு ஓடினாள்.

அந்த நேரம்!

சந்திரமோகனின் கை கவிதாவின் கன்னத்தில் ஓங்கி இறங்கிப் பதிந்தது.

கவிதா மேலை நாட்டு பாணியிலேயே காச்சு மூச்சென்று ஆங்கிலத்தில் கத்த சோனா சுவற்றில் சாய்ந்து கொண்டு நின்றிருந்தது. நடுங்கிக் கொண்டிருந்தது.

யாருடைய அனுமதியும் கேட்காமல் வாணி குழந்தையை அள்ளிக் கொண்டு வெளியே வந்தாள்.

'ஹோ! யு நீட் கம்பெனி! அவ பெட்ரூமுக்கே போறீங்க!' என்று அவன் மேலும் சுத்த வாணி விக்கித்துப் போனாள்.

நின்றாள்!

சந்திரமோகன் சலித்துப் போன குரலில் சொன்னான்.

'ஒரு மனுஷன் தாங்கறதுக்கும் ஒரு அளவு இருக்கு கவிதா? இப்ப நீ உன் ரூமுக்குப் போகலேன்னா... நாளைக்குக் காலையிலே அத்தைகிட்டே பேசுவேன். டைவர்ஸுக்கு அப்ளை பண்ணுவேன்' என்றான்.

அந்த வார்த்தை மந்திரம் போல் வேலை செய்தது. கவிதா அமைதியானாள். அந்த இடைவெளியில் வாணி இறங்கி விட்டாள்.

அறைக்கு வந்ததற்குப் பிறகு தன்னுடைய துன்பத்தை விட சந்திரமோகனின் துன்பம் பெரியதாகத் தோன்றியது அவளுக்கு.

களைத்துப் போனாற்போல் வேதனையும், வருத்தமும் நிறைந்தவனாக அவன் நின்ற தோற்றமே அவள் கண்ணுக்குள் வந்து போனது.

சிந்தனையில் ஆழ்ந்தாள்.



10

வாணி இரண்டு மூன்று நாட்களுக்கு சந்திரமோகனின் கண்ணில் படுவதையே தவிர்த்து விட்டாள்.

ஒரு நேரம் போய் கவிதாவுடன் பேசலாமா என்று நினைத்தாள். ஆனால், பேசினால் அவள் புரிந்து கொள்ளப்



போவதில்லை என்று தோன்றியது. அதனால் அந்த யோசனையையும் கைவிட்டு விட்டாள்.

சந்திரமோகனிடம் இருந்து விலகி நின்றால் இந்த மாதிரி அனாவசியப் பேச்சுக்களுக்கு இடம் இல்லாமல் போய் விடுமே என்று நினைத்தாள். இருக்கிற நிர்வாகப் பிரச்சினைகள் போதாதென்று தானும் எதற்காக அவரைத் தொல்லை செய்ய வேண்டுமென்று நினைத்தாள். ஆனால் இரண்டு மூன்று நாட்கள் கழித்து வேறு விதத்தில் சந்திரமோகனை சந்திக்க வேண்டி வந்தது.

அன்றைக்கு சோனாவும் அவளும் பள்ளிக்குக் கிளம்பிக் கொண்டிருந்தார்கள்.

சுந்தரம்மா திடீரென்று வந்து 'டிரைவர் லீவு!' என்றார்.

சந்திரமோகனே வந்து காரை ஓட்டினான். சண்டை நடந்த அன்றைக்குக் குழந்தை வந்து அவளிடம் சொன்னது.

'வாணி ஆண்ட்டி... திடீர்னு அம்மா பக்கத்து ரூமில இருந்து வந்து என்னை எழுப்பினாங்க.. ஏண்டி, நீதான் நீதான் இந்தாளுக்குக் கம்பெனியா..? நான் ஒருத்தி இருக்கறதே இந்தாளுக்கு நினைப்பில்லையான்னு கத்தினாங்க...' என்றாள்.

வாணி திகைத்துப் போனாள். மேற்கொண்டு குழந்தை சொல்லப் போவதைக் கேட்கலாமா, வேண்டாமா என்று குழப்பம் ஏற்பட்டது. ஆனால், தான் காது கொடுத்துக் கேட்கா விட்டால் குழந்தை இன்னும் யாரிடமாவது போய்ச் சொல்லும் என்று தோன்றியது அதனால்.

'ம்.. அப்புறம்..?' என்றாள்.

'அப்புறம்.. அப்பா.. எந்திரிச்சு.. கவிதா.. நீ இப்ப சரியில்லே.. இந்தப் பழக்கத்தை விட்டுத் தொலைன்னாலும் கேட்க மாட்டேங்கறே... நீ போ உன் ரூமுக்கு.. அப்பாஉன்னாங்க!'

'...!'

'நான் எதுக்குப் போகனும்? இவளைப் போகச் சொல்லுங்க..!' அப்பாஎன்னுட்டு என்னைத் தள்ளி விட்டாங்க.. நான் கீழே விழுந்துட்டேன்.. அப்ப அழுதேன்.

'அப்ப அப்பா கோபமா அம்மாவைப் பிடிச்சுத் தள்ளி விட்டாங்க..' அப்புதான்.. நீங்க ஓடி வந்தீங்க..' என்றாள்.

'ஓ..!' என்று சுவாரசியமாகக் கேட்பது போல் நடித்த வாணி பிறகு குழந்தையிடம் சொன்னாள்.

'சோனாக் குட்டி! எல்லா விட்லயும் அம்மா.. அப்பாவுக்குள்ளே சண்டை நடக்கறதுதான். அப்புறம்.. அடுத்த நாளே சிரிச்சுப் பேசிக்குவாங்க..' என்றாள்.

'ஆமா.. நம்ம விட்ல அப்பாவும், அம்மாவும் ரொம்ப சிரிச்சுப் பேசறதேயில்லையே' என்றாள் குழந்தை.

வாணி திகைத்துப் போனாள். பிறகு மெல்ல சுதாரித்துக் கொண்டு சொன்னாள்.

'சில அம்மா அப்பாங்க... குழந்தைங்க முன்னாடி சிரிச்சுப் பேசுவாங்க.. சில பேரு.. தனியா இருக்கும்போது பேசிக்குவாங்க' என்றாள்.

'ஓ..!'

'ஆமா..! அதனாலே... நீ எனக்கு ஒரு பிராமிஸ் பண்ணனும். உனக்கு வாணி ஆன்ட்டியைப் பிடிக்கும்தானே... நான் சொன்னால் கேட்பே தானே?'

'ம்.. கண்டிப்பா!'

'அப்ப.. இனிமே அம்மா.. அப்பா கோபமாப் பேசினதையெல்லாம் யாருகிட்டயும் போய் சொல்லக் கூடாது.. சரியா?'

'சரி..!'



'ப்ராமிஸ்!?'

'ப்ராமிஸ்!'

அப்படி சத்தியம் செய்து கொடுத்த சோனா மறக்காமல் அப்பாவிடம் போய் அதை ரிலே செய்யத் தயங்கவில்லை.

சந்திரமோகன் காரை எடுப்பதற்கு முன்னால் வாணி கடைசியாக ஒரு முயற்சி செய்து பார்த்தாள்.

'சோனா! அப்பாவே உன்னைக் கொண்டுபோய் விட்டுட்டு வந்துடுவாங்க.. அப்பா கூடப் போய்க்கறியா?' என்றாள்.

சந்திரமோகனின் கண்களில் சற்றே குறும்பு மின்னி மறைந்தாற்போல் இருந்தது.

'வாணி! மேடம்! இன்னைக்கு நான் டிரைவர் மட்டும்தான்!' ப்ளீஸ்.. ஏறுங்க!' என்றான்.

அவளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

குழந்தையைப் பள்ளியில் கொண்டு போய் இறக்கும் வரை அவள் குழந்தையிடமே பேசிக் கொண்டு வந்தாள்.

அவளுக்கு சொல்வதற்கும் நிறைய இருந்தது. குண்டா இருக்கற இங்கிலீஷ் மிஸ்ஸிலிருந்து அடிக்கடி தன்னோட கிரேயான் பென்சிலைத் திருடிக் கொள்கிற பக்கத்துப் பையன் வரை நிறைய விஷயங்கள்.

அவனும் முகமலர்ச்சியுடன் குழந்தையுடன் பேசிக் கொண்டு வந்தான்.

குழந்தையை வகுப்பில் கொண்டு போய் விடுகிற இடைவெளியில் அவன் பள்ளியின் பிரின்சிபாலைப் பார்த்துக் குழந்தையைப் பற்றி விசாரித்துவிட்டு வந்தான்.

திரும்ப வரும்போது சற்று தூரம் வந்தவுடன் ஒரு ஒதுக்குப் புறத்தில் காரை நிறுத்தினான்.

'வாணி! கவிதா பேசினதைக் கேட்டுட்டீங்க போலருக்கு.. அவ அந்தப் பேச்சின் போது சுய நினைவில் இருக்கலை. அது மட்டுமில்லாம.. அவளுடைய இயல்பை மாற்ற முடியாது. அவளுக்கு வாழ்க்கையோட மதிப்பீடுகள்.. புரியலை. ஏன்... வாழ்க்கையே புரியலை' என்றான்.. நீண்ட பெருமூச்சு விட்டான்.

'ஆனா.. சோனாவோட அதிர்ஷ்டம் அவளுக்கு நீங்க கிடைச்சிருக்கீங்க.. தயவு செய்து.. கவிதாவோட பேச்சுக்களை.. ஏன்.. கவிதான்னு ஒரு பொறுப்பில்லாத மனுஷி... வீட்டுல இருக்கறதையே நீங்க இக்னோர் பண்ணிடணும்...' என்று இரு கைகளையும் கூப்பினான்.

வாணி பதறிப் போனாள்.

'ஐயோ! சார்.. என்ன இது!' என்றாள்.

'ஆமா.. வாணி! இந்த வீட்டுல கவிதாங்கற ஒரு எலிமென்டை நீங்க பெரிய மனசு பண்ணிப் பொறுத்துக்கணும்' என்றான்.

'சார்.. ப்ளீஸ்! கையை எடுங்க! நான் பொறுத்துக்கறேன்... சார்!' என்றாள்...

'தட்ஸ் எ பிராமிஸ்?!'

'பிராமிஸ்!' என்றாள்.

'அப்புறம் ஏன்? ரெண்டு மூணு நாளாக் கண்லயே படமாட்டேங்கறீங்க!'

'அது உங்களுக்கு தர்ம சங்கடமா இருக்கக் கூடாதுங்கறதுக்காகத்தான்..' என்றாள்.

'ஓ..! தாங்க்ஸ்!' என்றான், முகம் மலர்ந்து.

'சார்! ஏற்கனவே உங்களுக்கு நிறையப் பொறுப்புக்கள். இதுல என்னால வேற உங்களுக்குப் பிரச்சினைகள்' என்றாள்.



'நீங்க கொஞ்சம் சந்தோஷமான பிரச்சினை!' என்றான்.

இருவரும் சிரித்தார்கள்.

சந்திரமோகன் வண்டியை நகர்த்தினான். வீட்டுக்கு அருகாமையில் நெருங்கிய போது வாணி சொன்னாள்.

'சார்! மேடம் உங்களை ரொம்ப நேசிக்கறாங்க... ஒருத்தர் மேல ரொம்பப் பிரியம் இருக்கும்போதுதான் பொறாமை வரும்..' என்றாள்.

அவன் வாணியைத் திரும்பிப் பார்த்து அழகாகச் சிரித்தான்.

'அப்படியா.. சொல்றீங்க?' என்றான்.

'ஆமா.. சார்!' என்றாள்.

'ஆமா.. எனக்கு வேற மாதிரித் தோணுது. என்மேல இருக்கற பிரியத்தைக் காட்டிலும் நீங்களும் அழகா இருக்கீங்கங்கறதுனாலதான் பொறாமைன்னு தோணுது' என்றான்.

அவள் வாயடைத்துப் போனாள்.

'ஆஃப்டர் ஆல்.. தன் குழந்தைக்கு கேர் - டேக்கரா இருக்க வந்த ஒரு லேடி இவ்வளவு ஸ்மார்ட்டா, அறிவார்ந்த பெண்ணா இருக்கறதை அவளால ஜீரணிக்க முடியலை. கவிதாவுக்குத் தன்னோட அழகு மேல ரொம்ப.. ரொம்ப.. நம்பிக்கை!' என்றான், கசப்பாகச் சிரித்தான்.

'....!'

'ஆமா.. எனக்கு சோனாவுக்கு எப்படி ஒருத்தர் அமைஞ்சா நல்லாருக்கும்னு நெனச்சேனோ.. அந்த அளவுக்கு நீங்க அமைஞ்சிருக்கீங்கன்னு.. சந்தோஷம்..' என்றான்.

அவன் மௌனமாகவே அமர்ந்திருந்தான்.

'என்ன... மேடம்! ப்ராமிஸைக் கீப் அப்... பண்ணு விங்கதானே!' என்றான்.

'கண்டிப்பா சார்!' என்றாள் மெல்லிய குரலில்.

அன்றைக்கு இறங்கிப் போகும் போது அவனுக்குத் தெரியவில்லை. இந்தப் புள்ளியில் அந்த வீட்டில் இருந்து விலகிப் போயிருந்தால் பின்னால் வந்த புயலுக்கெல்லாம் அவசியமே இருந்திருக்காது.. என்று...!

* * *

மெரூன் நிற பட்டுப்புடவை மிக எளிமையான புடவைதான். சன்னக்கரை. ஆனால், அது அவளது நிறத்தைக் கூடுதலாகக் காட்டியது. கழுத்தில் ஒரு மெல்லிய செயின். ஆனால் சோனாவை வெகு அழகாகத் தயார்ப் படுத்தி யிருந்தாள்.

பட்டுப்பாவாடை, பட்டுச் சொக்காயோடு அந்த சின்ன முடிக்கு அளவாக ஒரு சௌரி இணைத்து இடுப்பு வரை ஒரு பின்னல் போட்டு குஞ்சலம் தொங்க.. குழந்தை அழகாக இருந்தாள். கண்ணாடியின் முன்னால் நின்று தன் பின்னலை ஆட்டி ஆட்டிப் பார்த்தாள்.

மென்மையான நீல நிறத்தில் வெள்ளைக் கோடுகள் போட்ட முழுக்கை சட்டை அணிந்து ட்ரிம்மாக இறங்கி வந்த மோகன் குழந்தையைப் பார்த்து மலைத்துத்தான் போனான்.

'ஓ.. மை... டியர்... ஸ்வீட்... ஏன்ஜல்!' என்று தூக்கித் தட்டாமாலை சுற்றினான்.

'அப்பா... என் ஜடைப்பா.. கழண்டுடும்ப்பா' என்று குழந்தை அலட்டிக் கொண்டதைப் பார்த்து எல்லாரும் சிரித்தார்கள்.

வெகு இயல்பாகக் கவிதாவிடம் திரும்பி.



'கவி... ! அத்தையோட சின்ன வயசுப் போட்டோ.. ஒன்னு நம்ம வீட்ல இருக்கு அதுல.. அத்தை இப்படித்தான் இருப்பாங்க..' என்றான் மகிழ்ச்சியாக.

கவிதாவிடம் இருந்து ஒரு அரைப்புன்னகைதான் பதிலாகக் கிடைத்தது.

அவன் அவளைப் பெரிதாகக் கண்டு கொள்ளாமல் திரும்பி,

'வாணி! இவளைக் கொண்டு போய் அத்தை கிட்டே காட்டிட்டு வாங்க..!' என்றான்.

வாணியும் மகிழ்ச்சியாக எடுத்துக் கொண்டு போனாள். சிவகாமி நாச்சியும் பெரிதும் மகிழ்ந்தார்.

'மறக்காம இவளை போட்டோ எடுங்க.. ஃபங்ஷன் போட்டோவெல்லாம் எடுத்துட்டு வாங்க' என்றார்.

'சரிங்க அம்மா!' என்று சொல்லி விட்டு வாணி குழந்தையை கைப்பிடியில் நடத்திக் கொண்டு நகர சிவகாமி நாச்சியார்.

'வாணி.. இரும்மா!' என்றார். சுந்தரம்மாவை அழைத்து பீரோ சாவியைக் கொடுத்து 'அந்தக் கல்மாலையை எடுத்துக் குடுங்க' என்றார்.

'ஐய்யயோ! வேண்டாங்க!' என்று வாணி பதற.

'போட்டுட்டுப் போம்மா.. அங்கே எல்லாரும் நகை போட்டுட்டுத்தான் வருவாங்க' என்றார்.

'எனக்கே.. நகைகள்ளாம் இருக்கு.. ஊர்ல இருக்கு..' என்றாள்.

'அதனாலதான்.. சொல்றேன்... இரவல்தானே குடுக்க றேன்' என்று வற்புறுத்தவே தயக்கத்துடன் அணிந்து கொண்டு இறங்கி வந்தாள்.

அவள் நடந்து வருகையில் அந்தக் கல்மாலை மின்னியது. அதை ஒருவிதக் குரோதத்துடன் பார்த்த கவிதா சந்திரமோகனின் பார்வை தன் பக்கம் திரும்பவே முகபாவத்தை மாற்றிக் கொண்டாள்.

காரில் கணவனின் அருகில் முன்சீட்டில் அமர்ந்து கொள்ள பின்னாலே சுந்தரம்மாவும், அவளும் அமர்ந்து கொண்டிருந்தார்கள்.

சோனா வாணியின் அருகில் அமர்ந்து கொண்டு வழியில் கண்ட காட்சிகளையெல்லாம் பார்த்து அதிசயித்து சிரித்துச் சிரித்துக் கொண்டு வந்தாள்.

சந்திரமோகனும் சுந்தரம்மாவும், வாணியும் இயல்பாகக் கூடச் சிரித்துக் கொண்டு வந்தார்கள். கவிதாவின் உள்ளத்தில் எரிமலை பொங்கிக் கொண்டு வந்ததை அறியாமல்.



## 11

கமலேஷின் பிறந்த நாள் கொண்டாட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள் என்று ஒரு ஐம்பது பேருக்கு மேல் அழைத்திருந்தார்கள் சபாபதி, உமா தம்பதியினர்.

ஒரு விருந்தும் நடத்தினார்கள். சந்திரமோகன் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தான்.

தன் தாய் சோனாக்குட்டியை மடியை விட்டு இறக்காமல் வைத்துக் கொண்டிருந்ததை ஒரு வித நெகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.



தன் திருமணத்திற்குப் பிறகு முதன் முதலாகத் தன் குடும்பத்தினர் உறவுக்கரம் நீட்டியுள்ளார்கள் என்ற நினைவில் இருந்தான்.

விருந்து முடிந்தவுடன் மற்றவர்கள் கிளம்புகையில் கவிதா வந்தாள்.

'எனக்கு ரொம்ப டயர்டா இருக்கு..' என்றாள்.

'என்ன கவிதா.. முதன் முதலா எல்லாரும் ஒன்று சேர்ற வாய்ப்பு வந்திருக்கு போலாங்கறே' என்றான் இறங்கிய குரலில்.

'நான் போறேன். நீங்க வேண்ணா இருந்துட்டு வாங்க' என்றாள்.

அவன் அவளைச் சற்று நேரம் வெறித்துப் பார்த்தான். பிறகு ஒரு பெருமூச்சுடன் 'சரி.. கிளம்பு!' என்று டிரைவரிடம் கொண்டு போய் விட்டு விட்டு வரச் சொன்னான்.

ஒரு வகையில் அவள் போனதும் நல்லதுதான் என்று தோன்றியது. இருந்தாலும் ஏதாவது பிரச்சினைகள் செய்து கொண்டிருப்பாள் என்று தோன்றியது.

சபாவும், சந்திரமோகனும் ரிலாக்ஸ்டாக எதிரெதிரில் அமர்ந்திருந்தார்கள்.

'அப்புறம்.. மச்சான்.. ராஜாவுக்கு மூணு வயசாயிடுச்சே.. அப்புறம் அடுத்ததுக்கு வழி பாக்கறதுதானே.. ' என்றான் சந்திரமோகன் லேசாக சிரித்தபடி.

'ஏன் அது.. உங்களுக்கு ஒத்து வராதாக்கும்' என்றான் சபாபதி.

'நிஜம்மாவே நமக்கு ஒத்து வராது. ஏன் தெரியுமா? கவிதாவோட டெம்பரமெண்டுக்கு இந்த ஒண்ணை உருப்படியா வளர்த்தா அதுவே போதும்னு இருக்கு..' என்றான்

'அது அப்படித்தான்... ஆனா, உமாவைப் பொறுத்தவரை அந்தக் கவலைப்பட வேண்டியதில்லே. ஒரு சின்னச் சிக்கல்..' என்றான் சபாபதி.

'என்னது?' என்றான் சந்திரமோகன்.

'இல்லே... இந்த வருஷம்... ஒரு ஆறு மாசம் லண்டனுக்கு ஒரு பயணம் போக வேண்டியிருக்கு. நான் உமாவையும் கூடக் கூட்டிட்டுப் போலாம்னு இருக்கேன். அதுக்கப்புறம்தான் மத்த யோசனையெல்லாம்.'

'உமா வர்றேங்கறாளோ?'

'உமா பையனை விட்டுட்டு வர்லேங்கறா.. எனக்கானா அவளுக்கு இது நல்ல எக்ஸ்போஷரா இருக்கும்னு தோணுது. மெது மெதுவா அவளுக்கு அட்மினிஸ்ட்ரேடிவ் லைன்ல பயிற்சி குடுக்கலாம்னு பாக்கறேன்' என்றான் சபாபதி.

'ஓ! யோசிப்போம்.. என்ன செய்யலாம்னு யோசிப்போம்..' என்று சந்திரமோகன் சுற்று முற்றும் பார்த்தான்.

'என்னிது! லேடீஸ் வட்டத்தையே சுத்து வட்டாரத்துல ...ணோம். அம்மா.. உமா, வாணி அட... சுந்தரம்மாவைக் ...க் காணோம்' என்றான்.

'அட... ஆமா!' என்ற சபாபதியும் எழுந்தான்.

'...ங்கேன்னு பார்க்கலாம் வாங்க!' என்று போனார்கள்.

...ம்மாவின் அறையில் நான்கு பெண்களும் குனிந்து ...யோ தேடிக் கொண்டிருந்தார்கள். நிறைய போட்...க்கள் சுற்றிலும் கிடந்தன.

'...ன்ன நடக்குது இங்கே!' என்று உள்ளே நுழைந்...ன் சந்திரமோகனும், சபாபதியும்.

...ம்மா நிமிர்ந்து பார்த்துப் புன்னகைத்தார்.



'இல்லப்பா.. உங்கத்தை சிவகாமியோட சின்ன வயது போட்டோ... ஒண்ணு இதோ இப்ப.. சோனா இருக்காளே அதே மாதிரியே இருக்குமே.. அதைத் தேடறேன்..!' என்று மறுபடியும் தேடினார்.

'அம்மா! இதோ இருக்கு!' என்று உமா உற்சாகமாக நிமிர்ந்தாள்.

சந்திரமோகனும் ஆசையாகக் குனிந்து பார்த்தான். நிஜமாகவே வியந்து போனான். இப்போது சோனாவைக் கறுப்பு வெள்ளையில் எடுத்தது என்று சொன்னால் யாரும் நம்பிக்கொள்வார்கள்.

உமா, சகோதரனைப் பார்த்து சிரித்தாள். 'அண்ணா, வாணிதான் ஐடியா குடுத்தாப்ல. இப்ப சோனாவை ஒரு போட்டோ எடுத்து இரண்டையும் பக்கத்துல பக்கத்துல வச்சு லேமினேட் செய்யலாம்னு. அதான் தேடினோம்' என்றாள்.

அதோடு நிற்காமல் அப்பாவைத் தேடிக் கொண்டு விரைந்தாள். பின்னாலேயே அவசர அவசரமாக வந்த சந்திரமோகன்,

'உமா.. அவசரப்படாதே!' என்றான்.

'இருண்ணா.. நீ!' என்றவள் நிற்காமல் போனாள்.

'அப்பா.. இங்க பாருங்களேன்!' என்று அப்பாவின் அறையில் நுழைந்தாள்.

அப்பா விச்ராந்தியாக சோபாவில் சாய்ந்து கொண்டு அமர்ந்திருந்தார்.

'அப்பா.. அப்பா..! அங்கே பாருங்களேன்! சிவகாமி அத்தையோட சின்னவயசு போட்டோ! பாருங்களேன்! அப்படியே சோனா மாதிரி இருக்கு..' என்று நீட்டினாள்.

அப்பா வாங்கிப் பார்த்தார். பழைய சிந்தனைகள் வந்தன போலும். முகம் மலர்ந்தது. சற்றே நெகிழ்ந்த பாவனை முகத்தில் தோன்றியது.

சொல்லி வைத்தாற்போல் வாணி குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்து நின்றாள். குமாரசாமி பார்வையைத் திருப்பிக் குழந்தையைப் பார்த்தார். புன்னகை மலர்ந்தது.

வாணி குழந்தையை இறக்கிவிட்டு 'முன்னே போ' என்பது போல் தள்ளினாள். குழந்தை மெதுவாகத் தாத்தாவை நோக்கிப் போனது.

'வாடா! பேரு என்னடா ராஜாத்தி!' என்றார்.

'சோனா.. கூப்பிடறது சோனா. ஆனா, பேரு.. காவ்யா..' என்றாள்.

'அதென்ன.. சோனா.. ன்னொன்னுகிட்டு..' என்றார் குமாரசாமி.

'சோனான்னா.. இந்தியிலே.. தங்கம்னு அர்த்தம். வாணி ஆன்ட்டி சொன்னாங்க..' என்றது குழந்தை.

'எங்க தாத்தா..!' என்று ராஜா ஓடி வர. 'போடா! எனக்கும்தான் தாத்தா!' என்றாள் சோனா.

'சரி.. சரி! ரெண்டு பேருக்கும்தான் தாத்தா! நீ அம்ச்சின்னு கூப்பிடு. நீ அப்பச்சின்னு கூப்பிடு. நீ இந்தத் தொடையில உட்காரு. நீ இந்தப் பக்கம்' என்று இரண்டு பக்கம் உட்கார வைத்துக் கொண்டார்.

மீசையை முறுக்கிக் கொண்டு சிரித்தார்.

உமாவும், சந்திரமோகனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

'அப்ச்சி! நீ எதுக்கு இவ்ளோ பெரிய மீசை வச்சிருக்கே!' என்றாள் சோனா.



'போக்கரா.. அடி மடியிலேயே கையை வச்சுட்டாடா..' என்று தாத்தா மறுபடியும் வெடிச் சிரிப்புச் சிரித்தார்.

'எங்க தாத்தா.. மாதிரியே நானும் மீசை வச்சுக்குவேன், பெருசா ஆனா' என்றான் ராஜா.

சந்திரமோகன் இடத்தை விட்டு நகர்ந்தான் மற்ற எல்லாரும் கூட.

இரண்டு குழந்தைகளும் அவரும் ஆக ஒரு தனியுலகம் நுழைந்து விட்டதை அறிந்த சந்திரமோகன் முகத்தில் ஒரு புன்னகையுடன் இரண்டு பாண்ட் பாக்கெட்டுகளிலும் கையை விட்டவனாக போர்ட்டிகோவில் வந்து நின்றான்.

பின்னாலேயே வந்த உமா சொன்னாள். 'வாணி குடுத்த ஐடியாதான், வந்ததிலிருந்தே கவனிச்சாளாம். அப்பா... குழந்தையை உத்து உத்துப் பாத்துட்டிருந்தாராம். ஆனா, எடுக்கவே இல்லையாம் அதுக்குத்தான்.. இந்த ஐடியா!' என்றாள்.

அவன் முகத்தில் சிந்தனை படர்ந்தது. சற்று நேரம் தங்கையிடம் பேசிக் கொண்டிருந்தான். பிறகு சுந்தரம்மாவுடன் சேர்ந்து பிஸியாக ஏதோ செய்து கொண்டிருந்த வாணியிடம் போனான்.

'வாணி!' என்றான்.

வாணி கைவேலையை விட்டு விட்டு 'என்னங்க.. சார்!' என்று வந்தாள்.

'தேங்க்ஸ்..!' என்றான்.

'எதுக்கு?' என்றாள் புரியாமல்.

'சோனாவுக்காக நீங்க எடுத்த ஸ்டெப்புக்கு. அங்க போய்ப் பாருங்க... எங்கப்பா ரெண்டு மடியிலயும் ரெண்டு பேரக் குழந்தைகளையும் வச்சுட்டு வெடிச் சிரிப்புச் சிரிச்சிட்டிருக்காரு.'

வாணி கலகலவெனச் சிரித்தாள்.

'ஆமா! பாத்துட்டுத்தான் சார் இந்தப் பக்கம் வந்தேன்' என்றாள்.

அவன் மேலும் சிரித்தான்.

'சார்! குழந்தைகளுக்கு ஒரு குடும்ப அமைப்பு எவ்வளவு அவசியம்ன்னு எனக்குத் தெரியும். சின்னக் குழந்தையா இருந்தாலும் சரி. பெரியவங்களா இருந்தாலும் சரி... தனிமைங்கறது ரொம்பக் கொடுமையான விஷயம் சார்!' என்றாள்.

அவன் சிரிப்பு நின்றது.

'வாணி!' என்றான் கவலை நிறைந்த குரலில்.

'இல்ல சார்.. இப்பக் கவலைக்கு அவசியமே இல்லை.. இன்ஃபாக்ட்... கல்யாணம் கில்யாணம்னு எதுவுமே இல்லாம.. இப்படியே சோனாவை வளர்த்துகிட்டே இருந்தர்றேன்.. சார்' என்றாள்.

'சோனாவுக்கு அப்படி ஒரு அதிர்ஷ்டம் கிடைச்சா.. நல்லாத்தான் இருக்கும்... ஆனா, அதுக்காக உங்களோட ஃபியூச்சரையும் நினைக்கணுமில்லே' என்றபடியே திரும்ப சபாபதி கையசைப்பதைப் பார்த்து 'வருகிறேன்' என்பது போல் தலையசைத்து விட்டுப் போனான்.

அவளும் புன்னகையுடன் போய் சுந்தரம்மாவிடம் எல்லாவற்றையும் பகிர்ந்து கொண்டாள்.

* * *

பத்து மணியாகியும் ஏனோ மனமே வரவில்லை சந்திரமோகனுக்கு.



சபாபதியும் அவனும் அந்தப் பெரிய வீட்டின் முன்னால் புல்வெளியில் சேர் போட்டு அமர்ந்திருந்தார்கள்.

ஷேர் மார்க்கெட் பற்றி சந்திரமோகனிடம் சபாபதி விவரமாகக் கேட்க, அவன் தன் பங்குக்கு மெடிக்கல் காலேஜ் நடத்துவதில் உள்ள சிரமங்களைப் பத்தி விசாரித்துக் கொண்டிருந்தான்.

'அண்ணா' என்று வந்து நின்றாள் உமா.

'என்னடா?' என்றான்.

'அண்ணா! இன்னைக்கு நம்ம எல்லாரும் இங்கேயே தங்கலாம்ண்ணா..!' என்றாள்.

'உங்க அண்ணி போர்க்கொடி தூக்குவாளே!' என்று யோசித்தான்.

'ஆமா.. அவங்க என்னைக்குத்தான் சந்தோஷமா நடமாடினாங்க.. பாருங்க சின்னக் குழந்தைங்க ரெண்டு பேரும் எவ்வளவு சந்தோஷமா நடமாடுது' என்றார் சுந்தரம்மா.

'அடேயப்பா! சுந்தரம்மாவே ஸ்ட்ராங்கா ரெகமன்டேஷன் செய்யறாங்கப்பா!' என்று சிரித்தவன் ஒத்துக் கொண்டான்.

சிவகாமி நாச்சிக்கு போன் செய்து விவரம் சொன்னான்.

'சந்தோஷமா இருந்துட்டு வாப்பா!' என்றார்.

கவிதாவுக்கும் போன் செய்தான்.

'ஓ.. எல்லாரும் ஒன்று சேர்ந்துகிட்டீங்களா? இனி அவளவுதான்.. ஆட்டம் போடுவீங்க!' என்றாள் எரிச்சலா

'ஆட்டம் போடறதைப் பத்தி நீ பேசக்கூடாது கவி என்று அவன் அடிக்குரலில் சீறவும் வைத்து விட்டான்.

இரவு பதினோரு மணியிருக்கும். சந்திரமோகனுக்கு நர்ஸ் போன் செய்தார்.

'அய்யா! கவிதாம்மா இங்க பெரியம்மா ரூமுக்கு வந்து ஒரே சண்டை! சுயநினைவு வேற இல்லை போலருக்கு. ஒரு வழியா ரூமுக்குக் கொண்டு போய்ப் படுக்க வச்சேன். பெரியம்மா பாவம் ரொம்ப நொந்து போயிட்டாங்க... இப்பத்தான் தூக்க மாத்திரை குடுத்துத் தூங்க வச்சேன்' என்றாள்.

'சரி! இப்ப ஏதும் புறப்பட்டு வரணுமா?' என்றான்.

'வேண்டாங்கய்யா. இப்படி நடந்துச்சுன்னு உங்களுக்குத் தெரியணும்கறதுக்காகச் சொன்னேன்!' என்றாள் நர்ஸ்.'

வாடிப் போன சந்திரமோகனின் முகம் பார்த்த உமா ஓடி வந்து அண்ணனிடம் 'என்னண்ணா!' என்றாள்.

'உங்கண்ணிதான்! ஏதோ பிராப்ளம் பண்ணிட்டே இருப்பா.. ரெட்சட் ஹாபிட்ஸ். விட முடியலேங்கறா..' என்றான் வருத்தத்துடன்.

'அண்ணா! நீ இந்த அண்ணிகிட்டே என்ன இருக்குன்னு இப்படி வைக் பண்ணிக் கல்யாணம் பண்ணிட்டே!' என்றாள்.

அவன் அதே வருத்தத்துடன் புன்னகைத்தான்.. 'அந்தைக்காக எல்லாத்தையும் பொறுத்துக்க வேண்டியிருக்கு..' என்று மேலும் ஒரு செய்தியைத் தங்கையிடம் சொன்னான்.

'அப்படியா?' என்று அதிர்ந்து போனாள் உமா.

'அது மட்டுமில்லே.. எனக்கு ஒரு கில்ட்டி ஃபீலிங். கொடக்கற பேர்ல அப்பா மட்டும் ஒதுங்கியிருந்திருக்காம இருந்தா மாமாவைக் கண்ட்ரோல் பண்ணியிருந்திருக்



கலாம். இந்தக் 'கவிதாவையும் ப்ராப்பரா வளர்த்திருக்கலாம். உடம்புக்கும் முடியாம சிறகொடிந்த பறவை மாதிரி அவங்க இருக்கறதைப் பார்த்து மனசு கேக்கலே. அவர்களுக்கு மாரல் சப்போர்ட் குடுக்க வேண்டியது அவசியம்ன்னு தோணிச்சு. அதான்..!' என்றான்.

'ஓ! அப்படியா! நான் அண்ணியோட அழகைப் பார்த்து..' என்று இருக்குமுன் அவள் மென்மையாகச் சிரித்தாள்.

'உங்கண்ணி ரொம்ப அழகுதான்.. யார் இல்லேன்னா! ஆனா.. குணம்.. அதுல சிம்ப்ளி ஜீரோ.. என்ன செய்யறது நம்ம இளவரசி இருக்காங்களே! அவங்களுக்காக எல்லாத்தையும் பொறுத்துக்க வேண்டியதுதான்.'

உமா அவனைக் கோபமும், வருத்தமும் கலந்த பார்வையாகப் பார்த்தாள்.

'அண்ணா! இத்தனை நாள் இதையெல்லாம் மனசுக்குள்ளயா வச்சுகிட்டிருந்தே!' என்றாள்.

'ஆமா.. பாரு.. தெரிஞ்சவுடனே நீயும் வருத்தப்பட ஆரம்பிச்சுட்டே... அதனாலதான் சொல்லலே.. விடும்மா.. நாங்க ஆம்பளைங்க எப்படியும் சமாளிப்போம்' என்றான்.

'அண்ணா! சோனாவும், வாணியும் எங்களோட ரெண்டு மூணு நாள் வரட்டுமே!' என்றாள்.

'கூட்டிட்டுப் போம்மா! அந்தப் பொண்ணுக்கும் இவனால டார்ச்சர்தான்..' என்றான்.

மேலும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுப் போகிற சகோதரியின் முதுகைப் பார்த்துக் கொண்டு நின்றான். இன்னும் கவிதாவின் முழுமையான குணம் பற்றித் தெரிய வந்தால் தங்கை எப்படி அதிர்ந்து போவாள் என்று எண்ணிக் கொண்டான்.



## 12

'நிஜம்மாவே ஆச்சரியமாயிருக்கு!' என்றார் அத்தை தனது சிறு வயது போட்டோவைப் பார்த்து.

ஒரு போட்டோ ஸ்டுடியோவில் கொடுத்து அதைப் புதுப்பித்திருந்தார்கள். அத்தை மகிழ்ச்சியாகச் சிரித்தார்.

'ஆமாப்பா! இப்ப சோனாவைப் பார்த்தா இதே மாதிரித்தான் இருக்கு..' என்றார்.

'ஆமாத்தை! அதனாலதான் சோனா மேல எனக்கு ரொம்பப் பிரியம்..!' என்றான்.

அத்தை தன் மருமகனை ஆழ்ந்து பார்த்தார். பெருமூச்சு விட்டார். பிறகு சொன்னார்.

'உன்னை மாதிரி ஒரு பொக்கிஷம் கிடைச்சும் சந் தோஷமா இருக்கத் தெரியலையே!' என்றார் வருத்தத் டன்.

சுற்று முற்றும் பார்த்துவிட்டு 'எங்கத்தை உங்க மக!' றான்.

நீ வந்தவுடனே நல்ல பேரன் கிடைக்கும்னு உள்ளே ங்கிட்டிருக்கா. உன்கிட்டே பயமும் இருக்கு.. ஆனா, டவும் போடறா.' என்றார். பிறகு சந்தேகம் வந்தவர் போல், ம்பியா.. பத்தடி சந்தோஷமாத்தானே இருக்கீங்க?' ர்..

ன் முகம் சிவந்தது. 'அதெல்லாம் ஒண்ணும் பிரச்சினை ' என்றான். ஆனால், அத்தையின் பார்வையைத் தான்.



அதே சமயம் சுந்தரம்மா பரபரப்பாக ஓடி வந்தார்.

'சின்னய்யா உங்கம்மாவும், அப்பாவும் வர்றாங்களாம் அங்கே உங்க வீட்ல இருந்து போன் வந்துச்சு..' என்றார்.

சந்திரமோகன் பரபரப்பானான்.

'ரியலி!' என்றான். உடனே வீடு முழுக்க மகிழ்ச்சி பரவியது.

கவிதா அறையிலிருந்து வெளியே வந்தபோதுகூட கோபம் மறைந்து அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

* * *

'அண்ணா! நான் ஒருத்தி இருக்கேன்னு இப்பத்தான் உங்களுக்குத் தெரிஞ்சுதா?' என்று கண்ணீர் விட்டு அழுகிற தங்கையின் அருகில் கட்டிலில் அமர்ந்து கொண்டார் குமாரசாமி.

'என்னை என்ன செய்யச் சொல்றே? நீதான் கோடு போட்டு அந்தப் பக்கம் நில்றான்னு நிறுத்திட்டியே. அந்தக் கோபம்தான் அப்புறம் அவர் போனதுக்கப்புறம் உன்னைப் பாக்க எனக்குத் தைரியம் வர்லே!' என்றார்.

யாரும் அணுகுவதற்கே அஞ்சுகிற அப்பா வயது கூடிவிட்டதாலோ, பாசம் வெற்றி பெற்றதாலோ வழக்கம் போல் சுருக்கமாகப் பேசாமல் மனசு விட்டுப் பேசினார்.

கவிதா கவனமாகத் தன்னறையைப் பூட்டி விட்டு வந்து விட்டாள். கீழ்த்தளத்திலும் அம்மாவின் அறையிலுமே அவர்களோடு இருந்தாள்.

கிட்டத்தட்ட தங்கையும் அவரும் இப்படி உறவு முறையாகச் சந்தித்து வருடக் கணக்கில் ஆகி விட்டது.

அந்த சங்கடத்தின் போது வெளியே போனவர்தான். பிறகு மைத்துனன் இறந்தபோது வந்து எல்லாச் சடங்கு

களையும் முன்னிருந்து நடத்தி விட்டுப் போனவர் மனைவியை இரண்டு மூன்று முறை அனுப்பினார். தான் வரவில்லை.

'நான் சொன்னதைக் கேட்டிருந்தா நாகப்பனையும் திருத்தியிருப்பேன்.. அவனும் நல்லா இருந்திருப்பானே' என்று மனைவியிடம் மட்டும் புலம்புவார். அந்தக் கோபம் தீரவேயில்லை.

இப்போதுதான் அதுவும் உமா சில விஷயங்களைத் தந்தையிடம் பேசியதற்குப் பிறகுதான் செய்யத் தவறிய கடமைக்காக மகன் பாரம் சுமக்கிறானே என்று தோன்றி ஏதோ என்னவோ புறப்பட்டு வந்து விட்டார்.

தங்கையின் அறையிலேயே இரண்டு மணி நேரத்துக்கு மேல் பேசிக் கொண்டிருந்தார். இன்றைக்கு செவகாமி நாச்சி தன் நர்ஸிடம் 'என்னைச் சக்கர நாற்காலியில உட்கார வச்சு ஹாலுக்குக் கூட்டிட்டுப் போங்க..' என்றார் உற்சாகமாக.

கூடத்துக்கு அழைத்து வந்தார்கள்.

'செவகாமி.. நீ அம்மாகிட்டே ஒண்டிகிட்டு முகத்தை மறைச்சுகிட்டு சிரிப்பியே... அதே மாதிரி.. உன் பேத்தி' என்றார் குமாரசாமி.

உள்ளே உடைத்து வைத்திருந்த பாசமெல்லாம் வெளியே பீறிட்டுக் கொண்டு கிளம்புவதை ஒரு மௌன சாட்சியாய்ப் பார்த்துக் கொண்டிருந்தான் சந்திரமோகன்.

'அண்ணா! ஞாபகமிருக்கா... இந்தச் சந்திரமோகன் ஸ்கூல பொண்ணுகளோட பின்னலை அவுத்து விட்டு வருவான். நாம போய் டீச்சர்கிட்டே எக்ஸ்க்யூஸ் கேப்போமே..' என்று சிரித்தார் செவகாமி.

சந்திரமோகனும் அம்மாவும் ஒருவரையொருவர் பார்த்து சிரித்துக் கொண்டார்கள்.



'அப்புறம் ஒரு நாளைக்கு வெங்காயம் எல்லாம் திரையப் பரப்பி வச்சிருந்தோமில்ல.. அதுல வந்து.. சூரின்..' என்று அத்தை ஆரம்பிக்கவும் சந்திரமோகன் முகம் சிவந்து,

'அத்தை.. ப்ளீஸ்! அதெல்லாம்... எதுக்கு!' என்றான்.

'டேய்! அவங்க என்னமோ பேசிகிட்டுப் போறாங்க.. உனக்கென்ன வந்துச்சு. நீ அந்தப் பக்கம் போ..' என்று அம்மா கண்ணைச் சிமிட்டவும் சிரித்துக் கொண்டே லைப்ரரிக்குப் போய்விட்டான்..

அம்மாவையும், அப்பாவையும் அனுப்பிவிட்டு வந்து அந்த சந்தோஷத்தைப் பகிர்ந்துகொள்ள மனைவியைத் தேடினான்.

அவள் மாடிக்குப் போய்விட்டாள்.

'சே! வாணி இருந்தால் வாணியிடமாவது பகிர்ந்து கொண்டிருக்கலாம்..' என்று எண்ணிக் கொண்டிருக்கையிலேயே சபாபதி போன் செய்தான்.

'என்ன மச்சான்! அண்ணனும், தங்கச்சியும் ஒரே பாச மழையாமே!' என்று சிரித்தான்.

'ஆமாங்கறேன்! பாசமலர் சிவாஜியும், சாவித்திரியும் மாதிரி உருகிட்டாங்க போங்க' என்று சந்திரமோகனும் சிரித்தான். பிறகு 'ஆனா மச்சான்! அத்தை முகத்திலே ரொம்ப நாளைக்கப்புறம் ஒரு தெளிவு! அப்பா முகத்திலே கூட...' என்றான்.

'சரி.. மச்சான்! நீங்க எல்லாப் பிரச்சினையையும் உங்களுக்குள்ளேயே போட்டு வச்சுகிட்டு முழுங்கிகிட்டு நடமாடிட்டிருந்திருக்கீங்க. இப்பத்தான்.. உமா மூலம் கொஞ்சம் தெரிஞ்சுது. இனி.. சரி.. பண்ணிடுவோம். கவலைப்படாதீங்க. இங்க பாருங்க.. சோனாவும், ராஜாவும் வீட்டையே ரெண்டு பண்ணிகிட்டிருக்குதுங்க.. இனி மேலாவது விஷயங்களை ஷேர் பண்ணிக்குங்க.. அப்புறம்..

குடும்பம்.. நெருங்கின உறவுன்னு எல்லாம் எதுக்கு இருக்கு' என்று உரிமையாகக் கடிந்து கொண்டு போனைக் கட் செய்தான்.

சந்திரமோகனுக்கு ஒரு பக்கம் மகிழ்ச்சியாக இருந்தது. இன்னொரு பக்கம் கவலையாகவும் இருந்தது. 'இன்னமும் எல்லா விஷயங்களும் முழுமையாகத் தெரிந்தால் இவர்களுடைய ரியாக்ஷன் எப்படி இருக்கும்?' என்றெண்ணிக் கொண்டான். ஆனால் ஒன்று புரிந்தது.

சபாபதி நம்பிக்கைக்குரிய நெருங்கிய உறவினர் என்று.

* * *

**லை**ப்ரரியில் அமர்ந்து கொண்டு இருந்தான்.

லைப்ரரியென்றால் அதுவே ஒரு பெரிய ஹால், அங்கேயும் ஒரு டி.வி. இருந்தது. தனிமை வேண்டும் என்றால் அந்த அறைக்குள் நுழைந்து கொள்வான்.

மிக மகிழ்ச்சியாய் இருந்தால் கூட.. ஆனால் இந்த வீட்டில் என்று அவன் தங்க ஆரம்பித்ததற்குப் பிறகு பெரிதாக மகிழ்ச்சியடைந்து அதைத் தனிமையில் கொண்டாட அவனுக்கு வாய்ப்பே கிடைக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

கவிதாவைத் திருமணம் செய்தபோது ஏற்பட்ட நிகழ்வுகள் நினைவுக்கு வந்தன. அப்பாவிடம் போய் சொன்னான்.

'அப்பா.. கவிதாவைக் கல்யாணம் செஞ்சுக்கலாம்னு இருக்கேன்' என்றான்.

அப்பா அவனை வெறித்துப் பார்த்தார்.

'அதை விட நீ எங்காவது கிணத்துல குதிச்சிர்லாம்.'

அவன் அவருக்கு முகம் காட்டாது திரும்பி நின்று கொண்டான்.



'அப்பா! ஒருத்தருக்குக் கெட்டவங்களாத் தெரியறவங்க.. இன்னொருத்தருக்கு நல்லவங்களா இருக்கலாம்.'

'சில பேரோட அடிப்படை குணங்களை மாத்த முடியாது. உன்னோட விருப்பத்துக்கு எதிரா நான் சொல்றேன்னு நினைக்காதே.. உனக்கும் அவளுக்கும் ஒத்து வராது. உன்னோட நேச்சர் வேறே.. அவளோட நேச்சர்.. வேற.'

அப்பாவைத் திரும்பிப் பார்த்தான். அவருடைய முகத்தில் தெரிந்த கவலை பார்த்து அவனுக்குள் புன்னகை மலர்ந்தது. எப்போதும் மிரட்டுவது போலவே பேசுகிற அப்பா கெஞ்சியது போல் பேசுவது பார்த்து அவனுக்கும் நெகிழ்ச்சி ஏற்பட்டது. உள்ளத்து உணர்வுகளை மறைத்துக் கொண்டு லேசாகச் சிரித்தபடி சொன்னான்.

'அப்பா ஆப்போசிட் போல்ஸ் அட்ராக்ட் ஈச் அதர்' என்று.

இரண்டு பேண்ட் பாக்கெட்டுகளிலும் கைவிட்டுக் கொண்டு வழக்கம்போல் கம்பீரமாக நின்றாலும் எப்போதும் நேராகப் பார்த்துக் கொண்டு பேசுகிற மகன் இப்போது முகம் பார்க்காமல் எங்கோ பார்த்துக் கொண்டு பேசுவதைப் பார்த்தார். பிறகு சொன்னார்.

'அதையேதான்.. நானும் சொல்றேன். இது வெறும் அட்ராக்ஷன்தான். இது வாழ்க்கைக்கு உதவாது..' என்று.

அவன் நீண்டதொரு பெருமூச்சு விட்டான். பிறகு சொன்னான்.

'அப்பா.. தப்போ ரைட்டோ.. நான் வாக்குக் குடுத்துட்டேன். இனி மாற முடியாது. ஏற்கனவே அத்தை மாமா கிட்டே ரொம்பக் கஷ்டப்பட்டுட்டாங்க. இப்ப மாமா போனதுக்கப்புறம் ஆதரவில்லாம நிக்கறாங்க.. இது

போய்.. இப்ப முடியாதுன்னு சொன்னா.. சங்கடம்தான் ஆகும்..' என்றான்.

'ஓ..! நீ போய்ப் பொண்ணு கேட்டியா? சிவகாமியே கூப்பிட்டு எம்மகளைக் கட்டிக்கன்னு சொன்னாளா?' என்றார் கூர்மையாகப் பார்த்தபடி.

'அப்பா.. அதையெல்லாம்.. அனலைஸ் பண்ணி என்னத் தக்கு ஆகுது? நான் உங்ககிட்டே கேக்கறதெல்லாம், உங்களுக்கு இந்தக் கல்யாணம் பிடிக்கலேன்னாலும் பரவாயில்லே. எனக்காக முன்னால நின்னு சிம்பிளா நடத்தி வைங்க.. அதுக்கப்புறம்.. நான் ஒதுங்கிக்கறேன். என்னால உங்களுக்கு எந்தத் தொல்லையும் இருக்காது..' என்றான்.

அவர் மேற்கொண்டு எதும் பேச முன் அறையை விட்டுப் போய்விட்டான்.

அன்று மாலையே!

அவன் அத்தையைப் பார்க்கப் போயிருப்பதைத் தெரிந்து கொண்டு சிவகாமியின் வீட்டுக்குப் புயல் போல் வந்தார்.

அப்போது சந்திரமோகனும், சிவகாமியும் எதிரெதிர் சோபாவில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

அண்ணன் வருவதைப் பார்த்தவுடனே சிவகாமி எழுந்து நின்றார்.

'எத்தனை நாளா என் குடும்பத்தைக் கெடுக்கணும்னு திட்டம் போட்டுகிட்டிருந்தே. சிவகாமி?' என்றார்.

சிவகாமி அச்சத்தோடு அவனைப் பார்த்தார்.

'நான் சொன்ன எதுவுமே கேட்காம உன் வாழ்க்கையை நாசம் பண்ணிகிட்டே... இப்ப. எனக்கிருக்கிற ஒரே வாரிசு.. அவன் வாழ்க்கையையும் கெடுக்கறே.. எழுதி வச்சுக்க..



ரெண்டு வருஷத்துல இது டைவர்ஸ்ல வந்து நிக்கப் போகுது. அப்ப ஊரு பூரா என் மானம் சந்தி சிரிக்கப் போகுது. உன்னை மன்னிக்க மாட்டேன்.. சிவகாமி.. மன்னிக்கவே.. மாட்டேன்' என்று உறுமினார்.

'அப்பா.. ப்ளீஸ்!' என்று ஆரம்பித்த சந்திரமோகனை திரும்பி ஒரு பார்வை பார்த்தார்.

'பேசாதடா.. நாயே..!' என்றார். போய்விட்டார்.

சிவகாமி நாச்சியார் தொப்பென்று சோபாவில் சாய்ந்தார்.

'ஐயோ! அண்ணன் கேட்டுப் போட்டுப் போறது நிஜம் தானே! உன்ற வாழ்க்கையைக் கெடுக்கறதுக்கு எனக்கு என்ன உரிமை இருக்கு.. இந்தக் கவிதாப் புள்ளையைக் கட்டிட்டு நிச்சயமா.. நீ சந்தோஷமா இருக்கப் போற தில்லே.. வேண்டாம்.. விட்டுரு அவளுக்கு விஷத்தைக் குடுத்துட்டு, நானும் குடிச்சுட்டு.. செத்துத் தொலைய றோம்..' என்று புலம்பியபடியே சாய்ந்தார்.

அவசரமாக ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனார்கள்.

'ஸ்ட்ரோக்' என்றார்கள்.

'நல்ல வேளையாக, உடனடியாகக் கொண்டு வந்ததுனாலே பிழைச்சாங்க..' என்றார்கள்.

ஆனாலும், ஒரு பக்கம் கையும், காலும் வராமல் போனது.

சந்திரமோகன் பிடித்த பிடியிலே உறுதியாக நின்றான்.

திருமணம் எளிமையாக நடந்து முடிந்தது. அப்போது போனவர்தான். அதற்குப் பிறகு வரவேயில்லை.

அவருடைய கோபத்தைப் பார்த்து பயந்து போன சந்திரமோகனின் தாயார் கூட சிவகாமி நாச்சியைப்

பார்ப்பதற்கு வரவில்லை. ஆனால், அப்பா இல்லாத போது அத்தையிடம் போன் செய்து பேசிக் கொள்கிறாரோ என்று சந்தேகம்.

அப்பா சொன்னது சரியாகவே போனது. கவிதாவுக்கும், அவனுக்கும் அலைவரிசை ஒத்து வரவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

இத்தனைக்கிடையிலும் அவனுக்கென்று ஒரே ஆறுதலாக இருந்தது குழந்தை சோனாதான். அதிலும் வளர வளர அத்தையின் ஜாடையிலேயே இருந்த குழந்தையின் மீது அவனுக்கு இயற்கையாகப் பாசம் பெருகியது.

முதலில் கொஞ்சம் அடங்கியிருந்த கவிதா மெதுவாகத் தனது சுவரூபத்தைக் காட்டத் தொடங்கியிருந்தாள்.

மது அருந்தும் பழக்கத்தை விட முடியாமல் முரண்டு பிடித்தாள்.

அவன் தரக்குறைவான முறையில் சண்டை போட விரும்பவில்லை. மருத்துவர்களிடம் அந்தரங்கமான ஆலோசனை கேட்டான்.

'அப்படிப் பழகிப் போனவர்களுக்கு இல்லாவிட்டால் பிரச்சினை செய்வார்கள். கட்டுப் படுத்தப் பாருங்கள்' என்றார்.

இயன்றவரை கட்டுப்பாட்டில் வைத்திருக்க முயற்சி செய்தான். அமெரிக்காவிலிருந்து நண்பர்கள், தோழிகள் வந்தால் போய்ப் பார்த்து வந்து விடுவாள்.

சுதந்திரமாக வாழ்ந்து பழகிவிட்ட அவளையும் பார்த் ...ல் பாவமாக இருந்தது. இந்தக் கட்டுப்பாடுகள் அவளைக் ...டுப்படுத்துகின்றன என்பது புரிந்தது. அதனால், பட்டும் ...டாமலும் இருக்கப் பழகிக் கொண்டான்.



வேதனைகளை உள்ளேயே புதைத்துக் கொண்டு நடமாடிக் கொண்டிருந்தவனுக்கு அப்பாவின் வருகை எத்தனையோ ஆறுதலாக இருந்தது. மகிழ்ச்சியாக இருந்தான்.

போன் ஒலித்தது.

'அப்பா!' என்றது குழந்தையின் குரல்.

'டேய்.. சோனா!' என்று உற்சாகமானான். குழந்தையின் மழலையை சற்று நேரம் அனுபவித்துப் பேசியவன் பிறகு வாணியிடம் பேசினான்.

'வாணி! இன்னைக்கு அம்மாவும், அப்பாவும் இங்கே வந்தாங்க.. தெரியுமா? அப்பா ரொம்ப நாளைக்கப்புறம் என்கிட்டே சந்தோஷமாப் பேசினாங்க.. ஒரு வழியா என்னை மன்னிச்சுட்டாங்க.. தெரியுமா? நீ இங்கே இருந்திருந்தா நல்லாயிருந்திருக்கும்.. உன்கிட்டே ஷேர் பண்ணியிருக்கலாமேன்னு நினைச்சுகிட்டேன்.. நல்ல வேளை போன் பண்ணினே. ஐம் ஹாப்பி.. வெரி.. ஹாப்பி..' என்றான்.

வாணி இப்படி ஒரு மகிழ்ச்சி வெடிப்பை எதிர்பார்க்கவில்லை. நிறைந்து போனாள்.

'சார்! கேக்கவே சந்தோஷமா இருக்கு சார். ஐ ஆம் ஆல்ஸோ ஹாப்பி ஃபார் யூ' என்றாள். பேசி முடித்து விட்டுத் தன் அறைக்குக் கிளம்பினான்.

லேசாக விசிலடித்துக் கொண்டே தன் அறைக்குப் போனவன் திடுக்கிட்டாற்போல் நின்றான்.

'எதற்காக வாணியிடம் அப்படி எல்லாவற்றையும் கொட்டினோம்?' என்று திகைத்தான். பிறகு தன்னைத் தானே தேற்றிக் கொண்டான்.

'வாணி! நல்ல பொண்ணு! நம்பிக்கைக்குரியவள். இனிமே நல்ல ஃப்ரெண்டாக் கூட நடத்தலாம்' என்று

அதே நேரத்தில்!

வாணியும் சுய அலசலில் ஆழ்ந்திருந்தாள். அதன் விளைவாக ஏற்பட்ட முடிவில் சுதிகலங்கிப் போய் அமர்ந்து விட்டாள்.

கண்களில் எதற்கென்றே தெரியாமல் கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது.



## 13

சுறுசுறுப்பாக இறங்கி வந்தான் சந்திரமோகன்.

ஆச்சரியத்துடன் நின்றான்.

ஹாலில் சக்கர நாற்காலியில் அமர்ந்தபடி சமையல் மற்ற விஷயங்களை மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்தார் சிவகாமி நாச்சியார்.

'குட்மார்னிங்.. அத்தை?' என்றான்.

'குட்மார்னிங்.. மாப்ளே!' என்று கலகலப்பாகச் சிரித்தார்.

'வா.. வா.. இன்னைக்கு நானே கூட நின்னு உனக்காக, உனக்குப் பிடிச்ச ஐட்டம் எல்லாம் ரெடி பண்ணிருக்கேன்' என்றார் உற்சாகமாக.

'தாங்க்ஸ்.. அத்தை' என்றான். மிக மகிழ்ச்சியாக டைனிங் டேபிளில் அமர்ந்தான்.

'கவிதா' என்று சுற்று முற்றும் பார்த்தான்.

'அது தூங்குது! நீ சாப்பிடப்பா..!' என்றார். அவனும் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.



முன்னால் இருந்த பாத்திரத்தைத் திறந்து பார்த்தான்.

குருமா மணம் வீசியது.

'ஹையோ! குருமா..' என்று சிரித்தான்.

'இட்லி, சப்பாத்தி குருமா, சட்னி என்று பரிமாறப்பட்ட வகையறாக்களை ஆர்வமாகச் சாப்பிட்டபடியே மெதுவாக அத்தையைப் பார்த்துச் சிரித்தான்.

'எதுக்கு சிரிக்கறே?' என்றார் அத்தை.

'என்ன இருந்தாலும் பெண்களுக்குப் பிறந்த வீட்டுப் பாசம்.. அதிகம்தான்.. உங்கண்ணன் வந்து ஒரு நாள் சந்தோஷமாப் பேசிட்டுப் போனவுடனே வீல் சேர்ல இறங்கி ஹாலுக்கு வந்துட்டீங்க.. பாத்தீங்களா?' என்றான்.

அத்தை முகம் மலரச் சிரித்தார்.

'தம்பி நீ இந்த வீட்டுக்கு வந்தவுடனே முதல்ல ரொம்ப சந்தோஷப்பட்டேன். ஆனா, இந்தக் கூறு கெட்ட பொண்ணை உன் தலையில கட்டி உன் வாழ்க்கையை நாசம் பண்ணிட்டேனேன்னு ரொம்ப வருத்தப்பட்டுப் போனேன். இனி, அண்ணன் நுழைஞ்சுட்டாங்கள்ளே.. அவரு இவளையும் சரி பண்ணிப் போடுவாரு..' என்றார் மகிழ்ச்சியாக.

அவனும் வாஞ்சையாகப் புன்னகைத்தான். ஆனால் பேச்சை மாற்றிவிட்டான்.

'அத்தே! சோனாவுக்கு இங்க அக்கம் பக்கத்துல குழந்தைகளே இல்லாதது ஒரு பெரிய குறை. அதுக்கு ஏதாவது பண்ணுங்கன்னு வாணி சொல்றாப்பல. அதான் நான் ஒரு ஏற்பாடு பண்ணலாம்னு நினைக்கறேன் நம்ப இடத்துல.. ரோட்டுக்குத் தொட்ட மாதிரிக் கால்வாய் ஓடுதில்லே.. அங்க வச்சு ஒரு 'சில்ரன்ஸ் பார்க்' மாதிரி ஒரு ஏற்பாடு பண்ணலாம்னு இருக்கேன்.. நம்மூரு, பக்கத்துக்

குழந்தைகளும் கொஞ்சம் நேரம் வந்து விளையாடுங்க.. சோனாவுக்கும் கொஞ்சம் நல்லா இருக்குமில்லே..' என்றான்.

'செய்ப்பா..' என்றார்.

அது பற்றித் திட்டமிடலானார்கள். அதே நேரம் சோனாவும், வாணியும் காரில் வந்திறங்கினார்கள்.

இருவரையும் பார்த்தவுடன் அவன் முகம் மலர்ந்த தென்றால் அத்தை ஹால் வரையிலும் வந்திருப்பதைப் பார்த்து வாணிக்கும் மகிழ்ச்சி.

'ஆமாங்கம்மா.. இப்படிக் கொஞ்சம் வெளிய வந்திங்கன்னா ரொம்ப நல்லது. நான் வேண்ணா உங்களை சவ்விங்ல்ல நம்ம வீட்டுக்கு முன்னால இடத்துல கொஞ்ச நேரம் வாக்கிங் அழைச்சுட்டுப் போறேன்' என்றாள்.

அத்தை 'சோனா குட்டி பாத்தியா.. உங்கப்பா.. உனக்காக ஒரு பெரிய பார்க் கட்டப் போறானாம்' என்றார் அத்தை.

'அப்படியா?' என்பது போல் வாணி சந்திரமோகனைப் பார்க்க அவனும் 'ஆமாம்' என்பது போல் திரும்பப் பார்த்தான். சற்று நேரம் பார்வையைத் திருப்பிக் கொள்ளாமலே ஒருவேளை திருப்பிக் கொள்ள முடியாமலோ அவன் பார்வை அவள் முகத்தில் நிலைத்து மீண்டது.

வாணி விதிர் விதிர்த்துப் போனவள் போல்,

'சோனா, இரு இதெல்லாம் வச்சுட்டு வரேன்..' என்று அறைக்கு ஓடினாள். அவள் பத்து நிமிடங்களுக்குப் பிறகு தயக்கத்துடன் திரும்பி வந்தபோது சந்திரமோகன் வெளியே போயிருந்தான்.

நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

* * *



'வாணி, ஒரு மனுஷன்னு இருந்தா.. வாழ்க்கையில நிம்மதி வேணும். ஆனா, இந்தக் கவிதாகிட்டே அது கிடைக்காது. தினமும் இப்படி செத்துப் பிழைக்கறதைக் காட்டிலும்.. பேசாம டைவர்ஸ் செஞ்சிரலாம்னு பாக்கறேன்..' என்றான் சந்திரமோகன்.

'வேண்டாங்க! அப்புறம் அத்தை உயிரையே விட்டுடுவாங்க..'

'அது.. அதுக்காகத்தான் பாக்கறேன்.. நீ மட்டும்.. நீ மட்டும் சரின்னு சொல்லு.. இங்கயே இருக்கேன்னு சொல்லு.. நான் நிம்மதியா இருந்துடுவேன்.. ப்ளீஸ் வாணி! சொல்லு வாணி!' என்று சந்திரமோகன் சற்றே நெருங்கி நிற்கவும்,

'ப்ளீஸ்! மோகன்!' என்றாள்.

'ஹேய்!..' என்று அவன் மேலும் சற்று நெருங்கினான்.

வாணி திடுக்கிட்டு விழித்தாள் கனவு!

அத்தனையும் கனவு!

வாணி அதிர்ச்சியடைந்தாள்.

'சே..! என்ன இது! முதலாளி ஸ்தானத்தில் இருப்பவர். அதுவும் ஒரு குழந்தைக்குத் தந்தை.. இன்னொரு பெண்ணின் கணவன். அப்படிப்பட்ட ஒருவரிடம் மனசு செல்வதா? ஆனால் பாழும் மனதுக்கு அதுவெல்லாம் தெரியவில்லையே... அவளது ஆழ்மனது சொன்னது. சந்திரமோகன் கவிதாவுடன் மகிழ்ச்சியாக இல்லை. அதற்காக அவள் என்ன செய்ய முடியும்? அது அவன் தேர்ந்தெடுத்துக் கொண்ட வாழ்க்கை.'

அவள் எழுந்தாள்!

தண்ணீர் ஜக்கில் இருந்து தண்ணீரை எடுத்து மடமடவென்று குடித்தாள்.

வழக்கம்போல் சோனா அருகில் இருப்பாளென்று சின்னக் கட்டிலைத் திருப்பிப் பார்த்தாள்.

'ஓ! அவன்தான் அப்பாவிடம் படுத்துக் கொள்கிறேன்' என்று போய் விட்டானே..

முழங்கால்களைக் கட்டிக் கொண்டு அமர்ந்திருந்தாள். வெகு நேரம்.

திடீரென்று ஹாலில் பரபரப்பான நடமாட்டம் தென்படவே மெதுவாக எழுந்து வெளியே வந்தாள்.

சந்திரமோகன் பனியன், லுங்கியில் இருந்தான். செல்போனில் பேசிக் கொண்டிருந்தான்.

'சார்.. அனுப்பவா? நீங்களே வந்தர்றீங்களா? சார் எவ்வளவு சீக்கிரம் வர முடியுமோ.. வாங்க.. சார் எதுவும் மெடிசின்ஸ் தேவையாயிருந்தா..?' என்று இழுத்தான்.

'நான் வாங்கிட்டு வந்தர்றேன்!' என்று டாக்டர் குரல் கேட்க நிம்மதியானான்.

'என்னங்க சார்!' என்றாள்.

'சோனா..வுக்குக் காய்ச்சல்!' என்றான் சந்திரமோகன்.

'என்னது.. காய்ச்சலா?' என்று திகைத்தவள் முகத்தில் அடுத்த நிமிடமே கலவரம் தெரிந்தது. கண்களில் நீர் நிறைந்தது.

'நான்.. நான்.. அவளை இங்கே கொண்டு வந்தர்றேன்' என்று பின்கட்டுப் பகுதிக்கு ஓடாத குறையாகப் போனாள்.

குழந்தையைக் கொண்டு வந்து தங்களது படுக்கை அறையில் உள்ள குழந்தையின் கட்டிலில் படுக்க வைத்து விட்டுத் தொட்டுப் பார்த்தாள்.

அனலாய்க் கொதித்தது.

கண்ணில் நீருடன் சந்திரமோகனைப் பார்த்தாள்.



'ப்ளீஸ்! வாணி அப்செட்டாகாதீங்க.. டாக்டர் வந்துடுவார்!' என்றான்.

டாக்டரும் வந்து விட்டார்.

'பாத்து.. இது ஃப்ளு காய்ச்சல்! மத்தவங்களுக்குத் தொத்தலாம்' என்று வேறு சொல்லிவிட்டுப் போனார்.

ஒரு நிமிடம் கூடக் குழந்தையை விட்டுப் பிரியாமல், காய்ச்சல் தொற்றிக் கொண்டாலும் பரவாயில்லை என்று வாணி கவனித்துக் கொண்டிருந்ததையும், ஏதோ விருந்தாளி போல் வந்து ஒரு நாளைக்கு இரண்டு மூன்று தரம் சற்று நேரம் குழந்தையின் அருகில் அமர்ந்து விட்டுப் போகிற கவிதாவையும் வீடே கவனித்துக் கொண்டிருந்தது.

* * *

சோனா மெதுவாகத் தேறினாள். ஆனால், எப்போதும் காய்ச்சல் வந்தால் அதற்குப் பிறகு ஏற்படுகிற களைப்பு குழந்தையிடம் நன்கு தெரிந்தது. ஒரு வாரம் வரை படுக்கையிலேயே இருந்தாள் சோனா. இப்போதுதான் மெதுவாக ஹாலுக்கு வர ஆரம்பித்தாள்.

தாத்தா, பாட்டி, உமா, சபாபதி எல்லாரும் மாற்றி மாற்றி வந்து பார்த்து விட்டுப் போனார்கள். அந்த ஞாயிற்றுக்கிழமை சுந்தரம்மா வாணியை உற்றுப் பார்த்தார்.

சற்றே இளைத்துப் போயிருந்தாள்.

'சின்னய்யா, சோனாவுக்கு உடம்பு சரியில்லாமப் போனாலும் போச்சு.. வாணி ரொம்ப உடம்பைக் கெடுத்துக்கிச்சு..' என்றார் புகார் சொல்வது போல.

அவனும் அப்போதுதான் கவனித்தான்.

'வாணி! யு லுக் டயர்ட்!' என்றான். 'போங்க.. போய் ரெஸ்ட் எடுங்க' என்றான்.

வாணிக்கும் படுத்துக் கொண்டால் தேவலை போல இருந்தது.

போய்ப் படுக்கையில் படுத்துக் கொண்டாள். பிற்பகல் உணவு நேரம் 'வாணி! சாப்பிட வாம்மா!' என்று எழுப்ப வந்த சுந்தரம்மா படுக்கையில் தன்னை மறந்த அசதியில் உறங்குவதைப் பார்த்து சந்தேகப்பட்டு நெற்றியைத் தொட்டுப் பார்த்தார்.

அனலாய்க் கொதித்தது. சுந்தரம்மா பதறிப் போனார். சந்திரமோகனிடம் போய் பரபரப்பாகச் சொன்னார்.

அவன் முகத்தில் கவலை தெரிந்தது. மறுபடியும் டாக்டர் வைத்தியம் என்று வீடு பரபரப்பானது.

வாணியைப் பார்ப்பதற்காகக் குமாரசாமியே வந்தது தான் பெரிய ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. அவர் வந்ததைப் பார்த்தவுடன் அவள் பதறிக் கொண்டு எழ முயற்சித்தாள்.

'படுத்துக்க.. தாயி! உடம்பு சரியில்லேங்கறப்ப என்ன ஃபார்மாலிட்டி' என்றார்.

வாஞ்சையாய் அவள் தலையைத் தடவிக் கொடுத்தார்.

அம்மாவும் அன்புடன் பார்த்தார். வெகு நேரம் இருந்து விட்டுப் போனார்கள். கடந்த வாரம் முழுவதும் சோனாவுக்காகத் தன் வெளியூர் பயணங்களைத் தள்ளிப் போட்டான் சந்திரமோகன்.

இந்த வாரம் மும்பையிலிருந்து கால் வந்த போது மாலை நேரம் டைனிங் டேபிளில் அமர்ந்தபடி சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

குழந்தைக்கும் ஹார்லிக்ஸ் கொடுத்துக் கொண்டிருந்தார் சுந்தரம்மா. கவிதா சோபாவில் அமர்ந்து ஏதோ புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள்.



'இல்லே.. பெர்னார்ட்.. இந்த வாரமும் நான் இங்கே ஹெல்ப் அப் டாட்டர் இப்பத்தான் கொஞ்சம் சரியாயிட்டு வர்றா. விட்டுட்டு வெளியே கிளம்ப முடியாத சூழ்நிலை. நெக்ஸ்ட் வீக்தான் இனிமே வர முடியும். இந்த மடீங்கை நீயே முடிச்சிடு..' என்றான். அந்தப் பக்கம் அவன் என்ன சொன்னானோ தெரியவில்லை.

'என்னப்பா.. செய்யறது. குடும்பத்தையும் பாக்கணுமில்லே' என்றான்.

கவிதா புத்தகத்தைப் படிப்பது போல் இருந்தாலும் முகத்தில் கடுப்பேறியிருந்தது நன்றாகத் தெரிந்தது.

இதற்கிடையில் இந்த ஒரு வாரத்தை வேறொரு விஷயத்துக்கும் பயன்படுத்திக் கொண்டான். குழந்தைகளுக்காக ஒரு சின்ன பார்க் அமைக்கிற திட்டத்தை விரைவுத் திட்டமாக எடுத்துக் கொண்டு இரண்டு ஏக்கர் நிலம் அதற்கென்று ஒதுக்கினான்.

சறுக்கு மரம், ஊஞ்சல், சிறிய அளவிலான குடை ராட்டினம் எல்லாவற்றையும் வாங்கிப் பொருத்தினார்கள்.

தளம் அமைத்து சுற்றிலும் கார்டன் போல அமைப்பதற்காகத் திட்டமிட்டு என்று அதற்காக ஆட்களை அமர்த்தி தினம் இடையிடையே போய்ப் பார்த்துக் கொண்டான்.

திட்டம் வெகு வேகமாக நிறைவேறுகையில் ஒரு நாள் கவிதா போய்ப் பார்த்து விட்டு வந்தாள். அப்போதிருந்தே அவளுக்கு எரிச்சல் இப்போது வாணியையும் ஆளுக்காள் தாங்குகிறார்கள் என்று உள்ளே கோபம் கனன்று கொண்டிருந்தது.

சோனா வேறு வாணியின் அருகில் மறுபடியும் ஒட்டிக் கொள்ளவே முயற்சித்தாள் என்பதால் வாணி,

'சோனா! இப்பத்தானே உனக்குக் காய்ச்சல் வந்து சரியாயிருக்கு. அதனாலே, ஆன்ட்டிக்கிட்டே வராதே.

அங்கேயே உட்காரு' என்று ஒரு வழியாகச் சமாதானம் செய்தாள்.

இரவு சந்திரமோகனுடைய அறைக்கு வந்தாள்.

'எதுக்கு.. எதுக்கு என்னைக் கல்யாணம் செய்துக் கிட்டீங்க?' என்றாள்.

'எதுக்குக் கல்யாணம் செஞ்சேன்னு உனக்கேத் தெரிஞ்சது தானே' என்றான் வறண்ட குரலில்.

'ஏன்.. இப்படி.. இந்தியாவிலே ஆர்த்தடாக்ஸா இருக் கீங்க.. அப்படி நான் என்ன தப்பு செஞ்சேன். என் பாஸ்ட்டைப் பத்திக் கவலைப்படறதா இருந்தா.. வொய் டிட் யூ மேரி மி?' என்றாள்.

அவன் திரும்பி அவளை நேராகப் பார்த்தான். 'உன் பாஸ்ட்டைப் பத்தி எனக்குக் கவலை இல்லே.. ஆனா.. இப்பவும் உன் ஆட்டிட்யூட்தான்.. எனக்குப் பிடிக்கலே.. நீ மாறுறதுக்கு எவ்வளவோ வாய்ப்புக் குடுத்தாச்சு.. யு ஆர் நாட் சேஞ்சிங்..' என்றான்.

அவள் வெறித்துப் பார்த்தாள்.

'வந்து மூணு மாசம்தான் ஆச்சு. அந்த வாணிப் பொண்ணு. சோனாவுக்குக் காய்ச்சல்ன்னவுடனே அது சரசரன்னு கஞ்ச தண்ணி விடுது. காய்ச்சல் ஒட்டிகிட் டாலும் பரவால்லேன்னு விழுந்து விழுந்து கவனிக்குது. நீ.. ரொம்ப எச்சரிக்கையாய் குழந்தையோட ரூமுக்கு விசிட் பண்ணிட்டு வர்றே..' என்றான் கசப்போடு.

'ஸீ.. இந்த செண்டிமெண்டெல்லாம்.. வேண்டாம். அமெரிக்காவாயிருந்தா குழந்தையை ஐசொலேட் பண்ணித்தான் வைப்பாங்க தெரியுமா? இப்படியெல்லாம் சில்லியா பிஹேவ் பண்ணமாட்டாங்க.'



'சாரி.. கவிதா.. நீ அமெரிக்காவுல படிச்சது.. கொஞ்ச நாள்தான்.. அதுக்காக என்னவோ அமெரிக்கன் சிட்டிசன் மாதிரி அலட்டாதே என்ன?' என்றான்.

'இப்ப.. என்னதான் சொல்றீங்க?'

'இந்தக் கல்ச்சருக்கேற்ப வாழறதுக்குப் பாரு.. என்ன?' என்றான்.

'ஓ.கே!' என்றாள் ஒரு மாதிரியாகச் சிரித்தாள். அவன் அருகில் நெருங்கினாள்.

அவன் சட்டைக் காலரைப் பிடித்து மிகவும் அருகில் இழுத்தாள்.

அவன் ஒரு விதமாகப் பார்த்துக் கொண்டு நின்றான்.

'வொய் டோன்ட் யு அண்டர்ஸ்டாண்ட்.. மி.. அந்த வாணிகிட்டே இல்லாதது நிறைய என்கிட்டே.. இருக்கு..!' என்றாள்.

அவனைச் சட்டென்று சோபாவில் அமர்த்தினாள்.

அவன் திகைத்துப் போய்ப் பார்த்துக் கொண்டிருக்கை யிலே முத்தமழை பொழிந்தாள். ஒரு நிமிடத்திற்குப் பிறகு தான் அவனிடம் எந்தப் பிரதிபலிப்பும் இல்லை என்பதை உணர்ந்து நிமிர்ந்தாள்.

நின்றாள். கண்களில் கோபம் கொப்பளிக்கக் கேட்டாள்.

'என்கிட்டே.. என்ன.. இல்லே?' என்று.

அவன் கசப்புடன் சொன்னான்.

'உன்கிட்டே.. கமிட்மெண்ட்.. இல்லே! என்று.'

அவள் கோபமாய் வெறித்துப் பார்த்தாள்.

'வாழ்க்கைங்கறது உன் கோணத்துல ஃபிஸிகல் அட்ராக்ஷன் மட்டும்தான். ஆனா.. எனக்கு அப்படி

வில்லே. இப்பவும்.. சட்டப்படி நான் உன் கணவன்தான். யு கேன் ஆல்வேஸ்.. டிமாண்ட் எனிதிங்.. ஆனா, அதோட விளைவு எப்படியிருக்கும்னு உனக்கே.. தெரியும்..' என்றான்.

வில்லியைப் போல் சிரித்தாள்.

அவள் அடிக்குரலில் சொன்னாள்.

'உலகத்துலயே உங்களைப் போல் முட்டாள் இருக்க முடியாது- அத்தான். வேணுங்கற பணம் இருக்கு. ரெண்டு பேருகிட்டயும் அழகு இருக்கு.. ஆனா.. அதைப் பயன்படுத்திக்க மட்டும் உங்களுக்குத் தெரியலே. இ பிட்டி- யூ-' என்றாள்.

'தாங்க்ஸ்.. ஃபார் தி காம்ப்ளிமென்ட்' என்றான். அவள் வெறுத்துப் போய் வெளியே போனாள்.

அவள் போகும் வரை முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டிருந்தவன் அவள் வெளியே போனவுடன் தளர்ந்தாற்போல் சரிந்து அமர்ந்து விட்டான்.



## 14

'**வா**ணியம்மா! உங்களைப் பார்க்க யாரோ வந்திருக்காங்க..!' என்றான் வேலைக்காரன்.

வாணி எழுந்து வந்தாள்.

விஸ்வநாத்தும், விசாலாட்சியும் வந்திருந்தார்கள். 'ஆன்ட்டி' என்று ஓடிப் போய்க் கட்டிக் கொண்டாள்.

'என்னடி..! பொண்ணே! ஜுரத்தில் படுத்துண்டிருந்தியாம். தகவல் அனுப்ப வேண்டாமோ?' என்றார்.



வாணி மெல்லிய குரலில் சொன்னாள். 'வீணா உங்களைக் கவலைப்படுத்த வேண்டாம்னு தான்..' என்றாள்.

'நன்னா ஆச்சு.. போ! இதெல்லாம் கவலைப் படுத்தற..' என்று இயல்பாக சோபாவில் அமர்ந்தார்.

'ஆத்துல யாரெல்லாம் இருக்கா?' என்றார்.

வாணி எல்லாரையும் அறிமுகப் படுத்தினாள். சிவகாமி நாச்சியார் சக்கர நாற்காலியில் கீழே வந்து விட்டார்.

கலகலப்பாக சற்று நேரம் கழித்தார்கள் செய்தி சந்திரமோகனுக்குப் போனது.

அவனும் பூங்கா ஏற்பாடுகளில் இருந்தவன் உடனடியாக வந்து விட்டான்.

வெகுவாக உபசரித்தான்.

'வாணி, ஆன்ட்டி!' என்று சோனா மறுபடியும் ஒட்டிக் கொண்டாள்.

'ஆன்ட்டி! நீங்க என்னை கிட்டக்கவே விடல்லை' என்றவள் வாணியின் இரு கன்னங்களிலும் மாறி மாறி முத்தமிட்டாள்.

எல்லாரும் சிரித்தார்கள்.

வாணியின் முகம் சிவந்து போனது. எதேச்சையாகத் திரும்பியவள் சந்திரமோகன் இந்தக் காட்சியை ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டவுடன் மேலும் சிவந்து போனாள். ஒரே நிமிடம்தான் முகபாவத்தை மறைத்துக் கொண்டான்.

கவிதா மட்டும் இருவரையும் ஒருவிதக் குரோதத்துடன் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு கொண்டானோ என்னவோ சந்திரமோகன் காட்டிக் கொள்ளவில்லை.

கவிதா ஒரு காரியம் செய்தாள். எழுந்து வந்து சந்திரமோகனின் அருகில் நெருங்கி அமர்ந்தாள்.

சந்திரமோகன் அதையும் சாதாரணமாகவே எடுத்துக் கொண்டான். ஆனால், கவிதா வேண்டுமென்றே வாணியைப் பார்த்துக் கிண்டலாகச் சிரித்தாள்.

வாணிக்கு பகீரென்றிருந்த போதும் எதையும் காட்டாமல் அமர்ந்து கொண்டாள்.

சுந்தரம்மா டாக்டர் விஸ்வநாதனிடம் 'அப்பா.. வாணி வந்ததுக்கப்புறம்தான் சோனா சந்தோஷமா இருக்குது.. சின்னய்யா.. கூட நிம்மதியா வெளியூர் போறாங்க..' என்றாள்..

'ஆமா.. பின்னே எதுக்குத் கேர் - டேக்கர்னு சம்பளம் குடுத்து ஆள் வைக்கறது?' என்றாள் கவிதா.

விஸ்வநாதன் சந்திரமோகனைப் பார்த்தார். அவன் முகத்தில் வேதனை தெரிந்தது. சிவகாமிநாச்சி சட்டென்று இடையில் புகுந்தார்.

'ஐயா! என் பொண்ணு ஃபாரின்ல படிச்சது.. அங்கத்த நாகரீகம் தெரிந்த அளவுக்கு.. அவளுக்கு இங்கத்த கலாச்சாரம் தெரியாதுங்க.. அவ சொன்னதைத் தப்பா எடுத்துக் காதீங்க. நாங்க வாணியை எங்க வீட்டுப் பொண்ணாத் தான் நினைக்கிறோம். சொல்லப் போனா வாணியைப் போல ஒரு பொண்ணு எனக்கு இல்லையேன்னு.. எனக்கே ஏக்கமா.. இருக்கு..' என்றார்.

அதற்குப் பிறகுதான் சந்திரமோகன் முகம் தெளிவடைந்தது. அதற்குள் விசாலாட்சி இடையில் புகுந்தார்.

'அம்மா.. வாணியும் வசதியான பொண்ணுதான்.. அவளுக்கு ஒரு பெரிய பங்களா இருக்கு.. வாடகை வருது. வேணுங்கற நகைகள் இருக்கு.. ஒரு சில சூழ்நிலைகளால அப்ப எங்களோட தங்க வக்க முடியாம இருந்துச்சு.. இப்ப சூழ்நிலை மாறியிருக்கு. அதான்.. மோகன் தம்பிகிட்டே



சொல்லிட்டுக் கூட்டிட்டுப் போலாம்னு வந்திருக்கோம்' என்றார்.

சந்திரமோகனும் மற்றவர்களும் திடுக்கிட்டுப் போனார்கள் என்றாலும் வாணி ரொம்பவே திடுக்கிட்டுப் போனாள்.

* * *

'நிஜமாத்தாண்டி பெண்ணே. நான் என்ன பொய்யா சொல்றேன்? குமார் சென்னைக்குப் போறாண்டி.. அங்கே பெரிய பிரைவேட் ஆஸ்பத்திரியில வேலை கிடைச்சுடுத்து.. தெரியுமோ? எங்களோட நீ வந்துரு.. நாங்க சட்டப்படி உன்னை தத்தெடுக்கறதுன்னு முடிவு செஞ்சுட்டோம்..' என்றார் விசாலாட்சி.

'ஆன்ட்டி!' என்று நெகிழ்ந்து போனாள்.

'ஆமாடி... பெண்ணே! நீ இங்க வந்ததுக்கப்புறம்.. மனசே.. ஆறலை.. ஒரு சின்னப் பொண்ணை இப்படி ஊரை விட்டுத் துரத்தியடிச்சுட்டேளேன்னு இவாகிட்டே ஒரே சண்டை.. அது மட்டுமில்லே. குமாரண்டை சொன்னேன்.. உன்னால வாணிக்கு ஏதாவும் ஆச்சு.. நான் உங்களோடவே இருக்க மாட்டேன். அது மட்டுமில்லடா.. இப்படி இப்படி என் வயித்துல பொறந்த மிருகம் நடந்துக்க. அதனால அதுக்கு என் பொணத்துக்குக் கொள்ளி போடற அருகதை கூட இல்லேன்னு உயில் எழுதி வச்சுட்டு சாவேன்னேன். பயந்துட்டான்' என்றார்.

விஸ்வநாதன் அதை ஆமோதிப்பது போலே மௌன மாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

'நோக்கு யாருமில்லேன்னு நினைக்கக்காதேடி பொண்ணே நான் இருக்கேன்!' என்று அணைத்துக் கொள்ளவும் வாணி இதுநாள வரை மனதுக்குள் அடக்கி வைத்திருந் உணர்வுகளையெல்லாம் வெளியிட்டு விடுபவள் போ வெடித்து அழுதாள்.

மெல்லத் தலையைத் தடவிக் கொடுத்தபடி விசாலாட்சி நின்று கொண்டிருக்க விஸ்வநாதனும், சந்திரமோகனும் அவர்களுக்குத் தனிமை கொடுத்து வெளியே வந்தார்கள்.

அவர்களது வீட்டின் விருந்தினர் அறையில் அவர்கள் தங்கியிருந்தார்கள். விஸ்வநாதன் முகத்தை சந்திரமோகன் கவலையுடன் பார்த்தான்.

'சார்! இப்பத்தான்.. சோனா கொஞ்சம் தெம்பா யிருக்கா. உறவுக்காரங்க எல்லாம் வரப் போக ஆரம்பித் திருக்காங்க. லேகாமி அத்தை கூட தேறிட்டாங்க.. ஆல் பிகாஸ் ஆஃப் வாணி சார். வீ நீட்.. வாணி! ப்ளீஸ்.. கூட்டிட்டுப் போயிராதீங்க..' என்றான்.

அவர் பெருமூச்சு விட்டார். 'ஆமப்பா.. நானே என் பெண்ணு அவ மேலே இப்படிப் பிரியம் வச்சிருப்பான்னு நினைக்கலே. பாக்கறேன்.. ஐ வில் ட்ரை' என்றார்.

அதற்குள் 'என்னா.. இங்க வாங்கோ.. இவ.. இந்த வாணிப் பொண்ணு என்ன சொல்றா.. பாருங்கோ' என்றார். ஆற்றாமை நிறைந்த அந்தக் குரலைக் கேட்ட வுடன் இருக்கும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண் டார்கள்.

'என்ன சொல்றா.. பாத்தேளா? வரமாட்டாளாம்.. இது நியாயமா... சொல்லுங்கோ? என்றார்.

'வர மாட்டேன்னு சொல்லலே.. ஆன்ட்டி. நீங்களே பாருங்க.. இந்த சோனா எம்மேலே எவ்வளவு பிரியமா இருக்கா. இந்தக் குழந்தையை விட்டுட்டு எப்படி வர்றது. எங்கேப் போயிடுமில்லே... ஒரு ரெண்டு வருஷம்.. இருந்துட்டு வந்தர்றேன். அப்பப்ப லீவு கிடைக்கும்போது வர்றேன்..' என்றாள்.

'ரெண்டு வருஷமா, நோக்கு கல்யாணம் கார்த்தின்னு பார்க்க வேண்டாமோ?' என்றார்.



வாணி உறுதியான முகபாவத்துடன் விசாலாட்சியைப் பார்த்தாள்.

'ஆன்ட்டி... நான் கல்யாணமே செஞ்சுக்கறதில்லைன்னு முடிவு பண்ணிட்டேன்..' என்றாள்.

'என்னது!' என்று அதிர்ச்சியானார்.

'ஆமா.. ஆன்ட்டி! சரியோ.. தப்போ.. நானும் சோனாவை ரொம்ப நேசிக்க ஆரம்பிச்சுட்டேன். இந்தக் குழந்தைக்கு என்னோட தேவை எதுவரை இருக்கோ.. அதுவரைக்கும் நான் அங்கே இருக்கேன். அப்புறம் பார்க்கலாம்' என்றாள்.

விஸ்வநாதன் சந்திரமோகனைப் பார்த்தார். அவனும் வாயடைத்துப் போய்த்தான் நின்று கொண்டிருந்தான்.

* * *

'வாணி!' என்ற சந்திரமோகனின் குரல் கேட்டு அவள் அவசர அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

அவளது அறைக்கே வந்தான்.

வீடே வெறிச்சோடியிருந்தது. வாட்ச்மேன்தான் முன்னாலே இருந்தான்.

'என்ன ஆச்சு! எல்லாரும் எங்கே?' என்றான்.

'எல்லாரும் ஊர்க்கோவில்ல விழான்னு போயிருக் காங்க.. மொத்த வீடும்' என்றாள் புன்னகையுடன்.

'நீ போகலையா?' என்றான்.

'இல்லை..' என்றாள்.

விஸ்வநாதனும், விசாலாட்சியும் சற்றே ஏமாற்றத்துடன் புறப்பட்டுப் போய் இரண்டு நாட்கள் ஆகியிருந்தன.

'வாணி!' என்றான் ஒருவிதமான குழைந்த குரலில்.

'ம்...!' என்றாள் வாணி.

அவள் அருகில் வந்து நின்றாள்.

'தாங்க்ஸ் வாணி! சோனா கூடவே இருந்துக்கறேன்னு சொன்னியே.. அதுக்கு ரொம்ப ரொம்பத் தாங்க்ஸ்..!' என்றான்.

'டோன்ட் மென்ஷன் ப்ளீஸ்!' என்றாள்.

அதற்கு மேல் என்ன பேசுவது என்று தெரியாமல் நின்றார்கள்.

அவனே மறுபடியும் பேசினான்.

'வாணி! கல்யாணமே செஞ்சுக்கறதில்லேன்னு முடிவா.. என்ன?' என்றான்.

அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள். தன்னை மீறிய துணிச்சலுடன் சொன்னாள்.

'நான்.. இந்த வீட்டுக்கே வந்திருக்கக்கூடாது. இந்த வீடு.. என்னைத் திருமண வாழ்க்கைக்கு லாயக்கில்லாம ஆக்கிடுச்சு..' என்றாள்.

சந்திரமோகன் ஏதோ வசியம் செய்யப்பட்டவன் போல பார்த்தான். ஆழ்ந்த கரகரப்பான குரலில்.

'வாட் டு யு மீன் பை தட்?' என்றான்.

அவள் தலையைக் குனிந்து கொண்டாள். 'தெரியலே!' என்றாள்.

'எனக்குத் தெரிஞ்சுருச்சு' என்றான். என்ன நடக்கிறதென்று புரிந்து கொள்வதற்கு முன்னால் அவள் அவன் கைப்பிடியில் இருந்தாள். சந்திரமோகன் விதவிதமாகத் தன் உணர்வுகளை வெளிப்படுத்துவதை ஒரு வித திகைப்புடன் கவனித்தாள். தானும் பதில் கொடுப்பதை அறிந்து திடுக்கிட்டுப் போனாள். மிகவும் கஷ்டப்பட்டு விலகிக் கொண்டாள்.



'மோகன்.. ப்ளீஸ்!' என்றாள்.

தலையைக் கோதிக் கொண்ட அவன் சிரித்தான்.

அப்படியொரு உயிரோட்டமான சிரிப்பை இதுவரை அவனிடம் பார்த்திராத அவள் மெய் மறந்து நின்றாள்.

பிறகு திடுக்கிட்டுப் போய் மீட்டுக் கொண்டாள்.

'மோகன்.. இது சரியில்லே!' என்றாள்.

அவன் ஒரு பெருமூச்சுவிட்டான் 'உட்கார்' என்பது போல் சோபாவைக் காட்டினான்.

அவள் கவனமாக எதிரில் அமர்ந்தாள். அவனும் அமர்ந்தான்.

'வாணி! சிவகாமி அத்தைக்காக நான் கவிதாவைக் கல்யாணம் செய்ய வேண்டியதாய் போச்சு.. இட் நெவர் வொர்க்ட்... நான் டைவர்ஸ் அப்ளை பண்றேன்.... அதுக்கப்புறம்..' என்பதற்குள் இடைமறித்து...

'அதெல்லாம்.. நடக்காது.. மோகன்.. நடக்கக் கூடாது. தப்போ ரைட்டோ.. அவங்க உங்க மனைவி. ஒரு குழந்தையும் ஆனதுக்கப்புறம்... 'இது ரொம்பத் தப்பு.. மோகன்' என்றாள்.

அவன் மறுபடியும் ஏதோ விளக்கம் சொல்ல வந்தவன் நிறுத்திக் கொண்டான்.

'நான் உங்க வாழ்க்கையிலே வந்திருக்கவே.. வேண்டாம்.. இல்லே!' என்றாள் வாணி சோகமாக.

'நானும் அதையே சொல்லலாம்!' என்றான் அவன் முணுமுணுப்பாக. விபத்து.. பெரிய விபத்து..' என்றான் மறுபடியும்.

'என் வாழ்க்கையில நேர்ந்த சந்தோஷமான விபத்துன்னு நான் அதை எடுத்துக்கறேன்' என்றாள்.

'நீங்க டைவர்ஸுக்கு போகக் கூடாது... போகவும் முடியாது.. சோனாவை நினைச்சுப் பாருங்க... என்னைப் பத்திக் கவலைப்படாதீங்க.. நான் இந்த வீட்டுல ஒரே கூரைக்கு கீழே.. உங்களைப் பார்த்துட்டே... இருப்பேன், அதுக்கு அனுமதியிருந்துச்சுன்னா போதும்..' என்றாள்.

'நோ.. உன்னைப் பக்கத்துல வச்சுகிட்டு.. என்னால.. முடியாது..'

'அப்படிப் பிடிவாதம் பிடிச்சா.. நான் வீட்டை விட்டுப் போயிடுவேன். உண்ட வீட்டுக்கு ரெண்டகம் நினைக்கிற ஜாதி நான் இல்லே..' என்றாள்.

'உனக்குத் தெரியாது வாணி! நான் கவிதாவை எந்தச் சூழ்நிலையில் கல்யாணம் செஞ்சேன்னு..' என்று மேலும் சொல்ல ஆரம்பிக்கும்போதே அவள் கையை உயர்த்தினாள்.

'ப்ளீஸ்.. மோகன்! நாம அதை இப்ப டிஸ்கஸ் பண்ண வேண்டாம்.. இது ரெண்டு குடும்பம் சார்ந்த பிரச்சினை. இதுல கை வக்கிறது தேன் கூட்டைக் கலைக்கற மாதிரி. நான் என்னைக்கும் தனியாவே கஷ்டங்களைச் சுமந்தவ. இப்பவும் இருந்துக்குவேன்.. உங்க நிழல்ல இருக்கேன் றதே.. போதும்' எழுந்தாள்.

அவன் உருகிப் போனவன் போல் பார்த்துக் கொண்டு பார்த்திருந்தான். அவள் ஒரு முறை அவனை நிமிர்ந்து பார்த்துவிட்டுத் தலையைக் குனிந்து கொண்டாள்.

'கொஞ்ச நாள் கஷ்டமா.. இருக்கும்.. அப்புறம்.. றம் பழகிப் போயிடும்' என்றாள் வாணி.

அவன் ஒரு விதக் கையாலாகாத் தனத்துடன் சோபாவின் கைப்பிடியை ஓங்கிக் குத்தினான். பிறகு எழுந்தான். படியும் அவன் எதிர்பாராதவிதமான முரட்டுத்



தனத்துடன் அருகில் இழுத்தான். அவளால் தடுக்க முடியாத அளவுக்குத் தன் உணர்வுகளை வெளிப்படுத்தினான்.. பிறகு மெது மெதுவாகத் தன் நிலைக்கு வந்தான். விடுவித்தான்.

அவள் சுவற்றில் சாய்ந்து கொண்டு நடுங்கிப் போய் நின்றாள்.

'மோகன்.. ப்ளீஸ்! உண்மையான அன்பு ஃபிஸிகல் அட்ராக்ஷனை ஜெயிக்கும். ஒருத்தருக்காக ஒருத்தர் விலகி நிற்கறது கூட அன்புதான்' என்றாள் மெல்லிய குரலில்.

'தெரியும்டி.. இப்ப எதுக்காக இதெல்லாம் சொல்றேன்னு தெரியும்.. இனி நானா உன்னைத் தொட மாட்டேன் போதுமா? நிம்மதியா இரு..!' என்று உறுமி விட்டுப் போனான்.

வாணி திகைத்துப் போய் நின்றாள்.

வேகமாகப் படியேறிய போதுதான் பார்த்தான். கவிதா நிற்பதைப் பார்த்தான். அவள் வழக்கமான குரோதப் பார்வையுடன் கேட்டாள்.

'அவ ரூமில உங்களுக்கு என்ன வேலை?' அவன் நின்றான். அவளைக் கோபமாகப் பார்த்தான்.

'ம்.. அறுவடை பண்ணிட்டு வர்றேன்' என்றான் வெண்டலாக. நிற்காமல் தனது அறை நோக்கி நடந்தான்.

அவள் பின்னாலேயே அவன் அறை நோக்கி வந்தாள்.

'எனக்கும்.. எனக்கும்.. ஃபிரண்ட்ஸ் நிறைய பேர்.. இருக்காங்க.. தெரியுமா? நானும் டேலர்ட் பண்ணனும்னு நெனச்சா.. பண்ணலாம். ஸெமெண்ட் இன்னைக்குத்தான் டெல்லிக்கு வந்திருக்கான்...' என்றாள் வெறி பிடித்தவள் போல்,

'தொலை.. எங்கயோ.. தொலை... அன்ட் லிவ் மி அலோன்' என்று கத்தியவன் வேகமாக கார் சாவியைச் சுழற்றியபடி இறங்கிப் போய்விட்டான்.

கவிதாவின் குரலைக் கேட்ட வாணி அச்சமுற்றவளாய் அறையில் முடங்கிக் கொண்டாள்.



## 15

'ஹலோ... மோகன்' என்ற குரல் கேட்டு சந்திர மோகன் ஒரு பெருமூச்சு விட்டான்.

'சொல்லு வாணி!'

விஸ்வநாதன் வாணிக்கென்று ஒரு செல்போன் வாங்கிக் கொடுத்து விட்டுப் போயிருந்தார். அதிலிருந்துதான் இப்போது வாணி பேசினாள்.

'இப்போ.. மணி பன்னிரெண்டாச்சு.. எங்க இருக்கீங்க?'

'கவலைப்படாதே! வாணி! பத்திரமாத்தான் இருக்கேன்!'

'உங்களுக்கும், கவிதா மேடத்துக்கும் சண்டை போல ருக்கே!'

அவன் உச்சுக் கொட்டினான்.

'வழக்கமா நடக்கறதுதானே?'

'ஓ..!'

'ஆமா.. வழக்கம்போல சந்தேகப்பட்டா.. ஆனா.. ன இந்தத் தடவை அந்த சந்தேகத்துல உண்மை க்கு..' என்று சிரித்தான்.



ரசித்துச் சிரித்த மாதிரித் தோன்றியது.

வாணி சற்றே கோபத்துடன் சொன்னாள்.

'நீங்க... இந்த சூழ்நிலையை ரசிக்கற மாதிரித் தெரியுது?'

'ஆமா.. நடந்து போனதை ரசிச்சுகிட்டுத்தான் வீட்டுக்கு வரவே பிடிக்காம உட்கார்ந்துகிட்டிருக்கேன்... இங்கே.. நம்ம செல்ரன்ஸ் பார்க்கில்..' என்றான்.

'மோகன்! கவிதா மேடம் சந்தேகப் படறாங்கன்னு சொல்றீங்களே.. அதுக்குப் பின்னாடி பிரியம் இருக்கு தெரியுமா!' என்றாள் வாணி.

'போச்சுரா! ரெகமன்டேஷனா?' என்றான் மறுபடியும் சிரித்தான்.

'ப்ளீஸ்! மோகன்!' என்றாள்.

'ஐயோ.. பொண்ணே! அது வெறும் ஃபிஸிகல் அட்ராக்ஷன் தான்.. நீ குழந்தை.. அதெல்லாம் உனக்குப் புரியாது..' என்றான் அதே கேலிக் குரலில்.

'ஸ்டாப் டீஸிங் மிஸ்டர். சந்திரமோகன்!' என்றாள் கோபமாக.

அவன் மறுபடியும் அலட்டிக் கொள்ளாமல் சிரித்தான்.

'இத பார்றா! கோபம் கூட வருது!' என்றான்.

'ப்ளீஸ்! மோகன்..! நிலைமையைப் புரிஞ்சுக்குங்க..' என்றாள் கெஞ்சலாக..

அவன் சிரிப்பை நிறுத்திவிட்டு 'சொல்லு!'

'அவங்களும் உங்களை நேசிக்கறாங்க.. அதைத்தான் அப்படி வெளிப்படுத்தறாங்க.. இந்த வீட்லயும் ஒரு தப்பு நடக்குது..' என்றாள்.

'என்ன தப்பு?' என்றான் குழைந்த குரலில்.

'அவங்க சொகுசா வளர்ந்தவங்க... அவங்களுக்கு எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுச் செய்யற பழக்கம் தெரியலே. ஆனா, பெரியம்மா முதற்கொண்டு சுந்தரம்மா வரைக்கும் அவங்களை ஏதோ தப்பான எலிமென்ட்டாவே பாக்கறீங்க.. ரொம்ப சுதந்திரம் கொடுத்த அப்பா.. கட்டுப் பெட்டியான அம்மா ரெண்டு பேருக்கும் நடுவே ஒரு கான்ஃப்ளிக்ட்லயே வளர்ந்திருக்காங்க... அதனால அவங்க ஃப்ரஸ்ட்ரேட்.. ஆகறாங்க.. அவங்களுக்குன்னு நம்பிக்கையானவங்க இங்க யாருமே இல்லே!' என்றாள்.

அவன் மௌனமாகக் கேட்க ஆரம்பித்தான்.

'மோகன்! கேக்கறீங்களா?'

'கேக்கறேன்.. சொல்லு...' என்றான்.

'உங்க குழந்தையை சுமந்திருக்காங்க... இப்ப ஒரு வேளை அது வெறும் ஃபிஸிகல் அட்ராக்ஷனாவே இருந்தாக் கூட நீங்க நம்பிக்கையை ஏற்படுத்தினா.. அவங்க மாறலாம்... அதுக்கு முயற்சிக்கறது.. உங்க கடமை..!' என்றாள்.

'...!'

'மோகன்..!'

அவன் ஒரு பெருமூச்சுடன் சொன்னான். 'நீ சொல்றதும் ஒரு பாயின்ட்தான்.. ஆனா.. இப்ப.. இருக்கிற நிலைமையி லாவது டைவர்ஸ்ன்னு போனா நாம சேர்றதுக்கு ஒரு வாய்ப்பாவது இருக்கு.. நீ சொல்ற மாதிரியெல்லாம் டந்தா.. நமக்கு வாய்ப்பே இல்லாமப் போயிடும் ரியுமா?' என்றான்.

அவள் குரலில் கோபம் கொப்பளிக்க ஆனால் மெல்லிய ரலில்.

'கேவலம்.. ஒரு சுயநல வாதியையா நான் நேசித்தேன்?' ன்றாள்.



அவன் பொட்டில் அறையப்பட்டாற்போல் உணர்கிற கணத்தில் அவள் செல்போனை ஆஃப் செய்தாள்.

ஒரு நிமிடம் எதுவும் நிகழவில்லை. பிறகு ஒலித்தது. எடுத்தாள்.

இப்போது குரல் இறுகியிருந்தது. 'சொல்லு.. இப்ப நான் என்ன செய்யணும்' என்றான்.

அவள் நெகிழ்ந்து போனாள். குரல் குழையச் சொன்னாள்.

'நாளையிலிருந்து நீங்க ஒரு அன்டர்ஸ்டான்டிங்கோட அவங்ககிட்டே.. நடந்துக்கணும்' என்றாள்.

'சரி..! உன் இஷ்டம்..! ஆனா, ஒண்ணு நிச்சயம்.. வாணி, கவிதா ரொம்ப லக்கி.. அவளுக்காக வாதாட இப்படி ஒருத்தி கிடைச்சிருக்கே.. ஆனா.. எனக்காக வாதாட இந்த உலகத்துல யாருமே.. இல்லே!' என்றான். அந்தக் கணத்தில் அவன் குரலில் ஒலித்த ஏக்கம் அவள் இதயத்தில் ஆழத்தில் சென்று தாக்கியது.

'ப்ளீஸ்!' என்றாள் கலங்கிய குரலில்.

ஒரு நிமிட அமைதியில் அவன் தன்னை நிதானப் படுத்திக் கொள்வது தெரிந்தது. பிறகு சிரித்தான்.

'நீ பேசாம லா படிச்சிருக்கலாம் இல்லே!' என்றான்.

அவள் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

அவன் மேலும் கேட்டான்.

'சரி.. இப்படியெல்லாம்.. நான் நடந்துகிட்டா.. எனக்கு என்ன தருவே?' என்றான்.

'உங்களுக்காக நான் எதையும் தருவேனே' என்று அவள் மனது ஓலமிட்டது. ஆனால், இப்போதைக்கு.

'மனசுல வச்சுப் பூஜை செய்வேன்!' என்றாள்.

'மனசுல.. வச்சு! அது யாருக்கு வேணும்!' என்றான். கசப்பாகச் சிரித்தான்.

'ப்ளீஸ்... மோகன்!' என்றாள்.

'சரி.. இப்ப.. சொல்றேன்.. கேட்டுக்க... நீதான் என் உண்மையான மனைவி.. தெரியுதா? உலகத்துக்குத் தெரியற அளவுக்கு சேர்ந்தாலும்.. சரி.. சேராட்டாலும் சரி.. என்ன?' என்றான்.

'சரி.. !' என்றாள் வாணி. அப்புறம்..?' என்றாள்.

'இப்படியெல்லாம் நமக்குள்ளே நடந்ததுங்கறதையே.. மறந்துடணும்' என்றாள்.

'நடக்காத விஷயமெல்லாம் சொல்றே.. மறக்க மாட்டேன் வாணி! ஆனா, அதையெல்லாம் உனக்கு ஞாபகப் படுத்தி உன்னைத் தொல்லை செய்ய மாட்டேன்...' என்றான்.

'ப்ளீஸ்! வீட்டுக்கு வாங்க, வெளியில பனி கொட்டுது' என்றாள். ஆஃப் செய்தாள்.

சந்திரமோகன் சிந்தனையில் ஆழ்ந்தவனாகவே வந்தான்.

'வாணி.. சொல்வதும் சரியே! கவிதாவுக்கும் ஒரு வாய்ப்புக் கொடுக்கத்தான் வேண்டுமோ?' என்று.

அதே சமயம் வாணிக்கும் அவனைப் பற்றி ஒரு குறை எழுந்தது.

'என்ன இருந்தாலும்.. தொட்டுத் தாலி கட்டின.. மனைவி, தன்னுடைய குழந்தையை சுமந்தவள்..' என்ற நினைவே இல்லாமல் பேசுகிறாரே. ஆனால் டாக்டர் குமாரைப் போல பலவீனமானவர் போலவும் தெரியவில்லையே! எல்லோரும் அவரை அப்படிப் புகழ்கிறார்களே!



குழப்பம் மிஞ்சியது. தலை வலிக்கத் தொடங்கியது. அன்று மாலையில் ஏற்பட்ட மகிழ்ச்சியெல்லாம் சட்டென்று வடிந்தாற்போல் ஆகிவிட்டது.

* * *

தனிப்பட்ட உணர்வுகளைக் காட்டிலும் குடும்பம் முக்கியம் என்று ஒரு சின்னப்பெண் எடுத்துச் சொல்லி விட்டாளே? என்று எண்ணிக் கொண்டான் சந்திர மோகன். ஆனால் என்ன அப்படிப்பட்ட வார்த்தைகள் தன் மனம் கவர்ந்தவளிடம் கேட்க நேர்ந்ததுதான் தன் துரதிர்ஷ்டம் என்று. கசப்புடன் சிரித்துக் கொண்டான்.

திருமணம்! அதிலும் காதல் கிஞ்சித்தும் இல்லாத ஏற்பாடு செய்யப்பட்ட திருமணங்கள் இல்லையா.. என்ன உலகத்தில்! அப்படித்தான்.. இனிமேல் நினைத்துக் கொள்ள வேண்டும்.

'எல்லாரையும் காட்டிலும் சோனா முக்கியம் என்ற எண்ணம் அவனுக்கும் வலுப்பெற்றது.'

நிதானமான நடையில் அவன் வீட்டை நோக்கி வருவதைப் பார்த்தவுடன்தான் வாணிக்கு மனது நிம்மதியானது.

சுந்தரம்மாவும், அவளும் வீட்டு ஹாலில் அமர்ந்திருந்தார்கள். சோனா வாணியின் மடியில் உறங்கிக் கொண்டிருந்தாள்.

அவன் வாணியைப் பார்க்காமல் சுந்தரம்மாவைப் பார்த்து.

'ஏன்.. தூங்கலையா?' என்றான்.

'இல்லங்கய்யா.. நீங்க ஏதோ கோபமா வெளியே போனீங்கன்னு வாணிம்மா சொன்னாப்ல.. அதான்' என்றார்.

'நான் என்ன சின்னக் குழந்தையா.. என்ன? வர மாட்டேனா.. போங்க.. போய்த் தூங்குங்க..' என்றான்.

திரும்பி வாணியைப் பார்த்தான் 'சோனாவை உங்க ரூம்லயே ஷ்டே பண்ண வச்சாரீங்களா?' என்றான்.

'சரிங்க.. சார்!' என்றாள்.

அவள் தனது வழக்கமான நடையுடன் பின் கட்டுக்குப் போவதை அவன் நின்று பார்த்தான்.

பழைய வாழ்க்கையிலிருந்து விடுபட்டு வந்து புதிய வாழ்க்கை வாழ அவனுக்கு ஒரு வாய்ப்பே கொடுக்காமல் மீண்டும் அந்தப் பழைய உலகத்துக்குத் தானே தள்ள நேர்ந்த கொடுமையை நினைத்து அவன் நெஞ்சமே வெடிக்கிறாற் போல இருந்தது.

குனிந்து சோனாவைப் பார்த்தான்.

அள்ளித் தோளில் போட்டுக் கொண்டு அறைக்குப் போனான்.

அறைக் கதவைச் சாத்தினான். மனக் கதவைச் சாத்து வதற்கான போராட்டத்தில் இறங்கினான்.

* * *

சந்திரமோகன் ஒரு விதமான விட்டேற்றியான மன நிலையில் இருந்தான்.

என்ன இல்லை தன்னிடம்? பணம், இளமை, உடல் வலிமை.. ஆனால் என்ன இருக்கிறது தன்னிடம்? பிடித்த மாதிரி ஒரு வாழ்க்கை வாழ முடியாத அளவுக்குப் பாசம், குடும்பம்.. குழந்தை என்ற கட்டுகள் வெறுப்பாக இருந்தது.

'அவளுக்கென்ன தூங்கி விட்டாள்
அகப்பட்டவன் நானல்லவா'

என்று பாட்டுத்தான் மனதில் ஒலித்தது.

மெதுவாகத் திரும்பி கவிதாவின் அறையைப் பார்த்தான் சாத்தியிருந்தது.



பல நாட்களுக்குப் பிறகு, ஏன் பல ஆண்டுகளுக்குப் பிறகு தானாக அவள் அறை நோக்கிச் சென்றான்.

கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே போனான்.

கவிதா வழக்கம் போல் கை கால்களை பரப்பிக் கொண்டு ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள். மதுவாடை வேறு அடித்தது.

'நிம்மதியாத் தூங்கிடறாப்பா!' என்ற எண்ணம் தோன் றியது. ஒருவேளை வாணி சொன்னது சரிதானோ..! தனது உதாசீனத்தைத் தாங்க முடியாமல்தான்.. அவள் தன்னை மறக்க நினைக்கிறாளோ..

உண்மைதான்.. எல்லாவற்றிற்கும் இரண்டு பக்கம் இருக்கிறது.

சில மாதிரிப் பெண்களோடு வாழ்வது சுகம். சில மாதிரிப் பெண்களோடு வாழ்வது சுமை. என்றெல்லாம் நண்பர்கள் பேசிக் கொள்ளக் கேட்டிருக்கிறான்.

'இவள் இந்த கவிதா.. தன் வாழ்நாள் முழுக்க சுமக்க வேண்டிய சுமைதான்!' என்று எண்ணிக் கொண்டான்.


திரும்ப அறைக்கு வந்தான்.

'நாளைக்கு காலையில் கவிதாவிடம் பேச வேண்டும். எல்லாவற்றையும் தெளிவாகப் பேசி விட வேண்டும். இனிமேலாவது நிலையைச் சீர்படுத்த முடியுமாவென்று பார்க்க வேண்டும்' என்று எண்ணிக் கொண்டான். ஆனால் அவனுக்கு ஒரு விஷயம் தெரிந்திருக்கவில்லை.

சற்று நேரத்திற்கு முன் வரை சிவகாமி நாச்சியாரின் அறையில் போய் கவிதா வேண்டுமட்டும் ஆர்ப்பாட்டம் செய்த அவரை எவ்வளவு நோகடிக்கச் செய்ய முடியுமோ அவ்வளவு செய்து விட்டுத்தான் இப்போது உறங்கிக் கொண்டிருக்கிறாள் என்பதை சுந்தரம்மாவும், வாணியும்

அவனுக்குச் சொல்லவில்லை என்பதை அவன் அறியவில்லை.

அறிந்தாலும் அவன் முயற்சியைக் கைவிடாத விக்கிரமாதித்தன் போல் தன் மனைவியாகிய வேதாளத்தை தோளில் தூக்கிக் கொள்ளத்தான் முடிவெடுத்திருப்பான்.



## 16

குழப்பமான கனவுகள், பலவிதமான சிந்தனைகள் எல்லாமும் சேர்ந்து உறக்கம் ஆழ்ந்த உறக்கமாக அமையாமல் போனது. அதனாலோ என்னவோ அதிகாலையில் உறங்கி விட்டான்.

எழுந்திருக்கும் போதே மணி எட்டாகி விட்டது. லேசாகப் புரண்டு படுத்தான். கை அருகில் இருந்த மேஜை மேல் பொத்தென்று விழுந்தது.

ஏதோ தட்டுப்பட்ட மாதிரி இருந்தது. விழித்துப் பார்த்தான்.

ஒரு கவர் வைக்கப்பட்டு அதன் மேல் பேப்பர் வெய்ட் வைக்கப்பட்டிருந்தது. எழுந்தான். கையில் எடுத்துப் பார்த்தான்.

கவிதாவின் கையெழுத்து.

'போக்கரா, இதுவரை நேரில்தான் சண்டை போட்டுக் கொண்டிருந்தாள். இப்போது கடிதத்திலும் போர் தொடுக்கப் போகிறாளா.. என்று கசப்பாகச் சிரித்துக் கொண்டு மேஜையின் மேல் வைத்துவிட்டு எழுந்தான்.



முகம் கழுவித் துடைத்துக் கொண்டு வந்து கையில் எடுத்தான். சிரிப்பாக வந்தது. 'அடுத்த அறையில் இருக்கிற கணவனுக்கு மனைவி எழுதுகிற கடிதம். எப்படிப்பட்ட உறவுடா.. இது!' என்று நினைத்துக் கொண்டே திறந்து பார்த்துப் படிக்க ஆரம்பித்தான்.

முகத்தில் சிந்தனை முடிச்சுக்கள் விழுந்தன. யோசித்தான்.

'ஹேமெண்டைப் பார்க்க டில்லிக்குப் போகிறேன். கொஞ்ச நாள் எனக்கு விடுதலை வேண்டும்' என்று எழுதியிருந்தாள்.

அவன் முகத்தில் எப்போதும் அவளது நண்பர்கள் குறித்து எழுகிற இகழ்ச்சிப் புன்னகை விரிந்தது.

'ஹேமெண்ட்... இவன் எத்தனையாவது நண்பனோ? இருந்திருந்து அத்தைக்கென்று மகள் இப்படி வந்து வாய்த்தாளே!' என்று எண்ணிக் கொண்டான்.

அத்தையின் அறைக்குப் போனான். கடிதத்தைக் காண்பித்தான். அத்தை மௌனமானார். அவர் கண்களில் சொல்ல வொண்ணாத வேதனை தெரிந்தது.

'இந்தக் குழந்தை மட்டும் இல்லாவிட்டால் நானே அவளை வெட்டிச் சாய்த்திருப்பேன் மோகன்.. எனக்கு என்ன செய்யறதுன்னே தெரியலையே!' என்று அரற்றினார்.

'சரி.. விடுங்க.. யாரையோ பார்க்கறதுக்கு டெல்லி போகணும்னா நானே அனுப்பி வச்சேன்னு சொல்றேன் உங்க மகளுக்காக நான் சொன்ன எத்தனையோ பொய்கள்லே இதுவும் ஒண்ணா இருக்கட்டும்' என்றான்.

'மாப்பிளே! இந்த பாவம் என்னைச் சும்மா விடாது..' என்றார் சிவகாமி நாச்சி.

அவன் இதை எத்தனை முறை பேசுவது என்ற சலிப்புடன் கேட்டுக் கொண்டு நின்றான்.

'இப்படி ஒரு பொண்ணை உன் தலையில கட்டி உன்னோட வாழ்க்கையைக் கெடுத்துட்டேன்' என்று புலம்பினார்.

'அத்தே.. போனதை விடுங்க.. ஏதோ அவளுக்கும் சேன்ஜ் வேணுமில்லே. கொஞ்ச நாள் ஊரைச் சுத்திட்டு வீடு வந்து சேரட்டும்' என்றான். புன்னகைத்தான். போய்விட்டான்.

* * *

**வா**ணி குழந்தையை அழைத்துக்கொண்டு பள்ளிக்குப் போயிருந்தாள்.

அந்த நேரம் அவன் கிளம்பி விட்டான். கிட்டத்தட்ட ஒரு வாரம் அவள் அவன் கண்ணில் முழுமையாகப் படவேயில்லை.

அவளும் அதை எதிர்பார்க்கிற மனநிலையில் இருந்ததால் வருத்தப்பட்டுக் கொள்ளவில்லை. இதற்கிடையில் குழந்தைகள் பூங்கா ஜரூராகத் தயாராகிக் கொண்டிருந்தது.

அக்கம் பக்கத்து ஊர்க்காரர்களுக்கெல்லாம் ஒரு மகிழ்ச்சி. மாலை நேரங்களில் குழந்தைகள் வந்து விளையாடுவதை வாணியும், சோனாவும் போய்ப் பார்ப்பார்கள்.

ஒரு வாரம் கழித்து கவிதா வந்து சேர்ந்தாள்.

முகமே தெளிவாக இருந்தது. 'பார் உன்னைப் பழி வாங்கி விட்டேன்!' என்று கிண்டலாகப் பார்த்து நடமாடிக் கொண்டிருந்தாள்.

அவனும் அவள் வந்த இரண்டு நாட்களுக்குள்ளாக கோபம் எதையும் காட்டவில்லை.

'என்ன கவிதா! உன் ஃப்ரெண்ட்ஸையெல்லாம் பாத்தாச்சா.. என்ஜாய் பண்ணினியா..' என்று மேலோட்டமாக



விசாரித்து விட்டுத் தன் வேலையைப் பார்க்க ஆரம்பித்தான்.

அன்றைக்கு சந்திரமோகன் பூங்காவில் இருக்கிறான் எனத் தெரிந்ததாலோ என்னவோ வாணி போகவில்லை. சுந்தரம்மாவுடன் சோனாவை அனுப்பி வைத்தாள்.

மற்ற வேலையாட்களிடம் கொஞ்ச நேரம் பொறுப்பை விட்டு விட்டு சுந்தரம்மா விச்ராந்தியாக அமர்ந்திருந்த போது சந்திரமோகன் வந்தான்.

அந்த சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்தான். அருகில் அவன் அமர்வதைப் பார்த்து சுந்தரம்மா பதறிக் கொண்டு எழ முயன்றார்.

'உட்காருங்க... சுந்தரம்மா.. நீங்க பெரியவங்கதானே!' என்றான்.

அவரும் தயக்கத்துடன் அமர்ந்தார்.

'என்ன சுந்தரம்மா.. வாணி கூட ரொம்ப ஃப்ரெண்ட்லா யிட்டீங்க போலருக்கு..'

'வாணிம்மா கிட்டே... யாருமே எதிரியா இருக்க முடியாது. ரொம்ப அருமையான பொண்ணு.'

தன்னை மறந்தவனாக 'ஆனா, கவிதா எதிரியா நினைக்கறாளே' என்றான் கவலை நிறைந்த குரலில்.

அவரும் கவலை நிறைந்த முகத்துடன் அவனைப் பார்த்தார்.

'ஆமாங்க சின்னய்யா.. வாணி வந்திருக்கிறது சோனாவுக்கு ஒரு அதிர்ஷ்டம்.. ஆனா, நம்ம சின்னம்மா அதைக் கெடுத்துடுவாங்க போலருக்கு. அதிலயும்.. இப்பல்லாம் பெரியம்மாவையும் போட்டு டார்ச்சர் பண்றாங்க. ஒன்னுமில்லே.. அந்தக் கல் மாலையை ஒரு நாள் போட்டுக்

குடுத்ததுக்கு ஒரே சண்டை... நீங்க இல்லாதப்ப.. பெரியம்மா கிட்டே ஒரே சண்டை. ஆனா நீங்க வந்தா பெட்டிப் பாம்பா.. அடங்கிறாங்க..' என்றார். 'அதுக்கான காரணம் எனக்குத்தானே தெரியும்' என்று அவன் உள்ளுக்குள் எண்ணிக் கொண்டான்.

'வாணிம்மாவை ஆயா.. வேலைக்காரின்னு அவமானப் படுத்தறதுக்கு ஒரு அளவே இல்லை. அந்தப் பொண்ணு பொறுமையா இந்தப் பக்கம் வந்துடும். என்ன செய்யறது சுந்தரம்மா.. சோனாவை எனக்கு ரொம்பப் பிடிச்சது.. அவளை விட்டுட்டுப் போக மனமில்லாமத்தான் இதையெல் லாம் வாங்கிக்கறேன். அப்படீங்குது எனக்கு மனசே உருகிப் போகுது' என்றார் இரக்கம் நிறைந்த குரலில்.

அவன் மனத்தில் வாள் கொண்டு அறுத்தாற் போல் இருந்தது. பல்லைக் கடித்துக் கொண்டான். சற்று நேரம் வேறு பேசி விட்டுச் சென்றான்.

அந்த எரிச்சலிலேயே இருந்ததனாலோ என்னவோ கவிதாவிடம் சமாதானமாகப் போக வேண்டும் என்ற எண் ணமே மறந்து போனது.

அதற்குத் தகுந்தாற்போல் அன்றைக்குக் கவிதாவே அவனது அறைக்கு வந்தாள்.

'எத்தனை ஏக்கர் நிலத்தை ரெல்ரன்ஸ் பார்க்குன்னு குடுத்திருக்கீங்க?' என்றாள்.

'அஞ்சு ஏக்கர்!' என்றான்.

'யாரைக் கேட்டுட்டு குடுத்தீங்க?'

'யாரைக் கேக்கணுமோ அவங்களை.'

'அப்படீன்னா?'

'அத்தையைக் கேட்டுட்டுத்தான் குடுத்திருக்கு சொல்லப் போனா, நான் ரெண்டு ஏக்கர் தான் கேட்டேன். அதுவும்



விலைக்கு. அத்தை அஞ்சு ஏக்கரை டொனேட் பண்ணிட் டாங்க' என்றான்.

'இதெல்லாம்.. அந்த வாணியோட ஐடியாவா? அவளுக் காகவா?'

'அவளுக்காக இல்லே! உன்னோட மகளுக்காக...'

'ஆமா.. என்னோட மக சோனா பேரைச் சொல்லியே இரண்டு பேரும் நல்லாக் கூத்தடிக்கறீங்க.. இல்லே' என்றாள் உறுமலாக.

அவன் திரும்பி அவளைப் பார்த்தான்.

'அப்போ நீ டெல்லிக்குப் போனயே.. ஃப்ரெண்டைப் பார்த்துக் கூத்தடிச்சுட்டுத்தான் வந்தயாடி?'

அவள் உக்கிரமாகப் பார்த்தாள்.. பிறகு ஒரு மாதிரி சிரித்துக் கொண்டு அறையை விட்டுப் போனாள்.

அதன் பொருள் அப்போது புரியவில்லை. அன்றிரவு புரிந்த போது அவள் எந்த விதமான பிரதிபலிப்பும் காட்டாத நிலையை எட்டிவிட்டாள் என்றுதான் சொல்ல வேண்டும்.

* * *

எட்டு மணிக்கு மேல் காலார நடந்து போய் விட்டு வருவதை இப்போதெல்லாம் வழக்கமாக்கிக் கொண்டிருந் தான் சந்திரமோகன்.

குழந்தைகள் பூங்காவுக்கும், தங்கள் நிலத்திற்கும் இடையே ஹாலோ பிளாக்கில் சுவரெடுத்துக் கொண்டிருந் தார்கள்.

தங்களுக்குத் தேவையான பிரைவஸியும் கிடைக்க வேண்டுமென்பதில் குறிப்பாக இருந்தான்.

அன்றைக்கு முழு நிலா. குளிர்ச்சியாகத் தன் ஒளியை வீசிக் கொண்டிருந்தது. மற்ற சிந்தனைகளையெல்லாம் தூக்கி மூட்டை கட்டி வைத்து விட்டு அந்த நிலவொளியை ரசிக்க ஆரம்பித்தான்.

அப்போது செல்போன் ஒலித்தது.

வாணியாய் இருக்குமோ என்ற எண்ணம் ஒரு ஓரத்தில் இருந்தது.

அந்தப் பேச்சுக்குப் பிறகு தன்னால் அவளுக்கு எந்த விதமான அசௌகரியமும் ஏற்படுவதை விரும்பவில்லை என்பதால் அவன் அவளைத் திரும்பியும் பார்ப்பதில்லை.

பேசினால் பொதுப்படையாகப் பேசுவான். ஒன்றிரண்டு நிமிடங்களுக்கு மேல் அவளும் பேசுவதில்லை.

அவள் போக்கிலேயே விட்டுவிட்டான். ஆனால், என்ன முயன்றும் கவிதாவிடம் சமரசம் பேச நேரமே அமைய வில்லை. ஏதாவது குளறுபடி செய்து கொண்டேயிருந்தாள்.

'ஹலோ!' என்றான்.

'ஹலோ.. சார்!' என்றது வாணியின் குரல் பதட்டமாக இருந்தது.

'என்ன வாணி!' என்றான்.

'சார்! மேலே என்னவோ கலாட்டா நடக்குது. கவிதா ...டம் நர்ஸை அறைஞ்சுட்டாங்க. அவங்க இமே சொன் ...தைக் கேட்டுட்டு சுந்தரம்மா பதறிப் போய் மேலே ...றாங்க.. நீங்க வாங்க.. சார்!' என்றாள்.

'சரி.. வர்றேன்!' என்றான். என்ன வேகமாக நடந்தும் ...நிமிடம் ஆகிவிட்டது.

...வாசலிலேயே வாணி நின்றாள்.

...சார்!' என்றாள் பதட்டமாக.



அவன் இடது கையைத் தூக்கி, 'நீ பதட்டப் படாதே! நான் பாத்துக்கறேன்' என்று முணுமுணுத்து விட்டுப் பின் கட்டுப் பகுதிக்குப் போனான்.

அங்கே கவிதா கத்திக் கொண்டிருந்தாள். சுந்தரம்மாவே பொறுக்க முடியாமல்.

'கவியம்மா... பெரியம்மா உடம்பு சரியில்லாம இருக் காங்க... அவங்களை எதுக்கும்மா.. இப்படிக் கஷ்டப்படுத் தறீங்க..' என்று கேட்டுக் கொண்டிருந்தார்.

'வாம்மா... வா..! இந்த வீட்ல வேலைக்காரங்க ஆதிக்கம் ரொம்ப ஜாஸ்தியாப் போச்சு. வந்துட்டியா கேள்வி கேட்க..' என்ற சுந்தரம்மாவையும் தள்ளிவிட்டாள்.

'கவிதா!' என்று அவனது ஆக்ரோஷக் குரல் கேட்டு அவள் திரும்பினாள்.

'வாய்யா.. வா! ஹீரோ.. ஆப்டர் ஆல் ஒரு ஆயாவுக்காக உருகி உருகி அலையறே' என்றாள்.

'கவிதா!' என்று குரலெடுத்துக் கத்தியவன் ஓங்கி அவள் கன்னத்தில் அறைந்தான்.

அவள் பொறி கலங்கினாற்போல் கன்னத்தைப் பிடித்துக் கொண்டு நின்றாள். மலங்க மலங்க விழித்தாள். பிறகு வெறி கொண்டாற்போல் சிரித்தாள். பிறகு சொன்னாள்.

'கிழவி.. நாச்சி! பாத்துக்க.. இன்னைக்கு உன் மருமகன் என்னைத் தொட்டுட்டான்.. இவன் நினைச்சுட்டிருக்கான். இவனை விட்டுட்டா எனக்கு யாருமில்லைன்னு. ஆனா.. நான் .போன வாரம் டில்லி போனேனே.. அவன் இன்னைக்கே இவனை டைவர்ஸ் பண்ணிட்டு வா.. நான் பாத்துக்கறேன். இவன் விட்டே கிடைக்கலேன்னா.. எனக்கு வேற எங்கயும்... கிடைக்காதா?

மேலும் மேலும் அவள் பேசப் பேச சிவகாமி நாச்சியார் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சாய்ந்தார்.

'மோகன்! இவ பெண்ணே இல்லை. அப்படியே.. அப்பனைக் கொண்டு பிறந்திருக்கா.. அந்தாளு என் வாழ்க்கையைக் கெடுத்ததுமில்லாம.. இவ வாழ்க்கையையும் கெடுத்துப் போட்டாரு.. நீ டைவர்ஸ் பண்ணிடு. நானே சொல்றேன்.. டைவர்ஸ் பண்ணிடு' என்று புலம்பியபடி சாய்ந்தார்.

சுந்தரம்மாவும் சந்திரமோகனும் ஓடிப் போய் தாங்கிக் கொள்ள கவிதா அலட்டிக் கொள்ளாமல் தள்ளாடிக் கொண்டு வெளியே போனாள்.



## 17

அத்தையைக் காப்பாற்றுவதற்கு பகிரதப் பிராத்தனம் செய்தான் சந்திரமோகன்.

அந்த அலைச்சலில் தன் சொந்தப் பிரச்சினைகளை பற்றி அதிலும் குறிப்பாக கவிதாவைப் பற்றியோ, வாணியைப் பற்றியோ நினைப்பதற்கே நேரமில்லாமல் போனது.

அத்தை ஆஸ்பத்திரிக்கு வந்து ஒரு வாரமாகிவிட்டது. இடது பக்கம் கையும், காலும் விழுந்தது விழுந்தது தான் என்று டாக்டர் சொல்லி விட்டார். அவர்களுக்கே தன்னைக் குணப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இல்லையே என்று வருத்தப்பட்டார்.

ஒரு மாதத்திற்குப் பிறகு வீட்டுக்கு வந்தார்.



'அந்தக் கவிதாவை மட்டும் தன் எதிரில வரவேண் டாம்னு சொல்லு' என்று குமுறலாகச் சொல்லி விட்டார்.

தகவல் தெரிந்தோ என்னவோ கவிதாவும் அம்மா உறங்கிக் கொண்டிருக்கும் போது வந்து எட்டிப் பார்த்து விட்டுப் போய் விடுவாள்.

இதற்கு இடையில் சந்திரமோகன் ஒரு வாரம் மும்பை போய் விட்டு வந்தான். அந்த இடைவெளியில் சிவகாமி நாச்சியார் லாயரை வரவழைத்து உயில் எழுதிவிட்டார்.

எல்லாருக்கும் ஆச்சரியம் என்னவென்றால் கவிதா அமைதியாக இருந்ததுதான்.

சுந்தரம்மாவுக்கு மட்டும்தான் அதன் ரகசியம் தெரிந் திருந்தது.

ஒரு நாள் மற்றவர்கள் எல்லாம் இல்லாத நேரத்தில் குமாரசாமி வந்தார்.

'சுந்தரம்மா' அந்தக் கவிதாப் பொண்ணை கூப்பிடு' என்று கர்ஜித்தார்.

கவிதா சற்றே பயத்துடன் இறங்கி வந்தாள். 'ஏம்புள்ளே.. நீ என்ன நினைச்சுகிட்டிருக்கறே.. உன்னைக் கேக்கறதுக் ஆள் இல்லைன்னுட்டா? நம்ம குடும்பத்துப் பொம்பளை செய்யாத வேலையெல்லாம்.. செய்யறியாமே..! பாரு.. நான் என்ற மகனாட்டம் தயவு தாட்சண்யம் பாக்கற ஆ இல்லே.. இந்த உடம்பு அளகு தானே உன்னை ஆடா ஆட்டமெல்லாம் ஆட வைக்குது. எல்லாத்துக்கும் வேட் வச்சிடுவேன். ஒட்டு மொத்தமா ஆளைத் தீக்கற ஆ இல்லே.. நான்.. மொக்கையடி.. சும்மா.. மொக்கைய கையைக் காலை முறிச்சுக் கிடையிலே சேத்திடுவேன் அப்புறம் எங்கே போய் ஆடறது. புரியுதா?'' என்றார்.

கவிதா பயந்து போய்ப் பார்த்தாள்.

'ஆமா.. புள்ளே! ஆள் நடமாடற மாதிரி! இருந்தாத் தானே.. காசு பணம் தேவையிருக்கும்? தண்ணி போடச் சொல்லும்.. ஊர் ஊரா எதையெல்லாமோ தேடி அலையச் சொல்லும்.. இல்லாமலே.. பண்ணிப் போட்டா.. சாத் திரதை.. நான்.. சொன்னா செய்யற ஆளு!'

உண்மையாகவே கவிதா பயந்து போனாள்.

வாலைச் சுருட்டிக் கொண்டு நடமாடினாள். இது சுந்தரம்மாவிடம் இருந்து தெரிய வந்தபோது கூட சந்திர மோகன் கசப்பாகச் சிரித்துக் கொண்டானே தவிர அதைப் பற்றிப் பெரிதாக மறுபடியும் பேசிக் கொள்ளவும் இல்லை. நினைக்கவும் இல்லை.

உமாவும் அவ்வப்போது வந்து அத்தையைக் கவனித்துக் கொண்டாள்.

பள்ளிக்கூடத்துக்கு விடுமுறை விட்டார்கள் என்றவுடனேயே ராஜாவையும் கொண்டு வந்து தன் பொறுப்பில் விடுமாறு வாணி கேட்டுக் கொள்ளவே உமா வாணியை ஒருமுறை ஆழமாகப் பார்த்து விட்டுக் கொண்டு வந்து விட்டாள்.

அத்தை பேச ஆரம்பித்தவுடனே முதல் வேலையாக சந்திரமோகனை அழைத்தார்.

'மோகன், டைவர்ஸ் அப்ளை பண்ணு!' என்றார்.

'அத்தை.. ப்ளீஸ்! எதுக்குப் புதுசா எதையாவது ளப்புறீங்க.. விடுங்க.. நான் இப்படியே இருந்துட்டுப் போறேன்..' என்றான் சந்திரமோகன்.

'மோகன்.. என் மக உன்னை நிம்மதியா இருக்க விட்டா. காயப் படுத்திட்டே தான் இருப்பா.. போதும்ப்பா... னுபவிச்சதெல்லாம்.. போதும்.. நீயாவது நிம்மதியாயிரு..' றார்.



'வேண்டாங்கத்தை.. சந்தி சிரிக்கப் போயிடும்' ஆனால் அத்தை பிடிவாதமாய் இருந்தார்.

விவாகரத்துக்குக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்து விட்டான் என்று கேள்விப்பட்ட அன்றைக்கு வாணி மிகவும் கவலையில் ஆழ்ந்து போனாள். அவளுக்கு அந்தக் குடும்பத்துக்குள்ளே ஏதோ அதிர்வுகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன என்பது புரிந்தது. ஆனால் யாரும் எதுவும் அவளிடம் பேசவில்லை.

சந்திரமோகன் இந்த வீட்டிலிருந்த தன்னுடைய அறையைக் காலி செய்து விட்டு அலுவலகமாக வைத்திருந்த அந்த பங்களாவில் தங்கிக் கொண்டான்.

அத்தையும் கீழே இருந்த ஒரு அறைக்கு வந்து விட்டார்.

கவிதா மட்டும்தான் மேலே ஒரு அறையில் இருந்தாள்.

அன்றைக்கு சண்டையில் அவள் சொன்னது சுந்தரம்மாவின் காதுகளில் இன்றைக்கும் ஒலித்தது.

'பாரு.. கிழவி! நீங்க இந்தத் தமிழ்நாட்டுக்காரங்க.. வாழ்க்கையை நீங்களும் அனுபவிக்க மாட்டீங்க.. யாரையும் அனுபவிக்க விடவும் மாட்டீங்க.. சும்மா.. தொலை. தொலைஞ்சு போங்கறயே. நான் மட்டும் என்ன உன் மேல பிரியத்துனாலயா இங்கே இருக்கேன்.. எனக்குக் குடுக்க வேண்டியதைக் குடு. நான் எங்கயோ போய் நிம்மதியா இருக்கேன்' என்றாள்.

'அப்ப.. அவனுக்கு டைவர்ஸ் குடு..' என்று நிபந்தனை போட்டார்.

அவள் கடுப்பாகச் சிரித்தாள்.

'டைவர்ஸ்தானே! வாங்கிக்கங்க.. இப்ப மட்டும் என்ன? அந்த ஆளோட ஜே.. ஜேன்னு வாழ்ந்துகிட்டா இருக்கேன்?'

சிவகாமி அவளை வெறுப்புடன் பார்த்தார். 'ஏன்டி! சோனாவை நினைச்சே பார்க்க மாட்டியா? பெத்த பாசம்னு கொஞ்சமாவது இருக்குதாடி?' என்றார் வேதனையுடன்.

'பெத்த பாசமா? அந்தச் சனியன் பிறக்கப் போய்த்தானே என் வாழ்க்கையே நாசமாப் போச்சு. சங்கிலியில கட்டிப் போட்ட மாதிரி இந்தப் பாழாப் போன வூட்டுல இருக்கேன்..' என்றாள்.

'பாருடி..! எதை எப்பெப்ப செய்யணும்னு எனக்குத் தெரியும். நீ முதல்ல இங்கிருந்து போ..' என்றார்.

'ஹூம்! எங்கப்பா செத்ததுல இருந்தே உனக்கு ரொம்பத் துளிர் விட்டுப் போச்சு' என்று முணுமுணுத்துக் கொண்டே அறையை விட்டு வெளியே போனாள்.

வாணி ஒரு நாள் சுந்தரம்மாவிடம் நைஸாகக் கேட்டாள்.

'ஏம்மா.. சாரும், மேடமும் டைவர்ஸ் பண்ணிக்கப் போறாங்களாம்?' என்றாள்.

'ஆமா.. பெரியம்மாதான் ரொம்ப வற்புறுத்திச் சின்னய்யாவைச் சம்மதிக்க வச்சாங்க..' என்றார்.

வாணி எதுவும் பேசவில்லை. இப்போதெல்லாம் அவள் சந்திரமோகனைத் தனியாகச் சந்திப்பதையோ பேசுவதையோ முற்றிலும் தவிர்த்தாள். அவனும் வாணி என்றொரு பெண் இந்த வீட்டில் இருக்கிறாள் என்பதைக் காட்டிக் கொள்ளாதவன் போல் நடந்து கொண்டிருந்தான்.

அன்றைக்கொரு நாள்!

சந்திரமோகன் தான் தங்கியிருந்த அந்த பங்களாவின் முன்னாலிருந்த வெற்றிடத்தில் குழந்தைகளை விளையாட விட்டுக் கொண்டிருந்தான்.



இரண்டு கூடைச் சேர்களைக் போட்டு அமர்ந்து கொண்டிருந்தான். குழந்தைகளுடன் பேசிக் கொண்டு சிரித்துக் கொண்டிருந்தான்.

சுந்தரம்மா கோயிலுக்கு ஏதோ வேண்டுதல் என்று போயிருந்தார். இரவு பத்து மணியாகியும் குழந்தைகள் வரவில்லையே என்று அந்த பங்களாப் பக்கம் எட்டிப் பார்த்த வாணி அந்தக் காட்சியைக் கண்டாள்.

ராஜா உட்கார்ந்த வாக்கிலேயே அவன் மடியில் உறங்கியிருந்தான். சோனா எதிரேயிருந்த கூடைச் சேரில் அமர்ந்தபடியே உறங்கியிருந்தாள். சந்திரமோகன் ராஜாவின் தலையைக் கோதிக் கொடுத்த வண்ணம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தான்.

வாணியின் அடிவயிற்றிலிருந்து உணர்வுகள் கிளர்ந்தெழுந்து இந்தக் கணத்தில் அவனைத் தன்னருகில் இழுத்துக் கொண்டு என்னவாவது செய்து, எப்படியாவது அவனுக்கு மன ஆறுதல் கொடுக்க வேண்டும் என்ற வேகம் பீறிட்டெழுந்தது. அடக்கிக் கொண்டு மெதுவாக நடந்து போனாள்.

அவன் அவளைப் பார்த்துப் புன்னகைத்தான். 'வா!' என்றான்.

அவள் தலையசைத்து விட்டு 'சோனாவைக் கொண்டு போய்ப் படுக்க வச்சுட்டு வந்து இவனை எடுத்துக்கறேன்' என்றாள்.

'இல்லல்லே... ரெண்டு பேரும் இன்னைக்கு என்கிட்டே இருக்கட்டும்.' என்றான்.

அவள் முதலில் சோனாவை எடுத்துக் கொண்டு போய் அவனது அந்தப் பெரிய படுக்கையில் படுக்க வைத்தாள். படுக்க வைத்து விட்டுத் திரும்பிய போது அவன் கை பட்டு

மேஜை மேலிருந்த டைரி கீழே விழுந்தது. அதை எடுத்து மீண்டும் மேஜை மேல் வைக்கப் போகும்போதுதான் பார்த்தாள். அதிலே அவளது போட்டோ இருந்தது. திகைத்துப் போனவளாக மேஜை மேல் புத்தகத்தை வைத்தாள்.

மீண்டும் வெளியே வந்து ராஜாவை தூக்கிக் கொண்டு அவனது அறைக்குள் கொண்டு போனாள்.

பின்னாலேயே அவனும் எழுந்து வந்தான். மறுபடியும் ஒரு முறை அதே போல் கைபட்டு டைரி கீழே விழ போட்டோ மறுபடியும் வெளியே தெறித்து விழுந்தது.

அவன் அதற்காக எந்த விளக்கமும் சொல்லவில்லை. மாறாக போட்டோவை எடுத்து புத்தகத்தின் உள்ளே வைத்து விட்டு நின்றான்.

அவனைப் பார்க்கவேயில்லை.

'மோகன்! ரொம்ப... ரொம்ப... அன்ஹாப்பியா இருக்கேங்கன்னு... என் மனசுக்குப் படுது...' என்றாள்.

அவன் வறண்ட குரலில் சிரித்தான். கட்டிலில் தலையணையை நிமிர்த்தினாற் போல் வைத்து விட்டு அமர்ந்தான்.

அவள் மேஜையின் மேல் சாய்ந்து கொண்டு நின்றாள்.

''என்ன செய்யச் சொல்றே! கவிதா கூடத்தான் வாழணும்னு நீ கண்டிஷன் போடறே! அவளை டைவர்ஸ்தான் பண்ணணும்னு அத்தை கண்டிஷன் போடறாங்க... அவளோ... போகப் போக எவ்வளவு கீழே போக முடியுமோ... அவ்வளவு கீழே போயிட்டிருக்கிறா... நான் என்னதான் செய்யட்டும் சொல்லுங்க...!' என்றான்.

அவள் பேச்செழாமல் நின்றாள்.



'இந்த சோனா மட்டும் இல்லேன்னு... வைங்க... எல்லாரும் என்னமோ பண்ணுங்கன்னு போயிருப்பேன்' என்றான்.

வாணி நீண்டதொரு பெருமூச்சு விட்டாள்.

'அதேதான்... மோகன்... நான் கவிதாவை டைவர்ஸ் செய்ய வேண்டாம்னு சொன்னதுக்குக் காரணமும் அதே தான்... குழந்தைக்கு நாளைக்கு ஃப்ரஸ்ட்ரேஷன் வரக் கூடாதுன்னுதான்' என்றாள்.

அவன் ஒன்றும் பேசவில்லை.

வாணி திடீரென்று ஏதோ புதிதாகக் கண்டு பிடித்தவள் போல் சொன்னாள்.

'ஒன்னு செய்யவா?'

'சொல்லு!'

'நீங்க கவிதா மேடத்தை டைவர்ஸ் செய்ய வேண்டாம். இப்ப மாதிரியே கண்டினியு பண்ணுங்க... நான் நான்... அப்பப்ப... என்று நிறுத்தினாள்.

அவன் கண்கள் சுருங்கின.

'அப்படீன்னா...?'

'உங்களோட நாலு நாள் ஐந்து நாள்ன்னு எங்கே வேணும்னாலும் வர்றேன்...?'

அவன் சிரித்தான். 'இல்லீகல் அட்டாச்மென்ட்?' என்றான்.

அவள் உறுதியாக 'ஆம்' என்று தலையாட்டினாள். அவன் இதழ்க்கடையோரம் ஒரு விதமாக நெளிய ஒருவிதமாகப் பார்த்தபடி கேட்டான்.

'அந்த நாலு நாள் அஞ்சு நாள்ல உலகத்துல இருக்கற எல்லாவிதமான சந்தோஷத்தையும் வாரி வழங்கி என்னைப் புதுப்பிச்சுடுவே. இல்லே?!' என்றான்.

அவள் அவன் முகம் பார்க்காமல் வேறு எங்கோ பார்த்துக்கொண்டு.

'ஆமா' என்றாள். சொன்னது மட்டுமல்லாமல் அவனை நெருங்கினாள். தன் மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டு அவன் முகம் நோக்கிக் குனிந்து பரிசு மழை பொழிந்தாள்.

அவன் நிகைப்புடன் இடம் கொடுத்தான்.

சோனா புரண்டு படுக்கவே திடுக்கிட்டு விலகினார்கள்.

அவன் தன்னை மீட்டுக் கொண்டான்.

'ஹேய்! என்னை மிருகமாக்காதே! போ!' என்றான்.

அவள் நகரவில்லை நின்றாள்.

அவன் முகத்தில் கலவையான உணர்வுகள் தோன்றின. ...ழுந்தான்.

'மிருகம்ன்னா... நீ நினைக்கிற மாதிரியில்லே. சட்டுனு ...டுன்னு நாலு அறை அறையற மாதிரிக் கோபம்தான் ...து... அப்படி மிருகமாக்கிடாதேன்னு சொன்னேன்' ...ன்றான்.

...அவள் புரியாதவளாய் அவன் முகம் நோக்கி விழித் ...ள். ஒரு நிமிடம் ஆழ்ந்து பார்த்தான்.

...அவன் முகம் மென்மையாய் மாறியது. மெல்லக் குனிந்து ...ள் நெற்றியில் முத்தமிட்டான். குழைந்து போன ...லில் சொன்னான்.

...ஹேய்! வி ஆர் நாட் அனிமல்ஸ். கிடைச்சதை கிடைச்ச ...த்திலிருந்து சாப்பிடற மாதிரி மிருகம் இல்லே நான்! ...ஷு ஃபார் ஆல் தட் யு ஹேவ் ஆஃபர்ட். உன்னை ...ப் பொண்ணு கிட்டேயிருந்து இப்படி ஒரு ஆஃபர் ...ன்னா...' என்று நிறுத்தினான். ஒரு சில



வினாடிகளுக்குப் பிறகு மறுபடியும் சொன்னான். ஐ... அம்... ஆனர்ட்... டார்லிங்... வெரி மச்... ஹானர்ட்... ஆனா... அதுக்கு ஒத்துகிட்டேன்னா...' என்று மறுபடியும் நிறுத்தினான். பிறகு மீண்டும் தொடர்ந்தான்.

'ஐ ம் சாரி டார்லிங்! நீ என்னோட வாழ்க்கையில வந்த வசந்தம். உன்னை நான் அப்படியெல்லாம் கேவலப்படுத்த முடியாது...' என்றான். ஆனால், அவள் முகம் நோக்கிக் குனிந்து,

'மை க்வீன்... யு ஆர்... மை க்வீன்!' என்று சற்று நேரம் கொஞ்சி மகிழ்ந்து விடுவித்தான். பிறகு சொன்னான்.

'பார்றா... டேய்! சில மிருகங்கள், சில பறவைகள் கூட ஒரு சமயத்துல ஒரு உறவுதான்னு வாழுதுங்கறாங்க... நம்ம கவிதா ஃபாரின்... கல்ச்சர்... ஃபாரின் கல்ச்சர்ங்கறாளே! அவனுங்க கூட... எந்த சமயத்துல யாரோட வாழறாங்களோ அவங்களுக்கு உண்மையாகத்தான் இருப்பாங்க. அங்க கூட செக்ஸ்ல சுதந்திரம் இருக்கலாம். ஆனா, துரோகம் இருக்காது.' என்றவன் மறுபடியும் நிறுத்தினான்.

அவள் முகம் பார்த்தான். பிறகு சட்டென்று கலகல வென்று சிரித்தான்.

'நீ ரொம்ப ஸ்வீட் பொண்ணே!' போ... போய் நிம்மதி யாத் தூங்கு. எல்லாத்துக்கும் ஒரு முடிவுன்னு ஒரு பாயிண்ட் இருக்குமில்லே... பார்க்கலாம். போடா... போய்த் தூங்கு...'' என்று செல்லமாக முன்னால் தள்ளி விட்டான்.

அவள் புரியாதவளாகவே அவன் முகம் பார்த்தாள்.

'இப்ப... இருக்கிற பிரச்சினைகளை அதோட முடிவு வரைக்கும் போய் என்னன்னு நான் பாத்துக்கிட்டான் ஆகணும்... பார்க்கறேன்... அதுக்கப்புறம் நம்ம விஷயத்துல என்ன

செய்யறதுன்னு பார்க்கலாம்' என்றான். பிறகு அவளைப் பார்த்து அழகாகச் சிரித்தான்.

'குட்நைட்... வாணி... போய்த் தூங்கு...' என்றான்.

அவள் மெல்ல நகர்ந்தாள்... ஆனால், மறுபடியும் மெல்ல அவள் கை பிடித்து நிறுத்தினான்.

'ஹேய்! நானாச் சொல்ற வரைக்கும் இந்த மாதிரித் தனியான நேரங்கள்ல என்னைச் சந்திச்ச... என்னை டெம்ப்ட் பண்ணாதே... யு அண்டர்ஸ்டாண்ட்!' என்றான்.

அதில் கோபத்தை விட வேறு ஏதோ ஒன்று தெரிந்தது. குறும்பாகச் சிரித்தான். அவள் புரிந்தும் புரியாதவள் போல் கனவில் நடப்பது போல் நடந்தாள்.

சற்று தூரம் நடந்தவள் திரும்பவும் ஏதோ சொல்ல நினைத்தவள் போல் அவன் அறைக்கு வர அவன் குப்புறப் படுத்துக் கொண்டிருந்தவன் அவள் வருகையை உணர்ந்தாற்போல் வேகமாக திமிர்ந்து தலையைத் திருப்பிப் பார்த்தான்.

'ஹேய்! உள்ளே வராதே... போ!' என்றான். உல்லாசமாகச் சிரித்தான்.

அவள் செய்வதறியாது நின்றாள் 'சொல்றேன். இல்லே! போடா!' என்றான். கெஞ்சுவது போல். ஆனால் அவன் முகத்தில் தெரிந்த நிறைவான அன்பை அவள் பருகுவது போல் பார்த்துக் கொண்டு நிற்க, அவன் மறுபடியும் எழுந்திருக்காமலே,

'வாணி! ப்ளீஸ்! போயிடு!' என்றான். இந்த முறை அதில் கெஞ்சல் இருக்கவில்லை. ஒரு அச்சுறுத்தல் இருந்தது. அந்தக் குரலில் அவள் நடுக்கமுற்றாற்போல் உணர்ந்தாள்.

சட்டென்று திரும்பி நடந்தாள்... ஆனால் இப்போது அவளுக்குள்ளும் ஒரு மகிழ்ச்சி நிறைந்திருந்தது.



அதே நேரம் சந்திரமோகன் ஒரு விதமாக சிரிப்புடன் திரும்பிப் படுக்க ராஜா தன் காலைத் தூக்கித் தொப் பென்று அவன் இடுப்பில் போட ஒரு நிமிடம் திடுக் கிட்டவன் பிறகு சிரித்துக் கொண்டான்.

அறைக்குப் போன வாணி யோசனையில் ஆழ்ந்தாள். முடிவு வருமாமே! எப்படி வரும்? ஆளாளுக்கு டைவர்ஸ் என்று பேசுகிறார்கள். அது சோனாவின் மனத்தில் எதிர்காலத்தில் எப்படிப்பட்ட பாதிப்பு ஏற்படுத்தும் என்று யோசிக்கவே மாட்டேன் என்கிறார்களே! என்று எண்ணிக் கொண்டாள். ஆனால், அதையெல்லாம் மீறி இன்றைக்கு சந்திரமோகன் சிரித்த சிரிப்பே அவள் கண்ணுக்குள் நிறைந்திருந்தது.

அவன் அப்படி ஒரு விதமாக சிரிக்கும் போது அவன் கண்ணில் இருந்து ஒரு ஒளி கிளம்பினாற் போல் முகம் முழுவதும் ஒரு மலர்ச்சியாகும். மிக அழகாக இருக்கும். அதை நினைத்துக் கொண்டே வெகு நேரம் படுத்திருந்தாள். அவன் எப்படி வரப்போகிறது? என்று கவலைப்பட்ட முடிவும் நெருங்கிக் கொண்டிருந்ததை அவள் அறியவில்லை.



## 18

அத்தையைப் பார்த்து விட்டு வரும்போதெல்லாம் அவன் முகத்தில் ஆழ்ந்த கவலை தெரிவதைப் பார்ப்பாள் வாணி. அவனறியாத வண்ணம், மற்றவர்கள் அறியாத வண்ணம் அவனைப் பார்ப்பதில். அவன் தேவைகளைக் கவனிப்பதில் அவள் மகிழ்ச்சியடைந்தாள்.

தனியாகச் சந்திக்கவில்லை. சந்திப்பதற்கான சூழ்நிலை யும் இருக்கவில்லை நிறைய உறவினர்கள் இப்போதெல்

லாம் வந்து போய்க் கொண்டிருந்தார்கள். குமாரசாமி கூடத் தினமும் இல்லாவிட்டாலும் இரண்டு நாட்களுக்கு ஒரு முறையாவது நேரில் வந்து செலவழித்தார்.

அத்தைக்கு ஸ்ட்ரோக் வந்து கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள் ஓடி விட்டன.

வாணிக்கும் இப்போதெல்லாம் நேரம் கிடைத்தது. நேரம் கிடைத்தால் அவள் அத்தையின் அருகிலேயே செலவழித்தாள்.

மகாபாரதம், ராமாயணம் புத்தகங்களை படித்துக் காட்டினாள். மனித வாழ்வில் அநித்தியத்தைப் பற்றிச் சொல்லுகிற பட்டினத்தார் பாடல்களை, வள்ளலார் பாடல்களை, திருவாசகப் பாடல்களைப் பொறுக்கி யெடுத்துப் பாடச் சொல்லி கேட்டார்.

அன்றைக்கும் அப்படித்தான். தனக்குப் பிடித்த வள்ளலார் பாடல் ஒன்றைப் பாடச் சொல்லிக் கேட்டார். அவளும் உருகிப் பாடினாள்.

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே
உகந்த தண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே.
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்தில் உறும்பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசே என் அலங்கல் அணிந்தருளே

என்ற பாடலை வாணி உருகிப் பாடினாள். கண்களை மூடி வைத்துப் போய் அவள் பாடியதை அத்தையும் ஆழ்ந்த அமைதியுடன் கண்மூடிக் கேட்டார்.

இரண்டு பேரும் வேறொரு உலகத்தில் இருந்தாற்போல் இருந்த விதித்த போதுதான் பார்த்தாள். குமாரசாமி ஒரு



சேரில் அமர்ந்து கண்மூடிக் கேட்டுக் கொண்டிருந்தார். அதே போல் அவர் மனைவி இன்னொரு சேரில் அமர்ந்திருந் தார். பின்னால் சந்திரமோகன் அமைதியாக நின்றிருந்தான்.

வாணி அந்த சூழ்நிலையைக் கலைக்க விரும்பாமல் எழுந்து மெதுவாக அறையை விட்டு வெளியேறினாள்.

* * *

'அண்ணா, இன்னைக்கும், நாளைக்கும் நீங்க இங்கேயே இருங்கண்ணா' என்றார் சிவகாமி தீனமான குரலில்.

'இருக்கேம்மா..!' என்றார். முகத்தில் கவலை கவிந் திருக்க அருகில் அமர்ந்திருந்தார்.

டாக்டர், சந்திரமோகனை அருகில் அழைத்து அறைக்கு வெளியே பேசினார்.

'தம்பி! எல்லா உறுப்புகளும் மெது மெதுவாக செய லிழக்குது. மேக்ஸிமம் ரெண்டு நாள் என்று சொல்லி விட்டுப் போனார்.

அவன் அப்பாவிடம் கவலையுடன் பகிர்ந்து கொண்டான். அப்பா 'உடனே உமாவையும் மாப்பிள்ளையும், உங்கம் மாவையும் வரவழை' என்றார்.

வந்தார்கள் கவிதா கூட ஆழ்ந்த சோகத்தோடு அம்மாவின் படுக்கைக்கருகில் அமர்ந்து கொண்டாள்.

வாணி அருகிலேயே இருந்தாள். அவரது சைகைகளைப் புரிந்து கொண்டு சலிப்பில்லாமல் சேவை செய்தாள்.

இரவு ஏழு மணி இருக்கும்.

'வாணி, ஏதாவது ரெண்டு சாமி பாட்டுப் பாடும்மா...' என்றார்.

பாடினாள். கண்மூடிக் கேட்டார். அப்படியே உறங்கி விட்டார். எல்லாம் மௌனமாகவே நடமாடிக் கொண் டிருந்தார்கள்.

அடுத்த நாள் காலையிலும் பத்து மணிக்கு வாணியை அழைத்தார்.

'காவ்யாவைக் கூப்பிடு...' என்றார். அவள் ஓடிப் போய்க் குழந்தையை அழைத்து வந்தாள். விவரம் தெரிந்த சந்திர மோகனும் ஓடி வந்தான். குழந்தைக்கு முத்தங்கள் கொடுத்து விட்டு வாணியை அருகில் அழைத்தார்.

'அந்த வள்ளலார் பாட்டு பாடும்மா...' என்றார். 'கோடையிலே இளைப்பாற்றிக் கொள்கின்ற குளிர் தருவே' என்ற பாடலை மறுபடியும் பாடினாள்.

மீண்டும் அவளை அருகில் அழைத்தார். பேசவே சிரமப் படுவதை பார்த்து அவள் குனிந்தாள்.

'சோனாவைப் பார்த்துக்க... சந்திரமோகனையும்... நல்லாப் பார்த்துக்க...' என்றார்.

அவள் திடுக்கிட்டுப் போய் சந்திரமோகனைப் பார்த்து விட்டுத் திரும்ப அத்தையைப் பார்த்தாள்.

'எனக்குத் தெரியும்மா... உன் மனசு தெரியும்' என்றவர் மேலும் ஏதோ சொன்னார். அவள் முகம் சிவந்து போனதைக் கண்டு மென்மையாகப் புன்னகைத்தார்.

சோனாவைக் கையிலேந்திக் கொண்டு சந்திரமோகன் தைப் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே குமாரசாமி ரபரப்புடன் உள்ளே வந்தார். உடனே அவர் கவனம் ன்னனிடம் திரும்பியது.

'அண்ணா இப்படிப் பக்கத்துல உட்காருங்க!' என்றார். ண்ணனின் கையைப் பிடித்துக் கொண்டார்.

'அண்ணா! என்னை மன்னிச்சிடுங்க... உங்களோட ரவை என் வாழ்க்கையில பயன் படுத்திக்க முடியாமப் ச்க' என்றார்.



அமுதவல்லி சந்திரமோகனின் தாய் 'ஐயோ' சிவகாமி!' என்று குரலெடுத்து அழ.

'அண்ணி...!' என்று முணுமுணுத்தார்.

ஒரே ஒரு வினாடி அண்ணனின் கையிலிருந்து தன் கையை விலக்கி 'முருகா... சரணம்! உலகத்தை நல்லா வையப்பா!' என்றார். கை கூப்பினார். மீண்டும் அண்ணனின் கையில் தன் கையைக் கோத்துக் கொண்டார். மென்மை யான சிரிப்புடன் இறைவனடி சேர்ந்தார்.

* * *

பதினாறாம் நாள் முடியும் வரை குமாரசாமியும் அமுதவல்லியும் இருந்து எல்லாக் காரியத்தையும் நடத்தி னார்கள்.

கவிதாவும் ஏதோ ஒரு விதத்தில் இழப்பை உணர்ந் திருந்தாள் போலும். உறவினர்கள் வந்து விசாரிக்கையில் அவளும் உண்மையான சோகத்தையே வெளிப்படுத்தினாள்.

அதைப் பார்த்தோ என்னவோ மற்ற உறுப்பினர்களும் அவளிடம் கனிவாகவே நடந்து கொண்டார்கள்.

எல்லாம் உயில் படிக்கப்படும் வரைதான். அதற்குப் பிறகு மீண்டும் பிரச்சினைகள் எழும் என்ற அச்சம் சந்திரமோகனுக்கு இருந்தது.

உயில் படிக்கிற நாளும் வந்தது. குமாரசாமியின் முன் னிலையிலேயே அதுவும் நடந்தது.

அனைத்து சொத்துக்களும் எனது கணவரின் சுய சம்பாத்தியத்தில் வந்தவையல்ல என்ற போதும், எனது பெயரிலேயே உள்ளன. இருநூறு ஏக்கர் நிலமும் அதிலுள்ள மற்ற சொத்துக்களுக்கும் என்மருமகன் சந்திர மோகனுக்கே சொந்தம். ஆனால், தன் வாழ்நாளில் இந்த சொத்துக்களை விற்க வேண்டாமென்று கேட்டுக்

சொல்கிறேன். எனது மகள் கவிதாவுக்கென்று பனை மரத்துத் தோட்டம் என்று அழைக்கப்படுகிற ஐம்பது ஏக்கர் நிலத்தை எழுதி வைக்கிறேன். ஆனால் அந்த சொத்தின் பொறுப்பும் மருமகன் சந்திரமோகனிடமே இருக்கும். கவிதா அதை விற்க முடியாது. ஆனால் அதிலிருந்து வருகிற நிகர வருமானத்தை அனுபவித்துக் கொள்ளலாம்.

கவிதாவும், சந்திரமோகனும் சேர்ந்திருந்தாலும் சரி, பிரிந்திருந்தாலும் சரி சந்திரமோகனுக்கென்று கொடுத்த நிலங்கள் அவருக்கே சொந்தம். அவர் அதைப் பராமரித்து விருப்பப்பட்டால் எனது பேத்தி காவ்யாவுக்குக் கொடுக்கலாம். ஆனால், எக்காரணத்தைக் கொண்டும் காவ்யாவை கவிதாவின் பொறுப்பில் விடக் கூடாது. தன் பொறுப்பிலேயே வைத்துக் கொள்ள வேண்டும் என்று கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். என்கிற ரீதியில் இருந்தது.

சந்திரமோகனுக்கு அத்தை தன் மேல்வைத்த நம்பிக்கை குறித்து பெருமையாகவும் இருந்தது. இப்படியெல்லாம் நேர்ந்து விட்டதே என்று வருத்தமாகவும் இருந்தது.

எல்லாரும் கவிதா பெரிய ஆர்ப்பாட்டம் செய்வாள் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் அப்படியொரு உயில் படிக்கப்பட்டது என்பதை மறந்தவள் போல் நடந்து கொண்டாள்.

அன்று மாலை!

சந்திரமோகனும், அவன் தங்கை உமாவும் கவிதாவின் அறைக்குப் போனார்கள்.

'அண்ணி! அண்ணன் உங்ககிட்டே பேசணுமாம்' என்றாள் உமா.

'சொல்லுங்க... அத்தான்!' என்றாள்.



'கவிதா... அத்தை என்ன விதமா உயில் எழுதியிருந்தாலும் சரி... நான் இந்த சொத்துக்கு கார்டியன் மட்டும் தான். அதிலிருந்து வந்த வருமானத்துல உனக்கும் உரிமையிருக்கு...' என்றான் சந்திரமோகன் தயக்கத்துடன்...

'தாங்க்ஸ் அத்தான்!' என்றாள் வெறுமையாகப் புன்னகைத்தாள்.

'இப்பக் கூட பேச்சு வார்த்தை மாதிரி நாம உட்கார்ந்து பேசி... டைவர்ஸை மறு பரிசீலனை பண்ணலாம்னா!' என்று இழுத்தான்.

அவள் கையை உயர்த்தினாள்!

'பரவால்லை... அத்தான்! போனதைப் பத்தி இனி நம்ம அலச வேண்டாம். எப்படியோ... அம்மா எனக்குக் கவிதான்னு ஒருமக இருக்கான்னு உயில்ல ஒத்துக்கிட்டாங்களே... அதுவே போதும்' என்றாள்.

சந்திரமோகனும் உமாவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

'கவி!' என்றான் சந்திரமோகன்.

'ம்...!'

'கவி! இந்த டைவர்ஸே ஆனாலும் கூட நீயும், நானும் எப்பவும் உறவுக்காரங்கதான். நீ எனக்கு அத்தை மக தான்... நான் உனக்கு மாமன் மகன்தான். நீ வேற எப்படி லைஃப்ல செட்டிலானாலும்... எப்பவும் என் உதவி கேக்கலாம்' என்றான்.

அவன் எதிர்பாராத விதமாக அவள் கண்கள் துடித்தன. அழுகை பெருக்கெடுத்துக் கொண்டு வந்தது.

அவன் மார்பில் சாய்ந்தாள். 'அம்மா... அம்மாவை... நான் ரொம்பக் கஷ்டப்படுத்தினேன்... அம்மாவுக்கு... நான் நல்ல மகளாவே இருக்கலை... இல்லே...!' என்றாள்.

வெடித்து அழுதாள்.

சந்திரமோகன் கண்களிலும் கண்ணீர் நிறைந்தது. உமாவும் அழுதாள்.

'சரி.. விடு போனது போகட்டும். இப்பக் கூட லேட்டாவில்லை' என்று அவன் ஆரம்பிக்கும்போது உமா தனிமை கொடுத்து நகர்ந்தாள்.

'வேண்டாம்... அத்தான்! என்னோட சுபாவம் உங்களுக்கு ஒத்து வராது.

கண்டிப்பா... நீங்க என்னோட நிம்மதியா இருக்க முடியாது.... அதோட உங்களுக்கு என்மேலே பெரிய ஈடுபாடு இல்லேன்னு எனக்குத் தெரியும்' என்றாள்.

ஒரு நண்பனைப் போல அவள் தலையைக் கோதிக் கொடுத்தான்.

அவள் அழுது ஓய்ந்தாள். சற்றுநேரம் எதிரெதிர் சோபாவில் அமர்ந்தார்கள்.

'இப்பப் பொறுமையாப் பேசற மாதிரி எப்பவும் இருந்திருந்தா... ஒருவேளை நமக்குள்ளே... ஃபிரண்ட்ஷிப் கூட டெவலப் ஆயிருக்கலாம்...' என்று அவன் பெருமூச்சு விட்டான்.

அவள் எதுவும் சொல்லவில்லை. பிறகு பொதுப்படையாக அத்தையைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

'சரிம்மா... நான் அப்புறமா உன்னைப் பார்க்கறேன்...' என்று எழுந்தான்.

அப்போது அவள் அறை போன் அடித்தது. எழுந்தாள்.

'ஹலோ கேத்ரீன் பேசறேன்... கவிதா இருக்காளா? ...ன் செமெண்ட் பற்றி அவகிட்டே பேசணும்' என்று ...லைத்தில் ஒரு குரல் கேட்டது.



சந்திரமோகன் முகம் இறுகியது. அவளிடம் போன் நீட்டினான்.

அறையை விட்டு சரேலென்று வெளியேறினான்.

* * *

ஞாயிற்றுக் கிழமை!

இன்னமும் சந்திரமோகன் அந்தப் பக்கத்து பங்களாவில் தான் இருந்தான்.

உமாவோ, உறவினர்களோ வந்தால்தான் இங்கே வருவான்.

அன்றைக்கு உமாவும், சபாபதியும் வந்தார்கள். பத்து மணிவாக்கில் டாக்டர். விஸ்வநாத் விசாலாட்சியும் வந்து இறங்கினார்கள்.

சிவகாமியின் மறைவின் போது அவர்கள் வரவில்லை என்ற கேள்வி அவள் மனதுக்குள் ஓடிக் கொண்டிருந்தது. எப்படியும் இரண்டு மூன்று நாட்களுக்கு ஒருமுறையாவது விஸ்வநாதன் பேசுவார். கடந்த மாதத்தில் சரியாகப் பேசவும் இல்லை.

ஒருவேளை அவர்களோட திருச்சிக்கு வரவில்லை என்று கோபம் போலும் என்றெண்ணிக் கொண்டாள்.

இன்றைக்கும் வந்தவர்கள் கலகலப்பாகப் பேசவில்லை. ஒரு மணி நேரம் இருந்திருப்பார்கள். சந்திரமோகனிடம் துக்கம் விசாரித்து விட்டுக் கிளம்பி விட்டார்கள்.

'அடுத்த வாரம் போன் பண்றேன்டி பொண்ணு' என்று போனார் விசாலாட்சி.

வாணிக்கு வருத்தமானது.

சந்திரமோகனிடம் கேட்டாள் 'சார்! டாக்டருக்கும் ஆன்ட்டிக்கும் என் மேல கோபம் போல இருக்கு?' என்றாள்.

'எதுக்கு?!' என்றாள்.

'இல்லே! திருச்சிக்கு அவங்களோட வரமாட்டேன்னு சொன்னேனே... அதனால...'

'அப்படியெல்லாம்... இல்லே! அங்கே!' என்று ஏதோ சொல்ல வந்தவன் நிறுத்திக் கொண்டான்.

'என்ன விஷயம்!' என்றாள் வாணி கவலையுடன்.

'இல்லே! அங்க சொத்துப் பிரச்சினை ஏதோ போல இருக்கு. ஹாஸ்பிட்டல்லயும் ஏதோ பிராப்ளமாம். அடிக்கடி என்கிட்டே பேசறாரு... உன்கிட்டே சொல்ல வேண்டாம்னாரு...' என்றான்.

'ஓ...!' என்றாள். உடனே அவன் ஆறுதல் சொல்வது போல,

'சீக்கிரம் சரியாயிடும் பாரு!' என்றான்.

'ஓ!' என்று அவள் சமாதானமாகிக் கொள்வதைப் பரிவுடன் பார்த்தான்.

நகர முற்பட்டவளை அவன் மெல்லிய குரல் தடுத்து நிறுத்தியது.

'வாணி!' என்றான்.

'ம்...!'

'அத்தை... சாகறதுக்கு முன்னாடி உன்கிட்டே காதுல ஏதோ சொன்னாங்களே... என்ன சொன்னாங்க?'

'சோனாவை நல்லாப் பார்த்துக்கச் சொன்னாங்க!' என்றாள்.

'ம்... பொய் சொல்றே!' என்றான்.

அவன் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

'அவசியம் வரும்போது சொல்றேன்' என்றாள். போய் விட்டாள். அவன் பார்வை அவளைத் தொடர்ந்தது.





# 19

'அண்ணனும், அண்ணியும் சமாதானமாயிடுவாங்க போல இருக்கு' என்று உமா சொன்ன போது வாணிக்கு ஒருபுறம் மகிழ்ச்சியாக இருந்தது. ஒரு புறம் ஏதோ ஒரு இழப்பு ஏற்பட்டாற் போலவும் இருந்தது.

'நல்லதுதானே! எல்லாக் குழப்பத்துக்கும் முடிவு வந்திருமில்லே!' என்றாள் வாணி.

'ஆனா, கவிதா..! இப்ப அமைதியா இருக்கற மாதிரி இத்தனை நாளும் இருந்திருந்தா அத்தை இன்னும் கொஞ்ச நாள் இருந்திருப்பாங்க இல்லே! அண்ணனும் நிம்மதியா இருந்திருப்பாங்க இல்லே!' என்றாள் உமா.

'அது உண்மைதான்...' என்று வாணி ஒத்துக் கொண்டாள்.

'எனக்கென்னமோ, அம்மா போன சோகத்துல அண்ணி கொஞ்சம் சாஃப்ட்டாயிருக்காங்கன்னு தோணுது. அது மட்டுமில்லே... இன்னொரு சந்தேகமும் இருக்குது. இப்ப எல்லா சொத்தும் அண்ணன் பொறுப்பிலே இருக்கு... அண்ணன் தயவு இல்லாம எதுவும் நடக்காது. அதுக்காகவும் நடிப்பாளாயிருக்கும்...' என்றாள்.

வாணி சற்று நேரம் உமாவை வெறித்துப் பார்த்தாள்.

'உமாக்கா... இப்படியெல்லாம்... யாரையும் நீங்க குறை சொல்லி நான் கேட்டதேயில்லை' என்றாள்.

உமா சற்று நேரம் அமைதியாகி விட்டாள்.

'ஆமா... அது என் நேச்சரே இல்லை... ஆனா... உனக்குத் தெரியாது வாணி, எங்க அண்ணன் வாழ்க்கையே

இவனால கெட்டுப் போச்சு. ஏதோ இந்தக் குழந்தைன்னு ஒண்ணு பொறந்துச்சே தவிர, அவரு சந்தோஷமா இருந்து நான் பார்க்கலை. இப்பதானே தெரியுது அத்தையோட மன நிம்மதிக்காக இந்தப் பெண்ணை அவரு கல்யாணம் பண்ணியிருக்காருன்னு. எங்கப்பாவையும் அம்மாவையும் பகைச்சுகிட்டு... எல்லாரையும் விட்டு விலகி... சே... ரொம்பக் கஷ்டப்பட்டுட்டாரு. ஆனா, அந்த அளவுக்குக் கவிதா அண்ணிக்குத் தகுதியில்லே...' என்றாள் உமா கோபமாக.

வாணியும் அந்தக் கருத்தைப் பகிர்ந்து கொண்டாள். ஆனால் வெளிப்படையாகச் சொல்லவில்லை.

'தகுதியிருக்கோ இல்லையோ நல்ல அதிர்ஷ்டம் இருக்கு...!' என்றாள் வாணி.

'அதைச் சொல்லு!' என்றாள் உமா.

அதே நேரம் வீட்டுக்கு முன்னால் விளையாடிய குழந்தைகள் கார் மூச்சென்று கத்திக் கொண்டு உள்ளே வந்தார்கள். ராஜா வாணியின் மடியிலும், சோனா உமாவின் மடியிலும் பொத்தென்று உட்கார்ந்தார்கள்.

அதே நேரம் சந்திரமோகனும் உள்ளே வந்தான்.

'என்னம்மா மகளிர் மாநாடா?' என்று சிரித்தபடி அமர்ந்தான்.

'போடா! எங்கப்பாதான் ஹீரோ!' என்றாள் சோனா.

'போடி... எங்கப்பாதான் ஹீரோ! என்றான் ராஜா.

'சரி... சரி... ரெண்டு பேருமே ஹீரோதான் சரியா...' என்றாள் வாணி.

அதற்குள் சோனாவின் கவனம் மாறியது. 'உமாத்தை! சிவகாமிப் பாட்டி எப்ப வருவாங்க. நான் அவங்களைப் பார்க்கணும்!' என்றாள்.



எல்லாரும் மௌனமாகி விட்டார்கள். அதே சமயம் மாடியில் இருந்து இறங்கி வந்து சோபாவில் அமர்ந்தாள் கவிதா.

வாணி சொன்னாள் 'சோனா! பாட்டி சாமிகிட்டே போயிருக்காங்க... நம்மகிட்டே வரமாட்டாங்க... ஆனா அவங்க நம்மளைப் பார்த்துகிட்டிருக்காங்க...'

'எப்படி... டி.வி. மாதிரியா?' என்றாள் சோனா.

எல்லாரும் புரியாமல் விழித்தார்கள். குழந்தையே விளக்கம் சொன்னாள்.

'இப்போ... டி.வி.யில வர்றவங்களை நாம பார்க்கறோம். அவங்க நம்மளைப் பார்க்க முடியாதில்லையா?' என்றாள்.

எல்லார் முகத்திலும் புன்னகை மலர்ந்தது.

'ஐயோ! எவ்வளவு அறிவாப் பேசறிடி...' என்றாள் உமா... எடுத்துக் கொஞ்சினாள்.

'நான் யாரு! சிவகாமியோட பேத்தியில்லே!' என்றாள் சோனா.

சிவகாமி அவளைக் கொஞ்சும்போது அடிக்கடி அப்படிச் சொல்லுவார். அவள் அதே பாணியில் சொல்லவும் எல்லாரும் சந்தோஷமாகவும் துக்கமாகவும் சிரித்தார்கள்.

குழந்தை எதிர்பாராத விதமாக ஒரு குண்டைப் போட்டாள்.

'அப்பா... நம்ம மம்மி பாட்டிகிட்டே சண்டை போடாம இருந்திருந்தா... பாட்டி செத்திருக்க மாட்டாங்கன்னு... பேசிக்கறாங்க...' என்றாள்.

'யாரு?'

'பண்ணையத்து ஆளுங்க...!' என்றாள் சோனா.

கனத்த மௌனம் நிலவியது.

சட்டென்று கவிதா குழந்தையை எடுத்து தன் மடியில் அமர்த்திக் கொண்டாள்.

'சோனாக் குட்டி! அம்மா பாட்டிகிட்டே சண்டை போட்டது தப்புத்தான். ஆனா, பாட்டி சாகணும்னெல்லாம் நினைச்சுச் சண்டை போடல்லே' என்று விளக்கம் சொன்னாள்.

குனிந்து குழந்தையின் இரு கன்னங்களிலும் முத்தம் வைத்தாள்.

அதற்குள் குழந்தை நழுவிக் கொண்டு ஓடியது. கவிதா ஏதோ இயல்பாகப் பேசுவது போல் பேசவும் அவர்களும் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்கள். ஆனால், சந்திரமோகன் மெதுவாக நழுவிக் கொண்டான்.

* * *

முதன் முதலாகத் தன்னைக் குறித்து யோசிக்கலானாள் கவிதா.

அவளுக்கு அம்மாவின் சாவு ஒரு அதிர்ச்சியாகத்தான் இருந்தது. முதலில் அப்பாவின் சாவு. இப்போது அம்மாவின் சாவு. இரண்டுக்கும் தானும் ஒரு காரணம் என்று தோன்றியது.

இருவேறு கலாச்சாரங்களுக்கு இடையில் சிக்கிக் கொண்டதான் தான். இல்லையில்லை வேண்டுமென்று செய்யவில்லை. ஆனாலும் அதுவே காரணமாகிப் போனது.

வெளிநாடு சென்ற போது திடீரென்று கிடைத்த சுதந்திரமும், இங்கே எதிர்பார்க்கப்படுகின்ற கட்டுப்பாடும் இரண்டும் இரண்டுவித முனைகளில் இருந்தன. இடையில் தான் சிக்கிக் கொண்டதுதான் வம்பாகிப் போனது. ஆனால், சந்திரமோகனை நினைத்தபோது அவளுக்கு. அவன் கட்டுப்பாடு, உழைப்பு முக்கியமாக சுய ஒழுங்கு... எவ்வளவு அற்புதமானவன். ஆனால், அவன் மனத்தில்



தன்னால் இடம் பிடிக்க முடியவில்லை. தன்னுடைய அதிகமான அழகு அவனை எந்த விதத்திலும் அசைத்துப் பார்க்க முடியவில்லை என்பது புரிந்தது.

சோனாவின் மீது எந்த அளவுக்குப் பாசம் வைத்திருந்தான் என்பதும் புரிந்தது. ஆனால் இப்போதெல்லாம் நெருங்க முடியாத அளவுக்கு ஒரு கோடு போட்டு விடுகிறான் என்று தோன்றியது.

நீண்டதொரு பெருமூச்சு விட்டாள்.

போன் மணியடித்தது. எடுத்தாள். அந்தப் பக்கம் கேத்ரீனுடைய குரல் கேட்டது.

'ஹாய் கேத்ரீன்! ஸைமெண்ட் எப்படி இருக்கிறான்!' என்றாள்.

கேத்ரீன் இறுகிய குரலில் சொன்னாள்.

'ஸைமெண்ட் செத்துப்போயிட்டான்.' என்றாள்.

'வ்வாட்!' என்றாள் அதிர்ச்சியில்.

'ஆமா... அவன் செத்துப் போய் ரெண்டு நாளாச்சு...'

'நீ என்னமோ லேசா உடம்பு சரியில்லேன்னுதானே... சொன்னே?' என்றாள் இறங்கிய குரலில்.

'லேசாத்தான் நானும் நெனச்சேன். பட் சம்திங் சீரியஸ்...' என்று மேலும் மேலும் அவள் பேசப் பேச கவிதாவின் முகம் இருண்டு போனது.

'யு மீன்... இட்?'

'ஐ ம் வெரிமச் சீரியஸ்... அபவுட் இட்!' என்ற கேத்ரீன் போனை வைத்தாள்.

கவிதாவின் முகம் இருண்டு போனது மட்டும் அல்லாமல் உலகமே இருண்டு போனாற்போல் உணர்ந்தாள்.

'யாரிடமாவது ஆறுதல் கிடைத்தால் தேவலை!' என்று தோன்றியது.

எழுந்தாள்.

அவசரமாகப் புடவைக்கு மாறினாள்.

மாடிப்படிகளில் தடதடவென்று இறங்கினாள்.

* * *

'ஏன்... வாணி ஆன்ட்டி! இந்த சிந்துபாத் ஒவ்வொரு இடமாய்ப் போய் மாட்டிக்கறான்... பாவம்... இல்லே!' என்று கேட்டுக் கொண்டிருந்தாள் சோனா...

'சிந்துபாத் வாணிகம் செய்தவன். அவன் போய்த்தானே தீரணும். அதுவுமில்லாம தைரியமானவர்களுக்குக் கஷ்டத்தை சந்திக்கிறதுதான் பிடிக்கும். பாரேன் ஒவ்வொரு கண்டத்தில இருந்தும் ஜெயிச்சுட்டு வந்துர்றானா... இல்லையா?' என்றாள்.

'ஆமா...!' என்றாள் சோனா.

'அந்தக் கரடி மாதிரி மனுஷன்கிட்டே மாட்டிகிட்டுத் தப்பிச்சானே... அந்தக் கதை சொல்லுங்க. வாணி... ஆன்ட்டி...!' என்றாள்.

சொன்னாள்... கதை கேட்டபடி குழந்தை ஆழ்ந்து உறங்கும்வரை.

நிர்மலமான முகத்தில் குனிந்து முத்தமிட்டு விட்டு விலகி எழுந்தாள்.

சுந்தரம்மா அறைக்கே கொண்டு வந்து வைத்திருந்த ...பனை சாப்பிட்டாள். கை கழுவி விட்டு நிமிர்ற போது ...ன்னல் வழியாக அந்தக் காட்சியைக் கண்டாள்.

கவிதா... அந்த நிலவொளியில் ஏதோ தேவதை போல் ...ந்து சந்திரமோகன் தங்கியிருக்கும் அந்த பங்களாவை ...க்கிப் போய்க் கொண்டிருந்தாள்.



வாணி மெல்லப் புன்னகைத்துக் கொண்டாள்.

'என்ன இருந்தாலும் கவிதா அழகுதான்' என்று எண்ணிக் கொண்டாள்.

சந்திரமோகனைப் போல ஒருவருடைய மனதில் இடம் கிடைத்ததே பெரிய விஷயம்தான் என்று தோன்றியது. ஒரு நேரம் அவனை நினைத்தால் பெருமையாக இருந்தது. பெரிதாகப் பிரியம் இல்லையென்ற போதும் கவிதாவை அத்தைக்காக ஏற்றுக் கொண்டது. அதோடு இல்லாமல் அவளது குற்றங்களையெல்லாம் பொறுத்துக் கொண்டது.

'நீங்க அவங்களோடதான் வாழணும். அதுதான் நியாயம். குழந்தைக்கும் நல்லது என்று, தான் சொன்னதை ஏற்றுக் கொண்டது.

வேறொரு பெண் தன்னிடத்தில் இருந்திருந்தால் தனக்குக் கிடைத்த அதிர்ஷ்டத்தைக் காப்பாற்றிக் கொள்ளத்தான் முயற்சித்திருப்பாள். ஆனால், தனக்கு ஏன் அப்படி சுயநலமாகவே நினைக்க வேண்டும் என்று தோன்றவில்லை.

'இனிமேலும் அங்கு நின்று அதைப் பார்த்து என்ன ஆகப் போகிறது' என்று எண்ணிக் கொண்டு படுக்கைக்குத் திரும்பினாள்.

கவிதா மட்டும் கொஞ்சம் நீக்குப் போக்காய் நடந்து விட்டால் மீண்டும் அவள் பழைய வாழ்க்கைக்கே போய் விடுவான் என்று தோன்றியது. ஒரு பக்கம் மனம் கனத்தது. ஆனால், தான் ஒருத்தி கெட்டாலும் பரவாயில்லை. ஒரு குடும்பம் கெட்டு விடக் கூடாது என்று எண்ணிக் கொண்டாள்.

புரண்டு, புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள்.

* * *

அதே நேரம்!

லாப் டாப்பை டேபிளின் மேல் வைத்துக் கொண்டு வேலையில் ஆழ்ந்து போயிருந்தான் சந்திரமோகன். தன் அறை வாசலில் நின்று கொண்டிருந்த கவிதாவைப் பார்த்தான்.

'கவிதா!' என்றான் ஆச்சரியமாக.

'உள்ளே வரலாமா?' என்றாள்.

'வா...!' என்றான். அவள் முகம் இருண்டு போய்க் கிடந்தது.

'வந்து... வந்து...' என்று தடுமாறினாள்.

அவன் எழுந்து வந்தான்.

கவிதா நாக்கு வறண்டாற்போல் உணர்ந்தாள்.

'எனக்கு தண்ணி... வேணும்' என்றாள்.

அவன் உடனே தண்ணீரை ஒரு டம்ளரில் கொடுக்க வாங்கி மடக் மடக்கென்று குடித்தாள்.

பிறகு அவன் முகம் பார்த்தாள். பீதியில் முகம் வெளுத்துக் கிடந்தது.

'என்ன கவிதா!' என்றான் ஆதுரத்தோடு.

'ஹேமெண்ட்... ஹேமெண்ட்... செத்துப் போயிட் டான்' என்றாள்.

அவன் ஒரு நிமிடம் திகைத்தான்.

'ஓ! என்ன இருந்தாலும் நண்பனாயிற்றே...! அதனால் அதிர்ச்சியாய் இருக்கு!' என்று எண்ணிக் கொண்டான்.

'இரு வர்றேன்!' என்று லாப் டாப்பை மூடி வைத்து விட்டு எதிரில் உட்கார்ந்தான்.



'ஏன்... நல்லாத்தானே... இருந்தான்?!'

'ம்...!' என்றாள்.

'என்ன வயசிருக்கும்?' என்று பேச்சுக் கொடுத்தான்.

'உங்க... உங்க... வயசுதான் இருக்கும்!' என்றாள் குழறலாக.

'ஓ! ... என்றான். பிறகு அவளுக்கு ஆறுதல் சொல்வது போல்

'ஃபிரண்ட் போனது உனக்கு அதிர்ச்சியாய்தான். இருக்கும். ஆனா... என்ன செய்யறது? எப்படி ஆச்சாம்...? ஆக்ஸிடெண்ட் ஏதாவது... என்று இழுத்து நிறுத்தினான்.

'இல்லை' என்பது போல் குறுக்காகத் தலையாட்டினாள். பிறகு சொன்னாள். அந்தப் பதில் அவனையும் திடுக்கிடச் செய்தது.

சட்டென்று எழுந்து வந்தாள். அவன் வயிற்றில் முகத்தைப் புதைத்துக் கொண்டு கேவிக் கேவி அழுதாள்.

'நாலு மாசத்துக்கு முன்னாடி நல்லா இருந்தானே!' என்றவள் நிறுத்தி விட்டு மறுபடியும் பீதியுடன் அவன் முகம் பார்த்தாள்.

அவன் தவிர்க்க முடியாத அந்தக் கேள்வியைக் கேட்டான். இப்படி ஒரு கேள்வியை எந்த ஒரு கணவனும் மனைவியிடம் கேட்கிற நிலைமை ஏற்பட்டு விடக் கூடாது என்று நொந்து கொண்டவனாய் அந்தக் கேள்வியைக் கேட்டான்.

அவள் சொன்ன பதில் அவனை நிலை குலையச் செய்தது.

பேச்சற்றுப் போய் வெகு நேரம் நின்று கொண்டிருந்தான்!

வெகு நேரம் கழித்து மனைவியைத் தோளில் சாய்த்துக் கொண்டு அழைத்து வந்தான்.

அவர்கள் பின் கட்டுக்குப் போகிற காட்சியை மறுபடியும் ஜன்னல் வழியாய்ப் பார்த்தாள் வாணி.

தன் வாழ்க்கைக்கான திறவுகோல் தொலைந்து போய் விட்டாற்போல் உணர்ந்தாள் என்றால் சந்திரமோகன் ஒரு சலிப்பில் இருந்தான்.

'இன்னும் வாழ்க்கை தனக்கு என்னதான் வைத்திருக்கிறது?' என்ற எண்ணம் தோன்றியது.

அவன் அவளை ஆசுவாசப் படுத்திவிட்டு நகர முயன்ற போது அவள் அவன் கையைப் பிடித்துக் கொண்டாள்.

'எனக்கு... எனக்கு... பயமாயிருக்கு!' என்றாள்.

மழையில் நனைந்த கோழிக்குஞ்சு போல் நடுங்குகிற அவளைப் பார்த்த கணத்தில் இரக்கம் மேலிட்டது.

'சரி... பயப்படாதே! வா இப்பவே பின்னாடி விங்லெ லாஸ்ட் ரூம்ல நீ தங்கு. நான் பக்கத்துலயே இருக்கேன்' என்று அழைத்து வந்தான்.

இரவு முழுதும் உறங்காமல் கழித்தான்.



20

**வா**ணி காலையில் எழுந்தவுடன் மனதைத் திடப் படுத்திக் கொண்டாள்.

'அவர்கள் இருவரும் ஒன்று சேர்ந்தால்... அதுதான் யோகம். இடையில் நுழைந்தவள் நான்தான். தூரத்தில் இருந்தபடி அவரைப் பார்த்துக் கொண்டிருக்கிற வாய்ப்புக் கிடைத்தால் அதுவே போதுமானது' என்று.



காலையில் எழுந்து தனது சின்னப் பூஜை அறையில் நின்று.

'இறைவா... இனிமேலாவது அவருக்கு நிம்மதியைக் கொடு...' என்று வேண்டிக் கொண்டாள். மனம் தெளிவானது.

வெளியே வந்தாள். அதே நேரம் சந்திரமோகனும் பின்கட்டில் இருந்து வந்தான். கண்கள் சிவந்து இருந்தன.

இரவு முழுவதும் பேசித் தீர்த்துக் கொண்டிருப்பார்கள் போலும் என்று எண்ணிக் கொண்டாள்.

'குட்மார்னிங் சார்!' என்றாள். புன்னகைத்தான்.

'குட்மார்னிங்!' என்றான். பிறகு 'வாணி உன்கிட்ட பேசணும்' என்றான்.

வெளியே போர்ட்டிகோவுக்கு அழைத்துப் போனான்.

'வாணி! உன்னோட செல்லில் இருந்து பேசி சபா... மச்சானை வரச் சொல்லு. உமாவுக்குத் தெரிய வேண்டாம்னு... சொல்லு... அது மட்டுமில்லே... வரும்போது ஏதோ யதேச்சையா வந்த மாதிரி சொல்லச் சொல்லு' என்றான்.

அவள் வியப்பாய்ப் பார்த்தாள்.

'ப்ளீஸ்! எதுவும் கேட்காதே!' என்றான்.

அவள் ஒன்றும் பேசவில்லை.

உடனடியாகத் தன் அறைக்குப் போய் செல்போன் எடுத்து சபாபதிக்கு போன் செய்தாள்.

சந்திரமோகன் மறுபடியும் பின்கட்டுப் பகுதிக்குப் போனான். அந்த நேரம் கவிதா அமர்ந்து உறங்கியிருந்தாள். சற்று நேரம் நின்று பார்த்தான். அவன் மனமும் உருகிப் போனது.

தலையே வெடித்து விடும்போல் உணர்ந்தான். தொடர்ந்து என்ன செய்வது என்றே புரியவில்லை.

சபாபதியிடம் எவ்வளவு தூரம் சொல்வது என்றே புரியவில்லை. ஆனால், இப்போதைக்கு நம்பிக்கைக்குரிய நெருங்கிய உறவினர் அவன்தான். சம வயதுக்காரன் வேறு என்பதால் எதையும் சொல்லலாம் அதோடு. மருத்துவத் துறையில் இருக்கிறான். ரகசியம் காப்பான் என்று தோன்றியது.

மறுபடியும் வெளியே வந்தான்.

'சுந்தரம்மா! கவிதாவுக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்லே... பார்த்துக்கங்க..!' என்றான்.

தான் தங்கியிருந்த பகுதிக்குப் போய்க் குளித்து விட்டு வந்தான். அங்கேயே உணவையும் கொண்டு வரச் சொல்லி சாப்பிட்டு விட்டு அவசரமாக வந்தான்.

பின்கட்டுப் பகுதிக்குப் போய் கவிதாவின் கட்டிலுக்கு எதிராக நேரில் அமர்ந்து கொண்டான்.

முகம் இறுக்கமாக இருந்தது.

ஒரு மணி நேரம் கழித்து சபாபதி வந்தபோது கவிதா விழித்து எழுந்திருந்தாள். முகம் வெளுத்துப் போய்க் டந்தது.

பயத்தில் உறைந்து போயிருந்தாள்.

'ஹலோ! மோகன் மச்சான் என்ன எங்கயும் போகலியா?' ன்றான்.

'வாங்க... வாங்க! எங்கே இந்த நேரத்துல...!' என்று ரவேற்றான்.

'சும்மா... இந்தப் பக்கம் ஒரு வேலையா வந்தேன்... அதான்... ா கூட... வர்லை பாருங்கள்...!' என்றான் சபாபதி.



'நல்லதாப் போச்சு... என்னமோ பாருங்க கவிதாவுக்கும் உடம்பு சரியில்லே...' என்றான்.

உடனே சபாபதி தனது காரில் இருந்து பெட்டியை எடுத்து வரச் செய்து பரிசோதித்தான். திரும்பி மச்சானைப் பார்த்தான்.

'மச்சான்... நல்ல ஃபீவர் இருக்கும் போல இருக்கு...' என்றான் மருந்து கொடுத்தான்.

'பாருங்க... ஃபீவர் சரியாகலேன்னா ஹாஸ்பிட்டல் கூட்டிட்டுப் போயிரலாம்' என்றான்.

'கவிதா... ஏதாவது பிரெட் மாதிரி லைட்டாச் சாப்பிட்டுட்டு. மாத்திரை சாப்பிடு...' என்று எழுதிக் கொடுத்தான்.

சுந்தரம்மா, 'நான் பாத்துக்கறங்கய்யா நீங்க போங்க...' என்றார்.

அவனுக்கும் களைப்பாக இருந்தது. உறக்கம் கண்களை அழுத்தியது. எனினும் சபாபதியை வழியனுப்புவதற்காக அவனுடன் போனான்.

காரில் ஏறும்போது சபாபதி சந்திரமோகனிடம் திரும்பி 'மச்சான் சாதாரணக் காய்ச்சல்தான்னு நினைக்கிறேன்' என்றான்.

சந்திரமோகனின் மௌனம் பார்த்து 'என்ன மச்சான் விஷயம்' என்றான்.

'மச்சான்... நீங்க நாளைக்கு வர முடியுமா? உங்ககிட்டே பேசணும்' என்றான்.

'ஓ... ஷ்யூர்! இன்னைக்கு மாதிரியா? இல்லை உமாவோடவா?'

'உமாகிட்டே எதுவும் சொல்ல வேண்டாம். நாம பேசிட்டு அப்புறம் முடிவு செய்யலாம்' என்றான்.

'விஷயம் ரொம்ப சீரியஸோ!'

'அப்படித்தான் நினைக்கறேன்.'

சபாபதி யோசனையுடன் காரில் ஏறினான். அவனை வழியனுப்பி விட்டுத் திரும்பினான். வாணி நின்று கொண்டிருந்தாள்.

'தாங்க்ஸ்... வாணி!' என்றான். பிறகு அவனே தொடர்ந்து.

'கவிதாவுக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்லை!' என்றான்.

'ஓ... எழுப்பியிருக்கலாமே... நான் ஹெல்ப்புக்கு வந்திருப்பேனே!' என்றாள்.

'அப்புறம்... குழந்தையை யார் பார்த்துக்கறது?'

'சார் இப்ப வேண்ணா சோனாவை ஸ்கூல்ல விட்டுட்டு வந்து நான்வேண்ணா அவங்களைப் பாத்துக்கறேன். நீங்க கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துட்டு வாங்க.'' என்றாள்.

அவன் மறுக்கவில்லை. 'தாங்க்ஸ்' என்று நடந்தான். நடந்தவன் திரும்பி வந்து 'வாணி! நீங்க ஹாஸ்பிட்டல்ல வேலை பார்த்திருக்கீங்க இல்லே!' என்றான்.

'ஆமா!' என்றாள்.

'அப்ப... தொத்து நோயுள்ள பேஷண்ட்டைக் கவனிக்கணும்ன்னா எப்படி நடந்துக்கணும்னு தெரியுமில்லே?'

'தெரியும்... சார்!'

'எதுக்கும் ஜாக்கிரதையாயிருந்துக்குங்க... கவிதாவுக்கு இருக்கிற ஃபீவர் ஒருவேளை தொத்துகிற டைப்பா... இருக்கலாம்...' என்றான்.

'சரிங்க... சார்!' என்றாள்.

சந்திரமோகன் கவனிக்காத வண்ணம் அவன் முகத்தை உற்று நோக்கினாள். முகத்தில் கவலை தெரிந்தது.



'என்ன இருந்தாலும் மனைவி அல்லவா? தான் ஆடா விட்டாலும் தன் சதை ஆடுமல்லவா?' என்று எண்ணிக் கொண்டே கவிதாவின் அறையை நோக்கி நடந்தாள்.

★ ★ ★

சீக்கிரமே காய்ச்சல் சரியாகி விட்டது ஆனால் கவிதா மிகவும் களைப்பாக உணர்ந்தாள்.

சுந்தரம்மா மிகவும் பரிவுடன் கவனித்துக் கொண்டார். உமா, அமுதவல்லி எல்லாரும் அடிக்கடி வந்து பார்த்து விட்டுப் போனார்கள்.

அமுதவல்லி மகனிடம் 'தம்பி, என்னதான் அழுத்தக்காரி மாதிரி காட்டிக்கிட்டாலும் அவளுக்கும் பாசம் இருக்குப்பா... சிவகாமி போனதுல அவளுக்கும் அதிர்ச்சி இருக்குப்பா!' என்றார்.

அவன் அமைதியாகத் தலையாட்டினான்.

'என்ன செய்யறது! குணம் கெட்டுப் போயிட்டா... இருந் தாலும் இந்த நேரத்துல எந்தக் கோபமும் காட்டாதப்பா.' என்றார்.

அவன் மறுபடியும் சரியென்பது போல் தலையாட்டிக் கொண்டான்.

சென்ற முறை தன் வேண்டுகோளுக்கிணங்க சபாபதி வருவதற்குள்ளாக சந்திரமோகன் யோசித்தான். சந்தேகத் தின் அடிப்படையில் எதற்காகப் பிரச்சினையைக் கிளப்ப வேண்டும். பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணிக் கொண்டான். ஆனாலும் அந்தக் ஸ்டேட்மெண்ட் இறந்ததைச் சொல்லி விட்டுக் கவிதா அழுததும், அவளது பீதி நிறைந்த முகமும் கண்ணுக்குள் வந்து வந்து போனது.

ஏற்கனவே தளர்ந்து போயிருந்தது போதாது என்று பதினைந்து நாட்களுக்குள்ளாக மறுபடியும் காய்ச்சல் வந்

போது சந்திரமோகன் இனித் தாமதம் செய்வதற்கில்லை என உணர்ந்தான்.

காரை எடுத்துக் கொண்டு பிற்பகல் நேரத்தில் சபாபதிக்கு சற்று ஓய்வு கிடைக்கிற நேரத்தில் போனான்.

'சபா!' என்றான்.

'என்ன மச்சான்?'

'சபா! கவிதாவுக்கு ஏதாவும் பிரச்சினை இருக்குமோன்னு தோணுது. எல்லா டெஸ்டும் பாத்துடுவோம்...' என்றான்.

'அதுக்கென்ன? பாத்தாப் போகுது' என்றான். 'நானும் நினைச்சேன்... ஒருவேளை மலேரியாவோ டைஃபாய்டோ இருக்குமோ... என்னவோ... பார்த்துடுவோம்..!'

'அப்புறம்..?!' என்று சந்திரமோகன் இழுத்தான். 'சொல்லுங்க மச்சான்!'

'எலைசா... டெஸ்ட்... அதையும்... பண்ணிப் பாத்துடுவோம்...' என்றான்.

சபாபதி வெறித்துப் பார்த்தான். சந்திரமோகன் வேறு பக்கம் பார்த்தான்.

'ஒரு ஆறேழு மாசத்துக்கு முன்னால டெல்லி போயிட்டு வந்தா... இல்ல... அப்ப இவங்க கூட சுத்திட்டு இருந்த ஹேமெண்ட் பத்திருபது நாளைக்கு முன்னால இறந்து போயிட்டான். அவனுக்கு ஹெச்.ஐ.வி. பாசிட்டிவ்' என்றான்.

'ஓ!...'

சபாபதி மெல்லிய குரலில் கேட்டான் 'அந்த அளவுக்கு ஃப்ரெண்ட்ஷிப் இருந்திருக்குமக்கறீங்களா?'

சந்திரமோகன் விரக்தியாகத் தோளைக் குலுக்கினான்.



''சபா... மச்சான்! உங்களை என் மச்சினனா நெனச்சு இங்கே வரலை. ஒரு நெருங்கின ஃப்ரெண்டா நினைச்சுத் தான்... இங்கே வந்திருக்கேன்... என்னுடைய மான அவமானங்களை நம்பிக்கை அவ நம்பிக்கைகளை உங்ககிட்டே பகிர்ந்துக்கணும்னு வந்திருக்கேன்.'

சபாபதி அவன் கையை அழுத்திக் கொடுத்தான்.

'மச்சினனாக மட்டுமல்ல... ஒரு டாக்டராகவும் உங்க நம்பிக்கையைக் காப்பாத்துவேன்...' என்றான் சபாபதி.

''தாங்க்ஸ்!' என்றான் சந்திரமோகன்.

'பிரச்சினையே என்னன்னா! கவிதா ஃபாரின்ல படிச்சவ... அங்கத்தி நாகரீகங்கள்ல ஒண்ணும் தப்பில் லேன்னு நினைக்கறவ. ஒண்ணுமில்லே டிரிங்ஸ் பழக்கமே ரொம்ப நார்மலான விஷயம்தான்னு வாதாடறவ... நம்ம கல்ச்சரே இங்கயே மாறிட்டு வருது 'அப்பமங்கறப்பா... பெரிசா... என்னால மாத்த முடியலே... வேண்டாம்னா... ரெஸ்ட்லெஸ்ஸா... ஆயிடுவா... மத்த விஷயங்கள்லே ஓரளவு கண்ட்ரோல் கொண்டு வந்தேன். ஆனா... போன தடவை ஏதோ கோபத்துல டெல்லி போறேன்னு போனா...! அங்க என்ன எழவு நடந்துச்சோ... தெரியலை! ஹேமெண்ட்டோட சாவுச் செய்தி கேட்டு ரொம்பப் பயந்துட்டா... இதை எப்படி அவகிட்டே கேக்கறது.'

சபாபதி இரக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான். மைத்துனனின் வேதனை அவனுக்குப் புரிந்தது.

சந்திரமோகன் அவமான உணர்வுடன் முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டான். பிறகு சொன்னான்.

'கேட்டேன்! அந்த எழவையும்தான் கேட்டேன்!' என்றான்.

ஒரு நிமிடம் வேறெங்கோ பார்த்தான். பற்களை அழுந்தக் கடித்துக் கொண்டான் பிறகு சொன்னான்.

''ஏதோ நடந்தமாதிரிதான் சொன்னா!' என்றான்.

சபாபதி உண்மையாகவே திடுக்கிட்டான்.

'மச்சான்! இப்படிப்பட்ட லைஃப் உங்களுக்கு எதுக்கு மச்சான்?' என்றான் கடுப்பாக. சந்திரமோகன் மறுபடியும் வெளியே பார்த்தான்.

'எனக்குத் தெரியும்! எல்லாரும் இப்படித்தான் சொல்லு விங்கன்னு! ஆனா, அந்தக் குழந்தை சோனாவை நினைக்கப் பாருங்க... அதுக்காக... அதுக்காகத்தான்' என்றான்.

சபாபதி நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

அவளை ஒழுங்கு படுத்தணும்னு எவ்வளவோ முயற்சி செஞ்சேன்... ஒத்து வரலை. இப்பத் தன் தலையில தானே மண்ணை வாரிப் போட்டுக்கிட்டாளோன்னு சந்தேகமா இருக்கு!' என்றான் சந்திரமோகன் வருத்தம் மிகுந்த குரலில்.

'மச்சான்! ஒரு மனுஷன் உறவுக்காக - பாசத்துக்காக எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவு செஞ்சிருக்கீங்க. டைவர்ஸை வாங்கிட்டு சனியனை ஃபாரினுக்கே அனுப்பி விடுங்க!' என்றான்.

'முதல்லே எப்படியாவது டெஸ்ட் பண்ற வழியைப் பாருங்க!' என்றான் சந்திரமோகன்.

'ஆமா... அதுல இதுல பாஸிடிவ்னு வந்தா அதை வச்சுகிட்டே... தொலைச்சுக் கட்டலாம்... ' என்றான் சபாபதி. ஆனால், அதற்கு சந்திரமோகன் சொன்ன பதிலைக் கேட்டு சபாபதி உண்மையாகவே கோபத்தின் எல்லைக்குப் போனான்.

'மச்சான்! உங்களுக்கு நிஜமாவே அறிவுன்னு ஒன்னு இருக்கா? அது ஒழுங்காத்தான் வேலை செய்யுதா?' என்றான்.



அதற்கும் ஒரு பதிலை சந்திரமோகன் சொன்னான். சொல்லி விட்டு உடனடியாக வெளியேறிவிட்டான். ஆனால், சபாபதி வெகு நேரம் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்துவிட்டான்.



## 21

அறை வாயிலில் கவிதா நின்றாள்.

தனது லேப்டாப்பை டேபிளின் மேல் வைத்து வேலை செய்து கொண்டிருந்த சந்திரமோகன் அவளைப் பார்த்தவுடன்,

'என்ன கவிதா?! உள்ளே வா!' என்றான்.

உள்ளே வந்தாள். அவனும் எழுந்து நின்றான். சட்டென்று அவன் மார்பில் சாய்ந்து அழுதாள்.

'என்னம்மா!' என்றான்.

'கேத்ரீன்... கேத்ரீனும் பாஸிட்டிவ் அவே!' என்றாள்.

'ஓ!' என்றான் சந்திரமோகன். சற்று நேரம் தலையைக் கோதிக் கொடுத்தான். என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

ஆசுவாசப்படுத்தினான். அவளே பேசினாள்.

'அந்த ஸ்கௌண்ட்ரல்... எதுவுமே யாருக்குமே சொல்லலை. ஆனா, அவனுக்குத் தெரிஞ்சிருக்கு. கேத்ரீனும் ஏமாந்துட்டா... அடுத்து... அடுத்து... நான்தான்..!' என்று அழுதாள்.

'உனக்கு இதெல்லாம் யாரு சொன்னா?' என்றான்.

'கேத்ரீன்... போன மாசம் பேசினா இல்ல... அப்ப சொன்னா... ஹஸ்மெண்டுக்கு எச்.ஐ.வி. பாஸிடிவ்னு

தெரிஞ்ச உடனே கேத்ரீனுக்கு பயமாயிடுச்சு... உடனே... அவளும் டெஸ்ட்... செஞ்சு பாத்திருக்கா...' என்றாள் மறுபடியும் அழுதாள்.

அவனுக்குக் கோபமும், வருத்தமும் ஒரு சேர வந்தது.

'என்னை அவமானப் படுத்தறதா நினைச்சுகிட்டு... இப்படிப் போய் செஞ்சுட்டியே...' என்று கண்கலங்கினான். சற்று நேரம் இதையே திரும்பத் திரும்பப் பேசினார்கள்.

'சரி... இப்பவும்... என்ன? டெஸ்ட் செஞ்சு பாத்துட்டுத் தானே முடிவுக்கு வரணும்? கவிதா... நான் சொல்றதைக் கேளு... எய்ட்ஸ்ன்னு தெரிஞ்சதுக்கப்புறமும்... பத்து வருஷம், பதினைந்து வருஷமும், உயிரோட இருக்கறவங்க இருக்காங்க... நல்ல ஹெல்த்தியா இருக்கறேன்னு நினைச் சுக்கறவங்க கூட திடீர்ன்னு செத்துப் போறதும்... உண்டு...' என்றான்.

அவள் கண்ணீரோடு புன்னகைத்தாள்.

'நீங்க எனக்கு ஆறுதலுக்கு சொல்றீங்க?' என்றாள்.

'இல்லம்மா... நிஜமாத்தான்!' என்றான்.

அவள் உச்சுக் கொட்டினாள்.

'யாருக்காக இருக்கணும்? எல்லாரும் என்னை வெறுத் துட்டாங்க... இனிமே இன்னும் என்னைக் கேவலமா நினைப்பீங்க...!' என்றாள்.

'நாங்க யாரும் உன்னை வெறுக்கலை. உன்னோட சில குணங்களைத்தான் வெறுத்தோம்... கவலைப்படாதே! உனக்கு என்ன பிரச்சினைன்னாலும் நான் கூட நிற்பேன்.'

கவிதா அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

'டைவர்ஸ் வாங்கினதுக்கப்புறமுமா?' என்றாள்.

'டைவர்ஸ்! ஓ! அது வேற இருக்கோ?' என்று எண்ணிக் கொண்டான்.



'அது என்ன செய்றதுன்னு அப்புறம்... பார்க்கலாம்... ஹஸ்பெண்ட் அண்ட் வைஃப் இல்லேன்னாலும் நீ எனக்கு அத்தை மகள் புரியுதா? உனக்கு மாரல் சப்போர்ட்... குடுக்கக் கடமைப் பட்டிருக்கேன்...!' என்றான்.

அவள் அவனை வெறித்துப் பார்த்தாள்.

'நிஜம்மா?! என்றாள்.

'நிஜமா?!' என்று புன்னகைத்தான்.

'அத்தான்!' என்று மறுபடியும் அவன் மார்பில் சாய்ந்து கொண்டு பொங்கிப் பொங்கி அழுதாள்.

அவன் தலையைத் தடவிக் கொண்டே சிந்தனையில் ஆழ்ந்தான்.

இப்போது சந்திரமோகன் கீழ்த்தளத்திலே பின்கட்டுக்கு வந்து விட்டான். கவிதாவும் கீழேயே தன் அறையை மாற்றிக் கொண்டாள்.

நேர் எதிர் எதிராக இருந்த அறைகளில் இருந்தார்கள்.

சோனா பின்கட்டை நோக்கி ஓடி வர சந்திரமோகன் வேலை நேரத்தில் டிஸ்டர்ப் செய்வாளோ என்ற எண்ணத்தில் பின்னாலேயே ஓடி வந்த வாணி அவர்கள் இருவரும் நின்ற நிலையைப் பார்த்துக் குழந்தையின் வாயைப் பொத்தித் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு அந்தப் பக்கம் நகர்ந்தாள்.

* * *

கவிதா யோசனையில் ஆழ்ந்திருந்தாள்.

ஜெரமெண்டின் துரோகம். கேத்ரீன் மறைந்த பரிதாபம் எல்லாமாக அவளைப் பயமுறுத்திவிட்டது. ஆனால் கேத்ரீன் சொன்னது இப்போதும் நினைவு வந்தது.

ஜெரமெண்டுக்கும். அவன் மனைவிக்கும் ஒரு வருடத் துக்கு முன்னால் விவாகரத்து ஆனதாம். அதில் ஜெரமெண்ட்

பெருந்தொகையைத் தன் மனைவிக்குக் கொடுக்க வேண்டி வந்ததாம்.

அதற்குப் பிறகு கண்டபடி சுற்றி அலைந்திருக்கிறான். அப்படித்தான் எங்கேயோ நோயைச் சம்பாதித்திருக்கிறான். ஆனால், தனக்கு ஹெச்.ஐ.வி. பாசிட்டிவ் என்று அவனுக்குத் தெரிந்திருக்கிறது. ஆனாலும் மறைத்து விட்டான்.

அது மட்டுமில்லாமல் தன் முன்னாள் மனைவியை பார்த்து அவளிடம் மன்னிப்புக் கேட்பது போல் நடித்து மறுபடியும் அவள் வீட்டிலேயே கொஞ்ச நாள் தங்கி அவளுக்கும் வேட்டு வைத்திருக்கிறான். பெண்களைப் பழி வாங்குவதாக நினைத்துக் கொண்டு தன்னால் இயன்ற மட்டும் பரப்பியிருக்கிறான். கவிதாவையும் நல்ல விதமாகப் பேசி டெல்லி வரவழைத்து பலவீனமான நேரத்தில் தன் காரியத்தை சாதித்துக் கொண்டிருக்கிறான்.

கவிதாவும் ஒரு விதத்தில் சந்திரமோகனைப் பழி வாங்குகிற மனப்பான்மையில் இருந்தாள் என்பதையும் நன்றாகப் புரிந்து கொண்டு பயன்படுத்திக் கொண்டு விட்டான்.

'அதென்ன உங்க ஊர்ல பெண்களை அடிமைகளா நினைக்கறாங்க... ஆண்கள் மட்டும் மத்த பெண்கள் கிட்டே பழகலாம். பெண்கள் பழகக் கூடாதா? நீயும் உன்னோட சம உரிமையை நிலை நாட்டணும். உனக்குன்னும் தனிப்பட்ட சந்தோஷங்கள் இருக்குன்னு நீயும் காட்டணும்' என்று அவன் அடித்த வேப்பிலையில் அவள் மயங்கியே போனாள்.

வேண்டு மட்டும் விஸ்கியை ஊற்றிக் கொடுத்து அவள் முழுவதுமாக சுயநினைவை இழந்த நிலையில் அவளும் இடம் கொடுத்தாள். முதல் முறை தவறு செய்த போது இருந்த பயம் அடுத்தடுத்த சமயங்களில் இல்லாமல் போய்விட்டது.



ஒரு வழியாக பத்து நாட்கள் கழித்து ஊருக்கு வந்த போது ஏதோ பெரிய காரியம் சாதித்து விட்ட மாதிரி நினைத்துவிட்டாள். ஆனால் அது எத்தனை விதமான பின் விளைவுகளை ஏற்படுத்திவிட்டது.

இப்போது நினைத்து என்ன செய்ய? கேத்ரீனுடைய கணவன் அவனுக்கு ஹெச்.ஐ.வி. பாசிட்டிவ் என்று தெரிந்தவுடனே முதல் வேலையாக தான் டெஸ்ட் செய்து பார்த்துக் கொண்டானாம். தனக்கு இல்லை என்ற தெரிந்தவுடனே தான் தப்பித்தால் போதுமானது என்று எண்ணிக் கொண்டு கேத்ரீனிடம் டைவர்ஸ் கேட்டானாம்.

கேத்ரீன் தனிமையில் தவித்துத்தான் இறந்து போனாளாம். அங்கேயே அப்படியென்றால் இங்கே தன்னை யார் ஏற்றுக் கொள்வார்கள்.

எதிர்காலத்தை நினைத்து அவளுக்கு பயமாய் இருந்தது.

சந்திரமோகன் நிலத்தைச் சுற்றிப் பார்க்கப் போயிருந்தான். என்ன பிரச்சினைகள் இருந்த போதும் அவன் தன் கடமைகளில் தவறுவதேயில்லை என்று நினைத்த போது அவளுக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது.

அந்த நேரம் அவளுடைய லாயரிடம் இருந்து போன் வந்தது.

எடுத்தாள்.

அந்தப்புறம் சொல்லப்பட்ட செய்தியைக் கேட்டுத் திகைத்துப் போய் அமர்ந்து விட்டாள்.

* * *

**வி**ளையாட்டுப் போல் ஒரு வாரம் ஓடியிருந்தது.

இப்போதெல்லாம் சந்திரமோகன் வாணி இருக்கும் திசையைக் கூடத் திரும்பிப் பார்ப்பதில்லை. அதற்கான வாய்ப்பும் இருக்கவில்லை.

வாணி சோனாவைக் கவனிப்பதோடு சரி, மற்ற இடங்களுக்குச் செல்வதையோ பேசுவதையோ தவிர்த்து விட்டாள்.

ஒருவகையில் அது கஷ்டமாக இருந்தாலும் மற்றொரு வகையில் அது வசதியாக இருந்தது.

ஆனால், உள்ளே வேதனை கனன்று கொண்டு இருந்தது.

இதோடு இரண்டு மூன்று முறை அந்தக் காட்சியை பார்த்துவிட்டாள்.

சந்திரமோகன் தனிமை நாடி வழக்கமாகக் கால்வாய்க் கரையில் அமர்ந்திருப்பானே அப்படி அமர்ந்திருப்பதை அப்போதெல்லாம் அவன் முகத்தில் எல்லையற்ற வேதனை தெரியும்.

பேசாமல் டைவர்ஸ் வாங்க அனுமதித்திருந்தால் எவ்வளவு சந்தோஷமாய் வைத்திருக்க முடியுமோ அப்படி வைத்திருப்பதே வாழ்க்கை என்று வாழ்ந்திருக்கலாம். தானே அவனை அவனுக்குப் பிடிக்காத அந்த வாழ்க்கைக்கு அனுப்பி வைத்துவிட்டோம் என்று தோன்றியது. ஆனால், என்ன செய்வது? சில பேருக்கு துன்பங்களை விழுங்கிக் கொள்வதே வாழ்க்கையாகிப் போகிறது என்பதை.

இன்றும் அதே போல் அமர்ந்திருந்தான். ஒரு காலை மடக்கி, ஒரு காலை நீட்டி இரண்டு கைகளையும் பின்னால் முட்டுக் கொடுத்து அமர்ந்திருப்பான்.

அவன் யாருமறியாத வண்ணம் அவனை முழுமையாக நின்று கவனிப்பது அந்த மாதிரி நேரங்களில்தான். இன்றும் அதே போல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அந்தக் காட்சியே ஏதோ சித்திரத்தில் எழுதினாற்போல் இருந்தது.



அவள் தங்கியிருந்த அந்தப் பெரிய பங்களாவுக்குப் பின்புறம் முன்பு அவன் தங்கியிருந்த அலுவலகக் கட்டிடம் இருந்தது. இவர்கள் கட்டிடத்திற்கு சற்று மேற்காக அந்தப் பெரிய ஆலமரம் இருந்தது.

அவளது அறையிலிருந்து குறுக்காக ஒரு கோடு வரைந்தால் அந்த அலுவலகக் கட்டித்திற்கும் சற்றுத் தள்ளி கால்வாய் ஓடுவது தெரியும். அதன் முன்பாக மணற்பாங்கான அந்த கரையில் அமர்ந்திருப்பான்.

அவள் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே சபாபதியும், உமாவும் அவனை நோக்கிச் செல்வது தெரிந்தது.

அவனுக்கு வலப்புறம் இரண்டு பேரும் அமர்வதும் தெரிந்தது.

வாணி நீண்டதொரு பெருமூச்சு விட்டு விட்டு மீண்டும் தன் படுக்கைக்குத் திரும்பினாள். சோனா அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். அவள் கன்னத்தில் முத்தமிட்டு விட்டு வழக்கமில்லாத வழக்கமாக ஒரு தூக்க மாத்திரையை விழுங்கி விட்டுப் படுத்தாள்.

* * *

'மச்சான்! டெஸ்ட் ரிசல்ட் வந்துடுச்சு!' என்றான் சபாபதி.

சந்திரமோகன் திடுக்கிட்டு அவனைப் பார்த்து விட்டுத் தங்கையையும் பார்த்தான்.

'சாரி! மச்சான்... உமாகிட்டே எல்லாத்தையும் சொல்லி விட்டேன்'' என்றான் சபாபதி.

'ஓ...!' என்றான் சந்திரமோகன் இறங்கிய குரலில்.

'இல்லே மச்சான்! இந்தப் பிரச்சினையில் லேடீஸ் கோ ஆப்பரேஷன் இல்லாம எதுவும் நடத்த முடியாது...' என்றான் விளக்கம் போல்.

சந்திரமோகன் ஒருவிதமான கையாலாகாத்தனத்துடன் தங்கையைப் பார்த்தான்.

'பயப்படாதீங்க... மச்சான்! அவளும் என்கூட ஹாஸ்பிட்டல் நிர்வாகத்துல எத்தனையோ பாத்துட்டா, அதில்லாம... என்னைக் காட்டிலும் அவளோட முடிவுகள் சில சமயத்துல பெட்டரா இருக்கும்.' என்றான் சபாபதி.

'ஓ.கே.... மச்சான்!' என்றவன் என்ன பதில் வரப் போகிறதோ என்ற அச்சத்துடனே கேட்டான்.

'மச்சான்! டெஸ்ட் ரிசல்ட்?!' சபாபதியும், உமாவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். பிறகு சபாபதி சொன்னான்.

'நீங்க சந்தேகப் பட்ட மாதிரித்தான்!' என்றான்.

அதைச் சொல்லும்போது அவன் முகத்திலும் சோகம் முற்றிலும் கவிந்திருந்தது.

'ஓ...' என்றான். பத்துப் பதினைந்து நிமிடங்கள் வரை யாரும் எதுவும் பேசவில்லை.

'அவளுக்குத் தெரியுமா?' என்றான்.

'தெரியாது!' என்றார்கள்.

'ஆனா, அண்ணியைப் பார்த்துட்டுத்தான் வர்றோம்' என்றாள் உமா.

'நீ டைவர்ஸ் கேஸை வாபஸ் வாங்கிட்டேன்னு ரொம்ப சந்தோஷத்துல இருக்காப்ல' என்றான்.

அவன் அவர்கள் இருவரையும் பார்க்கவில்லை. கைகள் மண்ணை அளைந்தன.

கண்கள் நேராக ஓடுகின்ற வாய்க்கால் நீரை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தன. பிறகு சொன்னான்.



'கஷ்டத்துல இருக்கறப்ப அவளை மேலும் வேதனைப் படுத்த வேண்டாம்னுதான், வாபஸ் வாங்கிட்டேன்... திமிரா முறைச்சுகிட்டு நிக்கற கவிதாவைத்தானே இதுவரை பார்த்திருக்கேன். இப்ப சிறகொடிஞ்சு போன பறவை மாதிரி பயந்து நிக்கிற அவளை மேலும் மேலும் வாட்டறதுக்கு நான் ஒண்ணும் மிருகமில்லையே...' என்றான் சந்திரமோகன்.

மற்ற இரண்டு பேரும் மலைத்துப் போய் அமர்ந்திருந்தார்கள்.

சற்றுக் கழித்து சபாபதி மெதுவாக சொன்னான்.

'மச்சான்! இப்படிச் சொல்றதுக்கு ஒரு பக்கம் கஷ்டமா இருக்கு. ஆனா சொல்லாம இருக்கவும் முடியலை.' என்றான்.

'சொல்லுங்க... இதுக்கு மேலே என்ன சொல்லிடப் போறீங்க?' என்றான்.

'நீங்களும் எதுக்கும் டெஸ்ட் பண்ணிடறது நல்லது...' என்றான் சபாபதி.

உமா தேம்பினாள். அவள் கண்களில் கண்ணீர் நிறைந்திருந்தது.

அப்போதுதான் அந்தப் பெரிய மெகா சைஸ் குண்டைத் தூக்கிப் போட்டான் சந்திரமோகன்.



## 22

'என்னடி நீ பெரிய பத்தினித் தெய்வமாட்ட... எல்லாத்துக்கும் பிகு பண்றே?' என்று உறுமினார் நாகப்பன்.

சிவகாமி ஒன்றும் பேசவில்லை.

அன்றைக்கு வேலையாட்கள் வந்து சொன்னார்கள். கவிதாவை அந்தக் கெஸ்ட் ஹவுஸ்க்குக் கணவன் அழைத்துப் போனான் என்று.

'உங்களோட நட்பு மற்ற பழக்க வழக்கத்தில் எல்லாம் கவிதாவையும் சேத்துக்காதீங்க. அது நல்லதுக்கில்லே...!' என்றாள் சிவகாமி. முதன் முறையாக நேரடியாகக் கணவனை எதிர்த்து நின்றார்.

'ஆமா... உன்னை மாதிரிக் கட்டுப் பெட்டியா வளர்த்து என்னத்துக்கு ஆகப் போகுது. அங்க வந்து பாரு... எத்தனை பிஸினஸ்மேன்கள் அவனவன் வைஃபைக் கூட்டிட்டு வர்றான்... அவங்கள்ளாம் எப்படி ஈக்வலா நடந்துக் கறாங்கன்னு பாரு. நீயி... இன்னும் எந்தக் காலத்துல இருக்கறே?' என்றார்.

சிவகாமி கணவனைத் தீர்க்கமாகப் பார்த்தார்.

'நாகரீகம்ன்னா என்னன்னு தெரியுங்களா? நடை உடை பாவனையிலே வெளிநாட்டுக்காரங்களைப் பின் பற்றுவது இல்லே.... பண்பாடு... அதுக்குப் பேருதான்... நாகரீகம்...! நடத்தையில... பேச்சில... பண்பாடு... அதுக்குப் பேருதான் நாகரீகம்... இங்கிலீஷ் படிப்பு... அது கம்யூனிகேஷனுக்காக... ஒரு வசதியான கருவி. அதுக்காக அந்த கலாச்சாரத்துக்கு விட்டுக் குடுத்துடணும்கறது இல்லே!' என்றார்.

நாகப்பன் கோபமாகக் கையை உயர்த்தி ஓங்கி ஒரு அறை அறைந்தார்.

'பெரிய பணக்கார வீட்ல இருந்து வந்திருக்கேன்னு கொழுப்பாடி... உனக்கு இங்கயும் ஏகப்பட்ட பணம் கிடக்கு... தெரிஞ்சுக்க...!'



சிவகாமி தளரவில்லை.

'எங்க கிடக்கு? கரைஞ்சுகிட்டு இருக்கு. குந்தித் தின்னா குன்றும் மாளும்னு கேள்விப்பட்டிருக்கீங்களா? அப்படித் தான் ஆகிகிட்டிருக்கு. இன்னொண்ணும் தெரிஞ்சுக் குங்க... நீங்க அந்த பங்களாவுக்கு கெஸ்ட்ங்கற பேர்ல அழைச்சுகிட்டு வர்றீங்களே... அந்தப் பொம்பளைங்க... எல்லாம்... என் பொண்ணுக்கு முன்மாதிரிகளா இருக்கற துக்கு எந்த விதத்திலயும் தகுதியில்லாதவங்க...'' என்றார்.

மறுபடியும் ஒரு அறை!

சிவகாமி அழுத்தமாகவே கன்னத்தைப் பிடித்துக் கொண்டு நின்றாள்.

நாகப்பன் கோபத்தோடு வெளியேறினான்.

* * *

இரண்டு மூன்று நாட்கள் போயிருக்கும்!

குமாரசாமியின் கார் வந்து சர்ரென்று நின்றது.

'மச்சான் எங்கே?' என்றார் இரும்புக் குரலில்.

அப்போதைக்கு அவன் தேடி வந்த மச்சான் அங்கே இருக்கவில்லை. இருநூறு ஏக்கர் நிலத்தில் அந்தக் கோடியில் இருந்த கெஸ்ட் ஹவுஸில் இருந்தார்.

போன் போனவுடனே புறப்பட்டு வந்தார்.

'வாங்க... மாச்சான்!' என்று வரவேற்றார்.

'ம்...!... என்றார் குமாரசாமி அமர்த்தலாக. நேரடியாக விஷயத்துக்கு வந்தார்.

'மச்சான்... உங்கிட்டே பேசணும்...' என்றார்.

'சொல்லுங்க... டே.... மச்சானுக்கு இளநீர் கொண்டு வந்து குடு...' என்று உபசரித்தார். அப்போது சிவகாமி

கோயிலுக்குப் போயிருந்தார். குமாரசாமி இரும்புக் குரலில் கேட்டார்.

'மச்சான்! சிவகாமியைக் கைநீட்டி அடிச்சிங்களாம்!'

நாகப்பன் இதை எதிர்பார்க்கவில்லை! வெறித்துப் பார்த்தார். திடீரென்று வந்த கேள்விக்கு உடனடியாக பதில் சொல்ல இயலவில்லை.

'என்ற தங்கச்சியை நான் பூப்போல வளர்த்து உங்க கையில் குடுத்திருக்கேன்... எதுக்கு? ரெண்டு பேரும் நல்லா இருக்கோணும்னுதானே...? இப்படி அடிச்சுத் துவம்சம் பண்ணவா?'

'இது புருஷன் பொண்டாட்டி விவகாரம்..?'

'என்ன புருஷன் பொண்டாட்டி விவகாரம்? நீங்க உங்க கெஸ்ட் ஹவுஸில என்னென்ன செஞ்சுகிட்டிருக்கீங்கன்னு எனக்கு தகவல் வந்துகிட்டுத்தான் இருக்கு... இதுவரைக்கும் நான் தலையிடலே... ஆனா இன்னைக்கு சம்சாரத்தைக் கைநீட்டி அடிக்கறது அதுவும் வேலைக்காரங்க முன் னாடி... அப்படிக் குடும்பத்துல இருந்து நீங்க பொண்ணு எடுக்கலை. மச்சான்... இதைக் கேள்விப்பட்டுட்டு நான் சும்மா இருக்க முடியுமா?' என்றான்.

அதே நேரம் சிவகாமி வந்தார். நாகப்பன் திரும்பி அவளிடம் அடிக்குரலில் கேட்டான்.

'நம்ம வீட்டு விவகாரமெல்லாம்... எதுக்குடி பொறந்த ட்டுக்குப் போகுது...?' என்றார்.

சிவகாமி அடிபட்டாற்போல் பார்த்தார். 'நான்... லும்.. சொல்லலியே!' என்றாள். நாகப்பன் திரும்பிப் ர்த்தான்.



'அப்ப... என்ற வீட்டுக்குள்ளேயே ஆள் வச்சு வேவு பார்க்கறீங்களா?' என்றார்.

குமாரசாமி அசரவில்லை.

'என்னத்துக்கு வேவு பாக்கறது? ஐயா அம்மாவை அடிச்சுப் போட்டாங்கன்னு ஆளாளுக்குப் பேசினா... என்ற காதுக்கு வராமலா போகும்? விஷயம் அதில்லை. மச்சான்... குடும்பம்ன்னா என்ன தெரியுங்களா? ஒருத் தருக்கு ஒருத்தர் துரோகம் செய்யாம இருக்கிறது? சரி... அதுதான்... தொலையுதுன்னா... வர்றவ... போறவ கிட்டேயெல்லாம் என்ற மருமகளை இன்ட்ரொட்யூஸ்... பண்ணி நாகரிகம் கத்துக் குடுக்கறேன் பேர்வழின்னு நாசம் பண்ணாதீங்க...!' என்றார்.

'மறுபடியும் சொல்றேன்... இது என்ற குடும்ப விஷயம்..' என்றார் நாகப்பன்.

'சும்மா அதையே சொல்லாதீங்க மச்சான் இது என்ற குடும்ப விஷயமும்தான்.. என்ற தங்கச்சியை நான்தான் உங்களுக்குக் குடுத்திருக்கேன்... அவளுக்கு நல்லது செய்றதும்... என்ற பொறுப்புதான்...'

அந்த சமயத்தில் சிவகாமிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. வழக்கமாக எல்லாப் பெண்களும் செய்கிற அதே தப்பைத்தான் செய்தார்.

'அண்ணா! அவரு சொல்ற மாதிரி இது எங்க குடும்ப விஷயம்... விட்டுடுங்க... தலையிடாதீங்க...!' என்றார்.

குமாரசாமி கன்னத்தில் நாலு அறை வாங்கினாற்போல தவித்துப் போய் எழுந்தார்.

'சிவகாமி... இன்னைக்கு நீ செஞ்ச காரியத்துக்குப் பின்னாடி ரொம்ப வருத்தப் படுவே...!' என்றார்.

வேட்டியை உதறி ஒரு நுனியைப் பிடித்து நடந்து போய்க் காரில் ஏறிப்போய் விட்டார்.

தனக்கு மலைபோல் இருந்த ஆதரவை இழக்கிறோம் என்பது தெரிந்தும் சிவகாமி மௌனமாக நின்றார்.

உள்ளம் அழுதது. 'எப்படியும் இப்படி ஒரு புருஷனுக்கு வாழ்க்கைப்பட்டதுக்கு நான் அழத்தான் போகிறேன். அதுல நீங்க வேற எதுக்கு இந்தத் தகுதியில்லாத ஆள்கிட்டே அவமானப் படணும்?!' என்று எண்ணிக் கொண்டார்.

'என்ன இருந்தாலும் நீ என் பொண்டாட்டிதான்னு நிரூபிச்சுட்டடி.' என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டு வெளியே போனார் நாகப்பன்.

* * *

குமாரசாமி, தங்கையின் உட்கருத்தைப் புரிந்து கொண்டாரோ இல்லையோ எதையும் காட்டிக் கொள்ளவில்லை.

ஆழ்ந்த வருத்தத்துடன் ஒதுங்கியே இருந்துவிட்டார். விசேஷங்களில் பார்த்தால் மற்றவர்களுக்கு விட்டுக் கொடுக்காமல் பேசிக் கொள்வார்கள்.

மனைவியும், தங்கையும் அடிக்கடி டெலிபோனில் பேசிக் கொள்வதை அறிவார். தங்கைக்கு செய்ய வேண்டிய சீர் எல்லாவற்றையும் குறைவில்லாமல் செய்வார்... ஆனால், ஒதுங்கியே நின்றார்.

சிவகாமிக்கும் உள்ளூர வருத்தம்தான்... ஆனால், குடும்பங்கள் முற்றிலும் பகையாகி விடாமல் இருக்க அவளுக்கு வேறு வழி தெரியவில்லை.

நாகப்பன் மகளை ஊட்டியில் ஹாஸ்டலில் விட்டார். சிவகாமியம்மாளும் தடுக்கவில்லை. ஆனால், நல்ல மதிப் பெண்கள் எடுப்பாள் என்று எதிர்பார்த்த எதிர்பார்ப்பை பொய்யாக்கிவிட்டாள்.



நாகப்பன் அதற்குப் பிறகு என்ன செய்யலாம் என்று யோசித்தார். அமெரிக்காவில் படிக்க வைக்கிறேன் என்று அனுப்பினார். நண்பர்கள் வெறும் பட்டப் படிப்புக்காக வெளிநாடு அனுப்புவது தேவையற்றது. செலவு அதிகம் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால், நாகப்பன் கேட்கவில்லை.

வீம்புக்காகவே அனுப்பினார்.

கவிதா எதையும் அலசிப் பார்க்கிறவளாக இருக்கவில்லை. 'வாய்ப்புக் கிடைக்கும்போது வாழ்க்கையை அனுபவித்து விட வேண்டும்' என்ற தந்தையின் கொள்கை தான் அவளுக்குள் ஊறியிருந்தது.

மேலை நாட்டுக் கலாச்சாரம் அளித்த சுதந்திரம் அவளுக்கு வசதியாக இருந்தது. இளம்பெண்கள் ஆண்களோடு 'டேட்டிங்' என்ற பெயரில் வெளியில் செல்வதும், பழகுவதும் அதில் எந்த விதமான 'கமிட்மெண்ட்' இல்லை என்பதும் அவளுக்கு முதலில் அச்சத்தை ஏற்படுத்தியது. பிறகு ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருந்தது.

அச்சம் தெளிந்தவுடன் அவளும் அந்தக் கலாச்சாரக் கடலில் நீந்தித் திளைக்க ஆரம்பித்தாள் என்றுதான் சொல்லவேண்டும்.

'இந்தியாவுக்கு எதற்காகப் போக வேண்டும் இங்கேயே நமக்கு நிறைய ரசிகர்கள் இருக்கிறார்கள். அவர்களில் யாரோடாவாவது செட்டிலாகி விட வேண்டியதுதான்' என்று எளிதாகவும் எண்ணிக் கொண்டாள்.

மகளின் சுதந்திரத்தை முதலில் ஆதரித்த நாகப்பன் எதிர்பாராத இந்த விபரீதத் திருப்பத்தைக் கண்டு பயந்து போனார் என்றுதான் சொல்ல வேண்டும்.

எத்தனையோ பெண்களின் கம்பெனியை 'விரும்பி அனுபவித்தவர் தன் மகள் அப்படிப் பலருடனும்

சுதந்திரமாகப் பழகுகிறாள் என்ற செய்தி நண்பர்களிடமிருந்து வந்து சேர்ந்த போது அதிர்ச்சியாகி விட்டார்.

கவிதா இணையில்லாத அழகுடன் உருவாகி இருந்தாள். அவளுக்குத் தன் அழகை எப்படிப் பராமரிப்பது என்பதும் தெரிந்திருந்தது. வெளிநாட்டில் வாழ்ந்த இந்தியக் குடும்பத்திலிருந்த இளைஞர்கள், வெள்ளையர்கள் எல்லாருமே அவளிடம் பழகுவதில் ஆர்வம் காட்டினார்கள். அந்த மாதிரிக் கவனிப்புக்கள் பெரிதும் பெருமையாக இருந்தது.

வெளிநாட்டிலேயே சென்ற தலைமுறையில் தங்கி விட்ட நண்பர் ஒருவர் குடும்பத்தின் பொறுப்பில்தான் அவளை விட்டிருந்தார். ஆனால், கவிதா கல்லூரி ஹாஸ்டலில் தங்குவதையே விரும்பினாள்.

ஒரு பெரிய வடநாட்டு அரசியல் பிரமுகரின் மகன் ஒருவருடன் பழகிக் கொண்டிருப்பதாகச் செய்தி வந்து சேர்ந்தது.

'உடனடியாகப் புறப்பட்டு வா!' என்று அப்பா வரவழைத்தார்.

'கவிதா... உன்னைப் பத்தி நான் கேள்விப்படறது ஒண்ணும் சரியில்லையே?' என்று அவள் தந்தை கடிந்து கொண்டபோது மகள் கேட்டாள்.

'எது சரி எது நியாயங்கறது ஆட்களைப் பொறுத்து மாறுபடுமோப்பா..?' என்றார்.

'இத பாரும்மா... நம்ம நாட்டுல பெண்கள் கண்டபடியாக நடந்துக்கறதில்லே..?'

'அப்பா... அந்தக் காலமெல்லாம் மலையேறிப் போச்சு... யு அண்டர்ஸ்டாண்ட். இப்ப ஆண்களும் பெண்களும் சமமாகிப் போயாச்சு... தெரியுமா?' என்றாள்.

அப்பா திகைத்துப் போனார்... தொடர்ந்து அவள் கேட்டாள்.



'என்னமோ... சொன்னீங்களே? நம்ம நாட்டுல பெண்கள்ளாம் அப்படி நடந்துக்க மாட்டாங்கன்னு... அம்மா மாதிரிப் பெண்கள்ன்னு வேண்ணா சொல்லுங்க... ஒத்துக்கறேன்... ஆனா, உங்களோட கெஸ்ட் ஹவுஸுக்கு... வேட்டை பங்களாவுக்கு வந்துட்டுப் போனவங்களும் பெண்கள்தானே! அவங்களும் இந்த நாட்டுப் பெண்கள்தானே...!'

நாகப்பன் 'அவங்கள்ளாம்... பணத்துக்காக வந்தவங்க...' என்றார்.

'அப்பா... ஸ்டாப் திஸ் நான்சென்ஸ்... என்னோட வாழ்க்கையை நான் தீர்மானிச்சுக்கிறேன்... உலகத்துல எந்த நாட்டுலயுமே இந்தியப் பெண்கள் மாதிரி ஏமாளிங்க இருக்க மாட்டாங்க... தெரியுமா?' என்றாள்.

இதையெல்லாம் ஒருவித அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டு நின்றார் சிவகாமி.

நாகப்பன் மகளைப் பார்த்து முணுமுணுப்பது போல் சொன்னார்.

'இந்தியப் பொண்ணுங்களை ஏமாளிங்கன்னு சொல்றியே அதுக்குப் பேர் ஏமாளித்தனமில்லே... பக்குவம்...!' என்றார்.

கவிதா கடகடவென்று சிரித்தாள். அம்மாவைத் திரும்பிப் பார்த்தாள்.

'அம்மா! ஃபார் தி ஃபர்ஸ்ட் டைம் ஹி ஹேஸ் காம்ப்ளிமென்ட்டட் யு' என்றாள். மறுபடியும் சிரித்தாள்.

'இந்தக் காம்ப்ளிமென்டை இப்படி ஒரு ஆள் கிட்டே வாங்கறதுக்குத்தானே நீ லைஃபையே தியாகம் செஞ்சே!' என்று மறுபடியும் சிரித்தாள்.

நாகப்பன் உண்மையாகவே பேச்சற்றுப் போனார்.

று சிபிட் அப்பா... போலித்தனமாத்தானே ரெண்டு
ரும் வாழ்க்கை நடத்திகிட்டிருக்கீங்க... யாருக்காக!
அப்படியெல்லாம் மிசரபிளா ஒரு லைஃப் லீட்
ணப் போறதில்லே... லீவ் மி அலோன்' என்றாள்.

டுத்த நாளே மீண்டும் அமெரிக்கா பறந்துவிட்டாள்.



23

ழ்க்கையை அனுபவிப்பது என்ற பெயரில் தொடர்ந்து
செய்கைகளெல்லாம் உடல் நலக் குறைவில் கொண்டு
ட்டு விட்டதை அறிந்த நிலையில் கவிதா போட்ட
ல் நாகப்பன் மனதளவிலும் தளர்ந்து போனார்.

க மூன்று மாதங்களில் கோடை விடுமுறைக்கு
ன் என்று கவிதா வந்தாள். அப்போது அவளுக்கு
வயது. இளமையின் அழகின் உச்சத்தில் இருந்தாள்.

முறை நாகப்பன் மகளிடம் செல்லம் கொஞ்ச
தொலைவில் நின்றார். அது மட்டுமல்ல... மகள்
கள்விகள் அவரை உலுக்கியெடுத்து விட்டன.

ாருவரை நோக்கி சுண்டுவிரலை நீட்டு முன்னே...
நோக்கி நான்கு விரல்கள் சுட்டுகின்றன' என்ற
ழி தன் வரையில் உண்மையாகிப் போனதை
. ஆனால் வெகு காலம் கடந்து.

டவடிக்கைகளின் அநியாயம் புரிந்து மாற்றிக்
ணைந்தார். தவறு செய்த குழந்தை தாயின்
அலைவது போல் தன் முகத்தைப் பார்க்கிற
சிவகாமி முற்றிலும் மன்னித்தார்.



இந்த நேரத்தில் கணவனை விட்டுக் கொடுப்பது கவிதாவின் வாழ்க்கைக்கே ஆபத்தாய் முடியும் எனப் புரிந்து கொண்டார். அதனால் அவர் வேறு விதமாகப் பேசுமாறு கணவனிடம் சொன்னார்.

அவரும் தயங்காமல் பேசினார்.

'கவிதா... நான் தப்பு செய்ததாகவே இருக்கட்டும். ஆனா, தப்போட விளைவு என்னன்னு என்னைக் காட்டிலும் யாருக்குத் தெரியும்? நான் சொல்றதைக் கேளு?

மனசுக்குப் பிடிச்ச ஒருத்தரை செலக்ட் பண்ணி கல்யாணம் பண்ணிக்க..' என்றார்.

'எனக்குக் கல்யாணத்துல நம்பிக்கையில்லே!' என்றாள் கவிதா.

நாகப்பனுக்குக் கோபம் பொங்கியது. கோபமாக மகளை ஓங்கி அறைந்தார். தள்ளி விட்டார். தள்ளிவிட்ட வேகத்தில் அவள் சோபாவில் விழுந்தாள்.

மயங்கிவிட்டாள்.

சிவகாமி பதறிப் போய் டாக்டரை வரவழைத்தார். டாக்டர் வந்து இன்னும் பெரிய கல்லாக அந்தக் குடும்பத்தின் தலையில் போட்டார்.

* * *

**'ஸோ** வாட்?' 'அதுக்கு என்னை என்ன பண்ணச் சொல்றீங்க?' என்றாள் கவிதா.

நாகப்பன் ஒருவிதக் கையாலாகாத்தனத்துடன் மகளைப் பார்த்தார்.

'யாரு... என்னென்னவாவது கேட்டுத் தொலை. கையைக் காலைப் பிடிச்சுக் கல்யாணமாவது பண்ணி வைக்கலாம்' என்றார்.

அதற்கும் அவள் அலட்சியமாய் பதில் சொன்னாள்.

'போன மாசம் அந்த சேவியர் கூட சுத்திட்டிருந்தேன்... அப்புறம்... அந்த இண்டியன்.. வாட்ஸ் ஹிஸ் நேம்... ராமானந்த் கண்ணா... அவனா இருக்கலாம்' என்றாள்.

அந்த மாதிரி பதிலில் அதிர்ந்து போன நாகப்பன் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சாய்ந்தார்.

'அட்டாக்' என்றார்கள்.

உடனடியாக வைத்தியம் செய்தார்கள். என்றாலும் படுக்கையில் படுத்து விட்டார்.

இதற்கிடையில் சிவகாமி தங்களுடைய லேடி டாக் ...ரிடம் ஆலோசனை கேட்டார். அவர் கவிதாவை ...டெஸ்ட் செய்து விட்டு,

'யூட்ரஸ் ரொம்ப வீக்கா... இருக்கு... அதனாலே... ...று எதுவும் பண்ண முடியாது' என்றார்.

மறுபடியும் ஒருமுறை நாகப்பனுக்கு அட்டாக். இந்த ...று பிழைக்கவில்லை. ஆனால், மனைவிக்கும் வாயருக்கும் ...டமாகச் சில ஆணைகள் இட்டு விட்டுத்தான் உயிரை ...ட்டார்.

* * *

நாகப்பனுக்கு உடல் நலம் சீர்குலைந்தவுடனே ...ாரசாமி ஒன்றிரண்டு முறை வந்து பார்த்தார். அப் ...து கூட 'மச்சான், நிலைமை இப்படி ஆகிப் போச்சு...' ...ர முறையிட்டிருந்தால் கூட குமாரசாமி நிலைமையைச் ...த்தியிருப்பார். அப்போதும் நாகப்பன் செய்யவில்லை.

...திரமோகன் அப்போது முதுகலைப்பட்டப் படிப்பை ...து விட்டு ரைஸ்மில், நிலங்கள் என்று பார்த்தோடு ...ார்க்கெட்டிலும் சரியாகக் கணிப்புக்கள் செய்தான். ...் வருமானமும் இருந்தது.



இருபத்தைந்து வயதில் கறுகறுப்பாகவும் கம்பீரமாகவும் இருந்தான்.

முதன் முதலாக நாகப்பன் உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோது அவனும் உமாவும் அந்த வீட்டுக்கு வந்தார்கள். உமாவுக்கு அப்போதுதான் திருமணமாகி இருந்த புதிது.

சந்திரமோகனைப் பார்த்தவுடனே அத்தைக்கு மிகவும் பிடித்துப் போயிற்று.

'அத்தை! அத்தை!' என்று இயல்பாக ஒட்டிக் கொண்டான்.

மெது மெதுவாக அம்மாவிடமும், மற்ற நெருங்கிய உறவினர்களிடமிருந்தும் அத்தை வாழ்ந்த வாழ்க்கையைப் பற்றித் தெரிந்து கொண்டான்.

அத்தையின் மேல் பெரிதும் பரிவு உண்டாயிற்று.

இங்கே பெண்கள் குடும்பம் என்ற பெயரிலும், கௌரவம் என்ற பெயரிலும் எத்தனையெத்தனை சித்திரவதைகளுக்கு ஆளாகிறார்கள் என்று புரிந்த வேதனையில் இருந்தான்.

உலகத்தின் எல்லாவிதமான மகிழ்வுகளுக்கும் காரணம் பணம் என்று யாராவது நினைத்தால் எவ்வளவு மடத்தனம்? பணம் மனிதனை அகங்காரப்படுத்துகிறது. சர்வ சக்தியுள்ளவன் என்று நினைக்க வைக்கிறது. எல்லாரையும் எடுத்தெறிந்து பேச வைத்து விடுகிறது. தன் மேல் ஆசைப் பட்டவனைப் பணத்தைப் போல் கேவலப்படுத்துகிற பொருள் வேறு எதுவும் இல்லை என்றெல்லாம் கூட யோசித்தான்.

உள்ளூர அவனுக்குத் தன் அப்பாவின் மேல் ஒரு கோபமும் இருந்தது. அத்தையிடம் கூட அதைப் பகிர்ந்து கொண்டான்.

'அத்தை... நீங்க என்னதான் சொல்லுங்க! அப்பாவை வர வேண்டாம்னு சொன்னாலும் அவர் தலையிட்டிருக்

சனும். உங்களுடைய சுக துக்கங்களைப் பத்தி அவ
கவலைப் பட்டிருக்கணும்' என்றான்.

அந்தை சற்று நேரம் ஒன்றும் பேசவில்லை. 'அவமானப் படுத்தி அனுப்பியதுக்கு ரெண்டு காரணம் இருக்கு. ஒன்னு எப்படியும் என் புருஷனை மாத்த முடியாது. அண்ணன் வரப் போய் இருந்தாங்கன்னா மேல மேல இவரு அவரை அவமானப் படுத்திகிட்டேதான் இருப் பாரு. இன்னொரு பக்கம் என்னைப் பத்தி நினைச்சு னைச்சுக் கவலைப்பட்டுட்டேன்தான் இருக்கணும். தனால்தான் கோபப் படுத்தினேன். அந்தக் கோபம் ங்களைப் பிரிச்சாலும் அடிப்படைப் பாசம் அப்படியே ந்தது' என்றார்.

சந்திரபோஸ் உண்மையாகவே மலைத்துப் போனான். தையின் மேல் இன்னும் பாசம் அதிகமாகியது. அப்பா டுக்காத மாரல் சப்போர்ட்டை அந்தைக்குத்தான் டுக்க வேண்டுமென்று நினைத்தான்...

ந்த சமயத்தில்தான் இரண்டாவது முறையாகக் கவிதா ான்.

ாய்... கவிதா!' என்று சிரித்துப் பேசுவான்... ஜென்டில் ான்.

ல்லாருக்கும் ஆச்சரியம் என்னவென்றால் நாகப்ப ம் கூட அவனைப் பிடித்துப் போனது.

ண்ணப்பா... பணக்கார வீட்டுப் பையன் நீ...! எந்த ன பழக்கமும் இல்லேங்கற... அப்புறம் எப்படி க்கலை என்ஜாய் பண்றது?'! என்று அவனை கேலி ர்.

ார்! என்ஜாய்மெண்ட்ங்கறது எதுன்னு நாமதான் செய்க்கணும். எனக்கென்னமோ இந்த மாதிரி



சின்னச் சின்ன பலவீனங்களை ஜெயிக்கறதுலதான் சந்தோஷம் இருக்கறதாத் தோணுது' என்றான்.

அவர் ஆச்சரியமாக 'எப்படி?' என்றார். 'அப்படின்னா...! இப்பத் தண்ணி போடறோம். அதோட பர்ப்பஸ் என்ன?' சொல்லுங்க! சிகரெட் ஊதறோம்...! அதோட பர்ப்பஸ் என்ன?! சொல்லுங்க...!'

'பர்ப்பஸ்... என்ன! சந்தோஷந்தான்...!' என்றார் மாமா.

'அதான்... அதோட ரெண்டுமே கொஞ்ச நேரம் சுகம் தர்ற மாதிரி நாம நினைக்கிறோம். ஆனா, அதை விடப் பெரிய போதை நமக்குக் கிடைக்குதுன்னா... இது இல்லேன்னு ஆயிடும்... இல்லே? இப்ப எனக்கு விவசாயம் பாக்கறதுல... ஷேர் மார்க்கெட்ல ஆர்வம் இருக்கு... அதுலயும் பெரிய லாபத்துக்கெல்லாம் நான் அலைஞ்சதே... இல்லை. கெட்டிக்காரத் தனமான கேர்ஃபுல் மூவ் மெண்ட்ஸ்...' என்று சிரித்தான்.

நாகப்பனுக்கு உண்மையிலேயே அவனைப் பிடித்துப் போயிற்று.

'இந்தச் சின்ன வயசிலேயே எவ்வளவு தெளிவாய் சிந்திக்கிறான்' என்று ஆச்சரியப்பட்டார்.

சிவகாமி பெருமையுடன் கணவனிடம் சொன்னார்.

'அதெல்லாம்... எங்கண்ணனோட வளர்ப்பு. எங்கண்ண னுக்கு எந்த பலவீனமும் கிடையாது. அவனையும் அப்படியே வளர்த்திருக்கிறார்' என்று பெருமையுடன் சொன்னார்.

முன்னைப் போல இருந்திருந்தால் நாகப்பன் 'என்னடி, சந்தடி சாக்கிலே என்னைக் குத்திக் காட்டறியா?!' என்று தாண்டவம் ஆடியிருப்பார். ஆனால் காலம் கவிதாவின் வடிவில் பாடங்களைக் கற்றுக் கொடுத்தது.

இன்னமும் அதிர்ச்சி தரும் விதமாகக் கவிதா வயிற்றில் கருவோடு நின்றாள்.

சிவகாமியும் நாகப்பனும் கவலையில் சிக்கிக் கொண்டு என்ன செய்வதென்றே தெரியாமல் தவித்துக் கொண் இருந்த நிலையில் நாகப்பனே அவனிடம் கண்ணீர் விட்டு அழுதார்.

'தம்பி! உங்க அத்தையை நான் படுத்தின பாவத்துக்கு வுள் என் கண்ல ரத்தக் கண்ணீர் வரவச்சுப் போட் ரு... தம்பி! இனி என்ன செய்யறதுன்னு தெரியலியே!' று அழுதார்.

சந்திரமோகன் ராமானந்த் கண்ணாவைத் தொடர்பு ண்டு பேசிப் பார்த்தான். கவிதாவுடைய நிலைமையைச் ன்னான்.

ராமானந்த் கண்ணா தெளிவாகப் பதில் சொன்னான்.

ருங்க... மிஸ்டர்... சந்திரமோகன்... தேர் வாஸ் நோ மென்ட் அட் ஆல். நான் மேரிட்ன்னு கவிதாவுக்குத் யும். எந்த விதக் கமிட்மென்ட்டும் தேவையில் னு முடிவு செஞ்சுதான் நாங்க ஹாலிடேவுக்குப் தே... இப்ப என்னை என்ன செய்யச் சொல்றீங்க.'

திரமோகன் மாமாவிடமும், அத்தையிடமும் பகிர்ந்து டான்.

நேரத்தில்தான் மாமாவுக்கு ஸ்ட்ரோக் ஏற்பட்டது.

மா! இந்தக் குடும்பத்தோட கவுரவத்தை நான் க்கறேன் மாமா!' என்று வாக்குறுதி கொடுத்தான்.

நிம்மதியில் அவர் இறந்து போனார்.

* * *

மையும், கருத்துமாக மகன் கவிதாவுடன் வந்து நின்ற மாரசாமி இன்னொரு முறை அதிர்ந்து போனார்.



அப்போது சந்திரமோகன் எந்தப் பிரச்சினையையும் குடும்பத்துக்கு சொல்லவில்லை.

நடந்த விவரங்கள் எல்லாம் சிவகாமிக்கும் அவனுக்கும், சுந்தரம்மாவுக்கும் மட்டுமே தெரியும்.

அதுவும் கவிதா முதலில் திருமணத்திற்கு ஒத்து வரவில்லை.

'என்ன பெரிசா... தப்பு செஞ்சேன்? கலைச்சுக்கறேன்...' என்றாள்

'அது முடியாது' உயிருக்கே ஆபத்து! என்றாகி விடும்' என்றவுடன் மௌனமாகிவிட்டாள். அதற்கும் மேலே அத்தை ஒரு குண்டைப் போட்டார்.

'பாருடி! உங்கப்பா... பூரா சொத்தையும் என் பேர்ல எழுதி வச்சுட்டுப் போயிட்டார். சொன்னபடி கேட்டன்னா... சொத்து உனக்கு வரும். இல்லேன்னா... பூராத்தையும் சந்திரமோகனுக்கே எழுதி வச்சிடுவேன்' என்றார்.

அதற்குப் பிறகுதான் அடங்கினாள்.

'பாரு... கவிதா! எனக்கு ஒன்றும் இந்த மேரேஜ்ல இன்ட்ரஸ்ட் இல்லே! குழந்தை பிறக்கட்டும். ஒரு ஸ்டேஜ் வந்தவுடனே டைவர்ஸ் வாங்கிடலாம்...! என்ன?!' என்று சந்திரமோகனும் அவளிடம் பேசிய பிறகுதான் ஒத்துக் கொண்டாள்.

உடல்நலக் குறைவு இருந்தாலும், குழந்தை பிறப்பு என்று விஷயங்கள் இருந்ததில் இரண்டு ஆண்டுகள் ஓடி விட்டன.

திருமணத்தின் போது வேறு ஒரு விஷயமும் நடந்தது.

குமாரசாமி மீண்டும் கோபமானார். தன் சகோதரி தன் சொந்த வாழ்க்கையைக் கெடுத்துக் கொண்டதுமல்லாமல் தன் அன்பு மகனின் வாழ்க்கையையும் கெடுக்கிறாளே என்ற கோபம் பொங்கியது.

மகனை வரவழைத்தார். அவனிடம் மெதுவாவே பேசினார்.

'தம்பி! இந்தப் பொண்ணு என்னடா அழகு?! எத்தனையோ அழகான பொண்ணுங்களைக் கொண்டு வந்து நிறுத்தறேன். இதுவேண்டாம்டா... அந்தப் பொண்ணு சரியில்லைடா?' என்றார்.

அவன் அப்பாவைப் பார்க்காமல் வேறு எங்கோ பார்த்தான்.

'நிலைமை கை மீறிடுச்சப்பா... குழந்தைங்கற வரைக்கும்... போயாச்சு...' என்றான்.

குமாரசாமி அதிர்ந்து போனார்.

'என்ற மகன்... இப்படிப் பண்ணிப் போட்டியேடா...!' என்றார் மனம் வெதும்பியவராய்.

'அப்பா! சூழ்நிலை அப்படி அமைஞ்சு போச்சு...!' ன்றான் வருத்தத்தோடு. அப்பாவை நோகடிக்கிறோமே ன்ற வேதனை அவன் உள்ளத்தை அரித்தெடுத்தது. னால், வேறு வழியிருக்கவில்லை.

'அப்பா... உங்களுக்கு இந்த நிமிஷத்துல என் மேல வளவு வெறுப்புன்னு புரியுது. ஆனா... கல்யாணத்தை டும் கௌரவமா நடத்தி வைங்க... அப்புறம்... நான் களுக்குத் தொல்லை செய்ய மாட்டேன்!' என்றான். கூப்பினான். வெளியே வந்து விட்டான்.

ன் வாழ்க்கையிலேயே முதன் முறையாகத் தனிமையில் தான் சந்திரமோகன்.

ாபதி கூட அப்போது உமாவிடம் சொன்னான்.

மா! உங்கண்ணன் இன்டக்ரெட்டி உள்ள ஆள்ன்னு நெனச்சுக்கிட்டிருக்கேன். ஆனா... வெறும் அழகைப்



பார்த்து விழுந்துட்டாரே. அப்படியொண்ணும் அந்தப் பொண்ணு கூட சந்தோஷமாக வாழ்க்கை வாழப் போறதில்லேன்னுதான் நினைக்கிறேன்...' என்றான்.

'எனக்கும் அப்படித்தான் தோணுது.' என்று உமாவும் வருத்தப்பட்டாள். ஆனால் யாராலும் எதுவும் செய்ய முடியவில்லை.

இந்தப் பிரச்சினைகளையெல்லாம் யாரிடமும் சொல்ல வேண்டாம் என்ற அத்தையையும் கட்டுப்படுத்தி விட்டான்.

எல்லாரும் ஒதுங்கியிருப்பதும் ஒருவகையில் நல்லது தான் என்று எண்ணிக் கொண்டான்.

தொழிலில் பிஸியாகிக் கொண்டான். அதனால் குழந்தைக்கு ஒரு வயது ஆகும் வரை. கவிதாவுக்கு உடல் நலக் குறைவு இருந்தாலும் எல்லாம் சரியாகப் போய்க் கொண்டிருக்கிறது.

குழந்தை வளர வளர. கவிதாவுக்கு உடல் நலம் தேறத் தேற வேறு விதமாகப் பிரச்சினைகள் முளைக்க ஆரம்பித்தன.



## 24

'அம்மா... குழந்தையை உன் பொறுப்பில் வச்சுக்க... என்னை விடுவிச்சுரு. எனக்கு இந்த மாதிரி பர்டன் எல்லாம் வேண்டாம்...' என்றாள் கவிதா அலட்சியமாக.

'பெத்த குழந்தை... உனக்கு பர்டனா?' என்றார் சிவகாமி.

'சும்மா... இந்த சென்டிமென்ட் டயலாக் எல்லாம் வேண்டாம்... புரியுதா? நான் வாழுற விதம் வேற. நான்

...பாரின்ல செட்டிலாயிடலாம்னு இருக்கேன்... புரியுதா
...ன் சொத்தைப் பிரிக்கக் கூடு...' என்றாள்.

...வகாமியின் முகம் கடுமையாக மாறியது.

'பார்தி... உனக்கு ஃபாரின் லைஃப் வேணும்னா...
...ாய்க்கோ... ஆனா, உங்கப்பா சொத்து பூராவும் என்
...ர்ல எழுதி வச்சுட்டார். அதுல பத்துப் பைசாக் கூட என்
...ப்பத்துக்கேற்ப நடந்துக்கலேன்னா... உனக்குக்
...டைக்காது...'

...விதா முறைத்தாள்.

...டிமாடி... யோசிச்சுப்பாரு! சந்திரமோகனுக்கு என்ன
... அழகில்லையா? பணமில்லையா? குணமில்லையா?
...னாட சந்தோஷமா வாழ்க்கை நடத்தப் பாரு...!'
...ர்.

...த்கொண்டு பேசிப் பிரயோஜனமில்லை என்ப
... என்னவோ தன் அறைக்கு வந்த கவிதா முதன்
...ாக சந்திரமோகனைப் பற்றி அலசினாள்.

... ஹி இஸ் ஹான்ட்ஸம்' என்று புன்னகைத்துக்
...டாள்.

...ரவு!

...து அறைக்குப் போனாள். இதை எதிர்பார்க்காத
...ாகன் 'கவிதா... நீ... எங்க இங்கே!...' என்று
...ன்.

... நெருக்கமாகச் சிரித்தாள். அவன் தோளில்
... கொண்டாள்.

...ன்... நம்ம மேரேஜ் பெருக்குன்னு இருக்
... என்ன? வொய் கான்ட் வி கம் டு சம் காம்ப்ரமைஸ்!'
...மென்னா...!'



'நான் பாட்டுக்கு என் வாழ்க்கையை விட் பண்ணிக் கறேன். நீங்க பாட்டுக்கு உங்களுக்குப் பிடிச்ச மாதிரி...!'

அவன் முகத்தில் வேதனை படிந்தது. 'கவிதா! இங்கே பெண்கள் தங்களோட பெண்மையை ரொம்பப் பெரிய விஷயமாய் நினைக்கறாங்க. நாங்களும்தான்... அதை விளையாட்டுப் பொருளா நினைக்க என்னால முடியாது...!' என்றான்.

அவள் பெருமூச்சு விட்டாள். 'அப்ப என்னதான் முடிவு?' என்றாள்.

'இப்பவும்... நீ இந்த மேரேஜை சீரியஸா எடுத்துக் கறதா... இருந்தா சொல்லு... நாம் இதை ஒரு அரேன்ஜ்ட் மேரேஜா எடுத்துகிட்டு... ஹானர் பண்றேன். அப்படி யில்லேன்னா... கொஞ்ச நாள் பொறு... அத்தைகிட்டே பேசிக் கன்வின்ஸ் செய்யப் பார்க்கறேன்..'

'வேண்டாம்... அம்மா... அதுக்கு ஒத்து வர மாட்டாங்க. வேண்ணா இப்படி செய்யலாம். நாம ரெண்டு பேரும்... நல்ல டர்ம்ஸ்ல இருக்கற மாதிரி கொஞ்ச நாளைக்கு நடிக்கலாம். ஏன்னா... நான் டாக்டர்கிட்டே கேட்டேன். அம்மாவும் இனிமே ரொம்ப நாளைக்கு இருக்க மாட் டாங்களாம்!' என்றாள் சாதாரணமாக.

அந்தக் கணத்தில் சந்திரமோகனுக்குத் தோன்றியது. 'இவள் பெண்ணே அல்ல! சுயநலத்தின் மொத்த வடிவம். தன்னுடைய வசதிக்காக எதையும் செய்யக் கூடியவள்' என்று.

சாதாரணமாக அவன் யாரையும் வெறுப்பவன் அல்ல. ஆனால் அன்றைக்கு அவள் மேல் வெறுப்பு மண்டியது.

கொஞ்சநாள் கழித்து அவன் அறைக்கு ஒரு முறை வந்தாள்.

வரும்போது மது வாடையுடன் வந்தாள். அப்போது தான் குளித்து விட்டு வெளியே வந்து லுங்கியோடு தன் னறையில் நின்று கொண்டிருந்தான்.

இரண்டு வயதாகியிருந்த சோனா படுக்கையில் தூங்கிக் கொண்டிருந்தாள்.

'வெளிநாட்டுலயெல்லாம் குழந்தையைத் தனியாத்தான் டுக்க வைப்பாங்க...' என்றாள்.

'கவிதா... உனக்கு என்ன வேணும்! எதுக்காக இங்கே ந்தே..?' என்றான் கோபமாக.

அவள் நின்ற விதம் பார்த்தான். நடை சரியில்லாமல்... டை சரியில்லாமல்...!

புரியலையா? நீங்களும் ஒரு மனுஷன்தானே ஃபீலிங்லே க்காதா?" என்றாள்.

இருக்கும். இல்லேன்னு யாரு சொன்னா... ஆனால் உன்கிட்டே வெளியிடற அளவுக்கு உனக்குத் வில்லே... கெட் அவுட் ஆஃப் மை ரூம்...!' என்றான்.

வள் முகம் சிவந்த விதம் பார்த்து கோபம் பார்த்து ாடு போனாள்.

னால் அந்தக் கோபத்தை நேராகக் கொண்டு போய் யிடம் காட்டினாள்.

வன் மது அருந்துவதையே அப்போதுதான் அறிந்து டாள் சிவகாமி.

... உன் மருமகனுக்கு நான் போதாதாமா' என்று பேலும் தரக் குறைவாக அவள் பேசிய வார்த்தைகளைக் க் தன் முகத்தில் அறைந்து கொண்டு அழுதார்.

போதுதான் அத்தைக்கும் ஸ்ட்ரோக் வந்தது? ப் பிறகு ஆறு மாதங்கள் அத்தையைக் கவனிப்ப அதற்காக ஓடுவதிலுமே சரியாக இருந்தது.



மற்றதை நினைக்க நேரமில்லை.

கவிதாவிடம் நட்பு ரீதியாக பழகுவதற்காக முயன்றான். அதுவும் ஒத்து வரவில்லை.

எப்போதும் தன் ஆண் நண்பர்களைப் பற்றியே பெருமை பேசுகிறவளை அவன் வேதனையோடு சகித்துக் கொள்ளலா மேயன்றி அவளோடு எப்படி வாழ்க்கை நடத்த முடியும்?

அவளை அவளுடைய வாழ்க்கையை வாழ விட்டுவிட்டு தான் சோனாவைக் கவனிக்க ஆரம்பித்தான். அதுவும் அவளுக்குக் கோபத்தை அளித்தது.

குழந்தையை வெறுக்க ஆரம்பித்தாள். இளம் வயதுப் பெண் என்ற வகையில் அவளுடைய உணர்வுகளை அவன் புரிந்து கொண்டான். ஆனால் அவள் மீது அவனுக்கு நாட்டம் விழவில்லை.

'கொஞ்சம் டைம் குடு... கவிதா... அத்தைகிட்டே நான் பேசறேன். டைவர்ஸுக்கு போயிரலாம்' என்று அமைதிப் படுத்தி வைத்தான்.

அப்படியும் ஒரு நாள் மாலையில் அவன் வரும்போது கண்ட காட்சி அவன் நெஞ்சை உறையச் செய்தது.

'ஹேய்! நீதான்... உன்னாலதான்.. என் வாழ்க்கையே பாழாப் போச்சு!' என்று வெறிபிடித்தாற்போல குழந்தையை உலுக்கிக் கொண்டு நின்றிருந்தாள் கவிதா.

மூன்று வயதேயான குழந்தை வீல் வீலென்று கதறியது.

அன்றைக்குத்தான் அவன் கவிதாவை அடித்தது. துவம்சம் செய்து விட்டான்.

சுந்தரம்மா இந்தக் காட்சியைப் பார்க்கக் கூடாது குழந்தையைத் தூக்கிக் கொண்டு போய் விட்டாள்.

அந்த நிகழ்ச்சியால் ஏற்பட்ட விளைவு ஒன்றுதான்.

கவிதாவுக்கு அவனிடம் பயம் ஏற்பட்டது. அவனிடம் இருந்து ஒதுங்கி இருக்க ஆரம்பித்தாள். ஆனால், அதற்குப் பிறகு அவனுக்கு அவளிடம் பரிதாபம் ஏற்பட்டது.

நட்புடன் இருக்க ஆரம்பித்தான்... ஆனால் வேறு
தமாக யோசிக்க ஆரம்பித்தான்.

* * *

'அங்கிள்... எனக்கு எப்படியாவது ஹெல்ப் பண்
ங்க...' என்றான் சந்திரமோகன்.

'சொல்லுங்க... சார்!' என்றார் டாக்டர். விஸ்வநாதன்.

லார்! கவிதாவுக்கு கன்சீவ் ஆனப்ப மற்ற சமயங்கள்
ாத்திலயும் எங்க குடும்பத்து ரகசியங்களையெல்லாம்
பாத்தினீங்க... உங்களுக்குத் தெரியும்... நான்
வளவு தூரம் இந்தக் குடும்பத்தோட கௌரவத்தைக்
பாத்துறதுக்கு போராடிக்கிட்டிருக்கேன்னு. ஆனா,
ா எந்த விதத்திலயும் ஒத்து வர மாட்டேங்கறா.
கூடி அக்ரெசிவ் ஆயிர்றா..' என்றான் கவலையுடன்.

!' என்றார் விஸ்வநாதன்.

ந்தக் குழந்தையை அவளோட பொறுப்பில விட்டா...
தையோட லைஃபே பாதிக்கப்பட்டுடும். அதான்
என்ன பண்றதுன்னே... புரியலை' என்றான்.

சாம... குழந்தையை ஏதாவது ரெசிடென்ஷியல்
விட்ரலாமா?' என்றார்.

ன் யோசனையில் ஆழ்ந்தான். பிறகு தயக்கத்துடன்
ான்.

டா... ரைட்டோ... சொன்னதை நான் என் குழந்தை
நினைக்க ஆரம்பிச்சுட்டேன். அந்தக் குழந்தையை



விட்டுட்டு என்னால இருக்க முடியாது. என்னைக் காட்டிலும் அத்தை ரொம்ப ஏங்கிப்போயிடுவாங்க...' என்றான்.

'என்ன செய்யலாம்?'

'வேற..?!' என்று அவர் யோசித்தபோது தான் அவருக்கு வாணியின் நினைவு வந்தது. வாணியைக் கொண்டு வந்து அங்கே விடுவதற்கு ஏற்பாடு செய்தார்.

'அதற்குப் பிறகு கொஞ்ச நாள்ல நீங்களும் எல்லாரும் வந்து சேர்ந்தீங்க...!' என்று சந்திரமோகன் சொல்லி முடித்த போது உமாவும், சபாபதியும் வெகுவாகத் திகைத்துப் போனார்கள்.

உமா அண்ணனை ஆழ்ந்த வருத்தத்துடன் பார்த்தாள்.

'அண்ணா! இத்தனை பிரச்சினையையும் நீங்க தனியாவே சமாளிச்சிருக்கிங்க... என்கிட்டே கூட சொல்லணும்னு உங்களுக்குத் தோணலே... இல்லே!' என்றாள்.

அவன் பெருமூச்சு விட்டான்.

'உமா... என்னை என்ன செய்யச் சொல்றே!'

'இந்தப் பிரச்சினை ஆரம்பிக்கிற சமயம்தான் உனக்கு மேரேஜ் ஆயிருக்குது. சபா மச்சானைப் பத்தி முழுசா அப்ப எனக்குத் தெரியாது. இந்தக் வீட்டுக் கேவலத்தை நான் என்னன்னு உங்கிட்டே சொல்றது. அதனால் உன் வாழ்க்கை ஸ்பாயில் ஆச்சுன்னா... என்ன செய்ய?' என்றான்.

'அதுவும் உண்மைதான்!' என்றான் சபாபதி.

சபாபதி...' மச்சான்... நீங்க டவுட் பண்ணினா மாதிரி தான்... ரிசல்ட்...' என்று சொன்னவன் மேலும் தயங்கி மனைவியைப் பார்த்தான். பிறகு சொன்னான்.

'மச்சான்...! எதுக்கும் நீங்களும் ஒரு தடவை டெஸ்ட் பண்ணிக்குங்க...!' என்றான்.

அப்போதுதான் விரக்தியாகச் சிரித்த சந்திரமோகன்
சொன்னான்.

'அதுக்கு அவசியமேயில்லை. மச்சான்!' நான் கவிதாவைத்
...ட்ட தேவில்லை!' என்று.

...மாவும் சபாபதியும் நிஜமாகவே பேச்சற்றுப் போனார்கள்.

'அப்ப... சோனா?!'

சோனா... அவ குழந்தைதான்... ஆனா... அத்தை
...ட பெத்திங்கற ஒரே காரணத்துக்காக நான் என்
...தையாவும் ஏத்துகிட்டேன்' என்றான்.

...!'

...மா! முறைகெட்டுப் போய் வாழ்ந்த எங்க மாமா
...வும் அதே மாதிரி வளர்த்துட்டார்...' என்று வருத்தத்
... ஆரம்பித்தான். கடந்த நான்கைந்து வருடங்களில்
...வாழ்க்கையே புரட்டிப் போட்ட நிகழ்ச்சிகளை
...கச் சொன்னான். பிறகு

...ப... அத்தையும்... போயாச்சு! கவிதாவை ரிலீவ்
...ட்டா... அவளுக்குப் பிடிச்ச மாதிரி வாழ்க்கையை
... வாழ்ந்துட்டுப் போகட்டும்னு நினைச்சேன்...
...ளோ... இப்படியாகிப் போச்சு' என்றான்.

... நேரம் சபாபதி தன் மனைவியிடம் சொன்னான்.

...... உங்கண்ணனைப் பாராட்டறதா வருத்தப்
...ன்னு தெரியலே. டைவர்ஸ் பண்றதுக்கு இதைவிட
...ணம் வேற கெடைக்காது. சனியனைத் தொலைக்கச்
...று சொல்றேன்; அதுக்கு சொல்றாரு.'

...ாட உடம்பில் சக்தியோட எதுத்துக்கிட்டு நிக்கற
...ந் தாக்கிவெறிய என்னால் முடியும். ஆனால்,



... விலக இப்ப
ஒறகொடிஞ்ச நிக்கற இந்தக் கவிதாவை விட்டு விலக இப்ப
என்னால முடியாது. ஏன்னா, அவளுக்கு நான் அத்தை
மகனும் கூட.

நெருங்கின உறவுக்காரன். அவளை அப்படிக் கைவிட
முடியாது' என்றான் மறுபடியும் உறுதியாக.

உமாவும் இப்போது தன் கணவனைப் பார்த்தாள்
'ஆமாங்க! என்ன இருந்தாலும் கவிதா எங்க அத்தை
பொண்ணு. அண்ணன் சொல்ற மாதிரி, கவிதாவை நாங்க
கைவிட முடியாது. குடும்ப கௌரவத்தையும் காப்பாத்
தணும். விஷயங்களை வெளியிடவும் முடியாது. ஆனா,
கவிதாவை வெளியே அனுப்பவும் முடியாது. ஏதாவது
செஞ்சே ஆகணும்' என்றாள்.

சபாபதியும், உமாவும் தொடர்ந்து டிஸ்கஸ் பண்ணு
வதைப் பார்த்த சந்திரமோகனுக்கு ஒருசேர வருத்தமும்,
மகிழ்ச்சியும் ஏற்பட்டது. இதுவரை இருந்தது போல்
எல்லா விஷயங்களையும் தான் மட்டுமே இனி சுமக்க
வேண்டிய அவசியம் இல்லை என்பது சந்தோஷமாக இருந்
தாலும், தாங்கள் மூவருமாகச் சேர்ந்து இனி நிறைவேற்ற
வேண்டிய காரியங்களை எண்ணியபோது வருத்தமாகவும்
இருந்தது.



25

டைவர்ஸ் கேஸை சந்திரமோகன் வாபஸ் வாங்கிக்
கொண்டான் என்று கேள்விப்பட்டவுடனே வாணிக்கு
ஒரு புறம் மகிழ்ச்சியாகவும் இருந்தது. அதே சமயம் அவள்

தன்னைத் திரும்பியும் பார்ப்பதில்லை என்பதை மனது
ஏற்றுக் கொள்ளவும் மறுத்தது.

கவிதாவைப் பார்ப்பதற்கு இப்போது உமாவும்,
பாபதியும் கூட அடிக்கடி வர ஆரம்பித்தார்கள். இன்னும்
ட வாணிக்கு ஆச்சரியமாக இருந்தது. என்ன என்றால்
மா கூட இப்போதெல்லாம் தன்னிடம் எதையோ
றைப்பது போல் தோன்ற ஆரம்பித்திருந்தது. அதனால்
வனும் இப்போதெல்லாம் தானாக மேலே விழுந்து
வதை அவாய்ட் செய்தாள்.

சொன்னவுடனேயே முழு நேரமும் திட்டமிட்டுக்
ண்டாள்.

காலையில் பள்ளிக்குக் கொண்டு விட்டுவிட்டு
தல்... பிற்பகலில் உறங்கச் செய்தல், மாலை நேரம்
நேரம் பூங்காவுக்கு அழைத்துச் சென்றுவிட்டு வருதல்,
ருப் பிறகு சற்று நேரம் பாடம் சொல்லிக் கொடுத்தல்
நேரம் பிஸியானது.

ந்தை பள்ளியில் இருக்கும் நேரத்தில் தான் கடிதம்
வேண்டி இருந்தால் எழுதுவாள். தனது அறையை
ரு படுத்துவது என்று ஏதாவது வேலை வைத்துக்
ண்டாள்.

வே தனக்கு விதிக்கப்பட்ட வாழ்க்கை என்று முடிவு
கொண்டாள். ஆனால், பெரும்பாலும் மாலையில்
முதல் ஏழு வரை சந்திரமோகன் அலுவலகக்
த்திற்கு முன்னால் நடப்பான். இரவு நேரங்களில்
நேரம் வாய்க்கால் கரையோரமாக அமர்ந்திருப்
ம் பார்ப்பான். பாதுகாப்பாக, யாரும் தன்னைக்
கவில்லை என்று தெளிவாகத் தெரிந்தால் சற்று
அவளைப் பார்த்துக் கொண்டிருப்பான்.



ஏனோ கடந்த ஒரு மாதமாகவே அவன் வெளியூர்ப் பயணங்களைக் குறைத்துக் கொண்டுவிட்டான் என்று தோன்றியது.

'பரவாயில்லை! கணவனும், மனைவியும் அவ்வளவு நெருங்கி விட்டார்கள்!' என்று எண்ணிக் கொண்டாள்.

அந்த வாரத்தில் ஒரு நாள் மாலை!

உமா வந்தாள்.

'அண்ணன் எங்கே?' என்று பின்கட்டுக்குப் போனாள்.

கவிதாவிடம் ஏதோ ஜோக் சொல்லி அவளை சிரிக்க வைத்துக் கொண்டிருந்தான் சந்திரமோகன்.

'அண்ணா! அப்பா உடனே உன்னைப் புறப்பட்டு வரச் சொன்னாங்க!' என்றாள் உமா.

'கவிதா... இங்கே... தனியா...!' என்று அவன் இழுக்க.

'நீ வர்ற வரைக்கும்... நான் இருக்கேன்!' என்றாள்.

அவன் மனசில்லாமல் புறப்பட்டுப் போவதைப் பார்த்து விட்டுக் கவிதாவிடம் போனாள்.

'அண்ணி, எப்படி இருக்கே?' என்றாள்.

எல்லாருமாக ஒன்று போல் முடிவு செய்து கவிதாவிடம் விஷயம் தெரிவிக்க வேண்டாம் என்று முடிவு செய்தார்கள்.

அதை செயல்படுத்தவும் செய்தார்கள். ஆனால் கவிதாவுக்கு உள்ளூர சந்தேகம் இருந்தது.

'உமா... நிஜம்மாவா சொல்றீங்க? எனக்கொண்ணும் இல்லையா?' என்று கவிதா துளைத்தெடுத்தாலும் அவர்கள் ஒன்று போல் மறைத்தார்கள்.

கவிதாவிடம் ஏதோ ஒரு களைப்புத் தெரிவதையும், அவள் முகத்தில் கறுப்பு நிறம் பரவுவதையும் பார்த்த உமா …தற்கும் சொல்லி விடுவதே நல்லது என்றும் நினைத்தாள். …னால், சந்திரமோகனின் அனுமதியில்லாமல் அப்படிச் …சல்லவும் பயந்தாள்.

'எனக்கென்ன? நான் நல்லாத்தான் இருக்கேன்..' என்றாள் …தா.

'உமா... என்ன.. உங்கண்ணனுக்கு வெளியூர் வேலை …ல்லாம் ஒண்ணும் இப்பல்லாம் இருக்கறதில்லையா!' …றாள்.

…... இப்பத்தான் டெலிபோன் இருக்கு... லாப்டாப் …கு.. செல்போன் இருக்கு. எல்லாத்தையும் அதிலயே …றாரு...' என்றாள். 'அப்புறம் டைவர்ஸ் கேஸை …வாபஸ் வாங்கிட்டாரு... ஒரு வேளை இந்த அழகான …ி கூட இருக்கணும்னு நினைக்கறாரு... போல …' என்று கேலி செய்தாள்.

…ா சிரித்தாள். 'உமா... அண்ணனும், தங்கையும் … நல்லவே நடிக்கறீங்க... ஆனா, நான் ஒண்ணும் …யில்லை. எனக்கு என்ன பிரச்சினைன்னு எனக்குத் … போனாப் போகுதுன்னு அனுதாபத்தாலே …ன் கேஸை வாபஸ் வாங்கியிருக்கிறாரு?'' … கவிதா. விரக்தியாகச் சிரித்தாள்.

…!' என்று நகைத்தாள் உமா.

…ில்லை... உமா... எனக்கு ரொம்ப சந்தோஷ …இருக்கு. இந்த மாதிரி நேரத்துல என்னைக் …... எனக்கு சப்போர்ட் குடுக்கற உறவுக் … இருக்கீங்களேன்னு... ஆனா... நான்தான் …ு வீணடிச்சுட்டேன்' என்றாள்.



தொறுங்கி அழுதாள். உமா சற்றும் தயங்காமல் அணைத்துக் கொண்டாள். சற்று நேரம் அழுதார்கள்.

கண்ணீரைத் துடைத்து விட்டாள்.

'உமா... வாழறது ஒழுங்கா வாழல்லேன்னாலும் சாகறது நிம்மதியா சாகறதுன்னு முடிவு பண்ணிட்டேன். மனசைத் தயார் படுத்திகிட்டிருக்கேன்... இதையெல்லாம் உங்க அண்ணன்கிட்டே விரிவாப் பேச எனக்குத் தைரியம்... வர்லே... எப்பவும் சண்டை போட்டுத்தான் பழக்கம். நீயே சொல்லிடு... இனிமே... நான் எப்படி இருக்கணும்னு தெரிஞ்சுக்க விரும்பறேன். அதனால் இந்த நோய் சம்பந்தமான பாம்ஃப்லெட்ஸ் எல்லாத்தையும் கொண்டு வந்து குடுங்க...' என்றாள்.

'சரியண்ணி!' என்றாள் உமா.

'அப்புறம்... இன்னொரு ரிக்வெஸ்ட்!' என்றாள் கவிதா.

'சொல்லு அண்ணி!' என்றாள் உமா.

கவிதா சொன்னாள்.

உமா 'ஓ!' என்று அவளை வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

* * *

சோனாவுக்கு நன்றாகப் போர்வையைப் போர்த்து விட்டு 'பகவத் கீதை' புத்தகத்தை எடுத்துக் கொண்டு படுக்கையில் அமர்ந்தாள் வாணி.

அறை வாசலில் நிழலாடத் திரும்பினாள். உமா நின்று கொண்டிருந்தாள்.

'வாணி உன்கிட்டே பேசணும்!' என்றாள்.

'வாங்க... உமாக்கா!' என்று வரவேற்றாள் வாணி.

...மா ஆழ்ந்த அமைதியான தோற்றத்தோடு வாணியின் ...் அமர்ந்தாள்.

...மா பேசப் பேச அதிர்ந்து போனாள். சந்திர ...ுக்காக அவள் மனம் உருகிப் போனது. கண்களில் ...ீர் தாரை தாரையாய் வழிந்தது.

... மனிதன் இந்த வயதில் இத்தனை தாங்க ...மோ...!' என்று மாய்ந்து போனாள்.

...வற்றையும் சொல்லி முடித்த உமா 'இதையெல் ...ான் ஏன் உன்கிட்டே சொல்றேன் தெரியுமா?' ...ரு காரணத்தையும் சொன்னாள்.

...் கேட்ட வாணிக்கு இன்னும் வேதனையாகப் ... அந்தப் பேச்சுக்குப் பிறகு அவள் கவிதாவிடம் ...ாள்ளும் விதமே மாறிப் போனது.

* * *

... மோகன்!' என்று அப்பா. வரவேற்ற விதம் ...யோசனையுடன் அறைக்குள் நுழைந்தான் ...ன்.

...உமா எல்லாம் சொன்னா!' என்றார் அப்பா. ...லையில்லாத பாசம் நிறைந்திருந்தது.

...ன்றான் இறங்கிய குரலில்.

...க்காக எல்லாத்தையும் அப்பாகிட்டே உளறிக் ...!' என்று எண்ணிக் கொண்டிருக்கையி ...் அப்பா புன்னகைத்தார்.

...துக்காக இத்தனையையும் மறைச்சு வச்சு... ...யையும் நீயே சுமந்தே!' என்றார் அப்பா.

...ன் அப்பா முகத்தைப் பார்த்தான். 'அம்மா ...ும் என் மேல எவ்வளவு பிரியம்



வச்சிருந்திங்கன்னு எனக்குத் தெரியும். ஆனா, எந்த விதமான ஆதரவும் இல்லாம அத்தை கஷ்டப்பட்டுக் கிட்டிருந்ததைப் பார்த்தற்குப் பிறகு அவங்களை அப்படித் தனியாக் கஷ்டப்பட விடறதுக்கும் எனக்கு மனசு வர்லே. அதனாலதான் கைகுடுக்க வேண்டியதாப் போச்சு... உங்ககிட்டே எல்லாத்தையும் சொல்லி... நீங்க வேண் டாம்ன்னு தடுத்தா... நான் மீறிகிட்டு செய்ய முடியாது... அதனால்தான்...' என்று இழுத்தான்.

அம்மா அவனைக் கட்டிக் கொண்டு அழுதார்.

இது தெரியாம உங்கப்பா வேற உங்கிட்ட கோபிச்சுக் கிட்டார். அதையும் தாங்கிக்கிட்டு 'ஐயோ தம்பி..' என்று மேலும் அழுதார்.

அவன் வாஞ்சையுடன் அம்மாவின் முதுகைத் தடவிக் கொடுத்தான்.

'பரவால்லம்மா... அதெல்லாம் முடிஞ்சு போச்சு... இனி ஏன் அதைப் பத்தியெல்லாம் கவலைப்பட்டுக்கிட்டு..?' என்றான்.

மனம் விட்டுப் பேசினான். 'கவிதா... பொறுப்பில்லாம குழந்தையைச் சுமந்துகிட்டு வந்து நிக்கறா... கலைக்க முடியாத சூழ்நிலைங்கறாங்க... மாமாவும் படுக்கையில விழுந்தாச்சு... இந்தச் சூழ்நிலையில நான் அத்தையை எப்படித் தனியா விடறது? மனசு வர்லே... ' என்றான்...

அப்பாவின் கண்கள் கலங்கின.

'தாங்க்ஸ்டா... தம்பி! தாங்க்ஸ்!'

'அப்பா... நம்ம கலாச்சாரத்தோட பலமே... உறவுகள் தாம்ப்பா... என்னதான் அடிச்சுகிட்டாலும்... ஒரு நல்லது பொல்லதுன்னு வரும்போது கைகுடுக்கறதைப் பாத்திருக்

ளா..! அதுதான் நம்மளோட உறவோட பலமே...!'
ருந்து என்னால மீள முடியலே...' என்றான்.

ப்பா நீண்டதொரு பெருமூச்சு விட்டார்.

லாத் தவறுகளுக்கும் காரணம்... நான்தாம்ப்பா...
ாகப்பனோட வெளித் தோற்றத்தைப் பார்த்து
ட்டேன். கம்பீரமா இருப்பான். ஆளும் அழகன்,
சதி வேற. பெரிய குடும்பம். இதெல்லாம்
னே தவிர... சிவகாமியோட சாந்தமான சுபாவத்
ந்தவனா இருப்பானான்னு பார்க்காமப் போயிட்
அவளும் எனக்கு அவமானம் வந்துரக் கூடா
நிறையத் தாங்கிட்டா...!' என்றார்.

மோகன் தொடர்ந்து சொன்னான். 'சோனாக்
வளர வளர அப்படியே சிவகாமி அத்தை
ாவே வளரவும்... எனக்கு அந்தக் குழந்தை
ம் வந்துடுச்சு... அது மட்டுமில்லாம...'குழந்தை
பாசமா வளர்க்கப் பட வேண்டியவங்க...
க்கு இந்தப் பிரச்சினையெல்லாம் தெரிய
அவசியம் இல்லப்பா... இனிமேலாவது...
டிஞ்சவரைக்கும்.. அந்தக் குழந்தையைப்
க்கணுமப்பா..' என்றான். பிறகு பெற்றோர்
ம் கெஞ்சுவது போலப் பார்த்தான்.

மேட்டர்லயும் அதேதாம்ப்பா... சொல்
பத்த நிலைமையில எவ்வளவுக்கெவ்வளவு
க்கணுமோ... அப்படி... நடந்திருலாம்ப்பா...'

ர். அப்பாவும் ஒத்துக் கொள்வதாகத்
ார்கள்.



அவன் எழுந்து சற்று நேரம் குறுக்கும் நெடுக்குமாக நடந்தான். பிறகு சொன்னான்.

'ஒரு வகையில பார்த்தா அவளும் சூழ்நிலைக் கைதி தாம்ப்பா... வாணி சொன்னா மாதிரி அவங்கப்பா... வேணுங்கற சுதந்திரம் குடுத்துட்டாரு. அத்தை எப்பவும் அவளைக் குற்றவாளியாவே பார்த்தாங்க... வெஸ்டர்ன் கலாச்சாரம் சுற்றுப் புறத்தைப் பத்திக் கவலைப்படாதே! எது உனக்கு சரியோ அதைச் செஞ்சுக்கோங்கற மாதிரியான கலாச்சாரம்... இங்க நேர்மாறான விதம். இரண்டுக்குமே இடையில ஊசலாடி 'ரிபெல்லியஸ்' ஆகிப் போயிட்டா... விளைவு இன்னைக்கு இப்படி ஆகிப் போச்சு' என்றான். மேலும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தான். பிறகு புறப்பட்டான். புறப்படும்போது மறுபடியும் அம்மா, அப்பாவிடம் சொன்னான்.

'அப்பா! கவிதா... கொஞ்சம் இரிடிகல் பொஸிஷன்லதான் இருக்கா, எந்தக் கோபத்தையும், வெறுப்பையும் காட்டறதுக்கு இது நேரமில்லப்பா...' என்றான்.

'சரிப்பா! புரிஞ்சுகிட்டோம்!' என்றார் சோகமாக.

அங்கேயே உணவருந்திவிட்டுப் புறப்பட்டான். ஹாலுக்கு வந்து அவனை வழியனுப்பிய அப்பா...

'தம்பி! உன்னைப் பத்தி ரொம்பப் பெருமைப் படறேன்டா.. சாமி!' என்று தோளோடு அணைத்துக் கொண்டார்.

அவனும் நெகிழ்ந்து போனான்.

'தாங்க்ஸ்ப்பா! தாங்க்ஸ்ம்மா! நீங்க புரிஞ்சுகிட்டீங்கங்கறதே எனக்கு யானை பலமா இருக்குதுப்பா...' என்றான்.

'அப்பா... கவிதா... விஷயத்துல...!' என்று மறுபடியும் ரம்பிக்க.

'டேய் போடா! எனக்கும் அவள் தங்கச்சி மக ண்டா... கௌரவம் குறையாமப் பாத்துக்கலாம்டா' ன்றார்.

சந்திரமோகன் மனம் நிறைவாய் உணர்ந்தான். தாவின் உடல்நிலை மேல் அவனுக்கிருந்த கவலையில் பட்ட டிப்ரஷன் அப்பாவின் பேச்சால மறைந்து விருந்தது.

அதே சமயத்தில் அவனது உள்மனம் விழித் ந்தாற்போல் அமர்ந்து ஒரு கேள்வியைக் கேட்டது.

ந்தக் கேள்வியில் அவன் சற்றே நிலைகுலைந்துதான் னான்.

தைப் பற்றி அன்றிரவு உமாவை அழைத்துச் செல்ல வீட்டுக்கு வந்திருந்த சபாபதியிடம் விரிவாகப் ான்.

பதி அவனை முறைத்துப் பார்த்தான். 'மச்சான்... என்று ஏதோ சொல்ல ஆரம்பிக்கையில்.

ன்... மச்சான்!' என்று கையை உயர்த்தி அவன் அடக்கிவிட்டான்.

அறைந்து சாத்திவிட்டு டிரைவர் சீட்டில் சபாபதி உமாவைப் பார்த்துக் கசப்பாகச் சொன்

ன்னனுக்கு சுத்தமா நட்டு கழண்டு போச்சு...'

அப்படி சொல்றீங்க?' என்றாள் வியப்பாய்



'என்னா மனுஷன் நல்லது செய்றதுக்கு ஒரு அளவு இருக்கு...!' என்றான்.

அவள் விழித்தாள். அதைப் பார்த்த சபாபதி சட்டென்று தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டான்.

'விடு... நான் இதை வேற விதத்துல டீல் பண்ணிக் கறேன்...' என்றான்.

உமாவுக்கு எதுவும் புரியவில்லை. 'ஒன்னும் புரி யலே...!' என்றாள்.

'புரியலயில்ல.. அதே நல்லது உத்தமம்' என்றான்.

உமா கப்பென்று வாயை மூடிக் கொண்டாள்.



26

'குட்மார்னிங் மம்மி!' என்ற குரல் கேட்டுத் திரும்பி னாள் கவிதா.

'குட்மார்னிங் தங்கம்!' என்றாள்.

'ஹை...! மம்மி... என்னைத் தங்கம்னு கூப்பிட்டுட் டாங்க!' என்று குதித்தாள் சோனா.

'சொன்னாலும்... சொல்லாட்டாலும் நீ தங்கம்தான்டி. ராஜாத்தி...!' என்று கொஞ்சினாள் கவிதா.

சோனாவுக்கு ஒரே மகிழ்ச்சி. பின்னால் நின்ற வாணி, 'குட்மார்னிங்... மேடம்!' என்றாள்.

'குட்மார்னிங்!' என்றாள் கவிதா. 'வா... வாணி!' உட்காரு!' என்று வரவேற்றாள்.

'மம்மி... நேத்து என் கிளாஸ்ல அந்த சந்திப்... இல்லே... அவன் என் பென்சிலைப் பிடுங்கிட்டான். அப்புறம்... நான் மிஸ்கிட்டே சொல்லி... அவங்க வாங்கிக் குடுத்தாங்க' என்றாள்.

'குட்...! அதுதான்... நல்லது. நீயா சண்டைக்குப் போகக் கூடாது... என்ன?' என்றாள்.

சற்று நேரம் கழித்து வாணி 'மேடம்! எந்த ஹெல்ப் வேண்ணாலும் தயங்காம எந்த நேரத்துலயும் கூப்பிடுங்க... வந்துர்றேன்...' என்றாள்.

'சரி... வாணி!' என்றாள். 'இப்பப் பசிக்குதே!' என்றாள்.

உடனே வாணி ஓடிப்போய் சுந்தரம்மாவிடம் சொல்லி சூடாக டிபனை எடுத்து வந்து பரிமாறச் செய்தாள்.

சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு வாணி,

'மேடம்! சோனாவுக்கு ஸ்கூலுக்குக் கிளம்ப நேர ...ாச்சு...' என்று கிளம்பினாள். கதவுக்கருகில் போனவுடன் ...விதா அழைத்தாள்.

'வாணி! இனிமே மேடம்ங்கறதெல்லாம்... விட்டுட்டு ...க்கான்னு கூப்பிடு...' என்றாள்.

வாணி ஒரு நிமிடம் விழித்துப் பார்த்து விட்டு 'சரிங் ...கா...' என்றாள்.

...கவிதாவின் சிரிப்பு அவளைத் தொடர்ந்தது. வாணி ...ப்புடனேயே போனாள்.

* * *



மெது மெதுவாகத் தன் உடலில் ஏற்படுகின்ற மாற்றங்களை உணர்ந்தாள் கவிதா.

முகம் கறுத்துக் கொண்டே போனது. கை கால்கள் தளர்ச்சியடைந்தன.

அடிக்கடி காய்ச்சல் வேறு வந்தது. சந்திரமோகனும் உமாவும் குடும்பத்தாரும் மாலை நேரங்களில் அவளோடு செலவழித்தார்கள்.

கவிதாவுக்கு உடல்நிலை சரியில்லை என்ற செய்தி மெதுவாகக் கசிய ஆரம்பித்தது.

சபாபதி மற்றவர்களிடம் 'கவிதாவுக்கு இரண்டு கிட்னியுமே ஃபெயிலியர் ஆகிவிட்டது' அது அவளுக்கு இன்னும் தெரியாது' என்று சொல்லி வைத்தான்.

அடுத்தடுத்து உறவினர்கள் பார்க்க வந்தார்கள். கவிதாவிடமும் சொல்லி வைத்தார்கள்.

அன்றைக்கு என்னவோ எல்லாரும் ஒன்பது மணிக்கே போய்விட்டார்கள்.

சந்திரமோகன் மட்டும் உடனிருந்தான். அப்போதுதான் அந்தக் கேள்வியைக் கேட்டான்.

'கவிதா... உனக்கு மனசுல எந்தக் குறையும் இருக்கக் கூடாதுன்னு ஸ்ட்ராங்கா ஃபீல் பண்றேன்...' என்றவன் தயங்கினான். பிறகு,

'எனக்குத் தெரியும்... யு வேர் அட்ராக்டட் டு மி... ! நாம... நாம.. !' என்று நிறுத்தினான்.

கவிதா ஹார்லிக்ஸைக் குடித்துக் கொண்டிருந்தவள் நிறுத்திவிட்டுக் கணவனைப் பார்த்தாள்.

குபீரென்று சிரித்தாள்.

'ஐடியல் ஹஸ்பெண்ட்... இல்லே?!' என்றாள்.

அவன் அவள் முகம் பார்க்கவில்லை. 'நான் சட்டப்படி உன் ஹஸ்பெண்ட்தான்... ஃபிஸிகலா இல்லேன்னாலும் நான் உனக்கு இதுவரை லாயலாத்தான் இருந்திருக்கேன்... நெவர் நெவர் டச்...' என்று தொடருமுன்னே அவன் ...ழுந்து வந்தாள்.

'ஐயோ... அத்தான்!' என்று மார்பில் சாய்ந்து கொண் ...ாள்.

'எனக்கு என்ன பிரச்சினைன்னு உங்களுக்குத் தெரியு ...ல்லே...!' என்றாள்.

'நான் சபா மச்சான்கிட்டே பிரிகாஷன்ஸ் பத்தி ...ல்லாம் கேட்டுட்டேன்... நீ பயப்படவேண்டியதில்லே' ...றான் சந்திரமோகன்.

...ட்டென்று அவள் கைகள் அவன் கழுத்தை ...ந்தன. தன் முகம் நோக்கி இழுத்தாள். அவனது ...ண்டு கன்னங்களிலும் மாறி, மாறி இதழ் பதித்

...ன் இயந்திரம்போல் நின்று கொண்டிருந்தான்.

...தா சட்டென்று தன்னை மீட்டுக் கொண்டாள்.

...ங்க்ஸ்... அத்தான்! தாங்க்ஸ்! ஆனா, இப்பவும் ...மேரேஜ் மேலே நம்பிக்கையில்லே... வாழ்க் ...பத்தின என்னோட கணிப்பு வேற... ஆனா, ...இந்த இண்டியன் பெண்டத்தோட வேல்யூ எனக்குப் ...' என்றாள்.

...ன் மௌனமாகத் தலைகோதியபடி நின்றாள்.

...ருக்கு நான் தகுதியில்லே... அத்தான் யு டிசர்வ் ...டர் கேர்ள்... நாட் மீ!' என்றாள்.



'அப்படியில்லே... கவிதா!' என்று அவன் ஆரம்பிக்க,

'இல்லைங்கத்தான்...' என்னோட கடைசி ஆசையை நிறைவேத்தணுங்கறதுக்காக... உங்களை மாதிரி ஆட்கள் தியாகம் பண்ற விஷயம் இல்லே... இது...! அது மட்டு மில்லே... உங்க மனசு வேற இடத்துல இருக்குதுங்கறதும் எனக்கு தெரியும்...'

சந்திரமோகன் பதறிக் கொண்டு நிமிர்ந்தான். 'வேண்டாம்... எந்த விளக்கமும் வேண்டாம். அத்தான் எப்ப டைவர்ஸ் நோட்டீஸை நீங்க திரும்ப வாங்கி னீங்களோ அப்பவே நீங்க என்னோட காலத்துக்கும் எனக்கு லாயலாத்தான் இருப்பீங்கன்னு எனக்குத் தெரியும்' என்றாள்.

அவன் மௌனமாக நாற்காலியில் அமர்ந்தான்.

'அதுக்காக... இந்த அளவுக்கு வேண்டியதில்லே... அத்தான். அது மட்டுமில்ல... இந்த விஷயத்து மேலயே... இப்ப எனக்கு வெறுப்பாயிடுச்சு...' என்றாள்.

'ஓ...!'

'ஆமாங்கத்தான்... ஐ ம் நோ லாங்கர் இன்ட்ரஸ்டட்!' என்றாள்.

அவன் சற்று நேரம் தலையைக் குனிந்து கொண்டு அமர்ந்திருந்தான்.

'அத்தான்... கவலைப்படாதீங்க... நான் மெண்ட லாத் தயாராயிட்டேன். இருக்கற வரைக்கும், எவ்வளவு சிரிக்க முடியுமோ... அவ்வளவு சிரிக்கப் போறேன்... அதுக்கு மட்டும் எனக்கு ஹெல்ப் பண்ணுங்க...' என்றாள்.

அப்போதே ஏதோ ஜோக் சொல்லிக் கொண்டு சிரிக்க ஆரம்பித்தான்.

முதலில் சற்று நேரம் சங்கடமாக மௌனம் சாதித்த …திரமோகன் அவள் நடித்த விதம் பார்த்துத் தானும் …க்க ஆரம்பித்தான்.

* * *

…விதாவுக்கு நாட்கள் பறந்தோடின. அதே சமயம் …க்க முடியாத அந்த விஷயமும் நெருங்கிக் கொண்டே …ந்தது.

…ணி அவளுக்கு 'பகவத் கீதை' புத்தகத்தை படித்துக் …னாள்.

…கூரின் கீதாஞ்சலியைப் படித்துக் காட்டினாள்.

…க்கையில் ஒவ்வொரு நாளும் வாழ்க்கையும், …ம் இரட்டையர்களாகவே நம்மோடு இயங்கிக் …டிருக்கின்றன என்ற தாகூரின் கருத்து அவளை … வைத்தது. 'தலைக்கு மேலே தொங்கிக் …ருக்கும் கத்தி. தகதக்கும் வாள்' என்றெல்லாம் …ரணத்தை வருணித்திருப்பது அவளுக்கும் பெரிதும் …ாக இருந்தது.

…சமனப்பட்டது. ஆனால், உள்ளே அச்சம் இருந்து …ான் இருந்தது.

…ள் வாணியை அழைத்தாள். சோனாவை அவள் …த்துக் கொடுத்தாள். 'பாத்துக்குங்க... வாணி,' … பிறகு சிரித்தாள்.

…மோ இத்தனை நாள் இவளை நான்தான் … மாதிரியும். கடைசிக் கட்டத்துல உன்கிட்ட …ம் மாதிரியும். பயங்கர வொண்டு... இல்லே… …று மறுபடியும் சிரித்தாள்.

… எப்படியிருந்தாலும் இவ உங்களோட …ள்' என்றாள்.



'ஆமா... என்னோட சொத்து... அதோட உன்னோட சொத்து ஒண்ணை போனாப் போகுதுன்னு கொஞ்ச நாள் எனக்குத் தாரை வாத்துக் குடுத்திருக்கியே... அதையும்... நான் பத்திரமா சேதப்படுத்தாமத்தான் வச்சிருக்கேன்... உன்கிட்டயே திரும்பி ஒப்படைக்கிறேன்' என்றாள்.

'அக்கா...!' என்று வாணி ஆரம்பிக்க.

'தெரியும்... தெரியும்... என் உடம்பு நல்லா இருக்கறப்பவே நீ எடுத்த முடிவுதான் அதுன்னு... சுத்தியும் இருக்கறவங்க எல்லாரும் ரொம்பத் தியாகம் பண்றீங்கப்பா... தாங்க முடியலே' என்று விஷயத்தை லேசாக்கிச் சிரித்தாள்.

வாணி கண்கலங்கி நின்றாள். ஆனால் உடனே பேச்சை மாற்றி அவள் கவனம் மாற்றினாள்.

எல்லாவற்றைக் காட்டிலும் ஆச்சரியம் என்னவென்றால் குமாரசாமியும், அமுதவல்லியும் அடிக்கடி வந்து கவிதாவோடு நேரம் செலவழித்துதான்.

வாணி, மோகன், சபாபதி, உமா நால்வரும் அடிக்கடி அவள் முன்பு அமர்ந்து சீட்டு விளையாடுவார்கள். கேரம் விளையாடுவார்கள். கலாட்டாவாக இருப்பார்கள். கவிதாவுக்கும் வேதனைகள் மறந்து போகும்.

கவிதாவை எவ்வளவு மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ள முடியுமோ அவ்வளவு மகிழ்ச்சியாக வைத்துக் கொண்டார்கள். ஒரு மாலையில் எல்லாரும் சுற்றி நின்று கொண்டு கண்ணீர் வடிக்க அவள் மரணத்தின் மடியினில் தலை சாய்க்கும் வரை.

'உறவுகளையே மதிக்காத என்னை மாதிரி ஒரு பெண்ணுக்கு இத்தனை அன்பும், பாசமும் திரும்பக்

கிடைத்ததைவிட வேறென்ன அதிர்ஷ்டம் வேண்டும்?' என்று மரணத்திற்கு முதல் நாள் நெகிழ்ந்து போய் சொன்னாள்.

'புயல் மாதிரி வாழ்ந்து புயலாகவே மறைந்து போனான்' என்று அமுதவல்லி தன் ஆழ்ந்த வருத்தத்தை வெளி யிட்டார்.

* * *

மூன்று மாதங்கள் வேகமாக ஓடியிருந்தது. ஆனால் ...னமாகவும், சோகமாகவும்...!

எல்லாரும் யாரோ பின்னாலிருந்து சாட்டையை ...த்துக் கொண்டு விரட்டுகிறார் போலே சுற்று முற்றும் ...க்காது ஓடிக் கொண்டிருந்தார்கள்.

...ார்ச் மாத இறுதியும் வந்தது. சோனாவுக்கு விடுமுறை ...கிவிட்டது.

...ா இதற்கிடையில் உறவினர்களிடம் ஒரு செய்தியைப் ...ி வைத்தான்.

...க்கும் தருவாயில் சந்திரமோகனிடம் வாணியைத் ...திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று கவிதா ...றுதி வாங்கியிருந்தாள் என்று.

...ிரமோகன் முன்பு போலவே அந்தப் பக்கத்து ...த்திலேயே தங்கிக் கொண்டான்.

...வர்கள் ஆலோசனை செய்ய ஆரம்பித்தார்கள். ...ான் துணை இருந்தால் வாணிக்கு நேரம் ...லே போனது.

...ான் மாலை!

...மாவிடம் ஒப்படைத்து சோனாவைக் கொஞ்ச ...ிரமோகனிடம் இருக்கச் செய்யுமாறு சொல்லி



விட்டுத் தன்னறைக்குப் போன வாணி வேலையாட்கள் வந்து 'யாரோ வந்திருக்கிறார்கள்!' என்று அழைக்க வெளியே வந்தாள்.

பார்த்தவள் அதிர்ந்து நின்றாள்.

டாக்டர். குமார் நின்று கொண்டிருந்தான். வாணியின் கண்களில் பீதி நிறைந்தது.

அவனை 'உள்ளே வா!' என்று கூடக் கூறாமல் பேயைக் கண்டவள் போல் சந்திரமோகனின் பங்களா நோக்கி ஓடினாள்.

சோனாவைத் தோளில் ஏத்திக் கொண்டு சுந்தரம் மாவிடம் சிரித்தபடி பேசிக் கொண்டிருந்த சந்திரமோகன் திரும்பி அவளைப் பார்த்தான்.

'வா... வாணி!'' என்றவன் அவள் கண்களில் தெரிந்த பீதியைப் பார்த்து

'ஹேய்! வாட்ஸ் த மேட்டர்!' என்றான்.

'அங்கே... டாக்டர் குமார்...! வந்திருக்கான்!' என்று நடுங்குவதைப் பார்த்து குழந்தையை சுந்தரம்மாவிடம் கொடுத்து விட்டு அவனை நெருங்கினாள்.

மழையில் நனைந்த கோழிக் குஞ்சு போல் நடுங்குகின்ற அவளைத் தோளோடு சேர்த்துக் கொண்டான்.



## 27

'என்னடி பொண்ணே! சமையல் மணம் தூக்கலா இருக்கு... என்னடி ஜட்டம் ' என்று தனது இரட்டை நாடி

நெகிழ்ந்து போய் தப்பையெல்லாம் உணர்ந்து இருந் திட்டான்' என்று சிரித்தான்.

பல நாட்களுக்குப் பிறகு சந்திரமோகன் அவளிடம் ஃப்ரீயாகப் பேசுவதைக் கண்ட சுந்தரம்மா குழந்தையை அந்தப்புறம் எடுத்துக் கொண்டு நகர்ந்தாள்.

'சரி... வா!' என்று அழைத்து கொண்டு வந்தான்.

அதற்குள் டாக்டர். குமாரை சோபாவில் அமரச் செய்திருந்தார் சுந்தரம்மா.

'ஹலோ... குமார்!' என்று வரவேற்றான் சந்திர மோகன்.

சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். 'சாரி...! மோகன்... என்னால உங்க வீட்ல நடந்த துக்க சமா சாரங்களையெல்லாம் விசாரிக்க வர முடியலே... இப்பத் தான் முடிந்தது. அதோட... அப்பாவும், அம்மாவும் வாணியைப் பாத்துட்டு முடிஞ்சா கூட்டிட்டு வரச் சொன்னா...' என்றான்.

'ஓ...!' என்று வாணியைப் பார்த்தான்.

'உட்கார்!' என்று சோபாவைக் காட்டினான். அவளும் அவன் அமர்ந்திருந்த சோபாவிலேயே சற்றுத் தள்ளி அமர்ந்தாள்.

'என்ன வாணி?!' என்றான்.

'நா... நான்... ரெண்டு மூணு நாள் கழிச்சுப் புறப்பட்டு வர்றேன்னு சொல்லுங்க...' என்றான்.

சொன்னமாதிரியே இரண்டு மூன்று நாட்கள் கழித்துப் புறப்பட்டு வந்தாள்.

புறப்படுவதற்கு முன்பு கவிதாவின் இறப்புக்கு மூன்று மாதங்களுக்குப் பிறகு அவளது அறை வாசலில் நின்றான்.

...ணி!" என்றான்.

...கேஸில் துணிகளை அடைத்துக் கொண்டிருந்த
...திரும்பிப் பார்த்தான்.

...!" என்றான்.

... உள்ளே வர்ல. நீ வெளிய வா!' என்றான்.

...ன்...' வாணி! போயிட்டு எப்ப வரப்போறே!'

...லே... அங்கிளும் ஆன்ட்டியும் லீவ் முழுக்க
...க்கச் சொல்றாங்க' என்றாள்.

... இந்த மோகன் வேற. பெரிய இதுவாட்டம்
...கூட இல்லே. இங்க இருந்துகிட்டு என்ன
...து. நினைக்கறியோ!' என்றான்.

...டுப்போய் அவனைப் பார்த்தாள். 'அப்படி
...இல்லே!' என்றாள்.

...மெல்லப் புன்னகைத்தான்.

... உன்கிட்டேயிருந்து விலகி நிக்கறது உனக்
... உமா வேற எல்லாத்துகிட்டயும் உனக்கும்.
...மரேஜ்ன்னு விஷயத்தைப் பரப்பிக்கிட்
... அதுல நான் அடிக்கடி வந்து உன்கிட்டே
...தா... வேலைக்காரங்க முதற்கொண்டு பேசுக
... ஸெம்பும். தோப் யு அண்டர்ஸ்டேண்ட்!'

...கமாகத் தலையை உருட்டினாள். அவன்
...ந்து விட்டான்.

...க்கடி இப்படின்னு கண்ல பட்டுட்டிருந்
...ொஞ்சம் மனசுக்கு நல்லா இருக்கும்..!'



அவள் முகம் சிவக்க மௌனமாக நின்றாள். அவன் நீண்டதொரு பெருமூச்சு விடுவது போல் நடித்தான்.

'வாணி!' என்றான் குழைந்து போன குரலில்

அவள் மெல்லிய குரலில் சோனாவை வேற பாக்காம இருக்க முடியாது...' என்றாள்.

'அப்ப... என்னைப் பார்க்காம இருக்க முடியுங்கறே!' என்றான்.

அவள் மௌனமாகத் தலையைக் குனிந்தபடி நின்றாள்.

'சரி... புறப்படு..!' என்றான். மறுபடியும் கார்ல போ. டிரைவரை அனுப்பறேன்...' என்றான்.

அவள் மறுபடியும் தலையாட்டினாள். அன்றைக்கு முதல் நாள்தான் சோனாவை உமா அழைத்துக் கொண்டு போயிருந்தாள்.

இரண்டு எட்டு எடுத்து வைத்தவன் 'நீயும் இல்லாம... சோனாவும்... இல்லாமே...!' சே...! என்று தன் தாபத்தையெல்லாம் குரலிலேயே காட்டினான். சற்று நேரம் விழுங்கினாற் போல் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு

'சரி... சரி... நீ கௌம்பு!' என்று போய்விட்டான்.

அவன் போவதைப் பார்த்து வாணி உள்ளே போய்க் கட்டிலில் சற்று நேரம் அமர்ந்து கொண்டாள். படபடப் பாக இருந்தது.

'ஐயோ! இவரு... கண்லயே கலகம் செய்யற ஆளு...' என்று உள்ளுக்குள் சிரித்துக் கொண்டாள்.

புளிக்குழம்பை எடுத்து ஒரு பாத்திரத்திலே ஊற்றியபடி அதையெல்லாம் நினைத்துக் கொண்டாள்.

அப்போது மகாலட்சுமி பரபரப்பாக வந்தாள்.

'மாமி! என்னஇது... வாணியைப் போய் சமையல்
ப்பச் சொல்லியிருக்கேன். பிள்ளையாத்துக்காரா...
லாம் இன்னைக்கு சாயங்காலமே வர்றாளாம். இப்படி
த்துப் பூத்து நின்னா டயர்டாயிட மாட்டாளோ...,
... ஓடு... போய் ரெஸ்ட் எடு' என்று செல்லமாகத்
ரிவிட்டார்.

ன்ன மன்னி... நீங்க? இப்படி என்ன சோம்பேறி
றீங்க...!' என்று முணுமுணுத்தபடி நகர்ந்தாள்

க நேரம் காரில் மடியில் சோனாவை வைத்தபடி
ளை மூடி ரிலாக்ஸ்டாகச் சாய்ந்திருந்தான்... சந்திர
ன்...

றி 'மச்சான்!' என்று ஏதோ சொல்ல பின்னிட்டி
முயற்சி செய்ய அவன் பக்கத்தில் அமர்ந்திருந்த
ல்ல அவன் தொடையில் ஒரு தட்டுத் தட்டி 'ஷ்!'
சைகை செய்தாள்.

ரும் சத்தமில்லாமல் சிரித்தார்கள்.

* * *

தார்த்தம் நடந்து முடிந்திருந்தது...

ஒரு விதத்தில் சந்தோஷப்பட்டாள். ஆனால்
க்கமும் கூட .

ம் நின்று இரண்டு வார்த்தைகளாவது பேச
ரமோகன் என்று எதிர்பார்த்தாள். ஆனால்,
ன் வந்திருந்தாலோ என்னவோ அடக்கமாக
ட்டுப் புறப்பட்டுவிட்டாள்.



உமாவுக்கும், சந்திரமோகனுக்கும் அம்மா, அப்பாவிடம் சம்மதம் வாங்குவது கடினமாக இருக்குமோ என்ற பயம் இருந்தது. ஆனால் குமாரசாமியிடம் உமா விஷயத்தைக் கோடி காட்டியவுடனே குமாரசாமி வாயெல்லாம் பல்லானார்.

'பயலுக்குப் பிடிச்சாப் போதும்மா... இனிமேலாவது மனசுக்குப் பிடிச்ச வாழ்க்கை வாழட்டும்!' என்று விஷயத்தை எளிதாக்கிவிட்டார்...

அப்பாவே இதற்கு ஏற்பாடுகளைப் பார்க்கவும் சந்திரமோகன் பின்னணியில் அமைதியாக இருந்து கொண்டான்.

திடீரென்று இன்றைக்குக் காலையில்தான்,

'இன்னைக்குத் திருச்சி போறோம். சாயங்காலம் நிச்சயதார்த்தம்' என்று அறிவித்தார்.

விஸ்வநாதன் 'ரொம்ப அருமையான பொண்ணு சார்...! உங்காத்துப் பையன் ரொம்ப லக்கி... இனிமே லைஃப் அவனுக்கு நன்னா இருக்கும் பாருங்கோ!' என்றார்.

குமாரசாமி பெருமூச்சு விட்டார்...' எல்லாக் கஷ்டத்தையும் தோள்ல வாங்கிப் போட்டுகிட்டான். இனிமேலாவது சந்தோஷமா இருக்கணும்' என்றார். ஆத்மார்த்தமாக.

சந்திரமோகன் ஏனோ இரண்டாவது வரிசையில் அமர்ந்து கொண்டு அமைதியாக நிச்சயதார்த்தம் நடப்பதையும், உமாவும், மகாலட்சுமியும் வாணியைக் கலாட்டா செய்வதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தான். அழுத்தமாகப் புன்னகைத்துக் கொண்டான்.

ல்லாருடனும் புறப்படும்போது மட்டும் லேசாக
வளைப் பார்த்துத் தலையசைத்து விட்டுப் புறப்
ட்டான். அவளும் தலையசைத்தாள். அவ்வளவுதான்...

இரவெல்லாம் உறக்கம் வரவில்லை. ஆனால் இன்
ாரு மனது சொன்னது.

'பொண்ணே! என்ன இருந்தாலும் உலகத்துக்கு கவிதா
ள் மனைவிதானே... முதல் ஃவொய்ப்... போயி மூணு
ம் கூட ஆகல்லே... அதுக்குள்ள இன்னொரு
ண்ணுகிட்டே வழிய ஆரம்பிச்சுட்டான் பாருன்னு...
வாங்களோ? என்ற பயம் இருக்காதா?' என்று
ட்டது.

னுடைய ஏமாற்றத்தை வெளிக் காட்டிக் கொள்
லே காலையிலும் நடமாடிக் கொண்டிருந்தாள். ஏழு
மாக்கில் மகாலட்சுமி வந்து.

ாண்ணே! நோக்கு ஒரு மணி நேரம் டைம்...
ள்ளே புறப்பட்டு ரெடியா இருக்கணும்' என்றாள்.

க்கு..?!' என்றாள் வாணி.

கா?' உன்னோட அந்த பங்களா இருக்கோன்னா,
நீயும் உங்கப்பாவும் தங்கியிருந்தேளோன்னா.
ல்லைக் கொஞ்சம் மாடர்னைஸ் பண்ணியிருக்
உங்க அங்கிள். நீ வந்து பாத்துட்டு ஓபினியன்
ணுமாம்!'

? அங்கிளுக்குத் தெரியாதது எனக்கு என்ன

லாம்_ நீ அவாளாண்டை சொல்ல வேண்டியது.
னைஸ் பண்ணின டூட்டி. நான் செய்ய
ணா?'



வாணி புறப்பட்டாள்.

காரில் போனார்கள். காரை நிறுத்தி விட்டுக் குமார் சொன்னான்.

'வாணி, நீ உள்ளே போய்ப் பார்த்துண்டிரு. நானும் மன்னியும் ஹாஸ்பிடல் வரை போய்ப் பாத்துட்டு வந்துட றோம்...' என்று உடனே கிளம்பி விட்டார்கள்.

வாணி ஆர்வமில்லாதவளாக உள்ளே நுழைந்தாள்.

'இதென்ன.. கதவு திறந்தே கிடக்கு!' என்று எண்ணிக் கொண்டே உள்ளே எட்டிப் பார்க்கையில் ஒரு கை அவளை உள்ளே இழுத்தது.

அச்சத்தில் அலறி விட இருந்தவள் திரும்பிப் பார்த்தவள் திகைத்து நின்று விட்டாள்.

'நீங்க ஊருக்குப் போகலையா?' என்றாள்.

சந்திரமோகன் மெல்ல அருகே இழுத்தபடி சிரித்தான்.

'போகலே!' என்றான்.

'ஏன்?' என்றாள் வாணி ஏதோ கேட்க வேண்டுமென் பதற்காக.

'என்னா... இதுக்குத்தான்...!' என்றவன் அவள் முகம் நோக்கிக் குனிந்தான்.

மெல்ல விடுவிக்கும்போது வாணியின் முகம் சிவந் திருந்தது. ரசித்துப் பார்த்தான்.

'தப்பில்லையோ... இது!' என்றாள் வாணி.

'என்ன தப்பு..?! முறையா நிச்சயம் ஆனதுக்குப் பிற கோ... ஒரு அட்வான்ஸ் வாங்கிக்கக் கூடாதா?' என்றா குழைந்து போன குரலில்.

அவள் சேர் ஒன்றின் விளிம்பை நீவிக்கொண்டு நின்றிருந்தாள்.

அவனைப் பார்க்க மறுத்தாள்.

'கேக்கறதுக்கு ஆளில்லைன்னு வம்பு செய்றீங்க?' என்றாள்.

அவன் குறும்பாகச் சிரித்தான்.

'யார் சொன்னா? கேக்கறதுக்கு நானிருக்கேனே. என்ன கேக்கப் போறேன்னு வேண்ணா... கேளு... ல்றேன்...' என்று அவன் அப்படியே வார்த்தைகளைத் ருப்பிப் போடவும் அவள் மலைத்துப் போய் முகம் த்தாள்.

ஐயோ! பயங்கர புரட்டா இருக்கே?' என்றாள்.

வன் அதையும் ரசித்துச் சிரித்தான்.

ன்னத்தைப் புரட்டிப் போட்டேன்? வெறும் தையைத்தானே...!' என்று அவன் மறுபடியும் அதே சிரிக்கவும் அவள் அவன் மார்பிலேயே அடைக் புகுந்தாள்.

பாரண்ணா... என்னை இப்படிப் பழி வாங்கிறதுக்க டாம் தெரியுமா? இப்படி தள்ளி விட்டுட்டுப் ட்டாரே!'

டாடா! என்னமோ தள்ளிவிட்டுப் போறவன் நினைச்சுகிட்டுப் பேசறே... நான் உன்னைக் ம் பண்ணிக்கப் போறவன் பெண்ணே! டென் டைம் குடு. ட்ரஸ் சேஞ்ச் பண்ணிட்டு வந் . வி ஆர் கோயிங் அவுட்... நிறைய உன்கிட்டே ...' என்றான்.



'ஐயோ... தனியாவா?' அங்கிள்... ஆன்ட்டி...' என்று அவள் தயங்கவும் அவன் கடுப்பானான்.

'ஹேய்! அவங்கல்லாம் பர்மிட் பண்ணாமயா குமார் கொண்டு வந்து விட்டுட்டுப் போவாரு...' என்று கடித்தான்.

'சரி... சரி... கோபிச்சுக்காதிங்க...!' என்று அவள் சரண்டராகவும் அவன் மறுபடியும் புன்னகைக்குத் தாவினான்.

'தட்ஸ் குட்!' என்றான் அவள் கன்னத்தைக் கிள்ளி விட்டுச் சிரித்தான்.



# 28

'எங்கே போகலாம்... சொல்லு!' என்றான் சந்திர மோகன்.

'அகிலாண்டேஸ்வரி கோவில்...!' என்றாள் வாணி.

'அடங்கப்பா!' என்று தலையில் கைவைத்துக் கொண்டு சேரில் தொப்பென்று உட்கார்ந்தான்.

அவள் அன்புடன் சிரித்தாள். அவன் தலையைக் கலைத்து விட்டு சொன்னாள்.

'அகிலாண்டேசுவரி... அம்மாள் ரொம்ப அழகா இருப்பா... தெரியுமா?

அருமையான விக்கிரகம். அப்படி அழகு சொட்டு முகம்...!'

லயித்துப் போன பாவனையுடன் அவள் சொல்வதை அவனும் அன்புடன் பார்த்தபடி கேட்டுக் கொண்டான்.

...போனார்கள். கோயிலிலிருந்து வெளியே வந்தவுடன்,

'சரி... உன் விருப்பத்துக்கு நான் ஒத்துக்கிட்டேன்... இல்லே... இப்ப... என் விருப்பத்துக்கு... ஒரு இடம் போறோம்...' என்றான்.

திருச்சிக்கும் முக்கொம்புக்கும் இடையில் ஆற்றோர...ாக ஒரு தோட்டம். அங்கே அழகான ஒரு சிறிய ...க்களா...

சந்திரமோகனின் நண்பராம். அவரும் இருந்தார். ...வருக்கும் அன்றைக்கு அங்கே விருந்து.

'டேய்... முதன் முதலாக உன் வீட்டுக்குத்தான் ...விடக் கூட்டிட்டு வந்திருக்கேன். பாத்துடா...!' என் ...ர் சந்திரமோகன். கிண்டலாக.

'...மோகன்... உன்னை எனக்குத் தெரியாதா? மேடம் ...ா கல்யாணத்துக்கு முன்னாடி உன்கூட வரமாட் ...ன்னு தெரிஞ்சு... விருந்துக்கு என் வீட்டுக்கு ...ட்டு வர்ற மாதிரி வந்துட்டே.... எப்படியும் இங் ... தெரிந்த நாங்க ஒதுங்கிக்குவோம் இல்லே... ...ா!' என்று மனைவியைப் பார்த்து சிரித்தான் ஜீவா...

'...ந்தாச் சரி' என்று சற்றும் வெட்கமில்லாமல் சிரித் ...ந்திரமோகன்.

...ி முகம் சிவக்க அமர்ந்திருப்பதைப் பார்த்து ...வாஞ்சையாகத் தலையைத் தடவிக் கொடுத்தான்.

'...ி! கவிதா கல்யாண் ஆனது தெரிந்தப்ப இங்கதான் ...ங்க வச்சோம். நானும் அத்தையும் டாக்டர்.



விஸ்வநாத் ஹெல்ப்பை வாங்கிட்டு எப்படியாவது அந்தப் பிரச்சினையில் இருந்து கவிதாவை மீள வைக்க முயற்சித்தோம். அப்ப விமலா மேடம்தான். குழந்தையை அழிக்காதீங்க... உங்களுக்கு வேண்டாம்னா குடுங்க... நாங்க வளர்த்துக்கறோம்ன்னாங்க.... ஆனா...' என்று அவர்களைப் பார்த்து சிரித்தான்.

'இப்ப... அவர்களுக்கே அருமையா ஒரு குழந்தை கிடைச்சிருக்க... நீனான்னு பேர் வச்சிருக்காங்க' என்றான்.

வாணி லயித்துப் போய்க் கேட்டுக் கொண்டிருந்தாள்.

'குழம்பு ஊத்திக்குங்க' என்று பரிமாறிய விமலா மேலும் சொன்னார்.

'அந்தக் கவிதாப் பொண்ணால மோகன் சார். ரொம்பக் கஷ்டப்பட்டிருக்காங்க. ஆனா... வாணி உங்களைப் பார்த்ததுக்கப்புறம் எனக்குத் தோணுது. நீங்க இனிமே அவரை சந்தோஷமா வச்சுக்குவீங்கன்னு...' என்று

வாணி கனமான உணர்வுகள் மனதில் நிறைய ,

'நிச்சயமா...!' என்றாள்.

சந்திரமோகன் விமலாவைப் பார்த்து மேலும் சொன்னான்.

'சோனான்னா வாணிக்கு ரொம்ப இஷ்டம். இன்ஃபாக்ட் சோனா மேல வாணி காட்டற இன்டரஸ்ட்டைப்பார்த்துத் தான் நான் வாணியைக் கவனிக்க ஆரம்பிச்சேன்...' என்றான்.

'சரிடா... சரிடா... சும்மா ரொம்பப் பீலா விடாதே...!' என்று சிரித்தான் ஜீவானந்தம்.

பிற்பகலில் 'கொஞ்ச நேரம் வேண்ணா. முக்கொம் புக்குப் போயிட்டு வாங்க... இல்லேன்னா... பின்னா

கார்ட்ல உட்கார்ந்து கொஞ்ச நேரம் பேசுங்க...' என்றான் ஜீவானந்தம்.

'நாங்க இங்கயே உட்கார்ந்து பேசறோம்பா..' என்று பின்னாலிருந்து கார்டனுக்கு அழைத்துப் போனான்.

வலது காலைத் தூக்கி இடது கால் மேல் போட்டுக் கொண்டு இடக்கையால் நெருங்கி தோளோடு அணைத்தபடி அமர்ந்து கொண்டான்.

'வாணி! ம்... அப்பாடா இப்படி இப்போதைக்கு உன் பக்கத்துல உட்கார முடியுமான்னு எனக்கு சந்தேகமாப் போச்சு..' என்றான்.

அவள் மௌனமாகத் தனது வலது ஆட்காட்டி விரலால் புடவையை நீவிக் கொடுத்தபடி அமர்ந்து கொண்டிருந்தாள்.

'வாணி! இப்ப உன்கிட்டே பெருசா சண்டை போடணும்னுதான்... தனியாக் கூட்டிட்டு வந்திருக்கேன்...' என்றான்.

'நீ ரொம்ப இரக்கமே இல்லாத ஆள்... தெரியுமா?' என்றான்.

'ஏன்?' என்பது போல் பார்த்தாள்.

'கவிதாவை டைவர்ஸ் பண்றேன்னு நின்னேன்... ...ா... நீங்க அவங்களோட வாழுறதுதான்... நியாயம்னு ...தும் பிடிச்சயே... அந்தக் கோபம்..!'

அவள் பெருமூச்சுவிட்டாள்.

'வேற என்ன செய்ய? சோனாவுக்காக!' என்றாள்.

'போ... வாணி! கவிதா சோனாவை ஒரு பார்டனாத் ...நெனச்சா... அவ மட்டும் அட்மிஷன்ட் சோனாவுக்



காகத் தன்னை மாத்திக்கற மாதிரி இருந்தா... விஷயமே வேற மாதிரிப் போயிருக்கும்..'

'ஆமா... நீங்க எனக்குக் கிடைச்சே இருக்க மாட்டீங்க..!' என்றாள் வாணி.

அவன் சுற்று முற்றும் பார்த்து விட்டு சட்டென்று அவள் கன்னத்தில் இதழ் பதித்து நிமிர்ந்தான். அழகாகச் சிரித்தான்.

'வாணி, சில விஷயங்களை மட்டும் நா உன்கிட்ட சொல்லணும்... சோனா... நீ நினைக்கிற மாதிரி... என்னோட குழந்தை இல்லே...!' என்றான்.

'தெரியும்!' என்றாள் வாணி.

'எப்படி?' என்றான் லேசான அதிர்ச்சியுடன்.

'முதல்ல உமாக்கா... சொன்னாங்க... அப்புறம் கவிதாக்கா... சொன்னாங்க...' என்றாள்.

'ஓ...!' என்றான்.

'உமாக்கா அதைச் சொல்லிட்டு 'வாணி... நான் ஏன் இதை உன்கிட்டே சொல்றேன் தெரியுமா? அண்ணன் உன்னை லைக் பண்றார்ன்னு எனக்குத் தெரியும்... உனக்கு அண்ணன்மேல இன்ட்ரஸ்ட்ன்னு எனக்குத் தெரியும் அதனாலதான்னு சொன்னாங்க...'' என்றாள்.

'ஓ... கவிதா எப்ப சொன்னா!'

வாணி வேறு பக்கம் பார்த்தாள். பிறகு முகம் சிவக்கச் சொன்னாள்.

'ஒரு... நாள்... அவங்கிட்டே... நான் உன்னோட ஹஸ்பெண்ட்ங்கற முறையிலே என்னோட தேவைகளை நிறைவேற்றக் கடமைப்பட்டிருக்கிறேன்னு... போய் நின்னிங்களாம்...' என்றாள்.

...ந்திரமோகனின் முகமும் வெந்தது.

...துமா... முதல்ல கவிதா தொல்த்தியா இருக்கப்ப... ...ன அட்ராக்ட் பண்ண எப்படியெப்படியோ டிரை ...ஙவாப்ல. நீதான்.. அவங்க ஆங்கிள்லயும்... யோசிங் ...' அட்வைஸ் பண்ணினியே... அதான். அவளுடைய ...களையும்... என்று நிறுத்தினான்.

...ஏ சங்கடமான மௌனம் நிலவியது. பிறகு மெல்லத் ...! அவளிடம் கேட்டான்.

...க்கு கோபமோ?" என்றான்.

...' 'இல்லை' என்ற தலையாட்டினாள்.

...மை ரொம்ப சிக்கலான நிலைமை. யாருமே ...லயும் கோபம் காட்டவே முடியாது' என்றாள்

...நேரம் மௌனத்திற்குப் பிறகு மறுபடியும் ...ன்.

... அந்த விஷயம் கேள்விப்பட்டதிலே இருந்து... ... உங்களை...' என்றாள்.

...றான்.

... பிடிக்கப் போக...!' என்றாள்.

...டனடியாக உணர்ச்சி மயமானான். சற்று ...' பிடியில் அவன் உணர்ச்சி வெளிப்பாட்டில் ...ந்போனாள் வாணி.

...ரித்துக் கொண்டான்... 'அவங்க... அவங்க... ...ப் போறாங்க..!' என்றாள் குழைந்து போன



'வந்துடுவானா... என்ன? இந்த பக்கமே எட்டிப் பார்த்து ராதிங்கன்னு ஏகமா மிரட்டிட்டு இல்லே... வந்திருக் கேன்...' என்ற வெடிச்சிரிப்பு சிரித்தான்.

அவள் கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டு அவனை ஓரக்கண்ணால் பார்த்தாள்.

மனம் விட்டு அவன் சிரிப்பதை கண்களில் குறும்பு கொப்பளிப்பதை அவள் ஆசையுடன் பார்த்துக் கொண் டாள்.

மறுபடியும் கண்சிமிட்டிச் சிரித்தான்.

'வேண்டாம்... அப்படிப் பார்க்காதே! அப்புறம் என் மேல் குற்றப் பத்திரிகை வாசிக்காதே!' என்று ராகம் போட்டான். பிறகு கேட்டான்.

'அப்புறம்... கவிதா, என்னென்ன சொன்னா?'

'நிறைய சொன்னாங்க... தன்னோட வாழ்க்கை முறைக்கும் இங்கத்த வாழ்க்கை முறைக்கும் இருக்கிற வித்தியாசத்துல நான் சிக்கிட்டு வாழ்க்கையைத் தொலைச்சுகிட்டேன்னு ரொம்ப வருத்தப்பட்டாங்க...' என்றாள்.

'சரி... அதை விடு... இப்ப நம்ம விஷயத்துக்கு வா...!' என்றான்.

'என்ன விஷயம்?' என்றாள்.

'வாணி! சோனா இப்பவும் சட்டப்படி என் குழந்தை தான்... உறவுப்படியும் அவளை நான் ரொம்ப நேசிக் கிறேன்.'

அவள் திரும்பினாள். தன் மென்கரத்தால் அவன் வாய் பொத்தினாள்.

'வேண்டாங்க...! எதுவும் சொல்ல வேண்டாம்...
சோனா... இனிமே உங்களுக்கு மட்டுமல்ல... எனக்கும்
ான்... மக. சொல்லப் போனா... இந்தப் பத்து நாளா
வளைப் பார்க்காம நான் எவ்வளவு அவஸ்தைப்
'டேன்னு உங்களுக்குத் தெரியாது...' என்றாள்.

அவன் அவளைக் கவனிக்காதவன் போல் கனவில் இருப்
ன் போல் தொடர்ந்தான்...

அது மட்டுமில்லே... வாணி! எங்கப்பாவாலே
தையோட குடும்பத்துக்குள்ளே நுழைஞ்ச விஷயங்
சரி பண்ண முடியலே. அத்தை ரொம்பக் கஷ்டப்
ருக்காங்க... சோனாவை வளர்க்கறது மூலமா...
க்கு நாங்க பட்ட கடனைத் தீர்க்கணும்னு நான்
க்கறேன்...'

ணி அவனைத் தீர்க்கமாகப் பார்த்தாள்.

மாதிரி எந்த விளக்கமும் வேண்டாங்க... சோனா
பிறப்பில சோனாவோட தப்பு எதுவும் இல்லீங்க...
சூழ்நிலையில பிறந்தாலும் ஒரு குழந்தைங்கறது
வளர்க்கப்பட வேண்டிய உயிர்தாங்க... உயி
அருமை என்னன்னு எனக்குத் தெரியுங்க' என்று
ன்னாள்.

மறுபடியும் இடத்தோளோடு சேர்த்துக் கொண்

கண்களைத் துடைத்து விட்டான். 'ஆனா... ஒரு
எனக்குப் பொறாமை' என்றாள்.

?' என்றான்.

மாதிரி... ஒரு அத்தை மகன் எனக்கு
போனாரே... என்று...



'ஹேய்! அப்படிக் கிப்படி எவனையாவது கொண்டு வந்து நிறுத்தினே... தீர்த்தே போடுவேன்' என்றான் மிரட்டல் போல.

'யாரைத் திப்பீங்க...!'

'முதல்ல அவனை... அப்படிக் கிப்படி பாசம்... சேம்ன்னு இட்டு நீ வந்தின்னா... உன்னை..' என்றான்.

அவள் சிரித்தாள்.

'என்னைத் தீர்த்துடுவீங்களாக்கும்...!' என்றாள். கொஞ்ச லாகச் சிரித்தாள்.

அவன் ஆச்சரியமாகப் பார்த்தான்... 'வாணி, இப்படி யெல்லாம்... கூட உனக்குத் தெரியுமா?' என்றான். திடீ ரென்று ஏதோ நினைவு வந்தவனாக.

'வாணி! உன்கிட்டே அத்தை என்னவோ சொன்னாங் களே... என்ன அது?' என்றான்.

'வேண்டாம்.... அதை நான் இப்ப சொல்ல மாட் டேன்... அப்புறம்... சொல்றேன்' என்றாள்.

'ஹேய்...! சொல்லு!' என்று சற்று நேரம் கெஞ்சிப் பார்த்தான்.

அவள் பிடிவாதமாக மறுக்கவும் விட்டுவிட்டான்... சற்றுநேரம் தங்கள் எதிர்கால வாழ்க்கை பற்றித் திட்ட மிட்டுக் கொண்டார்கள்.

மீண்டும் பழைய இடத்துக்கே வந்தான் சந்திரமோகன். அத்தையைப் பற்றிப் பேச்சு வந்தது. அப்போது வாணி சொன்னாள்.

'கவிதாக்கா... சொன்னாங்க... அங்கே நம்ம தோப்புக்கு அந்தப்புறம் வேட்டை பங்களான்னு இருக்காம். அங்கே... நாகப்பன் அய்யாவைப் பார்க்க வேமல் அப்பப்ப வந்து

வாங்களாம். இவரு கவிதாக்காவை அங்கே கூட்டி
ப் போவாராம். அங்க வர்ற லேடீஸ் எல்லாம்
தாக்காவை சின்ன ஜமீந்தாரம்மா என்று தாங்கு
ளாம். ஒரே ஆட்டம் பாட்டமா இருக்குமாம்.
வீட்டுக்கு வந்தா இங்கே சிவகாமி அத்தை அவங்
அட்வைஸ் பண்ணுவாங்களாம். கண்டிப்பா
ாங்களாம். அதனாலேயே என்னவோ கவிதாவுக்கு
அத்தையைப் பிடிக்காமப் போயிடுச்சாம். அப்ப
என்ன தெரியும்? அம்மாவைப் பிடிக்கலை.
வைப் பிடிச்சது. ஆனா, அப்பா! வாழ்க்கையையே
ப்போறாங்கங்கறது அப்ப எனக்குத் தெரியலேன்
என்றாள்.

அமைதியாகக் கேட்டுக் கொண்டான்.

னைப் பொறுத்தவரை கவிதாக்காவும் பாவம்
ன்றாள்.

ரோட்ல போயிட்டிருக்கறவங்க... கண்டக்
... இஸ்வண்டிக்காரன் எல்லாரும் பாவம்...
ரமோகன்ங்கற ஜெருக்கனைத் தவிர...' என்று
சொன்னாள்.

லுகுலுவென்று சிரித்தாள்.

பாவந்தான்... பிடிச்ச பொண்ணை எதிர்
ாட விட்டுட்டு. பிடிக்காத மனைவிக்கு
க்கணும்னு நான் போட்ட ஆர்டரையும்
நடத்தீங்களே... நீங்களும் ரொம்பப்
' என்றாள் உணர்ச்சி நிறைந்த குரலில்.

பாவம் மாறியது. ஏக்கமாகப் பார்க்க
— அவன் தைரியமாகத் தொடர்ந்தான்.

... உங்களுக்குக் கிடைக்க வேண்டிய
டைக்கும். நேரம் வரும்போது...' என்றான்.



'ரியலி?' என்றான். கெகிகெப்பான குரலில்.

'ரியலி!' என்றாள். அழுத்தமான குரலில்.

'தட்ஸ் எ டீல்' என்றான்.

'எஸ் தட்ஸ் எ டீல்...! என்றாள்.

அவன் தன்னிலை மறந்து அவளை அருகில் இழுத்தான். அனுமதித்தாள். ஆனால், எல்லை மீறு முன்னே விடுவித்துக் கொண்டு ஓடிவிட்டாள்.

வேகமாகவும், படபடப்பாகவும் அவள் போகும்போது எதிரில் விமலா வந்தாள்.

'என்னம்மா!' என்று அன்பாக விசாரித்தாள்.

வாணி விமலாவின் முகத்தைப் பார்த்து விட்டு.

'ஒன்னுமில்லே!' என்றாள்.

சற்று கழித்து நிதானமான நடையில் கனவுப் பார்வையுடன் வருகிற சந்திரமோகனைப் பார்த்தவுடன் விமலாவுக்கு விஷயம் புரிந்தது.

உள்ளுக்குள் சிரித்துக் கொண்டாள். அதே நேரம் அங்கே வந்து நின்ற ஜீவானந்தமும் விமலாவும் ஒருவரையொருவர் பார்த்து சிரித்துக் கொண்டார்கள்.



## 29

திருமணம் விமரிசையாக நடைபெற்றது.

ஏற்பாடுகளில் குமாரசாமி தீவிரமாக இருந்தபோது ஒரு நாள் சந்திரமோகன் அப்பாவிடம் வந்து நின்றான்.!

'அப்பா என்ன இருந்தாலும் ஊருலகத்தைப் பொறுத்த வரை இது ரெண்டாவது கல்யாணந்தான்... எதுக்குப்பா... இவ்வளவு விரிவா ஏற்பாடுகள்?' என்றான்.

'இத பாரு... மோகன்.... நீ உங்கத்தை சிவகாமியோட
குடும்ப கௌரவத்தைக் காப்பாத்திக் குடுத்திட்டே.
விதாவோட மானத்தையும் காப்பாத்திட்டே.... அதோட
ல்லு.. என்னைப் பொறுத்தவரை இதுதான் உண்மை
ான கல்யாணம். ஊருலகம் என்ன பேசினாலும் சரி...
தைப் பத்தி எனக்கும் கவலையில்லே..!' என்றார்
ாரசாமி.

அப்பக் கச்சேரி... இச்சேரின்னு... ஏதாவது ஆர்ப்
டம்?

ண்டிப்பாகக் கச்சேரி உண்டு. தமிழிசைக் கச்சேரி...
பாட்டுக்குத் தனியா ஒரு மேடையில நடக்கும்.
மையாவே கேக்க விரும்பறவங்க அங்க போய்க்
ாங்க... புரியுதா?' என்றார்.

ிரமோகன் மேற்கொண்டு ஒன்றும் சொல்வதற்
ல் நகர்ந்தான். அப்பா மறுபடியும் அழைத்தார்;
சொன்னார்.

டா.... இதையும் நினைச்சுப் பாரு... அந்த வாணிப்
ு அவளுக்கு அம்மா அப்பா இல்லேங்கற குறை
இந்த விசேஷத்தை அமோகமா நடத்
தும் என்னோட ஆசை...' என்றார்.

...!' என்று நகர்ந்தான்...

மிக அழகாக இருந்தாள். மை தீட்டிய கண்
டி பார்லர் அலங்காரமுமாக தேவதை போல்



அவளுக்கும் இந்த திருமணம் இவ்வளவு விமரிசையாக நடப்பதைப் பார்த்து ஒரே வியப்புதான்.

கல்யாண ஏற்பாடுகள் என்று ஆரம்பித்தவுடனே விஸ்வநாதன் அவளிடம் சொன்னார்.

'அம்மா... உங்கப்பாவுக்குன்னு ஒரு ரொஜிவிட்டி ஒதுக்கி பேங்க்ல போட்டிருந்தேன். அது வட்டி குட்டி போட்டு இப்பத்திக்கு ஒரு ரெண்டு லட்ச ரூபாயா நிக்குது... அதைத்தான் உன் கல்யாணத்துக்கு நான் செலவு செய்யப்போறேன்' என்றார்.

வாணிக்கு அவர் சொல்வது பொய்யென்று தெரியும். எவ்வளவு பண உதவி செய்ய முடியுமோ அவ்வளவையும் அப்பா இருக்கும்போதே செய்து விட்டார் என்பதும் தெரியும் அன்றிரவு.

சந்திரமோகன் செல்போனில் அழைத்தபோது வாணி பேசினாள்.

'மோகன்! எல்லாரும் கல்யாணம் கல்யாணம்ன்னு பேசறீங்க... உங்க தகுதி அளவுக்கு செலவு செய்ய என் கிட்டே பணம் இல்லே...!' என்றாள் கவலையாக.

'ஹேய்! நாங்க... நீங்க... எங்க தகுதி... உங்க தகுதின்னெல்லாம் பேசினீன்னா சப்புச் சப்புன்னு நாலு அறை விடுவேன்' என்றான் கோபமாக.

வாணிக்கு என்ன பேசுவதென்று தெரியவில்லை. அவன் மேற்கொண்டு கேட்ட கேள்விகளுக்கு குறையாமல் பதில் சொல்லி விட்டு வைத்தாள்.

அடுத்த நாளே உமா சபாபதி சகிதம் திருச்சிக்கு வந்தான். வரும்போது சோனாவையும் அழைத்து வந்தான்.

சோனா 'வாணி ஆன்ட்டி!' என்று கூவிக் கொண்டு
ப் போய்க் கட்டிக் கொண்டு அவள் கன்னங்களில்
மாறி முத்தம் வைப்பதையும் பார்த்து சந்திரமோகன்
ந்த பார்வையுடன் நின்றான். சபாபதி.

ட்ரெயினில் எடுத்துக்கறாப்போல இருக்கு... என்று
ரிய குரலில் சிரித்தான்.

ச்சான்... ப்ளீஸ்!' என்று சிரித்தான் சந்திரமோகன்.

வநாதனிடம் அமர்ந்து பேசினார்கள். 'கல்யாணச்
வெல்லாம் நாங்களே பாத்துக்கறோம்னு சொல்
வரச் சொன்னார் எங்க மாமனார்' என்றான்

தெல்லாம் முடியவே... முடியாது... அவங்கப்பா...
ன்கிட்டே இருக்கு... அதை வச்சு நான் என் பங்கை
றேன்' என்றார் விஸ்வநாதன்.

மோகன் விஸ்வநாதனுக்குப் பின்னால் நின்று
ருந்த வாணியைப் பார்க்க அவள் குறுக்காகத்
ட்டினாள்.

ாதன் பிடிவாதமாக நின்றார்.

மாமனாரிடம் போனில் பேசி விட்டு 'சரி...
ளைப் பிரிச்சுக்கலாம்... இப்போதைக்கு நாங்க
றோம்... அப்புறம்... நாங்க வாங்கிக்கறோம்னு
என்றான்.

கன் அரைமனதாக ஒத்துக் கொண்டார்.

... நகை எதிர்பார்ப்பு...?' என்று அவர்
ந்திரமோகன் இடையில் புகுந்தான்.

ார்! வாணியை நான் கல்யாணம் பண்ணிக்கப்
ிதை வியாபாரம் ஆக்காதீங்க...' என்றான்.



விஸ்வநாதன் கோபித்துக் கொள்ளாமல் சொன்னார்.

'இல்லை... மோகன். நாங்க வாணியை சட்டபூர்வமாத் தத்து எடுக்கவே தயாரா இருந்தோம். இருக்கோம்... வாணிதான் நான் எப்பவும் உங்க மகதான்னுட்டா... அதனால அவ கல்யாணத்துல எந்தக் குறையும் இருக்கக் கூடாது. ஏற்கனவே அவ அம்மாவோட நகைகள் இருக்கு... அது ஒரு முப்பது பவுன் தேறும்... அப்புறம்... அப்படி இப்படின்னு நாங்க ஒரு இருபது பவுன் போட்டுடுவோம்..' என்றார்.

'எங்க... அம்மாவோட நகைகள் வேண்டப்பட்டது கிடக்கு... கவிதா வேற அவளுக்குன்னு கொஞ்சம் நகைகள் பிரஸண்ட் பண்ணியிருக்கா... அத்தை கொஞ்சம் பிரஸண்ட் பண்ணியிருக்காங்க... எதுவுமே இல்லேன்னாலும் அவளுக்கு ஒரு குறையும் இல்லாம நான் பாத்துக்குவேன்' என்றான் சந்திரமோகன் வேகமாக.

'அப்படிப் போடு..!' என்று சிரித்தான் சபாபதி.

'ஏன்... மச்சான்... நான் எதுக்கு இங்கே வந்திருக்கேன்' என்றான்.

'ஏன்?' என்பது போல் எல்லாரும் பார்க்க அவன் சிரித்தான்.

'சார்! நீங்களே சொல்லுங்க... போய்ப் பேசிட்டு வாங்கன்னு எங்க மாமனார் என்னை அனுப்பியிருக்காரு. எல்லாத்தையும் மோகனே பேசறதுன்னா... அப்புறம்... நான் எதுக்கு?' என்று பொய்ச் சண்டை போட்டான் சபாபதி.

எல்லாம் சிரித்தார்கள்.

'பரவாயில்லையே... இந்தப் புள்ளையாண்டான் கலாட்டாப் பேர்வழியா இருக்கானே' என்று சிரித்தார் விசாலாட்சி.

...புறப்படுவதற்கு முன்பு சபாபதி சந்திரமோகனிடம் ...தம்பி

'அங்கேயிருந்து என்கூட தொத்திகிட்டு வந்ததே... ...ணிகிட்ட பேசறதுக்குத்தானே...!போய்ப் பேசிட்டு ...ங்க...' என்றான்.

...ஆமா! சித்த உன் ரூமிலே போய்ப் பேசிட்டு ...கோ...' என்றார் விசாலாட்சி.

...ணியின் அறையில் எட்டிப் பார்த்தான் சந்திர...ன். சோனாவை மடியில் வைத்துக் கொண்டு பேசிக் ...ண்டிருந்தாள்.

...ங்க!' என்று வரவேற்றாள் வாணி.

...ம வெளியே போய்ப் பேசலாமா?' என்றான்.

...னார்கள்.

... சோனாவை தன்னிடம் வைத்துக் கொண்டாள்.

...ய்! சோனாவுக்குக் கிடைத்த வரவேற்பு எனக்குக் ...க் காணோம்...' என்று வம்பிழுத்தான்.

...யாயிருங்க... மோகன்...!' என்று வெட்கப்பட்டாள்

...மோகன் தீவிரமான குரலில் 'என்ன... நேத்து ... கவலையாய் பேசினே? அதான் ஓடி வந்துட் ...ன்றான்.

...! விஸ்வநாதன் அங்கிள் குடும்பத்துக்கு கடன் ...ம் ஒரு அளவு இருக்கில்லே. எனக்குத் தெரியும்... ...வுக்கு ரொஜிவிட்டி இட்டின்னு ஒன்னும் ... அங்கிள் போய் சொல்றார். ரெண்டு லட்ச ...ல்லாம் எதுக்கு அக்செப்ட் பண்ணிக்கறது?'



'ஓ...' இதுதான் பிரச்சினையா?' என்றான்.

'அது மட்டுமில்லை மோகன் நம்ம வீட்ல ரெண்டு குடித்தனத்துக்கும் லட்ச ரூபா குடுத்துக் காலி பண்ணியிருக்காரு. இப்ப வாடகை பத்தாயிரம் வருதுன்னு வைங்க. அந்தப் பணத்தை வேற திருப்பிக் குடுக்கணும்' என்றாள் கவலையாக.

சந்திரமோகன் அன்புடன் புன்னகைத்தான். பிறகு சொன்னான்.

'வாணி! உலகத்திலயே நட்பு ரொம்ப உயர்வான விஷயம்... வாணி விஸ்வநாதன் அங்கிள் ஒரு அருமையான நண்பர் வாணி. உங்க அப்பாவுக்கும்... சரி... எனக்கும் சரி... அதனாலதான் ஆத்மார்த்தமா ஹெல்ப் பண்ணணும்னு நினைக்கறாரு. உனக்குத் தெரிய வேண்டாம்னு நினைச்சேன்... இப்ப சொல்லித்தான் ஆகணும் போல இருக்கு... ரொம்பக் கவலைப்படறே... வீட்டுக்குப் பணம் கொடுத்தது நான்... ஓ.கே. வா! அதை நான் உங்கிட்டே வேற விதமா கணக்குத் தீத்துக்கறேன்...' என்றான்.

வாணி முறைத்தாள்... 'சீப்பாய் பேசாதீங்க!' என்றாள்.

அவன் உல்லாசமாகச் சிரித்தான்... 'சரி... விடு... வாடகைப் பணத்தைக் குடுத்து உன் கடனைத் தீரு... நீ எனக்குப் பத்தாயிரம் திருப்பிக் குடுத்தீன்னா... நான் பதினைந்தாயிரமா உன் செலவுக்குன்னு பேங்கில போடுவேன்... அப்ப என்ன பண்ணுவே...?' என்றான்.

வாணி ஒன்றும் பேசவில்லை.

அவர்கள் அமர்ந்து பேசிய இடம் ஒரு பார்க். சுற்று முற்றும் பார்த்து விட்டு நெருங்கி அமர்ந்தான். மின்னல் வேகத்தில் நெற்றியில் இதழ் ஒற்றி நிமிர்ந்தான்.

மக்குப் பெண்ணே!' என்றான். 'இத பார் உனக்காக
செலவு செய்யறதெல்லாம்... என் சொந்தப் பணம்,
சம்பாத்தியம்... அப்புறம்... இப்ப விஸ்வநாதன்
இன் செய்யறதைச் செய்யட்டும்... வேண்டாம்ன்னா
டப்படுவாரு... அப்புறம்... நாமளும் ஏதாவது
ஆந்துல பதில் மரியாதையா செஞ்சர்லாம். என்ன?'
ான்.

வள் நிம்மதியானாள்.

மெண்ட் பெஞ்சின் மறைவில் அவன் இடக்கை
இடுப்பை வளைத்தது.

பா... சாமி! உலக மகாக் கவலை! என்னடா...
பக் கவலையாப் பேசறயேன்னு வேலையெல்லாம்
ட்டு பறந்து கட்டிட்டு நான் வரேன்...!'

களுக்கெல்லாம்... பணக்கவலைன்னா என்னன்னு
து...' என்று முணுமுணுத்தாள்...

டியும் வாஞ்சையாய்ப் புன்னகைத்தான்...

கே...! ஓ.கே...! இனிமே என் பணம் வேற... உன்
வேற இல்லை... புரிஞ்சுதா?' என்றான்.

' என்றாள்.

ல்லாம் நினைவுக்கு வர மாப்பிள்ளை அழைப்பில்
டந்து வருவதை அவள் தன்னறையில் இருந்து
கொண்டிருந்தாள்.

பிள்ளை அழைப்பு முடிந்தவுடன் மண்டபத்தில்
டங்கிய சூழ்நிலையில் மெசேஜ் அனுப்பினான்;
சந்திப்போம்' என்று.

சிரித்துக் கொண்டான்.



திருமண மேடையில் மகாலட்சுமியும், விசாலாட்சியும் நின்று அருமையாக நடத்தினார்கள். விஸ்வநாதனும், விசாலாட்சியும் தாரை வார்த்துக் கொடுக்க, குமார சாமியும், அமுதவல்லியும் தாரை வாங்கிக் கொண் டார்கள்.

கவிதா ஒன்றும் நல்ல மனைவியாக இருக்கவில்லை என்பதும், சிவகாமி அத்தையும் அந்தக் குடும்பத்தில் நாகப்பனிடம் மிகவும் கஷ்டப்பட்ட ஒரு வாழ்க்கையே வாழ்ந்திருக்கிறார் என்றும் நெருங்கிய சுற்றத்துக்கு அரசல் புரசலாகத் தெரிந்துதான் இருந்ததால் யாரும் இந்தத் திருமணத்தைக் குறைவாகவே பேசவில்லை.

சந்திரமோகனை எல்லாருக்கும் பிடிக்கிறது என்பதும் அவளுக்குத் தெரிந்தது.

எல்லாரைக் காட்டிலும் உமா அவனை நன்றாகக் கவனித்துக் கொண்டாள்.

மணமக்கள் அறைக்கு வந்தவுடன் உமா இரண்டு பேருக்கும் மோதிரம் அணிவித்தாள்... வாணியின் முகத்தைக் குனிந்து பார்த்தாள். முத்தம் வைத்தாள். வாணியின் முகம் சிவந்து போனது.

சந்திரமோகன் அரைவட்டமாகத் திரும்பி சிரித்தபடி பார்த்துக் கொண்டிருந்தான்.

'ஐயோ! வெட்கப்படும் போது என்ன அழகா இருக்கே. அண்ணி! அண்ணன் எப்படி மடங்கினார்ன்னு இப்பத் தெரியுது?' என்று சிரித்தாள்.

சபாபதி அந்த நேரம் அங்கே வந்தான். 'வாணி சிஸ்டர்... போட்டிக்கு வராதீங்க... நியாயமில்லே...' என்று கேலி செய்ய.

'ஆமா... நானும் உமாகிட்டே அதான் சொல்லணும்' ன்று சந்திரமோகன் சிரித்தான்.

வாணிக்கும், சந்திரமோகனுக்கும் பெரிய ஆச்சரியம் ன்னவென்றால் டாக்டர். குமார் உண்மையான பிரியத் டன் எல்லாவற்றையும் நடத்தியதுதான்...

சோனாக் குட்டி ஓடி வந்தது.

'இனிமே உங்களை நான் அம்மான்னு கூப்பிடணும்மா?' ன்றாள்.

'ஆமாடி... ராஜாத்தி...' என்று அள்ளிக் கொண்டாள் ணி.

'அம்மா... அம்மா!' என்று அழைத்து ஒத்திகை பார்த்துக் காண்டாள் சோனா.

'போச்சு... போட்டிக்கு ஆள் வந்தாச்சு...' என்று முணுத்தான் சந்திரமோகன்.

'டேய்! நாங்கள்ளாம் இருக்கமடா... கொஞ்சம் தள்ளி டா...' என்று கலாட்டா செய்தான் ஜீவானந்தம்.

'உன் கல்யாணத்துக்கு நானும்தான் வந்தேன்... இப்படி ல்லாம் இடைஞ்சல் செஞ்சனாடா?' என்று கேட்டான் திரமோகன்.

எல்லாரும் சிரித்தார்கள்.

சற்று தள்ளி நின்று இதையெல்லாம் பார்த்த அமுத வி கணவனிடம் சொன்னார்.

'இப்பத்தான் என் வயித்துல பால் வார்த்த மாதிரி க்கு...' என்று குமாரசாமி மௌனமாக ஆமோதித்துக் காண்டார்.





30

கட்டிலின் தலையணைகளை உயரமாக நிறுத்தி அதில் சாய்ந்தபடி அமர்ந்து கொண்டிருந்தான் சந்திரமோகன். இரண்டு கால்களையும் தூக்கி பாதத்தின் மேல் சோனா அமர்ந்து கொள்ள ஊஞ்சலாடிக் கொண்டிருந்தாள்.

இரண்டுபேரும் கிளுகிளுவென்று சிரித்துக் கொண்டிருந் தார்கள்.

மாலை ஐந்து மணியிருக்கும்.

'அப்பா... சொல்லீரலாம்ப்பா..! அம்மா... பாவம்ப்பா...' என்று சொல்லிக் கொண்டிருந்தாள் குழந்தை.

வாணி குழந்தைக்கு ஹார்லிக்ஸை கலக்கிக் கொண்டு கட்டிலின் அந்தப்புறம் நின்றிருந்தாள்.

'சொல்லீரலாம்கறியா? பாவம்... சொல்லீரலாமா?' என்று சிரித்தபடி குழந்தையின் கன்னத்தில் கன்னம் தேய்த்துக் கொஞ்சினான் சந்திரமோகன்.

'என்னடி... கண்ணம்மா! உன் கன்னம் சில்க் மாதிரி சாஃப்டா இருக்கு!' என்று சொல்லிவிட்டு குழந்தையை மறுபடியும் கொஞ்சினான்.

'அப்பா... உன் கன்னம் ஏன் பச்சையா இருக்கு?' என்று கவலையாய் விசாரித்தாள் குழந்தை.

'அது... அப்பா... ஷேவ் செய்தேன்டா... தங்கம் என்றான்.

காலக்கள் மட்டும் நிற்காமல் குழந்தையை ஊஞ்ச
ாட்டிக் கொண்டிருந்தான்.

'ஆமா... உங்கப்பா கலர்ஃபுல்லா இருக்காரு...' என்று
ித்தாள் வாணி.

கணவனை இப்படி இயல்பாகப் பார்ப்பதில் அவளுக்கு
ாவு கடந்த மகிழ்ச்சி.

'வாணி! ஒரு ஜோக் சொல்லட்டுமா?' என்றான்.

'ம்...' என்ற வாணி 'சோனா வா... ஹார்லிக்ஸைக்
டச்சுட்டுப் போய் விளையாடு' என்றவுடன் குழந்தை
ங்கி வந்தாள்.

டம்ளரை இரண்டு பிஞ்சுக்கைகளாலும் வாங்கிக்
ாண்டு குடிக்க வாணி தன் கையால் டம்ளரைத்
ங்கிப் பிடித்துக் கொண்டே கணவர் சொல்கிற ஜோக்
கு காது கொடுத்துக் கொண்டிருந்தாள்.

ஒரு சின்னப் பொண்ணு போய் ஒரு அம்மாகிட்டே
ாய்க் கேட்டதாம். அம்மா... அக்காவுக்கு இருட்டிலே
ணு தெரியுமா?'ன்னு.

ஏண்டிம்மா... கேட்கறே?' ன்னு அம்மா கேட்டாங்
ாம்.

இல்லே... நீங்க ஷேவ் செய்யலையான்னு' அத்திம்
கிட்டே அக்கா இருட்டிலே கேட்டுகிட்டிருந்தாங்
ு' கேட்டுச்சாம்' என்று சொல்லிவிட்டு சிரித்தான்.

ாணி முறைத்தாள்.

ர வர உங்களுக்கு விவஸ்தையேயில்லை மாமா..'
ான்.

ானா மறுபடியும் ஊஞ்சலாட ஓட, வாணி தடுத்து
ினாள்.



'விவஸ்தைன்னா... என்னப்பா?' என்றாள் சோனா.

'சோனா வேண்டாம்... இப்பத்தான் ஹார்லிக்ஸ் குடிச்சிருக்கே... ஊஞ்சலாட வேண்டாம்' என்று வாணி தடுக்கவும் சந்திரமோகன் எழுந்து அமர்ந்து அவளை மடியில் இருத்திக் கொண்டான்.

சொல்லுப்பா... விவஸ்த்தைன்னா... என்ன?' என்று அதே பிடியில் நின்றாள் குழந்தை.

'இதென்னடா... அவஸ்தையாப் போச்சு' என்று முணுமுணுத்தவன் 'அது கிடக்கட்டும்மா... அம்மாகிட்டே சொல்லலாமா... வேண்டாமா... அதைச் சொல்லு.' என்றான்.

வாணி 'என்னத்தை ரெண்டு பேரும் பிஸ்டப் பண்ணிகிட்டே... இருக்கீங்க...' என்றாள்.

'அது... அது... என்னன்னா... சோனாக் குட்டி உமாத்தையோட, ராஜாவோட 'ஒரு வாரம் டூர் போகப் போறா...' என்று அறிவித்தான்.

'எப்ப?'

'இன்னைக்கு நைட் எட்டு மணிக்கு... தாத்தா... பாட்டி எல்லாரும் வர்றாங்க...' என்றான்.

'சொல்லவே இல்லை; அவளுக்கு ஸ்கூல் வேற இருக்கு' என்று முணுமுணுத்தாள் வாணி.

'ஆமா... இந்த யு.கே.ஜி பெரிய உலக மஹா கோர்ஸ்... போடி. இப்படி எதையாவது சொல்லுவேன்னுதான்... நாங்க சஸ்பென்ஸா வச்சோம்... ஏண்டா... சோனா' என்று மகளைக் கூட்டு சேர்த்துக் கொண்டான்.

'ஆமா!' என்றாள் சோனா... பெரிய மனுஷியாக.

அவசர அவசரமாக குழந்தைக்குத் துணி மணியைப் பேக் செய்தார்கள்.

உமாவும், சபாபதியும், மாமனாரும், மாமியாரும் வந்தார்கள்.

'சோனாவுக்கு... அது... இது...' என்று வாணி கவலைப் படுவதைப் பார்த்து உமா சிரித்தாள்.

'வாணி அண்ணி, நான் அவளைப் பார்த்துக்கறேன்... நீ ம்மதியா அண்ணனைக் கவனி..' என்றாள்...

அவர்கள் புறப்பட்டுப் போன பின்பு அறைக்கு ந்தார்கள்.

* * *

சற்று முன்பு சோனாவை ஊஞ்சலாட்டும் போது ர்ந்திருந்தாற் போலவே முழங்காலை உயர்த்தி மடக்கி க்கையில் சாய்ந்து அமர்ந்திருந்தான் சந்திரமோகன்.

ரொம்பத் திட்டம் போட்டு மகளை அனுப்பிட்டீங் க்கும்...' என்றாள் வாணி.

திட்டமெல்லாம் சபா மச்சானோடது. இது என்ன ான்... உங்க வைஃப் சோனா... சோனான்னு குழந்தை னாலேயே அலைஞ்சுகிட்டிருக்காப்ல... எப்ப... உங் ாக் கவனிக்கறதுன்னுட்டு புரோகிராம் போட்டாரு. ரே சோனாவோட ஸ்கூலுக்குப் போய் லீவ் சொல் ி வந்துட்டாரு...' என்று சிரித்தான்.

வோ' சிரிப்பைப் பார்! வெற்றிப் பெருமிதம்தான்...' சிரித்தாள் வாணி.

மா... பெரியதொரு தாக்குதலுக்குத் தயாராகிக்கோ... ணே' என்றான் சந்திரமோகன்.



'ஜல்லிக்கட்டுக் காளைன்னு நினைப்பு' என்று அழகு காட்டினாள் வாணி.

சந்திரமோகன் ரசித்துச் சிரித்தான்... அதே நேரம் சுந்தரம்மா இரண்டு பேருக்கும் பால் டம்ளர்கள் கொண்டு வந்தார்.

சந்திரமோகன் அவரிடம் 'சுந்தரம்மா... வாணி என்னமோ ரொம்ப நல்ல பொண்ணுன்னு சொன்னீங்க... ஒண்ணும் பேசவே முடிய மாட்டேங்குது. டக்கு டக் குன்னு எதிர்த் தாக்குதல் நடத்தறாப்ல' என்று சிரித் தான்.

'நல்ல பொண்ணுன்னு சொன்னேன். வாயில்லா ஊமைன்னா சொன்னேன்' என்றார் சுந்தரம்மா...

'அப்படிப் போடுங்க!' என்று மறுபடியும் வெடிச்சிரிப்பு சிரிக்கிற அவனை சற்றே மகிழ்வுடன் பார்த்து விட்டு அந்தப் பக்கம் போனார் சுந்தரம்மா...

ஓரிரு நிமிடங்கள் கழித்து ஏதோ கேட்கலாம் என்று வந்தவர் உள்ளேயிருந்து சந்திரமோகனின் வெடிச் சிரிப்பு சத்தம் கேட்பதையும் அறைக் கதவு சாத்தப் பட்டிருப் பதையும் பார்த்துவிட்டுப் புன்னகைத்துக் கொண்டு போய்விட்டார்.

* * *

நிறைவான அமைதியில் கணவனின் கைப்பிடிக்குள் அடங்கியிருந்தாள் வாணி.

'ஆனாலும் சோனாவை வச்சுகிட்டு அப்படி ஒரு ஜோக் சொல்றீங்களே! குழந்தைங்க அப்படியே மத்தவங்க கிட்டே சொல்லும். கண்டிப்பா உமாக்காகிட்டே சொல் லுவா... பாருங்க... உமாக்கா என்னைக் கிண்டல் பண்ணு வாங்க' என்றாள் வாணி.

'ஆமா... இனிமே சோனா இருக்கும்போது கொஞ்சம் பார்த்துத்தான் பேசணும்' என்று ஒத்துக் கொண்டான் சந்திரமோகன்.

'சோனாவுக்காகன்னா எதுவும் செய்வீங்க... 'இல்லே?' என்றாள்.

'ஏன்... உனக்காகவும்தான்... ஏன் அப்படிக் கேக்கறே?' என்றான்.

'இல்லே... முதல் முதலா... சோனாவுக்காக என்கிட்டே கை கூப்பிக் கேட்டீங்களே!' என்றாள்.

'ஆமா... அப்பக் கவிதா உன்னைப் படுத்தின பாட்டில எங்கே நீ போயிடுவியோன்னு பயம்... முதல் முதலா உன் போட்டோவை அனுப்பி விஸ்வநாதன் அங்கிள் உன்னைப்பத்தி சொன்னப்போ எனக்கு என்ன தோணுச்சு தெரியுமா? நீயும் ஒரு பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷம்தான்னு. அதனாலதான்... கவிதாவை மிரட்டி மிரட்டி உன்னை இன்சல்ட் பண்ணக் கூடாதுன்னு சொல்லி வச்சிருந்தேன். ஆனா, அவளுக்காகவும் சேத்து நீ வாதாடினியே அப்பவே அம்மிணியை எனக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு' என்றான்.

'ஓ...!' என்றாள்.

'அது மட்டுமில்லே! ஒரு நாளைக்கு பீரோ பின்னால மாட்டிகிட்டப்ப...' போதும் வெளிய வாங்க வாணின்னு கூப்பிட்டனே அப்ப வந்து முழிச்சுகிட்டு நின்னயே... இப்ப நினைச்சாலும்... எனக்கு சிரிப்புதான்...!'

'போதும்... இன்டல்!' என்று அவன் வாயைப் பொத்தினாள். பிறகு அவளே தொடர்ந்தாள்.

'ஒரு கட்டத்துல உங்க மேலே கூட கோபம் வந்தது. என்னதான் பிடிக்காத மனைவின்னாலும் மனைவின்னு



ஒருத்தர் இருக்கும்போதே... என்கிட்டே பழகறா ரேன்னு... ஆனா... ரெண்டு மூணு தடவை அந்தக் கால்வாய் ஓரத்துல... ரொம்ப சோகமா நடமாடிட் டிருப்பீங்க... அதைப் பார்த்து உங்க கல்யாணத்துல ஏதோ பிரச்சினை இருக்குன்னு சந்தேகப்பட்டேன்' என்றாள்.

'கல்யாணத்துல பிரச்சினையா? கல்யாணமே பிரச் சினைதானே? சோனாவுக்காக. சோனாவுக்காகன்னாலும் எவ்வளவோ முயற்சி செஞ்சும்... கவிதா மேல எனக்கு ஈடுபாடு வர்லே; என்னை என்ன பண்ணச் சொல்றே? என்றான்.

'ஆமா... மனசு எல்லா சமயத்துலயும் நாம சொல்ற படிக் கேக்காதாக்கும்' என்றாள் அவளும்.

அவன் சட்டென்று வேறு விஷயத்துக்குத் தாவினான்.

'ஹேய்' அப்பப்ப... ஒரு நாலு நாள்... அஞ்சு நாள்... வேணா.. உங்ககூட வெளியூர் வர்றேன்னு சொன் னயே... என்னால நம்பவே முடியலே...' என்றான்.

அவள் முகம் சிவந்தது. தொடர்ந்து... சொன்னாள்.

'என்னவோ... தெரியலைங்க... சோனாவுக்கு சிந்துபாத் கதை சொல்லும்போதெல்லாம் உங்க ஞாபகம் வரும். ஒரு ஆள்கிட்டே சிக்கிட்டு தோள்ல சுமை தூக்கிட்டு அலைஞ்சானே அதுதான் ஞாபகம் வரும். நீங்களும் இறக்க முடியாத ஒரு சுமையைத் தூக்கிட்டு அவஸ்தைப் படற மாதிரி... என் உள்ளுணர்வு ஸ்ட்ராங்கா சொல்லுச்சு. நீங்க ஹாப்பியா இல்லைன்னு... எப்படியாவது உங்களை சந்தோஷப்படுத்த முடிஞ்சா... அதுவே போதும்...னு ரொம்ப வேதனைப்படுவேன்.'

அவன் குறும்பாகச் சிரித்தான்.

'அதுக்குத்தான்... வேணும்கற வாய்ப்புக் குடுத்தாச்சு...
னிமே அம்மிணி பாத்து எப்படி வேண்ணாலும் சந்
தோஷப் படுத்தலாம்' என்றான்.

'பாவம்... சுந்தரம்மாவைக் கூட ஊர் அனுப்பியிருக்
கலாம்' இல்லை!' என்றாள் வாணி திடீரென்று.

'சுந்தரம்மாவைக் கேட்டுச்சு... சுந்தரம்மாதான் போகல
ன்னுட்டாப்பல. ஆனால்... நாளைக்கு சுந்தரன்
னும். சுந்தரி நீயும்... ஊர் கிளம்பறோம் ரெண்டு
ஷன். ஒரு டூர் மாதிரி போயிரலாமா? இல்லே,
ல்பாறைகிட்டே என் ஃபிரண்டு எஸ்டேட்ல ஒரு
ளா இருக்கு... அங்கே போயிடுவமா? சாய்ஸ் இஸ்
ஸ்' என்றான்.

ால்பாறைக்கே போவாம்' என்றாள் வாணி.

ானும் அப்படித்தான் நினைச்சேன்' என்றவன், மனை
இன்னும் இறுக்கமாக அணைத்துக் கொண்டான்.

ஹேய்! வந்தவுடனே சோனாகிட்டே அப்படி ஒட்டி
...... சோனாவும்... உன்கிட்டே அப்படி ஒட்டிக்
ா... இல்லே...' என்றான்.

ணி ஒரு கணம் அவனை நிமிர்ந்து பார்த்தாள். பிறகு
னாள்.

ங்களுக்குத் தெரியாதுங்க... நெருங்கின உறவுக்கும்,
ான குடும்ப அமைப்புக்கும் ஏங்கிப் போயிருந்
விஸ்வநாதன் அங்கிள் என்கிட்டே ரொம்ப அன்பா
ர்.... ஆனால், அவங்க வீட்ல வச்சுக்க முடியாத
. ஹாஸ்டல்ல குவார்ட்டர்ஸ்ல இருக்கறப்ப.
ஹாஸ்டல்ல இருக்கற மாதிரி இருந்துச்சே ஒழிய
ாமிலி அமைப்பு கிடைக்கலே. இங்க சோனாக்



குட்டி என் பக்கத்துல படுத்துகிட்டு காலைத் தூக்கி மேலே போட்டுக்கறப்ப சொர்க்கமே கிடைச்ச மாதிரி உணர்ந்தேன்...'

அவன் முகம் இளகியது.

'ஐ சேன் அண்டர்ஸ்டாண்ட்' என்று சற்று நேரம் கொஞ்சி மகிழ்ந்தான். பிறகு சொன்னான். 'நிறைய விஷயங்கள் உன்னைக் கவனிக்க வச்சுருச்சு... கவிதா பண்ணின இன்சல்ட்டையெல்லாம் குழந்தைக்காக பொறுத்துகிட்டது... பள்ளிக்கூடத்தில சேக்கன்னு பிடிவாதம் செய்தது... உறவுக்காரங்க வந்து போகணும்ன்னு அட்வைஸ் பண்ணினது. அப்புறம் வீட்டு விஷயங்களை வெளியே சொல்லக் கூடாதுன்னு நாகரீகம் சொல்லிக் கொடுத்தது... ஐ லைக்ட் எவ்ரிதிங் அபவுட்.... யு' என்றான்.

வாணி அவன் மார்பில் ஒட்டிக் கொண்டாள். சந்திரமோகன் அவள் தலையைக் தடவிக் கொடுத்துக் கொண்டே மேலும் சொன்னான்.

'சோனாவுக்குக் காய்ச்சல் வந்தப்ப... பக்கத்துலயே இருந்து கவனிச்சயே. உமாகிட்டே சகியாப் பழகினது. தாத்தாகிட்டே சேத்து வச்சது... அப்புறம்... அத்தைகிட்டே வேற ஃபிலாஸபி பேசறது... ஹேய் என்ன விதமான காம்பினேஷன் நீ...!' என்று சிரித்தான்.

'நீங்கதான் கண்டுபிடிக்கணும்' என்றாள்...

'ஆமாமா... உன்கிட்டே நிறைய கண்டுபிடிக்கணும்' என்றவன் திடீரென்று நினைவு வந்தவனாக.

'ஹேய்! கவிதா உன்கிட்ட என்னமோ சொன்னாளே...!'

அது... அந்த செல்ரன்ஸ் பார்க் இடியா... ரொம்பப்
ச்சுதாம்... அப்புறம் முடிஞ்சா... ஒரு மெடிக்கல் ஷாப்...
சின்ன ஹாஸ்பிடல் ஏற்பாடு செஞ்சு வைக்கச்
ன்னாங்க...'

ன்னடா... ஆச்சரியம்? கவிதா இப்படியெல்லாம் கூட
னாளா?' என்றான்.

ப்புறம்... மோகன் அத்தான் ரொம்ப நல்லவங்க...
ன மாதிரிப் பொண்ணுதான்... அவருக்குப்
த்தம்... நல்லா வச்சுக்க...' அப்படீன்னாங்க...'
ள்.

ா... நல்லா வச்சுக்க...' என்றான்.

புறம்... அத்தை... ஏதோ சொன்னாங்களே!'

சியம்மாவும் அதேதான் சொன்னாங்க... ஆனா
ம்... வேற மாதிரி, கோடையிலே இளைப்பாற்றிக்
ரும் குளிர் தருவேன்னு வள்ளலார் பாட்டுப்
ன் இல்லே... அதிலே... மேடையிலே... வீசுகின்ற
ப பூங்காற்றேன்னு வருதில்லே... அது மாதிரி
லைஃப்ல நீ இருக்கணும்... வேணுங்கற மட்டும்
ா சந்திச்சுட்டான். இனிமேலாவது டைவர்ஸ்
ீ கல்யாணம் பண்ணிகிட்டு அவனை நிம்மதியா
ட்டீன்னாங்க' என்றாள்.

முகம் மாறியது. கண்களில் குறும்பும் தாபமும்
விதவிதமாக வெளிப்படுத்தினான். அவளும்
கொடுத்தாள்.

.. நீ என் வாழ்க்கையில் வீச வந்த மெல்லிய
ான்.



பணமும், படிப்பும் மட்டும் வாழ்க்கையில் மகிழ்ச்சியைக் குடுக்காது... ஒரு நல்ல பெண் பக்கத்துல இருந்தா... அதுவும் குணமுள்ள பெண்ணா இருந்தா... எல்லாத்தையும் சமாளிக்கலாம்னு நீதான் கத்துக் குடுத்தே... பொண்ணே!' என்றான்.

'மாமா...! நீங்க மட்டுமென்ன... உறவுக்காரங்களுக்காக இத்தனை கூட ஒருத்தர் விட்டுக் கொடுக்க முடியுமாங்கற மாதிரி எல்லாக் கஷ்டங்களையும் இழுத்துப் போட்டுகிட்டீங்களே... யாருக்கு அப்படி ஒரு மனசு வரும்... அந்த மனசுக்கு நிச்சயமா பரிசு கிடைக்கணுமில்லே...!' என்றாள்.

அவனும் பரிசு மழை பொழிந்தான்.

'உன்னை நினைச்சா எனக்குக் கொஞ்சம் யோசனையா... இருக்கு...!' என்றான்.

'ஏன் என்ன யோசனை?'

'உன் மேல பைத்தியமா இருக்கற ஒரு மகளையும், அவ அப்பாவையும் ரெண்டு பேரையும் எப்படித்தான் ஒரே சமயத்துல சமாளிக்கப் போறயோ?' என்றான்.

'அது ரொம்ப ஈஸி... மிஸ்டர். சந்திரமோகன். ரொம்ப ஈஸி... அன்பைக் குடுத்து வாங்கறதுங்கறது ஒரு கஷ்டமான விஷயமே... இல்லை... ரொம்ப இஷ்டமான விஷயம்...' என்றாள்.

சொன்னதோடு மட்டுமல்லாமல் அதை வாழ்நாள் முழுவதும் நிரூபிப்பதற்கான உறுதியும் எடுத்துக் கொண்டாள்.

சந்திரமோகன் மேலும் சொன்னான்.

'வாணி, உனக்கு லைஃப் ரொம்ப பிஸியாத்தான் இருக்கப் போகுது. பார்க் மேனேஜ்மெண்ட், ஹொஸ்பிட்டல் மேனேஜ்மெண்ட், குடும்ப நிர்வாகம், குழந்தை வளர்ப்பு... எல்லாத்துக்கும் மேலே...' என்று சிரித்தான்.

'உங்களை வேற சமாளிக்கணும்' என்று அவளும் சிரித்தாள். பிறகு சொன்னாள்.

'சமாளிப்பேன்... உங்களோட ஒத்துழைப்பு மட்டும் இருந்தா...'

'அது எப்போதும் உண்டு... என் மல்லிகைப் பந்தலே... மெல்லிய பூங்காற்றே!' என்று அவன் இலக்கியம் பேச ஆரம்பித்தான்.

அவள் மனம் பதித்துக் கேட்க ஆரம்பித்தாள்... நிதா மாகவே மெல்லிய பூங்காற்று அந்த அறைக்குள் இதமாய் வீசத் தொடங்கியது. அவர்கள் மனமொன்றிய வாழ்க்கையும் கூடத் துவங்கியே விட்டது.